'ஒரு சிற்பி பேசுகிறான்' வரிசையில்-9.

# கடவுளைப் படைத்தவன் யார்?

(ஒரு விஞ்ஞான ஆய்வு)



டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி

1999

பதிப்பகம்

DAKSHINAA - Publishing House
தெக்ஷிணா - கலைநூற்பதிப்பகம்
A5, சக்தி திரிபுரசுந்தரி அடுக்குமாடிக் கட்டிடம்,
கிழக்கு மாட வீதி,
திருவான்மியூர்,
சென்னை-600 041.
ஃபேக்ஸ் மற்றும் தொலைபேசி : (044) 4916563

பதிப்பாளர்கள்

காயத்ரீ ஷண்முகவேலன்
பொன்னி செல்வநாதன்



முதல் பதிப்பு 1999

விலை ரூ. .......... (அஞ்சல் கட்டணம் நீக்கி)
U.S. $. .......... (Including postage)

கம்ப்யூட்டர் டைப் செய்தவர்

திரு.நா.தனசேகரன், B.Com.,PGDCA.,
சென்னை.

அச்சிட்டவர்

திரு.எஸ்.கிருஷ்ணன்,
கேப்டன் பிரஸ்,
சென்னை - 600 041.

'ஒரு சிற்பி பேசுகிறான்' வரிசையில்-9.

# கடவுளைப் படைத்தவன் யார்?

(இஃதொரு விஞ்ஞான ஆய்வு)

ஆசிரியர்
டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி

''மெய்யொலி உயிரொலி
சிவணுதல் இயல்பே''

தெக்ஷிணா - கலைநூற்பதிப்பக வெளியீடு, சென்னை.

# கடவுளைப் படைத்தவன் யார்?

## உள்ளடக்கம்

**கடவுளைப் படைத்தவன் யார்?**

# தொன்றுதொட்டு வரும் வினாக்களும் வாஸ்து விஞ்ஞானம் தரும் விளக்கங்களும், விடைகளும்

கடவுள் இருக்கிறார் என்பது உண்மைதானா? உண்மையானால் அவர் எப்படி இருக்கிறார்? எங்கே இருக்கிறார்? அருவமாக இருக்கிறாரா? அல்லது உருவமாக இருக்கிறாரா? அருவமாய் இருப்பதானால் அவர் எப்படி உருத்தரித்து உருவமாய் வெளிப்படுகிறார்? எந்த உருவில் இருக்கிறார்? கோவில் வழிபாட்டில் இருப்பது அப்பட்டமான - சாக்ஷாத்காரமான - கடவுள் உருவமாகுமா? எப்படி? கருத்தென்ன, கணக்கென்ன?

இத்தகைய வினாக்களுக்கு தலைமுறை தலைமுறையாய்க் கடவுள் வடிவங்களைச் செய்து வரும் சிற்பியர் இனத்தில் பிறந்த ஒருவரின் விடையும் விளக்கமுமே இந்த ஏடாய் மலர்ந்துளது.

**(இஃதொரு விஞ்ஞான அடிப்படை கொண்ட தொழில் நுட்ப ஆய்வு மற்றும் உண்மை விளக்கம்)**

— *நூலாசிரியர்*

## கடவுளைப் படைத்தவன் யார்?
## என்ற இந்த ஏடு
## கடவுளைக் கண்ட ஒரு ஞானமணிக்கு

# அர்ப்பணம்

கடவுளைப் படைத்தவன் யார்? - என்று பெயர் கொண்ட இந்தக் கட்டுரையினை ஏப்ரல் '97ல் எழுதினேன். இந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ள கருத்துக்களை சென்னைப் பல்கலைக்கழகக் கருத்தரங்கு ஒன்றில் அறிஞர் முன் படைத்திட நல்லதொரு வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். அதனை வான்வழி வந்த ஆணையாகக் கருதினேன். அக்கருத்துக்களை விளக்கி மேடையிலும் பேசினேன். அங்கு மேற்கொண்ட தலைப்பு யாதெனில் உருவ வழிபாட்டில், உருவத்திற்குத் தெய்வத் தன்மையானது அதன் அமைப்பியல் மற்றும் அளவியலில் உளதா அல்லது அதற்குச் செய்திடும் வழிபாட்டு நெறிமுறைகளில் உளதா என்பதே ஆகும். இதற்கு எழுதிய கட்டுரை பிரிதொரு தலைப்புக்கும் என்னை அழைத்துப் போய்விட்டதை கண்டேன். எனவே, அக்கட்டுரையை நடுவே வைத்துக் ''கடவுளைப் படைத்தவன் யார்?'' என்று தலைப்பிட்டு ஒரு சிறு நூலாக எழுதி முடித்திட்டேன். அந்த நேரத்தில் ''கடவுளைக் கண்டவர் யார்?'' என்ற ஒரு வினாவையும் நானே எழுப்பிக் கொண்டு அவருக்கே இதனை அர்ப்பணிக்கலாம் என்று நினைத்து உள்ளூரத் தேடலானேன். எனது உளத்திரையிலே மூவர் பளிச்சிட்டனர். அம்மூவரும் இறைவனை ஒளியாகவே கண்டுகளித்து உலகை உய்வித்த உயர் தனிச் செம்மல்கள் என்றும் உணர்ந்திட்டேன். அம்மூவர் எனது வாழ்வில் ஒளியேற்றிய அனுபூதிமான்கள் என்பதையும் இங்கே உவகையோடும், நன்றியுணர்வோடும் சொல்லக் கடமைப்பட்டவனாகிறேன். அவர்கள்,

1. அண்ணாமலையானைத் தனது படிப்பறையிலே ஒளியாய்க் கண்ட பகவான் ரமண மகரிஷிகள்.
2. விநாயகரை வைகைப் படித்துறையிலே ஒளியாய்க் கண்ட இரட்டியப்பட்டி சுவாமிகள்.
3. முருகனைப் பாறைமுகட்டிலே முருகொளியாய்க் கண்ட தவத்திரு பாலமுருகன் சுவாமிகள்.

அம்மூவரில் இன்று நம்மோடு வாழ்ந்து ஆன்ம ஒளி பரப்பி வரும் தவத்திரு பாலமுருகன் சுவாமிகள் அவர்களுக்கு இந்த நூலை அர்ப்பணித்து வணங்கி ஆசி கோருகிறேன். — *நூலாசிரியர்*

# தவத்திரு பாலமுருகன் சுவாமிகளின் ஞான வரலாறு

''வேலூரை அடுத்து கீழ்மின்னல் கிராமத்தைச் சார்ந்த, திரு.சச்சிதானந்தம் என்பவர் இரத்தினகிரி மலை மீது உள்ள முருகனைத் தரிசிக்க வேண்டிச் சென்றார். அங்குள்ள அர்ச்சகரிடம், கற்பூரம் அல்லது ஊதுபத்தி ஏற்றிக் காண்பிக்குமாறு கூறினார். ஏதுமில்லாததைக் கண்டு மனம் வருந்தினார். எம்பெருமானே! கட்டத் துணிக்கும், கற்பூரத்திற்கும் கூட கதியில்லையா? என்று உருகினார். முருகனிடமிருந்து அருள் ஒளி இவருக்குக் கிடைத்தது. உடனே தாம் அணிந்திருந்த துண்டை எடுத்து, கோவணமாகக் கட்டிக் கொண்டு, அங்கேயே அமர்ந்து விட்டார். முருகனின் அருள் ஒளியினால் ஈர்க்கப்பட்டு அன்றுமுதல் இக்குன்றில் உள்ள இரத்தினகிரி முருகனின் அடிமையாகி விட்டார்.

இந்த நிகழ்ச்சி 1968ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் நாள் நடந்தது. அப்போது அவருக்கு வயது 28. அன்றிலிருந்து சச்சிதானந்தம் என்பவர் 'பாலமுருகனடிமை'யாகி விட்டார். அன்றுமுதல் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் மக்கள் தொண்டையும், மகேசன் தொண்டையும் ஆற்றி வருகிறார்கள். சமுதாய மேன்மைக்காகத் தொண்டாற்றி வரும் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் மெய்ஞ்ஞானம் பெற்ற திருநாள் மெய்யன்பர்களால் ஆண்டு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப் பெற்று வருகின்றது. 20.03.98ந் தேதியுடன் 30 ஆண்டுகள் நிறைவுறுகின்றன''.

# பதிப்பாளர் அறிமுகமும் அவர்தம் வேண்டுகோளும்

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எங்கள் மாமா டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி அவர்கள் **Vaastu Vedic Trust (Regd)** என்ற பெயரில் ஒரு வாஸ்து வேத அறக்கட்டளையினை ஏற்படுத்திக் கொண்டு, அதனுடைய கிளை நிறுவனமாக **Vaastu Vedic Research Foundation** என்ற ஓர் ஆய்வு நிலையத்தை 1991ம் ஆண்டிலே நிறுவி, ஏற்கனவே பல ஆண்டுகளாகச் செய்து வந்த வாஸ்து விஞ்ஞான ஆய்வுகளுக்கு ஓரிடமும் உருவும் கொடுத்து இப்போது அவ் ஆய்வுகளை அதிதீவிரமாகச் செய்து வருகிறார்கள். அந்த ஆய்வு நிறுவனத்தின் மூலமாக **''ஒரு சிற்பி பேசுகிறான்''** என்ற தலைப்பில் பல ஆய்வு ஏடுகளை வெளியிட்டு, அந்த ஆய்வு நிறுவனத்தின் அரிய கண்டுபிடிப்புகளையும், ஆய்வுச் செய்திகளையும், மரபு வழிவந்த இலக்கியங்களையும், கால வெள்ளத்தால் ஒதுக்குண்டு கிடந்த இரகசியங்களை மீள் ஆய்வு செய்ததினால் கண்டு கொண்ட மரபு விஞ்ஞான நுட்பங்களையும் அவற்றின் அருமைப்பாடுகளையும், பயன்களையும், பொது மக்களிடையேயும், பன்னாட்டு ஆய்வர்களிடையேயும் பரப்பி வருகிறார்கள்.

இதனை மேலும் விரித்திட - வலுப்படுத்திட - ஆங்கிலத்தில் 'Vaastu Purusha' என்ற ஓர் ஆய்வு ஏட்டையும் (Research Journal) பதிப்பித்து, உலக அறிஞர்கள் வாஸ்து விஞ்ஞ்ஞானத்தைப் புரிந்து வரவேற்றிடச் செய்து வருகிறார்கள். இதற்கிடையே, அத்தகைய வாஸ்து மரபின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பச் செய்திகளையும், தான் பெற்றிட்ட அனுபவங்களையும் இந்தியப் பொறியாளர்களிடமும், நவீன கால கட்டிடக் கலைஞர்களிடமும் பகிர்ந்து கொள்ள 64க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளில் பங்கு பெற்றுள்ளார்கள். அது மட்டுமின்றி, தன் முயற்சியாலும் தன் சொந்தச் செலவாலும், செல்வாக்காலும் பன்னாட்டு வாஸ்துக் கருத்தரங்கு ஒன்றை 1993ம் ஆண்டில் சென்னையிலும், தனது நெருங்கிய நண்பர்கள் மற்றும் வாஸ்து ஆர்வலர்கள், செல்வர்கள்

துணை கொண்டு 1997ம் ஆண்டு பிரிதொரு பன்னாட்டு வாஸ்துக் கருத்தரங்கைத் திருவனந்தபுரத்திலும் நடத்தி உலகப் பேரறிஞர் கவனத்தை வாஸ்துத் தொடர்புடைய விஞ்ஞானத்தின்பால் ஈர்த்து, நல்ல பல வெற்றிகளைக் கண்டிருக்கிறார்கள்.

அவ்விரு கருத்தரங்குகளுக்கு "International Seminar on Mayonic Science and Technology" என்று பெயர் சூட்டி, வாஸ்து விஞ்ஞானத்தின் மூலவனாக மற்றும் முன்னவனாக இருந்தவன் 'மயன்' என்ற மாபெரும் கட்டிட - சிற்பக் கலைஞன் ஆவன் என்று நிறுவினார்கள்.

இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கில் சுமார் 25 மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் பங்கேற்று உரையாடி, அதனால் விளைந்திட்ட அவர்தம் யோசனைகளுக்கேற்ப **"International Institute of Vaastu Sciences and Technologies"** என்ற பெயரில் ஒரு கல்வி நிலையத்தைச் சென்னையிலே நிறுவிட பூர்வாங்கப் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இரு அமெரிக்கர்கள் 1½ மாதம் ஸ்தபதி மாமா அவர்களுடன் தங்கியிருந்து பாடமும், பயிற்சியும் பெற்று, அவற்றை அமெரிக்காவில் நடைமுறைப்படுத்திட உற்சாகத்தோடும் நம்பிக்கையோடும் திரும்பிச் சென்றிருக்கிறார்கள். முதல் முயற்சியாகத் தங்களுடைய வீட்டை தமிழக வாஸ்து நெறிகளுக்கிணங்க வடிவமைத்துக் கட்டிடவும் அவ் அமெரிக்கர்கள் முனைந்துள்ளார்கள்.

மேற்கண்ட பணிகளை விடுத்து, அவர்தம் சொந்தப் பணிகளாகிய கோவில் கட்டுதல், வீடு கட்டுதல், சிற்பங்கள் செய்தல் மற்றும் வரைபடங்கள், மதிப்பீடுகள், செயல் திட்டங்கள் தயாரித்தல், அவைபற்றிய ஆலோசனைகளுக்குச் சென்று வருதல் ஆகிய பணிகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்து வருகிறார்கள். அதெல்லாம் அப்படியிருக்கும் இந்தக் காலச் சூழ்நிலையில், கன்னியாகுமரியில் கடல் நடுவே, ஒரு பாறை மீது 133 அடி உயரங்கொண்ட திருவள்ளுவர் சிலை ஒன்றை முற்றிலும் கல்லால் அமைத்திடும் அரியதொரு பணியைத் தமிழக அரசுக்காகச் செய்து

வருகிறார்கள். இதில் கலைப் பணியும், நிர்வாகப் பணியும், பொறுப்பும் அளவிட்டுச் சொல்ல முடியாது. இஃதொரு பிரம்மாண்டமான கலாச்சாரப் பணியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகப் பெரிய சிலை இஃதாகவே இருக்கப் போகிறது. சுருக்கிச் சொன்னால் எங்கள் மாமா அவர்கள் ஓர் ஆய்வு அறிஞராகவும், கலைஞராகவும் - இரண்டு நிலைகளில் - பணியாற்றுபவராகத் திகழ்கிறார்கள். வாஸ்து-சிற்பக் கலைத்துறையானது அறிவியலும் (material science) உளவியலும் (spiritual science) ஒருங்கே செயல்படும் ஒரு முது பெருந்துறையாகையினால்இவற்றையெல்லாம் செய்திட, இவற்றின் பயனைத் தர, அவருக்கு 24 மணிநேரம் போதவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

தொழில்துறையினை மேம்படுத்தவும், எதிர்காலப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும் கலைத் தொண்டு செய்திடவும் தக்க இளஞ் சிற்பிகளைத் தெரிவு செய்து ஒரு கூட்டுக்குள் அதாவது, ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து அதற்கு "V.Ganapati Sthapati and Associates" **‘‘வை.கணபதி ஸ்தபதி அண்டு அசோசியேட்ஸ்’’** என்று பெயரிட்டு உலகளாவிய நிலையில் பல்வேறு கலைப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையத்திலும் அதைச் சுற்றியும் சுமார் ஆயிரம் பேர் திறம்படச் செயலாற்றிச் சிற்பக் கலையின் எதிர்காலத்தை ஒளி மிகுந்ததாகச் செய்து வருகிறார்கள். தங்கள் வாழ்க்கையில் தத்தம் திறமைக்கேற்பப் பொருள் வளமும், பெயரும் புகழும் பெற்று வளர்ந்தோங்கி வருகிறார்கள். இந்த நிலையில் ‘முதுமை’ என்ற கால நிலை இப்போது அவர்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் குறுக்கிடுவதால் தாம் மேற்கொண்ட பணிகளில் தொய்வேற்பட்டு விடுமோ என்று அஞ்சவும் தலைப்பட்டிருக்கிறார்கள்.

மாமல்லபுர அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் இருபத்தேழு ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றித் தொழிற்பட்டறையாகத் தொடக்கமுற்ற சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தைப் பல்கலை நிலையமாக்கி சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைத்து வைத்து, வெற்றியோடு அரசுப்

பணியிலிருந்து ஓய்வு பெற்று வந்திட்டாலும், இப்போது செய்துவரும் பணிகள் பல கிளைகளாக - ஆலம் விழுதுகளாகப் பல்கிப் பெருக்கமுற்று விட்டன. இவற்றை இவர்கள் எவ்விதமும் குறைத்துக் கொள்ள முடியாதவராகவும் விளங்குகிறார்கள். விலகி நின்று ஓய்வு கொள்ள விருப்பமில்லாதவராகவும் உள்ளார்கள்.

இத்தகைய சூழலில் புத்தகங்கள் எழுதுவதும், திருத்தங்கள் செய்வதும், படங்கள் வரைவதும், அச்சேற்றுவதும், அச்சகத்தாரோடு தொடர்பு கொள்வதும் ஆகிய பிரசுரப் பணிகளை (mechanical aspects) துரிதமாகவும் செம்மையாகவும் செய்திட முடியாத நிலை உருவாகி, அவர்தம் ஆய்வுப் பணியின் பலனை மக்களிடம் எடுத்துச் செல்வதில் ஏற்பட்டு வரும் தொய்வை எண்ணி வருத்தப்படுகிறார்கள். பிரசுரித்த ஏடுகளை விற்பனை செய்யும் வணிகப் பணியையும் அவரே மேற்கொள்ள வேண்டிய கட்டாயமும் ஏற்படுவதை உற்றறிந்து வெறுப்புக் கொள்கிறார்கள். இஃது அவருக்குத் தேவையில்லை தானே?

எனவே ஆழ்ந்து சிந்தித்து, வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின் ஆய்வுப் பணிகளையும், அதன் வளர்ச்சிப் பணிகளையும் ஆய்வறிஞர்களோடு செய்திடும் உரையாடல்-களையும், நூல் எழுதுதலையும் 'வாஸ்து புருஷன்' என்ற ஆய்வு மலர்ப் (Research Journal) பிரசுரப் பணிகளையும் தானே வைத்துக் கொண்டு, வாஸ்து விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நூல்களைப் பதிப்பித்தல், வெளியிடல், விளம்பரம் செய்தல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளைப் பிறரிடம் கொடுத்துவிட எண்ணிய நேரத்தில், அவர்தம் மருமக்களாகிய நாங்கள் குறுக்கிட்டு, குறிப்பாகப் புத்தக வெளியீட்டகத்தை (Book Publishing House) நாங்களே பொறுப்பேற்று நடத்திட முற்பட்டிருக்கிறோம் என்பதை உவகை கலந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாஸ்து சிற்ப மரபோடும் எங்கள் மாமாவோடும் அனுதினமும் தொடர்பு கொண்டு, ஒருங்கிணைந்து ஆய்வுகள் பல செய்து தலைசிறந்த அறிஞராய் விளங்கும் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் ஸ்தபதி அவர்களின் Research Foundation-ல் அங்கம்

வகித்து வருவதோடு நூல்கள் பல எழுதி ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளைச் சிறப்பித்தும் பெருக்கியும் வருகிறார்கள். இதனால் அவர்களும் சிறப்புப் பெற்று வருகிறார்கள். இவர்களை எங்கட்கு ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருந்து உதவுமாறு வேண்டிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் இசைந்துள்ளார்கள்.

எங்கள் கணவன்மார்கள் பொறியாளராகவும், சிற்பியராகவும் இருப்பதால் எங்கள் பணி சிறக்க இவர்தம் உதவிகளும் எங்கட்குக் கிடைத்திட இருக்கின்றன. ஒவ்வொரு நூலும் சிற்பப் பொலிவு பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகிய திரு.வி.ராமமூர்த்தி அவர்கள் ஒரு பொறியாளர். தமிழறிஞர், வாஸ்துக் கலைஞானம் பெற்றவர். பல கருத்தரங்கங்களில் வாஸ்து விஞ்ஞான தத்துவங்களை நவீன காலப் பொறியாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் எடுத்துச் சொல்லி வாஸ்து விஞ்ஞான உணர்வுகளை அவர்தம் உளத்தே பொங்கிடச் செய்தவர். மாமல்லபுரக் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் அரசு மட்டத்தில் உறுதுணையாகவிருந்து பணியாற்றி சிற்பக் கலையின் நுட்பங்களையும் ஏற்றங்களையும் உற்றுணர்ந்தவர். அத்தகைய பெருந்தகை இலக்கியத் துறையிலும் இசைத் துறையிலும் மோகம் கொண்டவர். பிரபல நாவலாசிரியர் 'கோமகள்' அவர்களின் கணவர். அவர்தம் நாவல்களை அச்சேற்றி அச்சுத் துறையிலும் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர். அவர்கள் இப்போது உடனிருப்பதால் எங்கள் கோரிக்கையின் பேரில் எங்கள் பணிக்கு உதவிட இசைந்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாங்கள் உருக்கொடுத்திருப்பது ஒரு சுதந்திர நிறுவனமாகும். இந்த நிறுவனத்திற்கு ஸ்தபதியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஆன எங்கள் அத்தை பெயர் சூட்டப்பட்டிருப்பதை இங்கே உவகையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறோம். இந்த நிறுவனத்தின் பெயரை ஆங்கிலத்தில் 'Dhakshinaa-Publishing House' என்றும் தமிழில் ''தெக்ஷிணா- கலைநூற்பதிப்பகம்'' என்றும் வைத்திருக்கின்றோம்.

எங்கள் அத்தை அவர்கள் மாமல்லபுரத்தில் இருக்கும் போது மாமல்லபுர நகரிய நூலகத்திலிருந்து கலாச்சாரச் சார்புடைய பல நூறு கதைப் புத்தகங்களையும், இதிஹாஸங்களையும், புராணங்களையும் வீட்டுக்கு எடுத்துச் சென்று நிரம்ப வாசித்திருக்கிறார்கள். மாமா அவர்களின் விஞ்ஞான தத்துவ நூல்களையும் வாசித்து அவருடைய ரஸிகையாகவே மாறி விட்டார்கள் என்று சொன்னால் மிகையாகாது. எனவேதான் அவர்களுடைய பெயரை பதிப்பகத்துக்கு வைக்கலானோம்.

நிதி வசதிகளை நாங்களே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். வரவு செலவுகளையும் நாங்களே கவனித்துக் கொள்கிறோம். அதற்கு உரிமையாளராக - பதிப்பாளராக - நாங்கள் இருவரும் இருந்திடக் கொடுத்து வைத்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம்.

**''கடவுளைப் படைத்தவன் யார்?''** என்ற தலைப்பைத் தாங்கி வரும் இந்த அரிய நூலை இரண்டாவதாகப் பிரசுரிக்கிறோம் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் வாசகர் பெருமக்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு முன் ஒரு விழாவை முன்னிட்டு விரைந்து வெளியிட்ட முதல் ஏட்டின் பெயர் 'What is a Temple? What is its significance?' என்பதாகும் 'Temple building is a form of God-not a home of God' என்ற பொருளில் எழுதப்பட்டதாகும். அமெரிக்காவில் செயின்ட்லூயிஸ் என்ற நகரத்தில் எங்கள் மாமா அவர்கள் தோற்றுவித்த திருக்கோயில் ஒன்றின் குடமுழுக்கு விழாவின் போது 06.07.98ம் நாளன்று வெளியிட்டார்கள். அமெரிக்க அறிஞர் மத்தியில் அக்கருத்தினை விளக்கியும் பேசினார்கள். நல்ல வரவேற்பை அவர்தம் கருத்தும் ஏடும் பெறுவதாயிற்று. 500 பிரதிகள் அங்கேயே விற்பனை ஆயின. இஃது எங்கள் மாமா அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சிறு கட்டுரை ஏடாகும்.

இந்த நூலை, மூதறிஞரும், மொழி விஞ்ஞானியும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் இப்போது கர்நாடக மாநிலத்தில் குப்பம் என்ற இடத்தில் இயங்கி வரும் Dravidian University-யின் Pro-Chancellor-மான டாக்டர்.வி.அய்.சுப்ரமண்யம் ஐயா அவர்கள் எழுதியனுப்பிய

பாராட்டுரையினை இங்கே உங்கட்குக் காட்டிப் பெருமை கொள்கிறோம். முதறிஞர் அவர்கட்கு எங்கள் மாமா அவர்களின் நன்றியையும் எங்கள் நன்றியையும் இங்கே பதிவு செய்து கொள்கிறோம்.

> **"I read through the article - What is a Temple? The arguements are cogent and the presentation is simple to read and logical. In the last two decades no one has so much worked to popularise and concretise Vastu Sastra as you".**

> **கோவில் என்றால் என்ன? என்ற கட்டுரையினைப் படித்தேன். எளிமையாகவும் தர்க்க ரீதியாகவும் எழுதியிருக்கிறீர்கள். கடந்த 20 ஆண்டு காலத்தில் உங்களைப் போல வேறு எவரும் இந்த வகையில் வாஸ்து நுட்பத்தைப் பிரபலப்படுத்தி உறுதி செய்திடவில்லை.**

வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் வழியே வெளிவந்த நூல்களின் இரண்டாவது, மூன்றாவது பதிப்புகளையும் இனி நாங்களே செய்திட விழைகிறோம். அதற்கான அனுமதியையும் பெற்றுள்ளோம். எனவே அவருக்குக் காட்டிய ஆதரவை இனி எங்களிடம் காட்டிட அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இந்த நூல் பற்றி எங்கள் கருத்துக்களை வாசகர் முன் படைக்கின்றோம்.

**''இந்தியக் கலாச்சாரம் ஒரு விஞ்ஞானக் கலாச்சாரம் என்றும் அதன் மூலம் அல்லது வேர் வாஸ்து விஞ்ஞானத்திலே உளதென்றும், அந்த மூலமே வஸ்து என்றும் அஃதே வாஸ்துவாகிறதென்றும் முன்னையது Subtle matter என்றும் பின்னையது Gross matter என்றும் Subtle எப்படி Gross ஆகிறதென்றும், அங்ஙனம் ஆக்குவது எது என்றும், உலக விஞ்ஞான வரலாறே கேட்டறியா இத்தகைய பல நுட்பங்களை இந்த நூலில் தொட்டவிடமெல்லாம் காணலாம்''.**

கடவுள் என்ற பரம்பொருள் ஒரு Subtle matter or Subtle substance ''நுண்பொருள்'' என்று இந்த நூலில் சுட்டிக் காட்டப் பெறுகிறது. அதுமட்டுமல்ல, கடவுள் எதையும் படைக்கவில்லை என்றும் கடவுளே பிரபஞ்சமாகவும் பிரபஞ்சப் பொருள்களாகவும் உருமாற்றம் கொள்கிறார் என்று சொல்வதோடு அந்த நிகழ்ச்சியை ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி என்றும், அதற்கொரு கணித சூத்திரம் உளதென்றும் அச்சூத்திரப்படியே இந்த நிகழ்ச்சிகள் (Phenomena) இயற்கையில் நிகழ்கின்றன என்றும் இந்நூல் சொல்கிறது. அதுமட்டுமல்ல, இயற்கையின் பல கோடி தோற்றங்களில் சிறப்பான தோற்றமாகிற (manifestation) மனித உருவும் இச்சூத்திரப் பின்னணி (mathematical formula-based) கொண்டதென்றும், அத்தகைய சூத்திர உருவே - numerical form-மே இறையுருவாக ஆக்கமுற்று வழிபடு பொருளாக மரபில் இருக்கிறது என்று இந்த நூல் பேசுகிறது. இது வாஸ்து விஞ்ஞானத்தின் பல உச்சக் கருத்துக்களில் தலையாயது என்று சொல்லலாம். இந்த நுட்பத்தைத் தான் தொல்பழம் சிற்பியர் பிரம்மஞானம் என்றும், பிரம்ம ரகஸியம் என்றும், பிரம்ம சிருஷ்டி ரகஸியம் என்றும் கொண்டு, வாஸ்து வித்யையைப் பிரம்ம வித்யை என்றும் சொல்லி வந்தனர் என்று எங்கள் ஸ்தபதி மாமா அவர்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இது மட்டுமல்ல பிரிதொரு செய்தியையும் நெஞ்சுயர்த்திச் சொல்லுவார்கள். கடவுள் மனிதனைப் படைத்தான் என்பது பெரிதல்ல, ஆனால் அல்ப அறிவும், அல்ப ஆற்றலும், அல்ப ஆயுளும் கொண்ட மனிதன் கடவுளையே படைத்துக் காட்டிய செயல்தான் கடவுள் ஆற்றலையும் விஞ்சிய பேராற்றல் என்று சொல்லும் போது எங்கள் மெய்சிலிர்த்துப் போகும். இந்த நுட்பத்தையும் இந்த நூலில் காணலாம். இந்த நூலின் 'நுழைவாயில்' (entry) தொடங்கி இறுதி (exit) வரை விடாமல் படித்துப் பயன் பெற வேண்டிக் கொள்கிறோம்.

இந்த நூலில் அநேகமாய் மெய்ஞானக் கருத்துக்களும் விஞ்ஞானக் கருத்துக்களும் தெளிவுபட வாதிக்கப்படுகின்றன. பல நூறு ஆண்டுகள் தெளிவுறாமல் கிடந்திட்ட, சர்ச்சைக்குள் மூழ்கிப் போன ஒரு தொல் பொருளுக்கு இப்படியொரு ஆய்வும், அவ்வாய்வுக்கு நல்லதொரு வடிவும், அதனை விளக்கிட தனித்த ஒரு

நூலும் இதுகாறும் நமது கலாச்சார மரபில் தோன்றிடவில்லை என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது. இருபதாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்களில் இஃதொரு சிறந்த நூல் என்று இதனைச் சொல்லலாமா? அறிஞர் ஒருபாற்கோடா விடை தருவர் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்த நூலுக்கு 'கடவுளைப் படைத்தவன் யார்?'' என்று பெயரிட்டு எழுத, டாக்டர் மாமா அவர்களுக்குக் கிடைத்திட்ட பின்னணி, யாதென்பதை அவர்களே தனது முகவுரையில் எழுதியுள்ளார்கள். அத்தகைய பின்னணியை உருவாக்கிய அறிஞர் பெருமக்கட்கு எங்கள் வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

கடவுள் வடிவத்திற்கு சாந்நித்யமானது (Spiritual power) அவ்வடிவத்தில் கையாண்ட அளவுமுறைகளாலா? அல்லது சடங்குமுறை, பூசை முறை ஆகியவற்றாலா என்ற சர்ச்சை ஏற்பட்ட போது கடவுள் வடிவங்களைத் தோற்றுவிக்கும் சிற்பி என்ற முறையில் பிரமாணங்களை (spiritual measures) - அதாவது, பிரதிமா இலக்கணங்களை (Iconometrical measures) அலசிப் பேசிட அஃதொரு உணர்ச்சிமிகு வாய்ப்பாக இருந்தமையால் 'பிரம்ம சிருஷ்டி ரகஸியத்தை' மாமா அவர்கள் அறிஞர்முன் கட்டுரையாக வழங்கியதை மேலும் விளக்கி, தனித்ததொரு நூலாக எழுதி வைத்திருந்தார்கள். இப்படித்தான் இந்த நூல் புரட்சிகரமான தலைப்பைப் பெற்றுத் தலைதூக்கி நிற்கிறது.

இந்தச் சூழ்நிலையில் வேத ஆகம வாஸ்துப் பிரவீணர் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் எழுதிய மதிப்புரையினை வாசகர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். குறிப்பிட்ட அந்த மூன்று துறைகளிலிருந்து கருத்துக்களைச் சொல்லி மாமா அவர்களின் தலைப்பை - வாதங்களை உறுதி செய்திடும் இவ்வறிஞர் தம் ஒருபாற்கோடா மதிப்புரை போற்றுதற்குரியதாக விளங்குவதோடு, நூலாசிரியர் எடுத்துக் கொண்ட பொருளுக்கு மேலுமொரு கனபரிமாணத்தைச் சேர்ப்பதாகவும் உளது. இவ்விருவர்தம் கருத்துக்களுக்குப் பிற அறிஞர்தம் கருத்துக்களை வரவேற்கின்றோம்; எதிர்பார்க்கின்றோம்.

டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்களுக்கு எங்கள் பதிப்பகத்தின் நன்றியையும் வணக்கத்தையும் ஆழமாகப் பதிவு செய்கிறோம்.

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் தவத்திரு சாயிமாதா சிவபிருந்தாதேவி அவர்கள் எழுதியருளிய ஆசியுரையில் சிற்பியர்தம் படைப்பாற்றலை உற்றுணர்ந்து தமது அழகுச் சொற்களால் பெருமைப்படுத்தி, சிற்பியர்தம் பணியைப் புனிதப்படுத்தியிருக்கிறார்கள் என்று கொள்கிறோம். அம்மா அவர்கள் 'மனிதனும் தெய்வமாகலாம்' என்ற சிறந்த ஒரு நூலை எழுதியுள்ளார்கள். ஆனால், மாமா அவர்களோவெனில் கடவுளே மனிதனாகிறான்' என்ற கருத்தைக் கணித வழி புகுந்து நம் வழிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொல்கலை மரபைச் சேர்ந்த இவ்விருவரின் கருத்தில் தொனிக்கும் ஒருமைப்பாட்டைக் கண்டு வியந்து போனோம். அத்தகைய ஞானசிகரமாம் சைவத்திரு அம்மையார் அவர்களுக்கு பதிப்பாளர்களாகிய நாங்கள் சிரம் தாழ்த்தி அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

குன்றக் குமரனை முருகொளியாய்த் தரிசிக்கக் கொடுத்து வைத்த ஞானமணி இரத்தினகிரி பாலமுருகன் சுவாமிகள் அவர்களின் ஆசி கலந்த - ஆய்வு தழுவிய - அருளுரையைப் படித்து பேருவகை கொண்டு எங்கள் நன்றி கலந்த வணக்கங்களைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

இத்தகைய ஆராய்ச்சிக்கும், அதனைப் பேசிட - எழுதிட - நல்லதொரு வாய்ப்பை டாக்டர்.ஸ்தபதி அவர்களுக்கு நல்கிய சென்னைப் பல்கலைக்கழக வைணவத்துறை போற்றுதலுக்கும் நன்றிக்கும் உரியதாகிறது.

Computer type-setting செய்தளித்த அருமைச் சகோதரர் திரு.நா.தனசேகரன்,B.Com.,PGDCA., அவர்களுக்கும் எழிலுற அச்சிட்டுக் கொடுத்திட்ட Captain Press உரிமையாளர் திரு.கிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக, எங்கள் இருவரையும் மருமகள்களாய் - அல்ல - மகள்களாய் அணைத்துக் கொண்ட எங்கள் அத்தையவர்களுக்கும் மாமா அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகலந்த வணக்கத்தைக் கூறி, வாசகர்களாகிய உங்கட்கும் எங்கள் வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

**காயத்ரி ஷண்முகவேலன்-பொன்னி செல்வநாதன்**

# கடவுளைப் படைத்தவன் யார்?

## முன்னுரை

உருவ வழிபாடு பற்றிப் பல்வேறு விதமான கேள்விகளும் சந்தேகங்களும் வேத காலத்திலிருந்து இன்றுவரை இருந்து வருகின்றன என்றால் மிகையாகாது. வேதத்தில் உருவ வழிபாடு இல்லை என்றும், வேதம் உருவ வழிபாட்டை ஆதரிக்கவில்லை என்றும், வேள்வி செய்தலையே (அக்னி வழிபாடு) நோக்கமாகக் கொண்டது என்றும், அறிஞரும் பேசுவர், எழுதுவர். என்றாலும், வேத காலத்து மகரிஷிகளில் ஒருவரான பிப்பலாதர் என்பவர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு **வாஸ்து சூத்ரோபநிஷத்** என்ற விஞ்ஞான நூல் ஒன்றைச் செய்து, வாஸ்து சாஸ்திரக் கொள்கையை அதன் விஞ்ஞானத்தைப் பிழிந்து கொடுத்தும் இந்த ஐயப்பாடுகள் நீங்கியபாடில்லை. **சில்ப வித்யா ரஹஸ்யோபநிஷத்** என்ற பிரிதொரு நூலை வெளியிட்டும் அறிஞர் அதனைப் புரிந்து பரப்பினார்களில்லை. வைணவப் பேரறிஞர் யாமுனாசாரியார் **'ஆகமப் பிராமாண்யம்'** என்ற அரியதொரு நூலை எழுதி உருவ வழிபாட்டின் மேம்பாட்டினை மற்றும் பயனை விளக்கினார். அதுமட்டுமல்ல, **பாஞ்சராத்ரம்** என்ற வைணவ ஆகம நூலானது உருவ வழிபாட்டை உச்சிமேல் வைத்து மெச்சி அதற்கொரு சிறப்பிடம் கொடுத்திருக்கிறது. கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத அந்த நுண்பொருளை பரநிலை[1], வியூஹ நிலை[2], விபவ நிலை[3],

---

1 உயர்நிலை. சொற்களால் வருணித்திட முடியாத சூக்கும நிலை. சூக்கும நிலையிலும் உருவமேனியாய் விளங்கிடும் நுட்பத்தை 'பரவாசுதேவன்' என்ற நிலை உணர்த்துகிறது எனக் கொள்ளலாம்.

2 வியூகம் என்பதின் பொருள் தொகுப்பு அல்லது அணி என்பதாகும். பரவாசுதேவன் சகுண நிலையில் மேற்கொள்ளும் குணவடிவங்கள், முறையே வாசுதேவன், சங்கர்ஷனன், பிரத்யும்னன், அனிருத்தன் என்று நான்கு ஆகும். வைணவம் கொண்டிட்ட ஆறு குணங்கள் இந்த நான்கு மூர்த்தங்களில் அடங்குகின்றன.

3 விண்ணிலிருந்து மண் மீது வந்திறங்கிய கோலத்தை அவதாரம் என்று கொண்டு விஷ்ணுவின் பத்து அவதாரங்களை இது குறிக்கும்.

அந்தர்யாமி நிலை[4], அர்ச்சா நிலை[5] என்று கொள்ளப்பட்டுள்ள அந்த ஐந்து நிலைகளில் இறுதி நிலையாகிற அர்ச்சா நிலையானது அருவமே உருவமாகிடும் நுட்ப நிலையை உணர்ந்தும் உணர்த்தியும் ஏற்கிறது. அதாவது படிம நிலையைக் கற்பனையாகக் கொண்டு விடாமல் நிஜமென ஏற்றுக் கொண்டு விட்ட உறுதி நிலை அஃதாகும். அங்ஙனமே மகரிஷி விகனஸர் வழி வந்த **வைகானஸ வைணவமும்**[6] ஒன்பது படிமங்களை ஒரே விமானத்தில் வைத்து நவபேர (ஒன்பது படிம) வழிபாட்டை வலியுறுத்துகிறது. இக்கட்டத்தில் உண்மை நிலையை உறுதிபட வைணவம் சொல்லி விட்டதெனச் சொல்லலாம். என்றாலும் மக்களில் ஒரு சாராரின் மேற்சொன்ன ஐயப்பாடுகளை அவை தீர்த்தபாடில்லை. மாறாக, நமது பெரியோர்கள் உருவ வழிபாட்டை நம்பிக்கையில் வளர்வதாகச் சொல்லி வருவதுதான் வேதனை தருவதாகும். **காரணம் யாதெனில், உருவ வழிபாட்டைப் பெருமைபடப் பேசிடும் நூல்களும், அறிஞர்களும் உருவ அமைப்பை அதனை இயற்றுவதில் கையாண்டிருக்கும் அடிப்படையான அளவியல் சார் விஞ்ஞான நுட்பம் ஒன்றினைப் பேசிடவில்லை.** (விளக்கத்தை உள்ளே காண்க) இந்த விஞ்ஞான நுட்பம் வாஸ்துவிடம் தங்கி விட்டது. அந்தக் காலத்தில் வாஸ்து விஞ்ஞானம் தான் இந்திய விஞ்ஞானமாக விளங்கிற்று என்ற செய்தி இப்போதுதான் வெளிப்பட்டிருக்கிறது. வேத காலத்திலும் வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலும் இந்த விஞ்ஞானம் இருந்திட்ட சுவடுகளும் நூலாதாரங்களும் இப்போது கிடைத்திருக்கின்றன. மேற்கண்ட செய்திகள் ஆசைப் பற்றித் திரித்துக் கூறப்படுவன அல்ல என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே அனைத்து ஆகம நூல்களும் சுருக்கமாக வாஸ்துவைப் பேசி விட்டு - தன் தேவைக்கேற்ப வாஸ்துவை ஏற்றுக் கொண்டு - தன் கருத்துக்கேற்ற உருவங்களை வாஸ்து வழிப்

---

4 உயிரினங்களின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் ஜீவான்மாவின் நிலையைக் குறிக்கும்.

5 சிற்பிகளால் சிற்ப இலக்கணப்படி செய்தளிக்கும் இறைப்படிமங்கள் அர்ச்சா நிலையைக் குறிக்கும். அர்ச்சை எனவும் சொல்லப்படும். பூசனைக்குரியது என்பது பொருள்.

6 கி.பி. 8வது நூற்றாண்டில் தோன்றியது இந்த வைகானஸ ஆகம வழிபாடு என்ற செய்தி தமிழ்நாட்டில் உத்தரமேரூர்க் கோவில் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. இக்கல்வெட்டுச் செய்தியை அக்கோவில் வடிவமைத்துக் கட்டிய ஸ்தபதி பரமேஸ்வரப் பெருந்தச்சனே பேசுகிறான் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். இதனை "Seminar on Inscription" conducted by the Tamilnadu State Archaeology in 1966 என்ற நூலில் காணலாம்.

பெற்றுக் கொண்டு, வழிபடு முறைகளை விரிவாகப் பேசுவதாயின. இஃது எதற்கு ஒப்பாகுமென்றால், இசைத்துறையில் இசை சார் விஞ்ஞானத்தைப் பேசிடாது, இசையின் பயனானது இசை வடிவத்தில் (structure) ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டிடாது, இசை வடிவங்களின் அமைப்பு நுட்பங்களையும் (technology) இசையின் பயனையும் (effect of music on human psyche) பற்றிப் பேசுவதற்கு ஒப்பாகும். மேலும் வாஸ்துவும் ஆகமமும் படிம விஞ்ஞானம் (science of image-making) உணர்த்தும் ரகசியத்தை எளிமையாகவும் வெளிப்படையாகவும் விளக்கியும் பேசிடத் தவறி விட்டன. தொழில்நுட்பத்தின் அடியில் விஞ்ஞானத்தைச் செருகி வைத்து விட்டன. எனவே வாஸ்து நுட்பமானது இலைமறை காயாகவே இன்னும் இருக்கிறது. வாஸ்துவும் ஆகமமும் இப்போது பண்டிதர்களின் ஆய்வில் இருந்த போதிலும் உருவியலின் நுட்பங்கள் அவர்தம் பார்வையிலிருந்து ஒதுங்கியே நிற்கின்றன. இதனால் வாஸ்து விஞ்ஞானச் செய்திகள் எல்லாம் அனுமானப் பிரமாணமாகவே - அனுமானச் செய்திகளாகவே - ஆகி விட்டன. நாத்திகம் தோன்றியதற்கும் அது வரலாற்று நீரோட்டத்தில் அவ்வப்போது முகிழ்வதற்கும் படிமத்தின் ரகசியத்தை உணர்த்தாததும் உணராததும் தான் காரணம் என்பது இப்போது புரிகிறதா? நாத்திகம் எழுப்பிடும் கேள்விகளுக்கு அறிவுபூர்வமான - உளப்பூர்வமான - விஞ்ஞான ரீதியான - புரிந்து கொள்ளத்தக்க - விளக்கம் சொல்லமுடியாது போனதே பெருங் காரணமாகும். இதோடவா நின்று விட்டது? உருவ வழிபாட்டின் விஞ்ஞான நுட்பத்தை எடுத்துக் கூறிட முடியாது போனதால் ஏற்பட்ட பூசல்கள், மனமாற்றங்கள், மதமாற்றங்கள், ஏமாற்றங்கள் இவற்றால் விளைந்திட்ட ஏற்றத்தாழ்வுகள் நம்நாட்டு வரலாற்றில் கணக்கற்றவை. சுருங்கச் சொன்னால் உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க உருவ வழிபாடானது கேலிக் கூத்தாகிப் போய்விட்டது.

பொதுவாக உருவ வழிபாடானது நம்பிக்கையில் எழுவது, இருப்பது, வளர்வது, உறுதிபெறுவது என்று பெரிய பெரிய மனிதர்களால் இன்றும் பேசப்பட்டு வருகிறது. உருவ வழிபாட்டைப் பற்றிய அஞ்ஞானத்தின் இஃதோர் உச்சநிலை என்றால் தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். கருவறையில் வைத்து வழிபடப்படுவது உண்மையில் அப்பட்டமான இறைவன் திருவுருவமே என்று எவரும் நிறுவிட முயலவில்லை; துணிந்து சொல்லவுமில்லை. வழிபாட்டின் பலன்களைப்

பற்றியும் வழிபடு படிமத்தின் கதைகளைப் பற்றியுமே பேசுகிறார்கள். இது பக்தி கலாச்சாரத்தைப் பெருக்கியதே தவிர இதன் அடிப்படை விஞ்ஞானத்தின் பரிமாணத்தைப் பேசிடவில்லை. வழிபடு படிமம் எப்படிக் கடவுள் வடிவமாகும் என்பதைக் கோவிலுக்கு வருவோர்க்கும் வாராதோர்க்கும் சொல்லவில்லை. கண்ணால் பார்க்க முடியாதிருக்கும் மூலப் பொருளின் நிஜவடிவமே படிமமாக நிற்கிறது என்று எவரும் அடித்துப் பேசிடவில்லை. கண்ணால் பார்க்க முடியாத சூக்குமப் பொருளுக்கு உருவம் உளதென்றும் அதுவே ஸ்தூல நிலையில் பார்த்தறி பொருளாக உருமாற்றம் கொள்கிறதென்று உணர்த்தும் வாஸ்து ரகஸியத்தை எவரும் பேசிடவில்லை; பேசி நிறுவிடவில்லை. இதற்கெல்லாம் மூலகாரணம் யாதெனில், எந்த உண்மையை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நெறி மாறி, நிலை தவறி, ரசிகர்களிடம் போய் சங்கீதப் பாடம் கற்பது போல, இந்த உருவத்தின் இயல்பறியா யார் யாரையோ கேட்டுக் குழம்பிப் போனதால் சமூகத்தில் இக்குழப்பங்கள் இன்றும் இருப்பதாகவே சொல்லத் தோன்றுகிறது. இங்நாட்டிலே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு சிலர் உருவ வழிபாடு தொடர்புடைய தொழிலை அகௌரவப்படுத்தியதும், கலைஞர்களைத் தீண்டாதாராக ஒதுக்கி வைத்ததும், இதனால் அவர்கள் ஒடுங்கி நின்றதும், அத்தகையோர் சிறுபான்மையினராக இருந்ததும், காரணத்துக்குள் காரணமாக இருப்பதாயிற்று. இந்த இழிநிலை வேதகாலம் தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? இருப்பினும் உருவ வழிபாட்டை எவராலும் தடுத்து நிறுத்திட முடியவில்லை. மாற்றாக, பிரிதொரு ஸ்திரமான வழிபாட்டு நெறியையோ, மாற்று முறையொன்றையோ இன்னும் எவராலும் கண்டறிய முடியவில்லை. உருவ வழிபாடானது இவற்றையெல்லாம் கடந்து, இந்த விஞ்ஞானக் காலத்தையும் வெற்றி கண்டு, எப்படித் தப்பிப் பிழைத்து வந்து விட்டது பார்த்தீர்களா? மீண்டும் தழைத்தும் ஓங்கியும் வருவது பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறதையும் காண்கிறோம்.

சுருக்கமாகச் சொன்னால், பாரத நாட்டிலே தோன்றிய ஒருசில ஞானிகளும் ஞான நூல்களும் ஒரு பெரிய தவற்றைச் செய்து விட்டதாகச் சொன்னால் கோபித்துக் கொள்ளாதீர்கள். இதனால் அவர்களை அவமதிப்பதாகக் கருதினால் - மேலும் ஒரு தவற்றைச் செய்தவர்களாக

ஆவோம். ஏனெனில் இந்த நாட்டின் கலாச்சாரத்திற்கு வித்தாக இருக்கும் இரண்டு பெரும் ஞான நூல்களை - ஆன்மிக மரபு சார்ந்த நூல்களை - கலை மரபுகளை - அவர்கள் புறக்கணித்து விட்டார்கள். அவர்தம் பேச்சுக்களும் எழுத்துக்களும் அவற்றைத் தலைதூக்க விடாமல் அழுத்தி விட்டன. இந்த நூல்களை துச்சமாகக்கூட நினைத்ததும் பேசியதும் ஒதுக்கியதும் உண்டு. ஆனால் இன்று எல்லா நூல்களையும் ஆராய்ந்து விட்டு, கடவுளானவர் நம்பிக்கையில்தான் இருக்கிறாரா என்ற வினாவை எழுப்பிக் கொண்டு அந்த நம்பிக்கை இருப்பது அறியாமையிலா (அ) உண்மையிலா என்று ஆய்வுகளைத் தொடங்கிய நேரத்தில் பாரத நாட்டின் உருவ வழிபாட்டின் அடிப்படை விஞ்ஞான நூல்களாக விளங்கும் ஆகமம், வாஸ்து ஆகிய இரண்டும் இக்காலக் கட்டத்தில் ஆய்வுப் பொருள்களாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சியில் தென்னகத்துப் பாண்டிச்சேரியில் இயங்கி வரும் French Institute of Indology என்ற ஓர் ஆய்வு மையத்தில் பண்டிதர்கள் பழைய ஆகம வாஸ்து நூல்களை மொழி பெயர்த்தும், ஆய்வு செய்தும் அச்சேற்றியும் உள்ளார்கள். இவர்களும் இதுகாறும் நான் சொல்லி வந்த அடிப்படை விஞ்ஞான நுட்பத்தைக் கண்டு சொல்ல முடியாது போய்விட்டது. இதில் ஈடுபட்டோர் மொழி வல்லுநர்களாக மட்டும் இருந்து விட்டதே பெருங்காரணமாக உளது. அவர்தம் அணுகுமுறை மேலைநாட்டுப் பௌதிக (Gross) அணுகுமுறையாக இருந்து விட்டதும் ஒரு பெரிய காரணமாகும். இந்தியர்களுக்கு விஞ்ஞானம் என்று சொல்லத்தக்க ஏதுமில்லை என்று மேலைநாட்டினர் கொண்டிட்ட கருத்து அவர்தம் கண்களை மறைத்து விட்டது. இந்த விஞ்ஞானம் வாஸ்துவுக்குள் நுடங்கிக் கிடக்கிறது என்பதைக் கண்டறிய முடியவில்லை. இந்த விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வேதகாலத்திற்கு முன் தோன்றி, வேதங்களில் இங்குமங்கும் தலைகாட்டி, உபநிஷதக் காலத்தில் ஆய்வுக்குட்பட்டு, இங்கேயும் புரியமுடியா நிலையில் பின்தங்கிப் போய்விட்டன. ஆனால் இந்த விஞ்ஞானம் அன்று முதல் இன்று வரை வாஸ்து நூல்களில் தேங்கிக் கிடப்பதாயிற்று. இந்த வாஸ்துதான் இப்போது கிருஹவாஸ்து என்ற பெயரில் உலகளாவிச் செல்வாக்குப் பெற்று வருகிறது. இங்கேயும் பயன்களே வலியுறுத்தப்படுகின்றன. பயனுக்குக் காரணம் பேசப்படவில்லை.

அடுத்து இன்னொரு காரணத்தை இங்கே சொல்ல

வேண்டியவனாகவிருக்கிறேன். வாஸ்துவையும் ஆகமத்தையும் சமயச் சார்புடைய - மதவாத நூல்களாகச் சித்தரித்து ஒதுக்குண்ட வரலாற்றை வாசகர்கள் நன்கு அறிவார்கள். இஃது பெரிய தவறுகளில் தலையாயது ஆகும். இரண்டும் மதவாத நூல்கள் அல்ல. அவை முற்றிலும் விஞ்ஞான நூல்கள்; விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான ரீதியில் மூலப் பொருளைக் கண்டுகளித்து, விஞ்ஞான அனுபவங்களைப் பெற்று விஞ்ஞான வாழ்க்கை நடத்திடத் துணைநிற்கும் ஒப்பற்ற நூல்களாகும். நான் சொல்லி வரும், சொல்லப் போகும் விஞ்ஞானத்தைக் கண்டறிய முடியாமற் போனதாலும், விஞ்ஞானம் மறைந்து கதைகளாக உருவெடுத்து, நம்பிக்கையில் வளர்ந்துவிட்டதாகப் பேசியும் எழுதியும் வந்ததாலும் நம்மவர்களால் ஒரு சாரார்க்கு உரியதென்றும் (Sectarian), மதச் சார்புடையதென்றும் (religious) சூடுபட்டு, சுதந்திர இந்தியாவிலும் ஒதுக்கப்பட்டு நிற்கின்றன. இதனால் சிற்பிகளுக்கு இக்காலத்தில் புதியதொரு ஒதுக்கமும், வாழ்க்கையில் தொய்வும் ஏற்பட்டு விட்டது. இஃது அறியாமையினால் ஏற்பட்டு விட்ட அவல நிலையாகும் என்பதை வேதனையுடன் இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இதனால் எனது சிற்பியர் சமுகமும், வழிபாட்டு மரபில் பணியாற்றும் அர்ச்சகப் பெருமக்களும் மூன்றாம் நான்காம் தரப் பிரஜைகளாக சுதந்திர இந்தியாவில் வாழ்ந்து வருகிறோம். விவசாயிகள், நெசவாளர்கள், வேறுபல பணி செய்வோர் பெற்றுவரும் யாதொரு கவனிப்பும் சலுகையும் இதுகாறும் பெற்றோமில்லை. இதனைப் போக்கிட "Vaastu Shastra - not a religious document but a scientific treatise" என்று தலைப்பிட்ட ஒரு நூலை இரண்டாண்டுகட்கு முன் பதிப்பித்து அந்நூலை அன்பளிப்பாக (Complimentary) அறிஞர்களிடையே சமர்ப்பித்து ஒருவித மறுசிந்தனையைக் கிளப்பி விட்டேன். அறிஞர் மட்டத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றேன். ஆனால் இந்தச் செய்தி சமுதாயத்தில் வேறுபல நிலைகளில் உள்ளோர்க்கு எட்டவில்லை. இதைத் தனியாகவே கடந்த 10 ஆண்டுகளாகச் செய்து வந்தேன். இப்போது அறிஞர்கள் பாராட்டத் தொடங்கியதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். மகாராட்டிரத்தில் இந்த விஞ்ஞான அணுகுமுறைக்கு நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. அங்கே எனது நூல்களை ஆய்ந்து வருகிறார்கள். நான் விளக்கி வரும் பிரபஞ்ச விஞ்ஞானத்தை (Cosmological Science) ஜெர்மனியில் உள்ள மியூனிச்சுப் பல்கலைக் கழகத்திலும் ஆய்வு செய்து வருகிறார்கள். இந்தப் பின்னணியை வைத்துத்தான் இரண்டாவது

பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை அறிஞர் பலரைச் சேர்த்துக் கொண்டு "Second International Seminar on Mayonic Science and Technology" என்ற பெயரில் நடத்தினேன். மாபெரும் வெற்றி எனச் சொல்லிட விரும்புகிறேன். அந்தக் கருத்தரங்கில் "Vaastu Shastra - redefined, reinterpreted and illustrated" என்ற எனது வாஸ்து விஞ்ஞான விளக்கநூலை வெளியிட்டேன். இது திருவனந்தபுரத்தில் ஜனவரி '97ல் நடந்தது. இருபத்தைந்து மேலைநாட்டு அறிஞர்களும் 275 நம்நாட்டு ஆய்வர்களும் நவீன கட்டிடக் கலைஞர்களும், பொறியாளர்களும் கலந்து கொண்டு தமது ஆச்சரியத்தையும், ஆதரவையும் தெரிவித்து அவர்களும் இந்தப் புராதன விஞ்ஞானத்துக்குள் நுழைவாராயினர். மேலைநாட்டினர் வெளிப்படையாகப் பாராட்டி என்னோடும் டாக்டர்.சபாரத்தினம் அவர்களோடும் தொடர்பு கொண்டுள்ளார்கள். மெனக்கெட்டு நேரில் வந்தும் உரையாடிச் செல்லுகின்றனர். மேலும் அதே கருத்தரங்கில் வாஸ்து விஞ்ஞானி மயன் தந்த ''ஐந்திறம்'' என்ற நூலையும், அதன் தொடர்பு கொண்ட செய்திகளையும் வெளியிட்டு ஒரு சாத்விகப் புரட்சியையே செய்திட்டோம் என்று பெருமிதத்தோடு சொல்லிட விரும்புகிறேன். இந்திய விஞ்ஞானத்தை மேலும் பரப்பிட 'Vaastu Purusha' என்ற ஓர் ஆங்கில ஆய்வு இதழையும் (Research Journal) பொருளாதார நெருக்கடியையும், காலத்தால் விளைந்திடும் நெருக்கடியையும் மீறி, நடத்தி வருகிறேன். வெகு விரைவில் ஒரு சாரார்க்குரியது (Sectarian) என்ற பெயர் அழிந்து கடவுளை அறிந்திட உதவும் ஒரு விஞ்ஞான ரீதியான பரந்த தன்மை வாய்ந்தது (Universal and scientific approach to realization of God) என்ற நல்ல பெயர் ஆகம வாஸ்துக் கலாச்சாரத்துக்கு வந்து சேரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

தென்னக ஆகம சாஸ்திரங்களும் வாஸ்து சாஸ்திரங்களும் சம்ஸ்கிருதத்தில் இருப்பதால் இவை வடக்கிருந்து வந்தவை என்று தென்னக மக்களில் ஒருசாரார் இவற்றை ஒதுக்கி வைத்து விட்டார்கள். அதே நேரத்தில், ஆகம வாஸ்து சாஸ்திரக் கோட்பாடுகளும் கொள்கைகளும் அவற்றுக்கே பொருந்தும் கட்டிடங்களும் (வீடும் கோயிலும்) படிமங்களும் தென்னகத்திலேயே பேரளவு இருப்பதால் வடவர்களில் ஒரு சாரார் இக்கலாச்சாரம் தென்னகத்தைச் சேர்ந்ததெனக் கொண்டு இவற்றைப் புறக்கணித்து விட்டனர். மத்தளத்திற்கு இருபக்கமும் அடி - இடி - என்ற வசனத்திற்கேற்ப இந்த ஆகம வாஸ்துக் கலாச்சாரங்கள்

அடி-உதைபட்டுத் தனிமைப்படுத்தப் பட்டு விட்டன. இந்த அஞ்ஞான முடுபனி இப்போது விலகி வருகிறது. இந்த நிலையில் இக்கால மேலைநாட்டினர் முழு மூச்சாக இவற்றை மீண்டும் ஆயத் தொடங்கி வெற்றிப் பாதையில் வெகுதூரம் சென்று விட்டார்கள்.

இவ்விரு நூல்கள் கடவுளானவர் நம்பிக்கையில்தான் இருக்கிறார் என்று எங்கேயும் பேசியது இல்லை. கடவுள் இருக்கிறார், அவருக்கும் உருவம் உண்டு என்று உணர்ந்து - தேர்ந்து - அவ்வுருவமானது நுண் (Subtle) நிலையிலும் உண்டு காட்சி (Gross) நிலையிலும் உண்டு; அவ்விரண்டும் ஒன்றே என்ற கூற்றை விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்து அவ்உண்மையைத் தொழில்நுட்ப வாயிலாக வெளிக் கொணர்ந்து, அவ்வடிப்படையிலே உயிர்ப்புள்ள - உருவங்களை விஞ்ஞானமய நிலையங்களிலே (கோவில்களிலே) ஸ்தாபித்துக் கொண்டு அந்தப் படிமங்களைத்தான் விஞ்ஞான ரீதியான அணுகுமுறையிலே ஆகமங்கள் அர்ச்சிக்கின்றன. இறைவனைக் காண, அனுபவித்திடச் செய்ய, உறுதியான பாதையை வகுத்துக் காட்டி, மனிதனைக் கைபிடித்து அழைத்துச் சென்று, இறைவனின் சன்னிதானத்தில் நிறுத்துகின்றன. கருவறையில் பார்ப்பது அழகுப் பொம்மைகள் அல்ல. இறைவனின் சாக்ஷாத்காரமான - தத்ரூபமான - அப்பட்டமான - இயல்பான வடிவம் - என்று உறுதி பூண்டு இறைப் படிமங்களுக்கும் அதைத் தொழச் சென்றுவரும் மனிதனுக்கும் ஒருவகையான விஞ்ஞானத் தொடர்பையும், விஞ்ஞான அனுபவத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. இந்த விஞ்ஞான அனுபவத்தைத்தான் 'ஆன்மிக அனுபவம்' என்றும் 'பக்தி' என்றும் நமது முன்னோர்கள் சொல்லி வந்தார்கள்.

மேற்கண்ட விமர்சனங்களை ஏற்பதற்கு இம்மரபுகள் பற்றிய அடிப்படைக் கருத்தொன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்து இன்று தோன்றியதில்லை. தொல் பழங்காலத்துக் கருத்து இஃதாகும். இறைவன் ஒருவனே; அந்த இறைவன் எதையும் படைக்கவில்லை. இறைவன் ஆகிய சக்திப் பொருள் அல்லது மூலப் பொருளானது ஒரு விஞ்ஞானப் பொருள்[7]. அஃது உணர்வேமயமான பொருள். அப்பொருள்

---

7 Scientific substance - विज्ञानं ब्रह्म

தன்னைத்தானே உணர்ந்து கொண்டு தன் உணர்வுகளுக்கேற்பத் (Self awareness or self consciousness) தன்னைத் தானே வடிவங்களாக உருமாற்றம் செய்து கொள்கிறது. இதற்கு Self manifestation[8] என்று பெயர். அவ்வுள்ளம் உணரும் நுண் வடிவங்களின் பரு வடிவங்களாக - அவற்றின் தொகுப்பாக - இந்த ஞாலம் வெளிப்பட்டு நிற்கின்றது என்பதே வாஸ்து ஆகம விஞ்ஞானங்களின் உச்ச நிலையாகும். இறைப் பொருளுக்கு நுண் நிலையிலே உருவம் (Subtle form) உண்டு. அதுவே திண் (திட்ப) நிலையில் உருவமாய் (Material form) திரிபுறுகிறது என்பது வாஸ்து விஞ்ஞானக் கண்டுபிடிப்பாகும். ஞாலப் பொருள்கள் அத்துணையும் அந்த மூலப் பொருள் மாற்றுருக் கொண்ட திண்பொருள்களே (extended material form) ஆகும். முன்னையதை subtle energy என்றால் பின்னையதை gross energy என்று சொல்லலாம். முன்னையதை subtle matter என்று சொன்னால் பின்னையதை gross matter என்றும் சொல்லலாம். இரண்டும் வெவ்வேறானதல்ல. இரண்டும் energy-களே. இரண்டும் வெவ்வேறானவை என்ற தத்துவம் (philosophy) விஞ்ஞானத் தத்துவம் அல்ல. அறிவுக் கெட்டிய ஒருவகையான கூற்று. அவ்வளவுதான். ஞாலப் பொருள்கள் அசத்துக்கள் என்றும், ஜடம் (அ) அசேதனம் என்றும் பிரித்துச் செய்திட்ட இத்தகைய பிரசாரமும் உருவ வழிபாட்டுக்கு இழிவையும் பின்னடைவையும் ஏற்படுத்தி விட்டது எனலாம். ஆனால் இந்த மூலப் பொருளைத்தான் 'வஸ்து'[9] என்றும் அதனுடைய திரிபுற்ற உலகியற் பொருள்களை 'வாஸ்து' என்றும் கண்டுணர்ந்த வாஸ்து விஞ்ஞானக் கூற்றை ஆகம சாஸ்திரங்களும் ஏற்று உருவ வழிபாட்டை மெச்சுவதாயின. இந்த விஞ்ஞான நிகழ்ச்சியை வெளிப்படுத்தும் வாஸ்து சாஸ்திரங்கள் 'வஸ்துவே வாஸ்து' என்றும் 'வாஸ்துவே வஸ்து' என்றும் உறுதியுடன் பேசுகின்றன. वस्तुरेव वास्तु / वास्तुरेव वस्तु என்ற ஒரு சாம்யத்தையே (equation) வழங்கியிருக்கின்றன. (விளக்கத்தை இப்புத்தகத்தில் காண்க). இக்கால விஞ்ஞானமும் இப்படித்தான் கருத்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தியானது வாஸ்து

---

8 தானியல் வடிவம் என்பது மரபுச் சொற்றடராகும்.

9 கடவுளைப் பொருள் என்று சொல்வது தமிழ் மரபு. இப்பொருளைத் தான் 'வஸ்து' என்றும் பரவஸ்து (பரம்பொருள்) என்றும் விஞ்ஞானச் சொற்களாக வாஸ்து சாஸ்திரங்கள் கொண்டிருக்கின்றன.

சூத்திரத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக உளது. Pure Energy - Subtle Energyதான் materialized energy - embodied energy - gross energy-யாகத் திரிபுறுகிறது என்பது தான் உண்மை விளக்கம். அதற்கொப்ப நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் $E = mc^2$ என்ற சூத்திரத்தில் இவ்விஞ்ஞானச் செய்தியைக் காட்டியுள்ளதாக என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. (மேல் விவரத்தை உள்ளே காண்க). இந்த விஞ்ஞான உண்மையானது எனக்கும் ஒருநிலையில் அனுபவமாயிற்று. எனது உணர்வுகள் என் கண் முன்னாலேயே உருவம் கொள்வதைக் கண்டும், நானே உருவமாக வெளிப்பட்டிருப்பதாக உணர்ந்தும், களிப்புற்றும், ''சிற்பியே சிற்பமாகிறான்'', ''கவிஞனே கவிதையாகிறான்'' என்ற ஓர் அத்வைத அனுபவத்தைப் பெற்றேன். இதனை ஊரறியப் பறை சாற்றினேன். கவிஞர்களும் கலைஞர்களும் போற்றினர்.

அகவிண்ணில் (சிற்றுள்ளம்) முகிழ்ந்திட்ட ஞானவடிவங்கள் (inner vision) புறத்தே எப்படிக் காட்சிப் பொருள்களாக - உருவங்களாக திரிபுறுகின்றனவோ (metamorphoses into material forms) அதேபோலப் புறவிண்ணில் (பேருள்ளத்தில்) முகிழ்ந்திடும் ஞான வடிவங்கள் புறத்தே பௌதிகப் பொருள்களாக - விதையாக, செடியாக, மரமாக, விலங்குகளாக, ஊர்வன - பறப்பனவாக - உருமாற்றம் கொள்கின்றன. இந்த விஞ்ஞான நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு உற்று நோக்கின், மனிதனும் இறைவனுடைய திரிபு வடிவமே என்பது உங்களுக்குப் புரியக்கூடும். (மனித முட்டையே 'பிண்டம்' எனப்படுகிறது. மனிதன் மனித முட்டைக்குள் அதாவது கருவில் energyமயமான - உணர்ச்சிமயமான - சூக்குமநிலையில் ஒடுங்கிக் கிடக்கிறான். இந்த முட்டை நிலையிற்றான் தாய் என்ற நிலத்தில் விதைக்கப்படுகின்றான்). இந்த விஞ்ஞானத்தை வைத்துக் கடவுளே மனிதனாகிறான்; மனித வடிவம் தாங்குகிறான் என்று சொன்னால் மனித வடிவத்தில் இறைவனைச் செய்து வழிபடல் தானே அறிவுடைமையாகும்? அதுமட்டுமல்ல விஞ்ஞான பூர்வமான நிகழ்ச்சியாகும்? இங்ஙனம் வழிபட்டால் தவறாகுமோ? சிந்தித்துப் பாருங்கள்.

மயன் என்ற வாஸ்து விஞ்ஞானி இதுபற்றிக் கூறிய ஓர் உளவியல் பாடலில் இந்த விஞ்ஞான நிகழ்ச்சியை கண்டு மகிழலாம்.

''*உள்ளமே மூல மாகி உணர்வுறும் கோல மாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய ளித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்''.

உள்ளமாகிய inner space மூலப் பொருளாக இருந்து கொண்டு, அதுவே உணர்வுற்று உணர்வுக்கொத்த கோலங்களாகத் திரிபுறுகின்றது என்பது முதல் வரியின் பொருளாகும். இங்ஙனம் மூலம் கோலமாகிட எது துணை செய்கிறது? எது வழிகாட்டுகிறது? அந்த உள்ளமே - அதன் முயற்சியால் தோன்றும் ஒளியே வழிகாட்டுகிறது என்பது இரண்டாவது மூன்றாவது வரிகளின் பொருளாகும். இதனால் ஏற்படும் வெற்றிக்கு ஒளிமயமாகிய உள்ளமே காரணமாகிறது. அந்த வெற்றிப் பொருள் யாது? அதுவே கோலமெனப்படுகிறது. இது நான்காவது வரியில் தொக்கி நிற்கும் பொருளாகும். இத்தகைய உள நிகழ்ச்சி இருக்கிறதே அஃது உள்ளத்தின் இயல்பாகும் (Phenomenal). இதனை வெளியிலிருந்து எவரும் செய்திடவில்லை. தன்னைத்தானே முயக்கி முடுக்கித் தோற்றுவித்துக் கொண்ட கோலம் அஃதாகும். எனவே இதனை உளவியல் (Spiritual Phenomenon) என்று சொல்லி முடிக்கிறான் விஞ்ஞானி மயன்.

**ஆகவே கடவுள் படைக்கிறான் என்று சொல்வது ஏற்புடையதல்ல. அவனே உருமாறுகிறான் என்பதே உண்மை.** இதுவே வாஸ்து விஞ்ஞானம். இதைத்தான் வஸ்துவே வாஸ்துவாகிறது என்று முன்பு சொன்னேன். சமஸ்கிருதத்திலுள்ள மயமத வாஸ்து சாஸ்திரத்திலும் இக்கருத்துண்டு. (உள்ளே விவரம் காண்க). இவ்வளவு சொல்லிய பிறகும் இரண்டு விஷயங்களை நான் இதுவரை சுட்டிக் காட்டிடவில்லை என்று நீங்கள் குறைபட்டுக் கொள்வீர்கள் என்பதை உணருகிறேன். ஒரு வடிவம் செய்வதற்கு அல்லது காட்சியாவதற்கு செய்பொருள் (material) வேண்டும். அடுத்து அதற்கான அளவுகள்

* உள்ளம் என்பது இங்கே அகவின்னையும் புறவின்னையும் (inner and outer spaces) குறிக்கும். இஃதொரு கலைச் சொல். Space துடிப்புறும் இயல்புடையது. உள்ளம் என்ற விண்ணும் துடிப்புறும் இயல்புடையது. உள்ளுவதால் - துடிப்புறுவதால் - உள்ளம் எனப்பட்டது. ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற சொற்றொடரை நினைப்பூட்டிக் கொள்க.

வேண்டும். (எல்லாம் இருந்தும் அளவுகள் இல்லையேல் உருவமே அமைவதிற்கில்லை எனலாம்). இந்த நிலையில், இங்கே உள்ளமே **inner space - energetic space - basic and subtle material** கருப் பொருளாகிறது. உள்ளத்தின் முயக்கமே அளவாகிறது. அதாவது உளத்துடிப்பே அளவாகிறது. (தோற்றம் துடியதனில் - உண்மை விளக்கம்) மயன் மொழியில் உள்ளம் என்பதை மூலம் என்றும் உள்ளத்தின் துடிப்பைக் காலம் என்றும் (காலமாத்திரை) கொண்டு, காலம் எனப்படும் துடிப்பானது (வீணையின் துடிப்பை அளவிடுவது போல) அளவிடத் தக்கதாகிறது. இந்தத் துடிப்பளவினால் உள்ளத்தில் அளவுள்ள உருவானது தோன்றி விடுகிறது. இதுவே ஒளிமயமான வடிவம். அளவில்லா உருவம் உளத்தே தோன்றும் போது தான் நாம் குழம்பிப் போகிறோம். சரிதானே?

இதனைச் சுருக்கிச் சொன்னால், மூலமே காலமாகி, காலமே காலக் கணக்காகி, அக்கணக்கே கோலமாக உருமாற்றம் கொள்ள உதவுகிறது, என்று பொருள்படுகிறதல்லவா? இதிலிருந்து அருவமான மூலமே உருவமாகிய கோலமாகத் திரிபுறுகிறது என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல. அங்ஙனம் தோன்றிய அனைத்தும் உயிர்ப் பொருள்கள்; உணர்ச்சிப் பொருள்கள்; உணர்ச்சியைத் தூண்டிடும் பொருள்களாகும். காரணம், உணர்ச்சிமயமாக விளங்கிடும் உள்ளமாகிய அகவெளியே - இடமே - இடவடிவமாக (space into spatial form) உருமாற்றம் எய்துகிறது. எனவே அவ்வுருவங்கள் அசேதனமோ, அசத்தோ அல்ல. Inanimate thing என்ற ஏதும் இப்பிரபஞ்சத்தில் இல்லை. இல்லவே இல்லை. இந்த வடிவத்துக்குத்தான் கோலம் என்று மயன் பெயர் சூட்டியுள்ளான். மேலும் இவ் இடவடிவமானது நல்லதொரு தோற்றம் கொண்டிட அளவாகக் கருதப்படும் துடிப்புக்கள் ஒரே சீராக கட்டுப்படுத்தப்படுகின்றன. துடிப்பளவில் புகுத்திய கட்டுப்பாடு (order, rhythm) தாளம் எனப்படுகிறது. இதனைத் தோற்றுவித்துக் கொள்வதும் நமது உள்ளமே. எனவே இசையில் தாளம் போல, நடத்தில் தாளம் போல, அகத்தில் தாளம் தோன்றுவதைக் கொண்டு இந்தத் தாள அளவே (தாளத் துடிப்பே) உருவத்துக்கு அழகு மிகு அமைப்பைத் தருகிறது. இசையில் தாளத்தால் இசைவடிவமும் இனிமையும் பெறுவதுபோல புறத்தே பார்த்திடும் உருவத்திற்கும் தாளமே வடிவத்தையும் இனிமையையும் அளிக்கின்றது.

சிற்ப சாஸ்திரத்தில் இந்தத் தாளக் கணக்கை விரிவாகக் காணலாம். (காண்க: வை.கணபதி ஸ்தபதியின் 'சிற்பச் செந்நூல்').

இப்படித்தான் இறைவன் தன்னை உருவங்களாக மாற்றிக் கொள்ளும் போது நீள, அகல, கனம் கொண்ட கனப் பொருளாக (tridimensional form) காட்சிப் பொருளாக - நாம் கண்டுகளிக்கும் பொருளாக - ஆகி விடுகிறான். இப்படிப்பட்ட அகக்காட்சிகள் வாஸ்து வழியில் பயிற்சி பெற்றிட்ட ஒரு சிற்பியின் உள்ளத்தில் தோன்ற அவையே வெளிப்பட்ட நிலையில் கண்ணால் பார்த்திடும் அழகு உருவங்களாக இயற்றப்படுகின்றன. இதற்குரிய Subtle measure களைத் தருவதே வாஸ்து சாஸ்திரமாகும். பிரபஞ்சத்தில் இயற்கையாக நாம் காணும் பொருள்களெல்லாம் பிரம்மனின் திரிபுற்ற உருவம் என்ற கருத்தை வைத்தே सर्वं खल्विदं ब्रह्म - உலகப் பொருள்கள் அத்துணையும் பிரம்ம ஸ்வரூபங்கள் - என்று உபநிஷதம் பேசுவதாயிற்று. இதே பாணியில் சில்ப வித்யா ரகஸ்யோபநிஷத் जगत् सर्वं शिल्पमेव भवति - உலகப் பொருள்கள் அத்துணையும் சிற்பங்களே - என்று சொல்வதாயிற்று. இந்த விஞ்ஞான நிகழ்ச்சியில் நீங்கள் முக்கியமாக உற்றுக் கவனிக்க வேண்டியது யாதெனில் மூலமே - மூலமாகிய பரவெளியே - ஆகாஸமே - உணர்வுற்று, மூலமே material ஆகி, (செய்பொருளாகி) மூலமே காலமெனும் அளவாகவும் ஆகி இறுதியில் கோலமெனும் உருவும் பெருகிறது என்ற படிமுறையும் உறுதிப்பாடும் கிடைக்கிறது என்பதே. இதற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது உணர்வுதான்[10] என்பது தெளிவாகிறதல்லவா? இந்த உணர்வுக்கு awareness என்று பெயர். இதுவே பிரக்ஞை எனப்படும். (சூடு, சொரணை என்று வழக்காற்றில் நாம் சொல்லி வருவதை நினைப்பூட்டிக் கொள்க). ஆகவே प्रज्ञानं ब्रह्म - உணர்வே பிரம்மம் - என்று சொல்லப்படுவதாயிற்று. மூலம்-மூலப் பொருள் (கடவுள்) ஒரு விஞ்ஞானப் பொருளாகவும் விளக்கமுறுகிறது. (இதுதான் சிற்பிகள் சொல்லி வரும் வஸ்துவும் வாஸ்துவுமாகும்). ஆகையினால் विज्ञानं ब्रह्म - பிரம்மம் விஞ்ஞானப் பொருளே என்றும் சொல்லப்படுவதாயிற்று. எப்படி இருக்கிறது பிரதிமா விஞ்ஞானம்?

10 உணர்வுக்கு மறுபெயர் தான் 'ஒளி'. ஒளியுணர்வு ஒளிவெளி, luminous space என்றும் சொல்லப்படும்.

இதுவே பிரம்ம விஞ்ஞானம். கடவுள் எல்லாமாக இருப்பதினால் அவன் மனிதனாகவும் நுண் நிலையில் (at Subtle level) உருக்கொள்வதால் - இருப்பதால் - மனித வடிவத்தில் இறைவனைக் காட்டியது சிற்ப விஞ்ஞானம்[11]. Subtle level-ல் இருக்கும் இறைவனின் மனித வடிவமானது (Subtle human form) சம்பூர்ண வடிவமெனச் சிற்பநூல் பேசும் (விளக்கம் உள்ளே காண்க). எனவே குறையில்லா - பூர்ணத்வம், Perfection எனப்படுவது பிரம்மப் பொருளுக்கே உரித்தானதாகும். நாம் பஞ்ச பூதங்களின் தாக்குதலால் உருவில் குறைவும் கூடுதலும் கொண்ட (distorted form) உருவினராகக் காணப்படுகிறோம். இக்காரணம் பற்றியே இறைவனின் திருமேனியை अप्राकृत दिव्य मङ्गल विग्रहम् என வைணவம் சிறப்பாகப் பேசும். பிரகிருதி சம்பந்தப்படாத ஒளிமயமான - பூர்ணமான - உருவம் என்பது பொருள்.

நான் மேற்குறிப்பிட்ட பல்வேறு கருத்துக்களும், விஞ்ஞானச் செய்திகளும், நம்முடைய ஞானாசிரியர்கள் பேச்சுக்களிலும், பாடல்களிலும், நூல்களிலும் காணக் கிடைக்கின்றன என்று நீங்கள் நினைக்கலாம். உண்மைதான் என்றாலும் அவையெல்லாம் பல இடங்களில் துணுக்குகளாகச் சிதறிக் கிடக்கின்றனவேயொழிய அவற்றை ஒருசேரக் கொண்டு வந்து ஆய்வு செய்து தர்க்க ரீதியான ஒரு முடிவை (அ) ஒரு கருத்தை எவரும் இதுகாறும் வரையறுத்துச் சொல்லிடவில்லை என்ற உண்மையை மறுப்பதற்கில்லையல்லவா? இன்னும் சுருக்கிச் சொன்னால் ஞானாசிரியர்கள், நம்மைச் சுற்றியுள்ள கோலங்களை உற்றறிந்து அவற்றின் மூலத்தைக் கண்டு சொல்லி விட்டார்கள் என்று சொன்னாலும் முக்கியமானதும் அதிநுட்பமானதுமான ஒன்று அவர்தம் கவனத்திலிருந்து விலகி நின்று விட்டதாக நான் நினைக்கிறேன். அப்படியானால் அஃதென்ன?

நான் ஏற்கனவே மூலமானது காலமாய் மலர்ந்து, அந்தக் காலம் தோற்றுவிக்கும் காலக் கணக்கில், ஞாலத்தில் பரந்து கிடக்கும் கோலங்கள்

---

11 எந்த விஞ்ஞானமும் அடைந்திராத ஓர் உச்ச நிலை இதுவே என்று புரிந்து மகிழ்ந்து பெருமை கொள்ளுங்கள். ஒளிவு மறைவின்றிப் பேசுங்கள். இச் செய்திகளைப் பரப்புங்கள். வஸ்து விஞ்ஞானம் 'பிரபஞ்ச சிருஷ்டி' ரகஸியத்தை வெளிப்படுத்திட்ட உச்ச விஞ்ஞானம் என்பது தெளிவாகிறதல்லவா? மேலை நாட்டு விஞ்ஞானத்தின் இக்கால வினாவுக்கு இஃதொரு தெளிவான விடையாகுமன்றோ!

வடிவம் பெறுகின்றன என்று கூறிய விஞ்ஞான நிகழ்ச்சியில் காலம் என்பதை இன்றுவரை இக்கால விஞ்ஞானமும் முற்காலப் பேரறிஞர்களும் கண்டு கொள்ள முடியவில்லை. (இதன் விளக்கத்தை உள்ளே காண்க). இந்தக் காலத்தையும், காலக் கணக்கில் உருப்பெற்ற கோலங்களையும் 'பிரம்ம ஸ்வரூபங்கள்' என்று உறுதியாக சொன்னவன் 'மயன்' என்ற வாஸ்து விஞ்ஞானி ஆவான். 'காலப் பிரம்மம்', 'காலமாக் கடவுள்' என்பவை காலத்தைக் குறிப்பிடும் மறுபெயர்கள் ஆகும். இதனையே வாஸ்து வேதிகள் கால புருஷன், தாள புருஷன், வாஸ்து புருஷன், நாட்டிய புருஷன், சங்கீத புருஷன் என்று விரித்துச் சொன்னார்கள். இந்தக் காலக் கணக்கியலைத்தான் வாஸ்து சாஸ்திரத்தின் முதல் பக்கம் முதல் இறுதிப் பக்கம் வரை பல்வேறு அளவுகளாகக் கண்டு அவற்றை வாஸ்து வேதிகள் கையாண்டுள்ளார்கள். இவற்றையே சிற்பிகளாகிய நாங்கள் பன்னெடுங் காலமாக உபயோகப்படுத்தி வருகிறோம். இத்தகைய பிரமாணங்களைக் கொண்டு இயற்றப்படும் அனைத்து வடிவங்களும், மூலத்தின் வடிவங்களே மூலத்தின் பிரதிகளே-படிமங்களே-பிம்பங்களே என்று இப்போது நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

ஆனால் வெறும் அளவுகள் மட்டும் போதாது என்பதை உணர்ந்த சிற்ப சாஸ்திரங்கள் ஒவ்வொரு கோலத்தின் லாவண்யத்தை ஒருவகையான அழகியல் வாயிலாக, அதாவது உணர்ச்சி மயமான பூரண அழகை, அணியிலக்கணம் வாயிலாக - உவமையணிகள் வாயிலாக - சிற்பிகளுக்கு புலப்படச் செய்திருக்கின்றன. அதாவது லட்சணத்தைக் கொண்டு இலட்சியத்தை அடைய சிற்பச் சாஸ்திரங்கள் சிறப்பான ஓர் இலக்கணத்தை வகுத்துக் கொடுத்திருக்கின்றன. அதாவது அளவியலும் அழகியலும் சங்கமித்திடச் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே மூதறிவும் அழகுணர்ச்சியும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற சிற்பக் கலைஞர்களைக் கவிக் கலைஞர்கள் என்று பெயரிட்டு அவர்தம் வழியாகத் தெய்வத் தன்மையை பெறுவோர்களானோம் என்பதை மிகப் பெருமையோடும், உறுதியோடும் சொல்லி முடித்திட விரும்புகிறேன்.

நூல் என்ற பெயரில் உள்ளே சொல்லியிருப்பதெல்லாம் 'தெய்வ சாந்நித்யத்திற்கு' காரணம் எது என்ற வினாவுக்கு விடையாக-ஒரு கட்டுரையாக அமைந்திருப்பதால், எனது எழுத்து அதைச் சுற்றியே இருந்திட நேர்ந்ததால், முகவுரையில் கிட்டத்தட்ட முழுச் செய்தியையே

தந்துவிட்டதாக எவரும் கருதலாம். என்றாலும் முகவுரையையும் உள்ளுரையையும் ஒருமிக்கப் படித்தால் தலைப்புக்கேற்ற ஓரளவு முழுவடிவம் கிடைத்திருப்பதாக எவரும் திருப்தி கொள்ள முடியும். எனவே முகவுரையைப் படித்த பிறகு உள்ளுரையையும் தயவு செய்து படியுங்கள். குறையிருப்பின் சுட்டிக் காட்டுங்கள். அடுத்த பதிப்பில் அவற்றை இணைத்து உங்களுக்கு நன்றியும் சொல்லுவேன். முகவுரையில் கூறிய செய்திகள் உள்ளேயும் வரக்கூடும். கூறிய கூறல் என்ற குற்றத்திற்கு ஆளானாலும் பரவாயில்லை. இச்செய்திகள் இனிமேலும் மறைவுறாமல் இருப்பதற்காக இப்படித் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியவனாக ஆகிறேன்.

நான் சொல்லிய மற்றும் விமர்சித்த செய்திகளை ஆய்ந்தும் ஆழ்ந்து சிந்தித்தும் ஏற்பதற்கு யார் கிடைப்பர் என்று தேடிய நிலையில் ஒருவர் எனது மதிப்பிற்கும் தேர்வுக்கும் உள்ளானார். அவர் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் ஆவர். இவர் தமிழ், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மூன்று துறைகளிலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். தமிழ்ப் பேராசிரியாகப் பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். பிறிதொரு சிறப்பு யாதெனில் Physics-ல் இளங்கலைப் பட்டம் பெற்றவர். எனவே வாஸ்து விஞ்ஞானச் செய்திகளை ஆகமத்தோடு ஒப்பு நோக்கித் தெளிவு பெற்றிருக்கிறார். பல ஆகமங்களை மொழி பெயர்த்தவர். பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு ஆகம மொழி பெயர்ப்புகளைச் செய்து கொடுத்து, பல விளக்க உரைகளையும் ஆற்றி வருபவர். வாஸ்து தொடர்பான மயனுடைய பண்டைத் தமிழ் நூல்களையும், ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கி எழுதியவர். அத்தகைய நூல்களில் ‘ஐந்திறம்’ என்ற நூல் நம்நாட்டு அறிஞர்களாலும், மேலைநாட்டு அறிஞர்களாலும் பாராட்டுப் பெறத் தொடங்கியுளது. அப் பாராட்டுரைகள் ‘வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்திற்கு’ வந்து கொண்டிருக்கின்றன. இந்நிறுவனம் நடத்தி வரும் 'Vaastu Purusha' என்ற ஆராய்ச்சி இதழ் (Research Journal) இந்தப் பாராட்டுரைகளை பிரசுரித்து வருவதோடு, டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்களுடைய ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றது.

இத்தகைய பேராசிரியருக்கு கிடைத்திட்ட பேறு ஒன்று உண்டு.

ஆகமத்தையே வாழ்க்கை நூலாக கொண்டிட்ட ஆதிசைவர் வகுப்பில் பிறந்தவர். சிதம்பரத்தில் முதுபெரும் பண்டிதராய் விளங்கிய சிதம்பர தீட்சிதர் என்பாரிடம் 'பதஞ்சலி யோக சூத்ரப்' பாடங்களை மரபு நெறியில் கற்றுத் தேர்ந்தவர். எனவே வாஸ்து, ஆகம நூல்களில் நிபுணத்துவம் பெற்ற இவரை அணுகி என்னுடைய நூலைக் கொடுத்து, அந்நூலுக்கு விமர்சனம் ஒன்றைச் செய்யுமாறு வேண்டினேன். அவர் அதை **'அளவியல் மதிப்புரையாகச்'** செய்து கொடுத்துள்ளார். அதனை இந்நூலின் இறுதியில் கொடுத்துள்ளேன். இவ்விரண்டையும் ஒருசேரப் பார்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த நூலினை ஆங்கிலத்தில் மிக நன்றாக மொழி பெயர்த்துமுள்ளார்கள். டாக்டர் அவர்களுக்கு எனது நன்றியையும் இங்கே பதிவு செய்கிறேன்.

அன்னார் நான் சொன்ன அத்துணை செய்திகளையும் முற்றிலும் ஒப்புக் கொள்கிறதாக எழுதியுள்ள சொற்றொடர் என் ஆய்வுகளை உறுதிப்படுத்தியதோடு, பெருமைப்படுத்தியும் இருக்கிறது என்று சொல்லி, வாசகர்கள் இந்நூலினை ஒருமுறை என்றில்லாமல் பலமுறை படித்து நமது உருவ வழிபாடு, பல்வேறு வழிபாடுகளிலே தலையாயது என்று உணர்ந்து, சந்தேகங்களை நீக்கிக் கொண்டு கோயில்களின் மூலஸ்தானம் என்ற கருவறையில் ஸ்திரமாக, படிமமாக, காட்சி அளிக்கும் பொருளை - பரம்பொருளாக - பிரம்மமாக கண்டுகளித்து, ஆன்மிக பலமும், உலகியல் நலன்களும் பெற்று விளங்கச் செய்யுமாறு படிமமாய் அமைந்திட்ட பிரம்மத்தையே இறைஞ்சுகிறேன்.

அந்தப் பிரம்மமானது நுட்பமாகவும், சிற்பமாகவும், சூட்சுமமாகவும், ஸ்தூலமாகவும், அருவமாகவும், உருவமாகவும் இருக்கின்ற (பிரம்ம) சித்திரத்தை - மயன் எழுதிக் கொடுத்திட்ட ஒரு பாடலை எடுத்துக் காட்டிக் கோவிலுக்குச் செல்வோர் கைகளிலேயும், செல்லாதோர் கைகளிலேயும் வைத்து வணங்கி, நமது உருவ வழிபாட்டுக் கலாச்சாரத்தைப் போற்றிக் காத்திட எனது உளமார்ந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

अचिन्त्य अव्यक्त रूपाय निर्गुणाय गुणात्मने ।
समस्त जगदाधार मूर्तये ब्रह्मणेनमः ॥

— Maya's Surya Siddhaanta

"Religion without science is lame
Science without religion is blind"
— Prof.Einstein.

''விஞ்ஞானம் இல்லாச் சமயம் முடம்'' என்றும்
''சமயம் இல்லா விஞ்ஞானம் குருடு'' என்றும்

பேராசிரியர் ஐன்ஸ்டீன் சொன்னதையும் இவ்விடத்தில் சேர்த்து வைக்கிறேன்.

இறுதியாக அந்தப் பிரம்மரிஷி மயன் கண்ட விஞ்ஞானச் சிறப்பை - விஞ்ஞானச் சிற்பக் கலையை - அதன் பயனை - அவன் வரைந்திட்ட மயத் தமிழில் சொல்லி அனைவரையும் மகிழ்விக்க விரும்புகிறேன்.

''பரம்பொருள் எங்கும் உண்டு
பெருங்கலை யாண்டும் உண்டு
பரம்பொருள் அருளினாலே
திருநடராசன் கண்டேன்
பரம்பொருள் உணர்வினாலே
ஒளிவழிபாடு கண்டேன்
பரம்பொருள் அருளினாலே
பெருங்கலை படைத்தேன் காண்பீர்.''

இந்தப் பிரம்மரிஷியின் விண்ஞானக் கோயில் தான் சிதம்பரம் என்றும், சிற்றம்பலம் என்றும், சிற்றவை என்றும், பொன்னவை என்றும் முற்காலத்திலும் பிற்காலத்திலும் போற்றப் பெற்று அன்று போல் இன்றளவும் 'ஒளி வழிபாடு' கொண்ட கோயிலாய் விளங்குகிறது. மேலும் அவ்வொளி திரண்டு உருக்கொண்டு - ஒளி நடமாய் - ஒளி நடராசனாய் - கண்கண்ட தெய்வமாய் - அவ்விடத்தே நின்று அருள்பாலிக்கிறான் என்ற மய வரலாற்றுச் செய்தியையும் இங்கே இணைத்து

வைக்கின்றேன். (ஸ்தபதியின் 'விண்-ஞானக் கோயில்கள்' என்று தலைப்பிட்ட ஆய்வு நூலில் இதன் விரிவைக் காணலாம்.)

தவத்திரு டாக்டர் சிவபிருந்தாதேவி அம்மையார் அவர்கள் ஓர் ஆதீன கர்த்தர்; புதுக்கோட்டையில் அவர்களுடைய மடாலயம் உளது. அவர் ஒரு ஞானாசிரியர்; ஞான நூல்களில் கரை கண்டவர். ஆன்மிகச் சொற்பொழிவுகள் நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பல நிகழ்த்தி நமது ஆன்மிக மரபு வளர்ந்தோங்க அரும்பெரும் தொண்டாற்றியவர். ஆடல் கலையிலும், இசைக் கலையிலும், வாத்ய இசையிலும் தலைமுறை தலைமுறையாய் புலமை வாய்க்கப் பெற்ற இசை வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்மையார் அவர்களும் இசைக் கலையிலும் பயிற்சியும் ஞானமும் உடையவர். கலாரசிகராகவும் திகழ்பவர். தமிழ்ப் படிப்பும், இலக்கிய ஆராய்ச்சியும் மிக்குடையவர். 'மனிதனும் தெய்வமாகலாம்' என்ற அரியதொரு நூலை எழுதிப் புகழ் பெற்றவர். இத்தகைய சிறப்புக்கள் பல பெற்ற அம்மையார் அவர்கள் எனது 'விண்ஞானக் கோயில்கள்' என்ற ஆய்வு நூலைப் படித்துப் பரவசமடைந்து என்னை பலமுறை உயர்த்திப் பேசி வாழ்த்திய மூதாட்டியாவர். இத்தகைய அம்மை அவர்களின் ஆசியுரைக்கு எனது நன்றி உரித்தாகுக.

முருகனை ஒளி மயமாய்க் கண்டு களித்த இரத்தினகிரி பாலமுருகன் அடிமை அவர்களின் ஆசிகலந்த ஆய்வுரை என்னுடைய ஆய்வுக்கு ஓர் ஆன்ம பலத்தை - நலத்தை நல்குவதாகவுளது. அவ்வுரையில் அவர்களுடைய ஆத்மானுபவங்களையும் நம்மீது அருள்கூர்ந்து வெளிப்பட எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய பாராட்டுரை நிரம்ப ஊக்கந்தருகிறது. இவர்தம் உரையை அனைவரும் படித்து இன்புறலாம். தவத்திரு சுவாமிகள் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி அவர்தம் அருளாசிகளைப் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த நூலைப் படித்துப் பார்த்து யோசனைகள் பல சொல்லி இதன் தரத்தை உயர்த்திட உதவிய எங்கள் வாஸ்து வேத ஆய்வு

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.வி.ராமமூர்த்தி,B.Sc.,B.E., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாகிறேன். திரு.இராமமூர்த்தி அவர்கள் கடந்த 1973லிருந்து நாளது வரை 25 ஆண்டுகளாக என்னுடைய கல்லூரிப் பணிகளோடும், ஆய்வுப் பணிகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இவர் ஒரு Hyper Critic உறுதிமிகு திறனாய்வாளர். ஒருபாற்கோடா நடு நிலையாளர். என்னுடைய இந்த நூலைப் படித்து ஒரே வரியில் மதிப்புரை எழுதிக் கொடுப்பதாக முன்வந்து ஒரு சிறிய குறிப்பைத் தந்துள்ளார். வாசகர் நலன் கருதி அதனை இந்த நூலின் இறுதியில் இடம் பெறச் செய்துள்ளேன். அவர்தம் நுட்ப அறிவுத் திறத்திற்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கமும் நன்றியும் உரியதாகுக.

இந்த நூலை கம்ப்யூட்டர் டைப் செட்டிங் செய்து கொடுத்திட்ட திரு.என்.தனசேகரன்,B.Com.,PGDCA.,க்கும் இந்நூலுக்கு அணியேற்றி அச்சேற்றிக் கொடுத்திட்ட கேப்டன் பிரஸ் உரிமையாளர் திரு.கிருஷ்ணன் அவர்களுக்கும் எனது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிக்கிறேன்.

*— டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி*

# வேண்டுகோள்

[இந்த நூலில் காணும் விஞ்ஞானச் செய்திகளையும் நுட்பங்களையும் இரண்டுமுறை படியுங்கள்]

அறிஞர்முன் படைத்திட்ட எதிர்வரும் கட்டுரையானது ஒரு நூலாக வடிவெடுத்திருப்பதால்-இந்த நூலுக்குப் புரட்சிகரமான தலைப்பும் கொடுத்திருப்பதால் - இரண்டையும் பொதுமக்களிடம் வழங்கிட ஆசைப்பட்டதால்-பொது மக்கட்கு நிரம்பச் சான்றுகளும் விளக்கங்களும் தேவை என்பதை உணர்ந்திட்டதால்-பல்வேறு விஞ்ஞான நுட்பங்களை முகவுரையில், அறிமுகஉரையில், குறிப்புகளில், மற்றும் பல இடங்களில் தெளித்து வைத்திருக்கிறேன். நான் செய்திட்ட ஆய்வுகளும், வெளிப்படுத்திய செய்திகளும் பெரும்பாலும் வேறு நூல்களில் தொகுத்துக் கூறப்பட்டதாகத் தெரியவில்லையாதலால்-பண்டைய இந்திய விஞ்ஞானம் ஒன்று இதன் மூலம் வெளிப்பட இருப்பதால்-இஃதொரு கடின விஞ்ஞானமாகவும் அமைந்திருப்பதால்-இந்த நூலை இரண்டு முறை படியுங்கள் என்று வாசகர்களை முதற்கண் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த நூலுக்குப் பாராட்டும், மதிப்புரையும், ஆய்வுரையும் வழங்கிய டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள், ஒரு மொழி வல்லுநர். M.A.Tamil, M.A.Sanskrit, M.A.Philosophy ஆகிய மூன்று முதுகலைப் பட்டம் பெற்றதோடு French, German மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர். ஆகம விற்பன்னர். ஆதி சைவர் சமூகத்தில் பிறந்து, ஆகமத்தில் Ph.D பெற்றவர். வாஸ்துநூல்களை ஆய்ந்ததோடு, மயனுடைய விஞ்ஞான நூல்களைப் படித்தும், மொழி பெயர்த்தும் பன்னாட்டு கருத்தரங்குகளில் பங்கு கொண்டு விரிவுரைகள் ஆற்றியும் மேலை நாட்டு அறிஞர்களிடையே வேத ஆகம வாஸ்து நுட்பங்களை எடுத்துப் பேசியும் வருபவர்.

சைவ, வைணவ, சாக்த, பௌத்த, காஷ்மீரச் சைவ ஆகமங்களை ஒப்பு நோக்கி மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களில் உரையாற்றியவர். காமிகாமகத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், கிரணாகமம், சர்வஞானோத்தராகமம், தேவி காலோத்தராகமம், மதங்க பரமேஸ்வராகமம், பௌஷ்கராகமம், மிருகேந்திராகமம், ரௌரவாகமம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். 'சைவாகமரத்தினம்', 'சைவஆச்சாரிய ரத்தினம்', 'மயவிஞ்ஞான கலாநிதி', 'வேத ஆகம வாஸ்து-சில்ப வாசஸ்பதி' போன்ற விருதுகளைப் பெற்றவர். இப்போது சென்னையில் Indian Institute of Indology என்ற ஆய்வு நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

எனவே எனது கட்டுரையோடு டாக்டர் சபாரத்தினம் அவர்கள் இந்த ஆய்வு நூலுக்கு வழங்கி யிருக்கும் ஆய்வுரையினைத் தவறாது படித்திட வேண்டும் என்றும் கோரிக் கொள்கிறேன்.

வாஸ்து-ஆகம-சாஸ்திரங்கள், விஞ்ஞான நூல்கள் என்று கண்டறிந்து அவ்விரு மரபுகளின் மீது படிந்துள்ள அறியாமையினைத் துடைத்திட நாங்கள் இருவரும் பல முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறோம். மூடநம்பிக்கையில் நமது சமயம் வளர்ந்துள்ளது என்ற கூற்றை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. அவ்விரு மரபுகளின் அடிப்படையில் மறைபொருளாக இருக்கும் விஞ்ஞானத்தை இதுகாறும் அக்கறை கொண்டு எவரும் தேடினார்கள் இல்லை என்றாலும் நாங்கள் முயலுகிறோம். காலவெள்ளத்தில் அடித்துச் சென்று விட்ட, காலப்புயல்களால் சிதறுண்டு போன ஓர் அரிய விஞ்ஞானத்தை மீண்டும் இந்திய மண்ணில் ஊன்றி வைத்து, விளைத்திட, நீருற்றிட, வளர்த்திட எடுத்துக் கொண்ட முயற்சியே இஃதாகும்.

உருவவழிபாட்டின் உண்மையை, விஞ்ஞான இயலை, அதன் மேன்மையை மெய்ப்பிப்பதே இந்த ஆய்வின் நோக்கம். ஆலய வழிபாட்டின் அடிப்படையை, விஞ்ஞான அனுபவத்தை எடுத்துச்சொல்லி மூடநம்பிக்கைகளை தகர்த்தெறிவதும் பிரிதொரு நோக்கமுமாகும்.

இந்த நூலுக்கு அறிஞர் சொல்லும் கருத்துக்கள், இளைஞர் காட்டும் ஆர்வம், பொது மக்கள் அளித்திடும் ஆதரவு, விஞ்ஞானியர் விமர்சிக்கும் கூற்றுக்கள் எங்களை மேலும் இவ்வழி அழைத்துச் செல்லும் என்று நம்புகிறேன்.

- நூலாசிரியர்

# முற்சேர்க்கை

**ஒரு சில வரலாற்று எச்சங்கள்- மய விஞ்ஞானம் பற்றிய உலகளாவிய ஆய்வுகள், ஸ்தபதியின் ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய விளக்கங்கள்**

# தொல்பழம் இந்திய விஞ்ஞானி மயன்

மத்திய அமெரிக்காவிலே, மெக்ஸிகோ என்ற மாநிலத்திலே, பண்டை நாளில், பண்பட்ட ஆன்மிக நாகரிகம் Spiritual Culture ஒன்றைத் தோற்றுவித்து, பல்வகை பிரமிடுகளையும் (மேருக்களையும்), நாடு நகரங்களையும், வானவியல் நுட்பங்களையும், கால நிர்ணய நெறிமுறைகளையும் உலகுக்குக்களித்து மங்காப் புகழ் கொண்ட 'மாயன்[1]' என்பான் நமது பாரத நாட்டிலே தொல் பழங்காலத்திலே 'மயன்' என்ற பெயரிலே ஒரு கட்டிடக் கலைஞனாக வாழ்ந்து வந்தான். இவனே இன்று உலகெங்கணும் பேசப்படும் வாஸ்து விஞ்ஞானத்தின் தந்தையுமாவன்.

இந்தப் பரந்த நில உலகிலே ஒவ்வொரு இன மக்களும் அவர்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும், அனுபவத்துக்கும், தேவைக்கும் ஏற்ப, கட்டிடக் கலை மரபு ஒன்றினைத் தோற்றுவித்துக் கொண்டு அதனை ஓங்கி வளரச் செய்திருக்கிறார்கள். பெரும்பாலும் அங்ஙனம் வழி-வழிவந்த அமைப்புக்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப் போயிருப்பினும், ஒன்றையொன்று தழுவி வளர்ந்திருப்பினும், நமது பாரதநாட்டுக் கட்டிட அமைப்பு மட்டும் அவற்றிலிருந்து

---

1 மாயன், மயன் கலாச்சார ஒற்றுமைகளை வை.கணபதி ஸ்தபதியின் 'Sthapati's visit to Maayan land' என்ற monograph-ல் காண்க.

முற்றிலும் வேறுபட்டு ஒருவகையான தனித்தன்மை[1] கொண்டு விளங்குவதின் காரணத்தை நம் நாட்டினரும் மேலை நாட்டினரும் இந்தக் காலக் கட்டத்தில் உற்று நோக்கிட முனைந்திருக்கின்றனர். வாஸ்துவை Suspect Science என்று மேடைகளில் அடித்துப் பேசியோர் இப்போது 'Scientific Vaastu' என்ற தலைப்பில் தேசிய மட்டத்தில் கருத்தரங்குகளை நிகழ்த்தி வருகிறார்கள். உறுதியாலும் எழில்மிகு தோற்றத்தாலும் கருத்தாலும் நமது மரபு ஓங்கி நிற்பதைக் கண்டு வியந்து அதன் நுட்பத்தை அறிந்து கொள்ள வேறு பல முயற்சிகளை மேற்கொண்டும் வருகிறார்கள். இந்த ஆய்வுகள் ஐரோப்பிய நாட்டில் மிக ஆழமாகச் சென்று கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டில் பொறியாளர்கள் தீவிரமாகச் செயலாற்றிட முனைந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் Feng Shui என்ற சீன வாஸ்து வெகுவாகப் பரவி வருகிறது. அன்னார் வாஸ்துவின் பயனை 'Space Therapy' என்று கூறி, பணி நிலையங்களையும் (design centres) நடத்தி வருகிறார்கள். என்றாலும் இந்திய நாட்டுத் தொல்பழம் பொறியியல், கட்டிடக் கலை, சிற்பக் கலை, கலை நெறிகள், வரலாறு மற்றும் வழிபாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை நேரில் கேட்டும் பார்த்தும் சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்தும் நூல்கள் பல வெளியிட்டிருந்தும் வாஸ்து வழிப்பட்ட விஞ்ஞான அடிப்படையையும், பிம்பம்

1 இயல், இசை, நடம் ஆகிய மூன்றை 'முத்தமிழ்' என்று இன்று நாம் கொண்டாடுவது போல, சிற்பத்தையும் கட்டிடத்தையும் ஒருசேர அமைத்து ''ஐந்தமிழ்'' என்று கொண்டிட்ட தொல் மரபொன்றும் இருந்தது. இவ் 'ஐந்தமிழ்' மீண்டும் உருப்பெற்று ஓங்கிடும் நன்னாளை எதிர்நோக்குவோமாக! இவ்வைந்தும் ஒரே இலக்கண அடிப்படை கொண்டிருப்பதால் இத்தகைய தொகுப்பு தொல் பழங்காலத்தில் இருப்பதாயிற்று!! விவரத்தை உள்ளே காண்க.

மற்றும் கட்டிட நிர்மாணம் தழுவிய கணிதவியலையும் அதன் சூக்ஷமத்தையும் இன்னும் நம்மவர் அறிந்தார்களில்லை. அப்படியொரு விஞ்ஞானம் தொல்பழம் காலத்தில் இருந்தது, இன்றும் அஃது உளது என்றால் இதனை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். காரணம் யாதெனில், கண்ணால் பார்த்தறிய முடியா ஞாலப் பொருளை - நுண் பொருளை (Subtle substance/the subtle space that permeats the universe and dwells in all objects of the universe including human beings) கண்ணால் பார்த்தறியத் தக்க வடிவமாக - ஒருவித கணக்கைக் கொண்டு நமது பாரதக் கட்டிடக் கலை மரபு ஆக்கித் தந்துள்ளதே அதன் நுட்பம் அறிய முடியாது போனது தான் அதன் அடிப்படைக் காரணமாகும். இந்த நிலையில் இதன் விளைவாய் நமது பாரத நாட்டுக் கட்டிடங்கள் பிரபஞ்ச ஸ்வரூபமாக (mini universe) அமைகின்றன என்பதை நமது வாஸ்து சாஸ்திரங்கள் தன் அகத்தே வைத்துக் கொண்டுள்ளன; நற்பயன் விளைவித்துக் கொண்டே உள்ளன. ஆனால் நம் நாட்டுத் தத்துவ அறிஞர்கள் இக்கருத்தை இன்னும் உற்று நோக்கவில்லை. அக்கட்டிடங்களை வெறும் கற்பனை மிகுந்த அழகுமிகு வடிவங்களாகவே பாவிக்கின்றார்கள்.

இந்தியக் கட்டிடங்கள் பிரபஞ்சத்தின் பிரதி ரூபங்கள் (image) என்று நிறுவியவன் இந்த மயன் ஆவன். இக்காரணத்தால் இவனை 'விஸ்வகர்மன்' என்று மகாபாரதத்தில் வேத வியாஸனே சுட்டிப் பெருமைப்படுத்துகிறான். இந்த அடிப்படைக் கணக்கை நமக்குத்

தந்தருளியவன் தான் இந்த மயன் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியக் கணிதத் துறைக்கு '0' பூச்சியத்தைக் கொடுத்திட்ட கணித மேதையே இவன்தான் என்பதையும் சேர்த்துச் சொல்லிட விரும்புகிறேன். பூச்சியத்தை 'சுழி' என்று குறிப்பிட்டிருக்கிறான். இதனை 'ஒ'வின் மற்றும் 'ஒ'மின் எழுத்து என்று கொண்டுள்ளான்.

மேலும், கட்டிடக் கலையை ஒரு நாட்டினுடைய நாகரிகத்தின் 'கரு' என்று மேலை நாட்டு அறிஞர் நுட்பமாகப் பேசிய நிலையில் ''கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி'' என்று பிரபஞ்ச சிருஷ்டி நுட்பம் ஒன்றையும் கணக்கியல் மூலத்தையும் நிறுவியும் உள்ளான் இந்த மயன். கட்டிடங்களை நலம் தரும் உயிர்ப் பொருளாக (living organism) வடிவமைத்துக் கொடுத்தவனும் இவனே. ஆன்மத் துடிப்பைக் காலக் கணக்கென்று கண்டு தேர்ந்து அக்காலத்தையே - காலக் கணக்கையே - தாளக் கணக்காக தொழில்நுட்பத் துறையில் எளிமைப்படுத்திச் செயல்படச் செய்து - காலத்தின் வடிவங்களாக பல்வேறு துறைகளை - பல்வேறு பொருள்களைப் படைத்துக் கொள்ள உன்னதமான கலைமரபொன்றை நிறுவியுள்ளான். ''கைவினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின'' என்று சிலப்பதிகார ஆசிரியர் உயர்த்திப் பேசிடத் தக்க பெரும் புகழ் பெற்றிருந்தான். கடவுளையே கால வடிவமாகக் கண்டறிந்து அக்கடவுளைக் காலமாக் கடவுளென்றும் காலப் பிரம்மன் என்றும் உறுதிப்படுத்தியுள்ளான். இதே மயன்

தான் ''நம் நாட்டு இசையிலே இக்கணக்கைப் புகுத்தி அவ் இசையினைக் கட்டிட அமைதி கொண்டதாகவும் இசை வடிவங்களை (musical forms) ஆன்மத்தின் உணர்ச்சி வடிவங்களாகவும் அமைத்துக் கொடுத்தவன்!

மாயன் - மயன் கலாச்சாரத் துறையிலே தனிப்பட்ட - ஆனால் ஒருமைப்பாடுடைய ஒரு நுட்பத்தைக் கண்டேன். இச்சான்று ஒன்றே இருவரும் ஒருவரே, வெவ்வேறானவர் அல்லர் என்ற எனது உறுதிப்பாட்டை அமெரிக்க ஆராய்ச்சியாளர்[1] வியந்து பாராட்டியுள்ளதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வாஸ்து நூல்களில் பிரபஞ்சத்தின் அமைப்பைக் (Structure of the universe) காட்டும் வாஸ்து புருஷ மண்டலம் என்ற ஒரு சதுர வடிவ Geometrical diagram உளது. இக்கலை நுட்பம் தான் - கலை வடிவந்தான் ஐரோப்பிய ஆய்வர்களையும், மாயன் நாகரிக ஆராய்ச்சியாளர்களையும் வெகுவாக ஈர்த்த ஓர் அம்சமாகும். இதைச் சுற்றித்தான் மயமதம் என்ற மயனின் வஸ்து சாஸ்திரமே சுழல்கிறது; மாயனின் விஞ்ஞான சமயமும் சுற்றிச் சுழல்கிறது. மயவிஞ்ஞானத்தின் மூலமே இதுவென்றால் ஆச்சரியப்படுவீர்கள். இதைத்தான் 'பிரபஞ்ச வடிவம்' 'ஞாலத்தின் மூல வடிவம்' என்று மேலெழுந்தவாரியாகச் சுட்டிக் காட்டி வந்தேன்.

---

1 On referring the article of Sthapati's visit to Maayan land, Mr.Lt.Lawrence Frego, USNR, (RET.), 693, Coral Circle, St.Augustine, Fl. 32084, USA., comments, "Your discoveries are quite incredible! In the 20 years I have been studying South America, you are the first to offer proof of the connection between India and South and Central America".

மேலும், இலங்கையை ஆண்ட இராவணனின் மாமனாரும் அவனுடைய மனைவி மண்டோதரியின் தந்தையுமாவன் இந்த மயன். இவனொரு 'மகாகவி' என்ற ஒரு செய்தியை வேத வியாசனே மகாபாரதத்தில் குறிப்பிடுகிறான். [1]தானவர்களின் மகாகவி என்பது அவன் கையாண்ட சொற்றொடராகும். பண்டைக் குமரிக் கண்டத்தில் நிகழ்ந்து விட்ட Continental drift-ஆல் அவன் நாகரிகமும் அவன் மக்களும் பூமியின் பின்புறத்தே உள்ள இன்றைய மத்திய அமெரிக்காவுக்குத் தள்ளப்பட்டனர். இதனால் மயன் வழிவந்தோர் அங்கே 'மாயர்கள்' என்று பெயர் பெறுவாராயினர். அந்தக் காலக் கட்டத்தில் அவனது நாகரிகம் எந்த அளவிற்கு இந்தியாவில் வளர்ந்திருந்ததோ அந்த நிலையிலேயே அதனை இன்று நாம் அங்கே காண முடிகிறது. அவனுடைய கட்டிடக் கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றின் சுவடுகளை நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகிலே நட்டாத்தி என்ற கிராமத்திலேயும் கேரள மாநிலத்தேயும் நாம் இன்றும் காணமுடிகிறது. கண்ணூர் என்ற இடத்தில் பிரமிடுச் சுவடுகள் (stepped pyramid) இன்னும் உள்ளன. நடை உடை பாவனைகளும் கேரளப் பண்பாட்டை ஒத்துப் போகின்றன. ஜம்பூத்வீப மெனப்பட்ட நாவலந் தீவில் (இந்திய நாட்டின் புராதன நிலப்பரப்பின் பெயர்) மயேந்திர மலையில் வாழ்ந்து வந்த மயனும் அவன் மரபினரும் வடக்கு நோக்கிப் பயணித்துக் கேரள நாட்டில் வந்து தங்கி இருந்திருக்க வேண்டும்

---

1 दानवानां महाकविः ।

எனத் தெரிகிறது. தமிழகத்திலும் கன்னியாகுமரி மாவட்ட எல்லையில் களக்காடு அருகே மயேந்திர கிரி, மயன் பரம்பு என்ற இரு இடங்களை நாகர்கோவில் கலை மற்றும் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர்.எஸ்.பத்மநாபன் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கொப்பக் கேரளச் சிற்பிகள் இன்றும் தங்களை 'மயாச்சாரியர்' என்றே சொல்லிக் கொள்கின்றனர். மரச்சிற்பம், மரக் கட்டடம் ஆகியவற்றில் (timber architecture) கைத்திறன் மிக்கவர்கள் கேரளச் சிற்பிகளே என்பது உலகறிந்த செய்தி. மயனும் மரக் கட்டடக் கலையில் பேராற்றல் பெற்றிருந்த செய்திகளை மகாபாரதத்தில் 'மயசபா நிர்மாணம்' என்ற அத்தியாயத்தில் வெகுவாய்க் காணலாம். மேலும், இவன் வழி வந்தோரே பிற்காலத்தில் 'பெருந் தச்சர்கள்' (highly skilled designers and builders) என்று போற்றுதலுக்குள்ளாகி, அதன் விளைவாய் பரமேஸ்வரப் பெருந் தச்சன் (உத்திரமேரூர்), ராஜராஜப் பெருந்தச்சன் (தஞ்சாவூர்), கேவாதப் பெருந்தச்சன் (மாமல்லபுரம்), ரவிப் பெருந்தச்சன் (திருவொற்றியூர்) என்றெல்லாம் தமிழக கல்வெட்டுகளில் பதிவாகியிருப்பதைக் காண்கிறோம்[1]. அவனது மொழி, வாழ்க்கை நெறி, தொழில் நெறிமுறை, கட்டடக் கலை நுட்பங்கள், கால ஒட்டத்தின் கணக்கியல், கால

---

1 இந்திய நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் அரும்பாடு பட்டவர்களும் இன்னும் ஆரவாரமின்றி, ஆதரவின்றித் தொடர்ந்து சேவை செய்து கொண்டு வருபவர்களுமான இந்தியச் சிற்பியரைப் பற்றித் தனித்து ஆய்வுகள் எந்த நிலையிலும் எவரும் செய்திடவில்லை. உண்மைச் செய்திகள் யாதொன்றும் வெளிவரவில்லை. இந்த நேரத்தில் மேலைநாட்டினர் ஒரு சிறிது கவனம் செலுத்திடத் தலைப்பட்டிருக்கின்றனர். ''இந்திய மாயர்கள்'' தங்கள் வரலாற்றைத் தாங்களே எழுதிட முன்வருதல் வேண்டும் என்பது எனது கோரிக்கை.

நெறி தழுவிய விஞ்ஞான தத்துவங்கள் முதலியன தென்னக ''மயமத வஸ்து சாஸ்திர'' நெறிமுறைகளை ஒத்துப் போவதை ஆய்வு மூலம் காண முடிகிறது. சுருங்கச் சொன்னால், மாயனும் மயனும் ஒருவரையே குறிப்பிடும் இரு பெயர்கள் என்றே அகச் சான்றுகள் மற்றும் புறச் சான்றுகள் மூலம் உறுதி செய்ய முடிகிறது. அவர்தம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்திட்ட சான்றுகள் இத்தகைய ஆய்வில் சிறப்பிடம் வகிக்கின்றன[1].

மயன் மாபெரும் விஞ்ஞானியாகவும், விஞ்ஞானப் பாடல்களை இயற்றிக் கொடுத்திட்ட மாபெரும் கவிஞனாகவும் வாழ்ந்து ஓங்கியிருந்த செய்திகளையும், அவன் செயல் சிறப்புக்களையும் பண்டைய இலக்கியங்களான வேதங்கள், இதி-ஹாஸங்கள், புராணங்கள், தமிழ் மற்றும் சம்ஸ்கிருத இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அதற்கு உறுதியான சான்றுகளாய் அவன் பெயரில் நீடுநிலைத்திட்ட இரண்டு விஞ்ஞான நூல்கள் இன்னும் நம்மிடையே புழக்கத்தில் இருந்து வருகின்றன. அந்த நூல்களில் ஒன்றுதான் எல்லோருக்கும் இன்று மீண்டும் அறிமுகமாகிவரும் 'மயமதம்' என்ற கட்டிட- சிற்பக்கலை நூலாகும். தென்னாட்டுச் சிற்பக் கலைக்கு இஃதொரு மூலநூல். தென்னக கிரந்த லிபியில் எழுதப்பட்ட தொல்நூல்[2] 'சூரிய சித்தாந்தம்' என்ற தொல்பழம் வான நூல்

---

1 விவரம் காண்க: Monograph on 'Sthapati's visit to Maayan land' released at the Second International Seminar on Mayonic Science and Technology, held at Thiruvananthapuram, Kerala in January '97.

2 சிற்ப நூல்கள் போல ஆகம நூல்களும் கிரந்த லிபியில் தான் எழுதப்பட்டிருந்தன.

ஒன்று அவன் பெயர் தாங்கிவரும் இரண்டாவது நூலாகும். இங்கே மயனை மயாசுரன்[1] என்று இந்த நூல் காட்டுகிறது. மயன் பெயரில் ஆகம நூல்[2] ஒன்று சமஸ்கிருதத்தில் இருந்திருப்பதை சிவாகமச் சார்புடைய மிருகேந்திராகமத்தில் - அவ்வாகமத்தின் உரையாசிரியர் - இவனது கொள்கைகளை மேற்கோள்களாக எடுத்துக் காட்டுகிறார். இதனை அறிஞர்தம் கவனத்துக்கு முதன் முதலில் கொண்டு வந்தவர் ஆகம வாஸ்துப் பிரவீணர் டாக்டர.எஸ்.பி.சபாரத்தினம் ஆவார்கள்.

நான் பேசி வந்த விஞ்ஞான வாஸ்துவுக்கு மூலவனும் முன்னவனும் இவனே ஆவன். இவனது தொல்பழங்காலத்துக் கலாச்சாரமே இந்திய கலாச்சாரமாக உருமாறி, பரவி, பாரத நாடு முழுவதும் ஆங்காங்கே சிறப்பான வளர்ச்சிகளைப் பெற்று இந்திய நாட்டை ஏக நாடாகக் கண்டு கொள்ளச் செய்திருக்கின்ற உண்மை மெல்ல மெல்ல இப்போது பரவி வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் தொல் பழங்காலத்தில் இந்தியாவின் தென்கோடியில் பிறந்த இவன் தென்னவனாகவும் இருந்த செய்திகளும் தேசியக் கலைஞனாக வளர்ந்து விஞ்ஞான வாஸ்துவை நாடெங்கனும் பரப்பிய செய்திகளும் மேற்சொன்ன இலக்கியங்கள் வாயிலாகவும் சிற்பியர்தம் தொழில் மரபுச்

---

1 அறிவாற்றலும், உடலுறுதியும், ஆன்ம பலமும் கொண்டோரே அசுரர் என கொள்ளப்பட்டனர். இப்பொருளில்தான் இந்திரனும், வருணனும் ரிக் வேதத்தில் அசுரர்களாகக் காட்டப்படுகின்றனர். புரான காலத்திற்றான் திரித்துக் கூறப்படுவராயினர். புராணக் கூற்றை கைவிடுக.

2 மயன் பெயரில் 'மயாகமம்' என்ற ஒரு நூலும், 'பிரணவ வேதம்' என்ற பிரிதொரு நூலும் என்னிடமுள்ளன. அவ்விரண்டும் 2000வது ஆண்டு ஜனவரி 1ம் தேதி வெளிவருகின்றன. இவ்விரண்டும் மயனால் செந்தமிழில் எழுதப்பட்ட நூல்களாகும்.

செய்திகள் வாயிலாகவும் உறுதி பெற்றுள்ளன. இன்றைய உலக வரலாற்று ஆய்வர்கள் 'மயன்' 'மாயன்' மீது அளவிடமுடியா ஆர்வம் காட்டிப் பழைய ஆய்வுகளை மீள்பார்வை செய்து வருகிறார்கள். தொல் பழங்காலத்தில் இந்தியப் பெருநாட்டின் தலை விஞ்ஞானியாகத் திகழ்ந்திட்ட இவனது கண்டுபிடிப்புகளின் நுட்பங்களையும் உச்சங்களையும் இக்கால அறிஞர்கள் இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை என்று அறிஞர் பலர் பேசுகிறார்கள். அவன் ''விந்தை பல செய்திட்ட பேரறிவாளன்'' என்று மகரிஷி வால்மீகியும், 'பிரபஞ்சத்தைப் படைத்துத் தந்த விசுவகர்மனுக்கு ஒத்த படைக்கும் ஆற்றல் பெற்ற பூலோக விசுவகர்மன்' என்றும் 'மகாகவி' என்றும் வேதவியாசனும், 'பிரம்மரிஷி மயன்' என்றும் 'தென்னவன்' என்றும் புராண ஆசிரியர்களும் 'சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலை மரபைத் தோற்றுவித்தவன் (tradition builder)' என்று சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகளும் தத்தம் இலக்கியங்களில் 'கல்வெட்டாய்' வடித்து வைத்த செய்திகள் இன்று உண்மைச் செய்திகளாய்த் தெளிவு பெற்று வருகின்றன. இவ்வளவு செய்திகள் இருந்தும் இவனை எவரும் கண்டு கொள்ளவில்லை!

அவன் உணர்ந்து நிறுவிய விஞ்ஞானத்தையும் செய்திட்ட விஞ்ஞான விந்தைகளையும் சுருக்கிச் சொன்னால்: ''விண்ணும் மண்ணும் விஞ்ஞானி மயனின் ஆராய்ச்சிக்குரிய மூலப் பொருள்கள் (raw materials) ஆயின. உயிரினங்களின் அகவிண்ணின், அகஉணர்வின் துடிப்பே (vibration of consciousness) கணக்கியல்

ஆயிற்று; துடிப்பலைகளே மூல வடிவங்களாயின (basic layouts). இவற்றைக் கொண்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு பாலம் அமைத்தான். விண்ணை மண்ணில் இறக்கினான். மண்ணை விண்ணுக்கேற்றினான். விண்ணும் மண்ணும் ஒன்றெனச் சொன்னான். முன்னையதை வஸ்து என்றான்; பின்னயதை வாஸ்து என்றான்; விண்ணை, விண் ஆற்றலை பிரம்மம் என்றான்; புருஷன் என்றான்; காலம் என்றான்; கால புருஷன் என்றான்; விண்ணின் அகத்துடிப்பைக் கண்டு தேர்ந்து அளவிட முடியா விண் மூலத்தையும் அதன் வழித் தோன்றிய ஒலி மூலத்தையும் அளவுக்குள் கட்டுப்படுத்தினான். காணமுடியா அதனைக் காலக் கணக்காகக் கண்டு தேர்ந்து கண் எதிரே நிறுத்திக் காட்டினான். அதனையே கடவுளென்றான். நெறியொன்று அமைத்து அம்மெய்ப் பொருளை வழிபடச் செய்தான். கடவுட் படிமம் தங்கிடும் கட்டடத்தையும் வழிபடு பொருளாக்கினான்.

எளியதொரு மண்பொருளைக் கொண்டு இனியதொரு [1]விண்பொருளைத் தந்தான். இறுதியாக மண்ணில் வாழ்வோர் விண்சுகத்தைத் துய்த்திட இலக்கணம் ஒன்றையும் வகுத்தான்; அந்த இலக்கணமே முன்பு சொன்ன 'மய மதம்' என்ற வஸ்து சாஸ்திரமாகத் திகழ்கிறது''.

சிற்பிகளாகிற எங்கள் முன்னோரும் நாங்களும் மயன் வழி வந்த கட்டிடக்

---

1 ஆடலன் உருவை.

கலைஞர்களாகவும் சிற்பக் கலைஞர்களாகவும் பன்னெடுங் காலமாக இருந்து கொண்டு இவன் மரபைக் காத்துவரும் பேறு பெற்றவர்கள் ஆனோம். இன்று இதன் விளைவாய் உலக மாந்தர் இனத்தின் கண்கள் இவன் மீதும் எங்கள் மீதும் விழுவதாயின. இளங்கோவடிகள் குறிப்பிட்டது போல ''மயன் விதித்துக் கொடுத்த மரபை'' உயிர்போலப் பேணிப் போற்றி வருகிறோம். இவன் விதித்துக் கொடுத்த அந்த விஞ்ஞான மரபு உலக மரபாகக் பெருகிட நல்லதொரு சூழ்நிலை இன்று உலகளவிலே தோன்றியிருக்கும் நற்செய்தியினை இங்கே தெரிவித்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

— *நூலாசிரியர்*

# பிரம்மரிஷி மயன் கண்ட பெருங்கலையும் மாக்கலையும்

பரம்பொருள்[1] எங்கும் உண்டு
பெருங்கலை[2] யாண்டும் உண்டு
பரம்பொருள் உணர்வினாலே
ஒளி[3] வழிபாடு கண்டேன்
பரம்பொருள் அருளினாலே
திருநடராசன்[4] கண்டேன்
பரம்பொருள் அருளினாலே
மாக்கலை[5] படைத்தேன் காண்பீர்.

---

*1. பரம்பொருள் :* ஞாலத்தின் அறுதிப்பொருள்; உறுதிப் பொருள்; மூலப்பொருள்; முழுப்பொருள்; ஒளியும் ஒலியும் ஒன்றித்த ஒரு பொருள்; விண் முழுவதும் பரவிய பொருள், எனவே விண்பொருள் என்றும் ஆகாயம் என்றும் பொருள்படும். ஆங்கிலத்தில் இதனைச் சொல்லிட வேண்டுமானால் energy *(அ)* energy with matter *(அ)* unified field of energy and matter என்று குறிப்பி டலாம்.

மொழி இலக்கண மரபில் இதனை உயிரும் உடலும் ஒன்றித்த பொருளாகிய எழுத்துரு (அக்ஷரம்) என்றும் விளக்கிடலாம். காரணம், எழுத்துருவில் energy and matterம் இயல்பில் கலந்துளதேயாகும். இவ்விரண்டும் சேரவில்லையெனில் எழுத்து என்ற உருவம் சொல்லிலும் சரி கல்லிலும் சரி வரவே இயலாது. பிரம்மத்தை 'அக்ஷரம்' என்று சொல்வதின் விஞ்ஞானப் பொருள் இது வன்றோ? (scientific interpertation of `akshara'! No doubt this is absolute and eternal).

'அக்ஷரம்' ஓர் அழியாப் பொருள் *(अक्षरं ब्रह्म)* இக்கருத்தை மேலும் விளக்கிட வேண்டுமெனில், 'ஓ' என்பது அக்ஷரம் script, letter ஒளிமயமான ஒற்றை எழுத்து; ஒளிச்சொல். 'ஓம்' என்பது ஒற்றையொலி. இவ்விரண்டும் ஒன்றித்து எழுவதே எழுத்தெனப்படும். இந்த விஞ்ஞான நிகழ்ச்சியை (scientific phenomenon) அடியாகக் கொண்டே **'ஒளியொலி வடிவாய் ஓங்கும் எழுத்தே'** என்பான் மயன் (unified form of light and sound). அதுமட்டுமல்ல, இக்கருத்திலே மனித வடிவமும் ஒரெழுத்தே.

அனைத்து உயிர்ப் பொருள்களும் எழுத்துக்களே. ஓவியமும் ஓரெழுத்தே. சிற்பமும் ஓரெழுத்தே. பரம்பொருளும் ஓரெழுத்தே என்று மயன் சொன்னான். எனவேதான் எழுத்தாகிய அக்ஷரத்தையே பிரம்மம் (अक्षरं ब्रह्म) என்றும் வேதம் பேசுவதாயிற்று. இத்தகைய விளக்கம் **ஸ்தாபத்ய வேதத்தைச்** சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பரம்பொருள் உணர்வே மயமான-எங்கும் நீக்கமற நிறைந்த-பொருள் ஆங்கிலச் சொல்லாகிய consciousness இதற்குப் பொருந்துகிறதல்லவா? (प्रज्ञानं ब्रह्म) பரம்பொருள் ஒரு விஞ்ஞானப் பொருள் Scientific substance என்று கொள்வது பொருந்துமன்றோ! (विज्ञानं ब्रह्म, ज्ञानमयं ब्रह्म)

**2. பெருங்கலை :** 'கலை' என்றால் ஆற்றல் என்று பொருள்படும். பேராற்றல் வாய்ந்த பரம்பொருளானது (Potential energy) தானே உணர்வுற்றுத் தானே தன்னைப் புலப்படுத்திக் கொள்ளக் கலைவதால் 'கலை' எனப்படுவதாயிற்று part or particle of kinetic energy. - இஃது உள்ளத்திலிருந்து முகிழ்வதால், வெளிக் கிளம்புவதால், ஆற்றலாய் வெளிப்படுவதால் ஆற்றல் என்றும் ஆற்றல் கூறு என்றும் ( Particle of energy, just like spark of fire) அதனால் 'கலா' (part of a whole) என்றும் பொருள்படுவதாயிற்று. ஓவியம், சிற்பம், இயல், இசை, நடம் எல்லாம் மூலப்பொருளின் ஆற்றல்கூறுகள்தானே? இதனாற்றான் நுண்கலைகள் என்று சொல்லப் படுவதுமாயின. இந்த நுற்பத்தின் மறுபெயர்தான் - இந்த நூற்பத்தில் கிளர்ந்தெழுவதால் 'சிற்பம்' என்று சொல்லுகிறோம். विज्ञानं शिल्पकौशलं அதாவது ''சிற்பத்தின் நுற்பமும், சிறப்பும் அது விஞ்ஞானமாயிருப்பதில் அன்றோ உளது!'' என்பான் வேதவியாஸன்.

பெருங்கலை என்று இங்கே உணர்த்தப்படுவது யாதெனில் பரம்பொருளின் 'கலை'யினால் - அசைவினால் - வெளிப்பட்ட பர வெளியே ஆகும்.(universal space) இந்தப் பரவெளியில் நிறைந்திருப்பது எண்ணற்ற ஒளி அணுக்களே (countless particles of energy) ஆகும். அதாவது ஆற்றலே மயமான-ஆற்றல் கூறுகள் நிறைந்த-ஆகாஸத்தை-புறவிண்ணை - 'பரவெளி' என்ற சொல் குறிப்பிடுகிறது.

ஆகாஸம் எனப்படுவது பேராற்றல் வாய்ந்திட்ட இடமாகும் (energetic space) அது மட்டுமல்ல, आ काशयति ईति आकाशः என்பது ஆகாஸம் என்ற சொல்லின் விளக்கம். எது எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறதோ -'வெளி' யாக்குகிறதோ-வெளிப்படத் தெரியச் செய்கிறதோ அஃது ஆகாஸமாகும் என்பது நுண்பொருளாகும். (இக்கருத்திற்றான் ஆகாஸமாகிற விண் ஆனது கருக்கள் நிறைந்த இடம் என்றும் சொல்வான் மயன். மேலும் ஒவ்வொரு கருவும் விண்கரு என்றும் அது ஒளி

மயமானதாகவிருப்பதால் 'ஒளிக்கரு' என்றும் இக்கருவே சினைத்து, முளைத்து, உயிர்தாங்கிய உருப் பொருள்களாக பிறழ்கின்றன என்றும் சொல்வான். சரிதானே! ) ஆகாஸம் Space என்பது ஏதுமில்லா வெற்றிடம் அல்லவே அல்ல. It is not a space of nothingness. அனைத்துப் பொருள்களும் தோன்றி ஒடுங்கிடும் இடமாகும் - பூமியைப் போல் இஃதொரு விளைநிலமாகும் - என்பது வாஸ்து தத்துவம். (விண்ணும் மண்ணும் விளைநிலங்களே - விண் அணுக்களே மண் அணுக்களாக உள என்பான் மயன்.) இந்த ஆகாஸம் தான் ஆத்மா என்றும் சொல்லப்படும் सर्व आत्मीयं लिंगं आकाशमेव - 'ஆத்மா என்பதும் லிங்கம் என்பதும் ஆகாஸமே' -என்று அம்மயனே மயமத வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லுவான். இதை யெல்லாம் பார்க்கும் போது ஆகாஸமே ஆத்மா என்றும், அந்த ஆத்மாவே (பிரம்மனே) ஞாலப் பொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது என்றும் தெளிவாகிறதல்லவா? எனவே, 'பெருங்கலை' என்பது விண்ணின் ஆற்றலையே (அ) ஆற்றல் மிகுந்த விண்ணையே energy-spaceயே குறிப்பிடுகிறது என்று உறுதி செய்யலாம்.

*3. ஒளி :* ஒளி என்ற சொல்லுக்கு உணர்வு என்பது ஒரு நுட்பமான பொருள். Light is a subtle matter, which generates consciousness. Hence `light' is `consciousness', `awareness' that dwells in the subtle space (inner and outer) and in all animate beings. ஒள்-ஒள்ளி-ஒளி ஆயிற்று. ஒள்ளுவது - உள்ளுவது - அதனால் உள்ளம் ஆயிற்று. சரிதானே? உள்ளம் என்பது உணர்வு முகிழ்ந்து ஓங்குமிடம். ஒளி ஓங்கி உருக்கொள்ளுமிடம். இதுவும் சரிதானே? எனவே 'உள்ளம்' என்ற சொல் ஆகாஸத்தையே - ஒளி விண்ணையே குறிப்பிடுவதாகிறது.

*4. நடராசன் :* நடராசன் சிவனைக் குறிக்கும் சொல். சிவன் ஆகாஸ தத்துவப் பொருள். Energy-யும், matter-ம் ஒன்றித்த ஆகாஸமே சிவன். (Dynamic field of energy and matter). அவனே கலைந்து (split ஆகி-தெரித்து-துடித்து) கலையாகி-கலைப்பொருளுமாகிறான். அவன் கலைமகன்.

ஆகாஸமானது ஒளி நிறைந்த இடம். ஒளிக்கருக்கள் குழுமிய இடம். ஒளி என்பது உணர்வின் மறுபெயர். இந்த ஒளிதான் - உணர்வுதான் - துடிப்புறும் இயல்பினது. இத்துடிப்பானது 'காலம்' எனப்படும். (கால-மா-திரைகள்/காலமாத்திரைகள்/கால அலைகள்) ஆனால் இந்தத் துடிப்பு அலைகள் இயற்கையின் ஒரு கணக்கை அடிப்படையாகக் கொண்டவை. இந்தத் துடிப்பை விஞ்ஞான நிலையில் காலக்கணக்கென்றும், இக்கணக்கைக் கையாளும் இயலில், இசையில், நடத்தில் இது தாளக்கணக்கென்றும் அங்ஙனமே சிற்பம் கட்டிடம் இயற்றும் துறையில் தாளக்கணக்கென்றும், ஆங்கிலத்தில் frequency of

vibration or rhythm என்றும் சொல்லப்படும். உயிரினங்களின் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்றுக்கு இந்த biological rhythm-மே காரணமாகும். துடித்து, துடித்துத்தான் உயிர்கள் உடல் தரிக்கின்றன. உடலே வளர்ச்சியுறுகிறது. ஒவ்வொரு துடிப்பிலும் வெளித் தள்ளப்படுவது matter - பொருள் - தான். energy-க்குள் நிறைந்து கிடந்த matter வெளிப்பட்டு உருவாக மாறுகிறது. இஃதொரு intrinsic change. இதில் விசேடமாய்த் தொக்கி நிற்பது யாதெனில் மூலப்பொருளின் முதல் rhythm-மே முதல் துடிப்பே (primal vibration) நடராசனின் வடிவம் தோன்றுவதற்கான காலத் துடிப்பாகும். அதாவது காலக் கணக்காகும். இந்தக் காலத்தின் வடிவாய் சிவன் உருத்தரிக்கிறான். 'காலன்' என்று சிவன்தானே புகழப்படுகிறான்? God is a vibrant being; space is a vibrant substance. Natarajan is a vibrant spatial form. விஞ்ஞான சமயமாக - விஞ்ஞானமும் சமயமும் ஒன்றாக ஜெனித்த இடமே நடராசன்தான். ஒளி மயமான ஆகாஸத்தில் நடப்பது ஒளி நடமே. எனவே ஒளி நடராசன் ஆயினான். Dance of the light.

இத்தகைய Rhythm நடம் ஆகாஸத்திலும் நடப்பதால் அதற்கு மூலவனும் முதல்வனும் தலைவனும் சிவனாதாலால் 'நடராசன்' Lord of dance, (the rhymic vibration - rhymic evolution of energy waves) என்ற பெயர் பெறுபவனாயினன்.

இந்த ஒளித்துடிப்புத்தான்-மூலத்துடிப்புத்தான் பிரபஞ்சசிருஷ்டிக்கு மூலகாரணமும் ஆகும். நம்மிடமும் இந்த ஒளிநடம் நடக்கின்றது. இத்துடிப்பு, இந்த முதற் துடிப்பு இசைத்துறையில் ஆதிதாளம் என்று சொல்லப்படும். ஆதிதாளத்திற்றான் நடராசன் ஆடுகிறான். ஆதிதாளமே அவனாகிறான். ஆதிதாளமிட்டுப் பாடினால், ஆடினால் அஃது அவனே ஆடுவதற்கு ஒப்பாகும். சிற்பத்தில் அஷ்டதாளம் என்று சொல்லப்படும். (எட்டு அக்ஷர காலம் இஃதாகும்) சூக்கும நிலையில் எட்டு ஆகக் கிளர்ந்த இத்துடிப்பு, ஸ்தூல நிலையில் (எட்டே) ஒன்பதாக உருமாற்றமடைகிறது என்று வாஸ்து விஞ்ஞானம் கூறுகிறது. எட்டு என்பது subtle என்றும் ஒன்பதென்பது gross என்றும் சொல்லப்படும். கண்ணால் பார்க்க முடியாத எட்டை ஒன்பதாக்கிக் காணும் பொருளாகக் காட்டுவது விண்கலைத் தொடர்புடைய சிற்பக்கலை. எட்டே ஒன்பதாகத் திரிபுறுவதால் எட்டும் ஒன்பதும் ஒன்றே என்று விஞ்ஞான அத்வைதம் பேசுவான் பிரம்மரிஷி மயன். விண்ணில் எட்டாய் முகிழ்ந்திட்ட பிரம்மம் தான் கருவறையில் ஒன்பதாய் - கண்ணால் பார்த்திடும் பிரம்மமாய் விளங்குகிறது? விண்பொருள்தானே மண்பொருளாய்த் திரிபுறுகிறது? எனவேதான், சிற்பக்கலையானது **மாக்கலை** என்று பெயர் பெறுவதுமாயிற்று. (வேதவியாஸன் கூற்றாகிய **विज्ञानं शिल्प कौशलं** என்பதின் உட்பொருள் இங்கே விளக்கமுறுகிறதல்லவா?) இதனையெல்லாம் உற்றுணர்ந்து,

வெளிக்கொணர்ந்து மாந்தர் இனத்தின் உயர்நலத்திற்குப் பயன்படுத்திய விஞ்ஞானி மயனே என்பது தெளிவாகிறதல்லவா?

**5. மாக்கலை** : மேலே சொல்லிய கணக்கியலைப் பயன்படுத்தி உயிர்ப்புள்ள வீடு, மனை, மாளிகை, கோயில், படிமம், நாடு, நகரம், பட்டணம், நீர்நிலை ஆகியவற்றை மனித இனத்தின் சுகபோகத்திற்கு இந்நாட்டுச் சிற்பிகள் செய்தளித்தார்கள். இதுவே **வாஸ்துக்கலை, சிற்பக்கலை** என்று நம்மிடையே வழங்கி வருகிறது. இக்கண் கொண்டு பார்த்தால் இஃதொரு மாபெரும் நுண்கலையாகுமல்லவா? எனவேதான் **'மாக்கலை'** என்று மயன் குறிப்பிடுகிறான்.

### பிரம்மரிஷி மயன்

மயன் முதற் சங்க காலத்தில் நிலந்தரு திருவில் பாண்டியனால் ஆதரிக்கப் பெற்று விஞ்ஞானக் கலைகளைப் போதித்து வந்தவன். சப்த ரிஷிகளும் இவனிடம் பாடம் கேட்டதாகப் புராணக்குறிப்பு ஒன்றுமுண்டு. மயன் தனது வகுப்பறைக்குள் நுழையும் போது மேற்கண்ட பாடலைப் பாடிக்கொண்டே வருவான் என்று அவனுடைய வரலாறு கூறுகிறது.

**சூரிய சித்தாந்தம்** என்ற மயன் எழுதிய நூல் வழியாகச் சென்ற 'கால-ஆய்வர்கள்' இவன் 10 முதல் 15 ஆயிரம் ஆண்டு காலக்கட்டத்தில் வாழ்ந்தவன் என்று கூறுகிறார்கள். இந்த மயனை இராவணனின் மாமனார் என்றும் மண்டோதரியின் தந்தை என்றும் இராமாயணம் காட்டுகிறது. ஆனால் இங்கொரு வரலாற்றுச் செய்தியைச் சொல்லி வைக்க வேண்டும் என்று எனக்கு உணர்வுமேலிடுகிறது. யாதெனில், இராமாயணம் நடந்த காலம் வேறு; வால்மீகி இராமாயண காவியம் எழுந்த காலம் வேறு என்பர் ஆய்வறிஞர். இராமாயணம் நிகழ்ந்த காலத்தில் இந்த மயன் வாழ்ந்திருக்கக் கூடும் என்று உறுதியாகச் சொல்லலாம். சிதறிக் கிடந்த வேதங்களைத் திரட்டி நான்கு கூறுகளாகத் தொகுத்தளித்த வேதவியாஸன் மயனை 'விஸ்வகர்மா' என்றும் தானவர்களின் 'மகாகவி' என்றும் தன்னுடைய மகாபாரதத்தில் புகழ்வதையும் உற்று நோக்குக[1]. மயனை நன்றாக அறிந்திருந்தவன் வியாஸன் எனத் தெரிய வருகிறது. மயனை வியாஸனுக்கு முன்னோடியவன்-முன்னவன்-என்றும் கூற இடமுளது. இதற்கு இலக்கியச் சான்றுமுளது. மகாபாரதத்தில் மட்டுமல்லாது, ஸ்ரீமத்பாகவதத்திலும் மயனுடைய வரலாறு பல இடங்களில் வியாஸனால் பேசப்படுகிறது. இங்கேதான் மயன் இயற்றிய **பிரணவ வேதமும்** வியாஸனால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரணவ வேதம் பற்றி எவரும் எடுத்துச் சொல்லியதில்லை. எவரும் பார்த்ததாகவும்

---

1 अहंहि विश्वकर्मा वै दानवानां महाकविः ।

தெரியவில்லை. ஆனால் சிற்பியர் மரபில் இது நன்கு தெரிந்த பெயரே என்பது இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். பிரணவ வேதத்தைத் தங்கள் சொத்து என்று இன்றும் சிற்பியர் உரிமை கொண்டாடுவர்!

எப்படியெனில், மூலமானது பஞ்ச பூதங்களாக வெளிப்பட்டு நிற்பதுபோல சிற்பியர் இயற்கையை ஒத்து ஐந்து பிரிவினராக உளர். இவர்களே பஞ்சஜனம் என்றும் சொல்லப்படும். மனு, மய, துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஞ என்று பெயர் கொண்டுளர். அவ்வைந்து பேரும் தனித்தனியே ஒரு வேதத்தை தனக்குரியதாகக் கொண்டிருந்த நிலையில் 'விஸ்வக்ஞன்' என்ற பெயருடையவர் 'பிரணவ வேதத்துக்குரியவர்' என்ற செய்தி சிற்பியர் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. வேதநெறியோடு உறவும் உரிமையும் இவர்களுக்கு நிரம்ப உண்டென்பது தெளிவாகிறது. இதனை **स्थपतिः सर्वशास्त्रज्ञः वेदविच्छास्त्रपारगः** என்று மயமத வாஸ்து சாஸ்திரம் சொல்வதிலிருந்தும் தெரியலாம். வழக்காற்றில் இருந்து வரும் நான்கு வேதங்களின் காலம் வேறு. வேதம் என்ற சொல்லும் வேத நெறியும் தோற்றம் கொண்ட காலம் வேறு என்பது (இந்த நான்கு வேதங்களுக்கு முந்தைய காலமாக) பாகவதத்தின் மூலம் தெரிய வருகின்றது. **अनन्तो वेदः** என்ற சொற்றொடரில் இந்திய நாட்டின் தொல்பழம் வேதங்களின் வரலாறே பொதிந்து கிடக்கிறது எனலாம். வேதவியாஸனும் மயனும் சம காலத்தவர் என்று சொல்லிடவும் சான்றுகள் பல கிடைத்திருக்கின்றன[1]. 'மயனும்' 'மெக்ஸிகன்-மாயனும்' ஒருவனே என்பதற்கும் சான்றுகள் உள. மேலும் எகிப்திய பிரமிடுகள் இந்தியனின் படைப்புகள் என்று இப்போது தெரிய வந்த நிலையில் இங்கேயும் மயன் மரபு ஊடுருவி நிற்பதைக் காண முடிகிறது. மயன் தொல்பழங்காலத்து விஞ்ஞானி மட்டுமல்ல, தொழில்நுட்ப வல்லுனனாகவும் வேதவிற்பன்னனாகவும் இருந்திருக்கிறான். இந்திய நாட்டின் விஞ்ஞான வரலாற்றில் காலத்தாலும், விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் தரத்தாலும் ஓங்கி நிற்பவன் இந்த 'மயன்' என்பது நினைத்து, நினைத்து பெருமைப்படத் தக்கதாகும்.

இந்திய விஞ்ஞானம் மற்றும் கலாச்சார வரலாற்று ஆசிரியர்களால் தீண்டப்படாது கிடந்திடும் இந்த 'மயன்' இப்போது எல்லோரின் கவனத்திற்கும் வந்திருக்கிறான். ஆய்வர்கள் மேலும் கவனிப்பார்களாக.

**''நுண்வினைக் கம்மியர் காணா மரபின;**
**மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்''**
- இளங்கோவடிகள்.

---

1 வைவஸ்த மகாபுராணத்தில் - கிருஷ்ண பீம சம்வாதத்தில் இந்த வரலாற்று நுட்பத்தைக் காணலாம்.

''மன்னு மாமலை மயேந்திரம் தன்னில்
சொன்ன ஆகமம் செய்து அருளிய''
- மாணிக்கவாசகர்,
திருவாசகம் (கீர்த்தித் திருஅகவல்)

இளங்கோவின் இச்செய்தியை தலைப்பாகக் கொண்டு முனைவர் பட்டத்திற்கு முயலுங்கள் என்று இளைஞர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*இருபத்தைந்து ஆண்டுகள் தொடர் ஆராய்ச்சி (Marathon Research) செய்து கிளியோபாட்ராவை (Shakespear's Cleopatra-வை) கேரள நங்கையென்று ஓர் அமெரிக்க ஆய்வர் உறுதி செய்ததை இங்கே நினைவூட்டிட விரும்புகிறேன்.

---

* அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் காலத்தில் இச்செய்தி Indian Express (Madras Edition)-ல் வெளியான ஒரு கட்டுரையிலிருந்து.

## ஒருசில வாஸ்து விஞ்ஞானத் தேற்றங்கள் மற்றும் சிற்றுரைகள்

### (உள்ளே விளக்கிய விஞ்ஞானச் செய்திகளுக்கு எடுத்தாண்ட ஆதாரங்கள்)

''அண்ட மூலமாய்ப் பிண்ட மூலமாய்க்
கோண்டிலங்கு வேளி ஒளியேன
விண்ட மூலமாய் விண்ணின் மூலமா
எண்ணின் மூலமாய் நோக்கமாய்''

''உடலற்ற உயிர், உடல் தரித்த உயிராய்
உருமாற்றம் கோள்வது ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி.''

''உடலற்ற உயிர், உடல் தரித்த உயிராய் உரு மாற்றம் கோண்டிட அவ்வுயிரே சீலமிகு கணக்கியல் ஒன்றை தோற்றுவித்துக் கோண்டு, கணக்குஉருவாகி[1] இறுதியில் (உடல் தரித்த உயிராய்) தேரிபோருளாய் வேளிப்படுகிறது.''

''உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.'' [2]
(தொல்காப்பியம்)

''மேய்யோலி உயிரோலி சிவணுதல் இயல்பே.'' [3]
(ஐந்திறம்)

''உயிரோலி தோன்றுமுன் மேய்யியல் தோன்றும்'' [4]
(ஐந்திறம்) (உதாரணம்: க் + அ = க)

'க்' ஆகிய மெய் தோன்றிய பின்னரே 'அ' என்ற உயிர் தோன்றும்.

---

1. கணக்குரு - Numerical form, எண்ணுரு; எண்ணமே எண்ணாகி எண்ணாலான உருவாகத் திரிபுறுகிறது. இந்த எண்ணுருவே உடம்பெடுக்கிறது. எப்படியெனில், மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் சேர்ந்து

துடிப்புற்று (4 + 8 அணுக்களின் சேர்க்கையினால்) உயிர்மெய் எழுத்தாய் திரிபுறுவது போல அதாவது உயிர் தாங்கிய உடலாக உருமாற்றம் கொள்கிறது. இதுபோலத்தான் இயற்கையில் நமது உயிரும் உடலும் ஒன்றித்து மனித உருவாக வெளிப்படுகிறது. மனித உருவும் ஓர் எழுத்துத்தான். உலகில் காணும் அத்துணை உயிர்ப் பொருள்களும் எழுத்துக்களே என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால் உண்மையே. இஃதொரு விந்தையே. இஃதொரு விஞ்ஞான மாறுபாடு. இதற்குரிய விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கைப் பேசுவதுதான் பண்டைய வாஸ்து சாஸ்திரமாகும்.

2,3,4 ஆகிய மூன்று சூத்திரங்கள் முன்பத்தியில் விளக்கிய நுட்பமான விஞ்ஞான நிகழ்ச்சியை உணர்த்துவனவாகவும், உறுதிப்படுத்து வனவாகவும் இருக்கின்றன. எப்படி என்று பார்ப்போம்.

உடம்பு matter; உயிர் energy; உடம்பும் உயிரும் இணைந்து எழுவது எழுத்து. மெய்யொலி material sound, audible sound. உயிரொலி subtle sound. இவ்விரு ஒலிகளின் கூட்டுப் பொருளே எழுத்துக்கு மூலப்பொருளாகிறது. The composite of material and subtle sounds gives rise to visible 'sound-based' form. This is 'letter' (akshara).

மேற்சொன்ன மெய்யும் உயிரும் சேர்ந்த உருதான் எழுத்துரு என்றும் எழுத்து என்றும் கண்டோம். (இந்த எழுத்தையே ஓவியம் - சிற்பம் என்பான் மயன்) எழுத்து ஒரு sound-based spatial form. எனவே இதனை unified field of energy and matter என்றும் சொல்லலாம். நாமும், உயிரினங்களும், பூமி, கோள்கள், ஆகாஸம் ஆகிய அத்துணையும் unified form of energy and matter தான். இந்த field (அ) இடத்தைத்தான் வாஸ்து புருஷ மண்டலம் என்று வாஸ்து விஞ்ஞான மரபில் சொல்லி வருகிறோம். இதனாலன்றோ 'வாஸ்துக்கலை' யானது 'மாக்கலை' என்று மயனால் உயர்த்திப் பேசப்படுவதாயிற்று.

இன்னுமொரு விஞ்ஞான நுட்பத்தை இங்கே சேர்த்து வைக்கின்றேன். ஆகாஸமாகிற Space ஆனது unified field of energy and matter என்பது உங்கட்குத் தெரியும். இந்த ஆகாஸத்திலேயிருந்துதான் அனைத்து உயிரினங்களும் தோன்றுவதாகவும் கண்டோம். இந்த நிலையில் முதலில் பிறப்பது அல்லது முளைப்பது matter என்றும் அதைப் பின்பற்றி energy-யும் வருகிறது என்று ஓர் ஒப்பற்ற விஞ்ஞானத்தை 'எழுத்தின்' பிறப்பு நமக்குத் தெரிவிக்கிறதல்லவா? ஒளி subtle matter-ஐயும் ஒலி subtle sound-ஐயும் உணர்த்தும். ''ஒளியொலி வடிவாய் ஓங்கும் எழுத்தே'' என்பான் மயன்.

## மய விஞ்ஞானச் சூத்திரங்கள்

''காலக்கூறே கணக்கியலாகி
கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி''

कालः सृजति भूतानि । कालः सम्हरति प्रजाः ॥
सर्वे कालस्य वशगाः। कालो तस्य वशे स्थितः ॥

''காலமே ஆக்கும்; காலமே காக்கும்
காலமே துடைக்கும்''

''காலமே எவைக்கும் மூலம் காலமே மூல ஆற்றல்
காலமே கோலத் தோற்றம் காலமே ஞாலத் தோற்றம்
காலமே விந்தை செய்யும் காலமே நுணுக்க மாயும்
காலமே அணுக்கள் ஆயும் காலத்தின் ஆற்றல் என்னே!''

''காலமும் இடமும் ஒன்றே[1]''

---

1. "In terms of measure, Time and Space are equal according to Mayonic Science. This is an important and significant discovery of Brahmarishi Mayan, which truth is applied in the creation of poems, musical forms, dance forms, architecture and sculpture, in the Indian tradition. All manifest forms (animate forms) are governed by this theory of Time and Space".

# காலம் இடமாகி-இடம்-இடவடிவமாகும் விஞ்ஞான நுட்பம்

## [Time changes itself into space and space further changes itself into spatial form]

***The vibrating element called Time causes this phenomenon.***

ஒலி இடம் (sound space) ஒலி வடிவங்களாக - ஒலிச் சொற்களாக உருப்பெறுவதுபோல ஒளி இடம் (luminous space) ஒளி வடிவங்களாக - ஒளிச் சொற்களாக - காட்சிப் பொருள்களாக உருப்பெறுகின்றன. இது நமது சிற்றுள்ளமென்ற சிற்றாகாஸத்திலும் பேருள்ளமென்ற பரமாகாஸத்திலும் நிகழ்கின்றன.

ச, ரி, க, ப, த என்ற பஞ்ச ஸ்வரங்களையும், ''ச, ரி, க, ம, ப, த, நி'' என்ற சப்தஸ்வரங்களையும், மேலும் ஐந்து ஸ்வரங்களையும், மொத்தத்தில் 12 ஸ்வரங்களையும் (வீணையில் எழும் அதிர்வலைகளை எண்ணிப் பாருங்கள். Tuning fork கொண்டு இவ்வதிர்வுகளை நிர்ணயிக்கிறோமல்லவா?) நமக்கு ஆக்கித் தருவது ஒலி வழிப்பட்ட அதிர்வு அலைகள்தானே? இந்த அதிர்வு அலைகள் மாறும் போது - கூடியும் குறைந்தும் அதிர்வு நிகழும் போது - ஸ்வரத்தின் தன்மையும் உருவும் மாறுகிறதல்லவா? எனவே இசையில் இந்தத் துடிப்பளவுகள் (frequency of vibration/units of time measure/units of sound measure) சிருஷ்டிக்குரிய உயிர்ப்பாகவும், வடிவம் தரும் கூறுகளாகவும் உள்ளன.

தமிழுக்கு உயிரெழுத்துக்கள் தொடக்க நிலையில் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தே. இவற்றோடு ஐ, ஔ சேர்ந்து ஏழு உயிரெழுத்துக்களும், மேலும் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தின்

நெடில்களைச் சேர்த்திடில் 12 எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் மொத்தத்தில் 12 ஆகின்றனவல்லவா?

ச, ரி, க, ம ....... என்பவை எங்ஙனம் இசை ஒலிகளாகக் கொள்ளப்பட்டிருக்கின்றனவே அங்ஙனமே தமிழ் ஒலிகள் அமைந்திருக்கும் நுட்பத்தை உற்று நோக்குங்கள்.

தமிழ்மொழியில் உயிரொலிகளாய் கொள்ளப்பட்ட பனிரெண்டும் இசை ஒலிகளே என்பதைக் கண்டு சொல்லிய இசைஞானி மயனே என்பதையும் கேட்டு மகிழுங்கள்! மேலே விளக்கிய அதிர்வுகளுக்கு 'மாத்திரை' என்பது கலையுலகில் புழங்கிடும் சொல் ஆகும் 'திரை' என்றால் 'அலை' என்பது பொருளல்லவா? மாக்கலை, மாத்தமிழ் என்ற சொற்கள் அமைந்ததுபோல இந்த அலைகள் மா+திரை மாத்திரை என்று வழக்குற்றன. காலமாத்திரை என்று சொல்லும் போது காலமே ஒலி அலைகளாக மாற்றுருக் கொள்கின்றன என்பது வாஸ்து விஞ்ஞான நுட்பம்.

இக்கருத்துப் புரியுமானால் இதே துடிப்பலைகள் ஒளி அலைகளாக எழும்போது உருவமும் தோன்றும் என்பது மேலுமொரு வாஸ்து விஞ்ஞான நுட்பமாகும்.

ஒலி அணுக்களால் ஆன ஒலி அலைகள் நமது உள்ளத்தில் தோற்றுவிக்கும் ஒளி வடிவத்தை ஞான வடிவம் என்று சொல்கிறான் மயன். உணர்ச்சிமயமான வடிவம் இஃதாகும். இந்த ஒலி வடிவம் ஒளி அணுக்களால் ஆன ஒளி வடிவமாக மாறினாற்றான் நமக்கு அவ்வடிவம் புரியக்கூடும். புரி நிலையில் ஒளி வடிவமே நமதுள்ளத்தில் தோன்றுகிறது-பளிச்சிடுகிறது. இதனை அகக் கண்களால் பார்த்தறிய முடிகிறது. இக்காட்சியானது, ஒரு கலைஞன் கை வழியே ஓவியமாக வெளிப்படுகிறது. இதற்கு Visual picture

என்று பெயரிடலாம். இதே போல், அகத்தில் வெளிப்படும் ஒளிக்காட்சியானது வாய்வழியே ஒலிக் காட்சியாக வெளிப்படுகிறது. வாய்வழியே வெளிப்படும் அக்காட்சியானது ஒரு கவிஞன் வாய்வழியே சொல்லோவியமாகத் திரிபுறுகிறது. இதற்கு aural picture என்று பெயரிடலாம். இரண்டையும் ஒப்பு நோக்கின் ஒளிப் பொருளும் ஒலிப்பொருளும் ஒன்றே என்பது புலப்படும். ஒலிப்பொருள் உருவம் தாங்கும் நிலையில் எழுத்து எனப்படுகிறது.

எழுத்தால் எழுந்த ஓவியம் எழுத்தோவியம் என்று சொல்லப்படுகிறது. காவியம் என்பது அதன் பிறிதொரு பெயர். இந்த நிலையில் காவியமும் ஓவியமும் ஒரே பொருளையுணர்த்தும் இரு கருவிகளாய் - கருத்தை விளக்குவதால் கருவி ஆனது - இரு உருக்களாய் இவ்வுலகில் சிறப்புற்று விளங்குகின்றன.

காவியத்துக்கும் ஓவியத்துக்கும் உருக் கொடுப்பது உணர்வில் எழுந்த துடிப்பலைகளே- காலமாத்திரைகளே, என்பதை உற்றுணர்க. காலமாத்திரைகளைக் கொண்டு - ஒலியணுக்களால் ஆன - எழுத்தாலான - சொல்லால் ஆன - சொற்கட்டுகளை (speech rhythm) என்று சொல்லுவோமல்லவா?

காவியம் எனப்படுவது கட்டிடம் போன்ற ஓர் அமைப்புடையதாகும். கட்டிடம் கட்டுவதற்கு செங்கல் தேவை. செங்கல்லுக்கு ஒப்பானது எழுத்துக்கள் அல்லது பல எழுத்துக்களால் ஆன சொற்கட்டுக்கள். இவை காலமாத்திரையால் கட்டுண்ட - கால அளவால் அமைந்திட்ட கட்டுக்கள். (three dimensional spatial form) செங்கல் செய்திட மண் அதாவது மண் அணுக்கள் தேவையல்லவா?

அதுபோல எழுத்தொலிகளை-எழுத்துக்களை-உருவாக்கிட ஒலியணுக்கள் உதவி புரிகின்றன. 'அணுத்திரள் ஒலியே எழுத்தெனப்படும்' என்பது இலக்கணம் காட்டும் விஞ்ஞானமல்லவா? ஒலியணுக்கள் ஒரு சீராக அமைந்து, அறிநிலையில் அஃது எழுத்து என்ற வடிவம் பெருகிறது. இச்செங்கல் ஒரே சீராய்-சீரான அளவாய் இருப்பதால் செங்கல் அளவைக் கொண்டே சுவரின் நீள, உயர அளவுகளை நிர்ணயிப்பது பண்டைமுறை. அடுத்து எத்தகைய கட்டிடம் என்பதை அறிந்து அதற்கேற்ப இடத்தை (space) அமைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன விஞ்ஞான நிகழ்ச்சிகளை ருசுப்பிக்கும் ஒரு உபநிஷத வாக்யமும், ஒரு விஞ்ஞான வாக்யமும் மரபில் இருக்கின்றன. அவை பின்வருமாறு;

1. द्वे ब्रह्मणी वेदितव्ये शब्दब्रह्म परंच यत् ।
शब्दब्रह्मणि निष्णातः परंब्रह्माधि गच्छति ॥

2. कालः सृजति भूतानि । कालः सम्हरति प्रजाः ।
सर्वे कालस्य वशगाः । कालो तस्य वशे स्थितः ॥

# GENESIS

**"Then God created man"**

**"He created him in the image of God"**

**(in some editions)**

**"in the likeness of God"**

*''தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே*

*அவனைத் தேவன் சாயலாக உண்டாக்கினான்.''*

*— ஆதியாகமம்-அதிகாரம் 5* **(Bible)**

**सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव वपुः परमेष्ठिनः ।**

- அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்ப நூல்

பரம்பொருளின் திருமேனியானது உருவம் அருவம் அருவுருவம் என்று மூன்று நிலைகளில் திகழ்கிறது. அதாவது அருவமே அருவுருவாகி இறுதியில் உருவமாகிறது என்று பொருள். அதாவது அருவ நிலையிலும் உருவம் உண்டு என்பது நுட்பம். இது மட்டுமல்ல. அனைத்து சிற்ப சாஸ்திரங்களிலும் யாதொரு ஐயமின்றி நேரிடையாகக் கடவுள் வடிவங்களுக்கு இலக்கணமும் சொல்லப்பட்டிருக்கிறது. மனித வடிவிலே இயற்றப்பட்டு வழிபாட்டில் உள. என்றாலும் பிற நூல்களில் ஆதாரம் காட்டிட வேண்டுமென்று தைத்ரீய உபநிஷத்திலிருந்து ஒரு வாக்கியம் எடுத்தாளப்படுகிறது.

**स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधतामन्वयं पुरुषविधः।**

பிரம்மன், புருஷ உருவினனாக உளன். புருஷன் என்ற சொல்லானது 'ஆற்றல்', 'வாஸ்து புருஷன்' மற்றும் 'ஆண்மகன்' என்றும் பொருள்படும்.

# வாஸ்து விஞ்ஞானத்தின் நுழைவாயில்

(இங்கே நுழைந்து உள்ளே செல்லுங்கள்)

இப்பிரபஞ்சத்தில் மூலமாய், நிலைத்த பொருளாய், எங்கும் எதிலும் இலங்குவது ஒன்றே ஒன்றுதான். எனினும், அஃது இரண்டு பொருள்களாய்ப் பிரிந்து விளங்கும் இயல்பினது. ஒன்றை **நுண்பொருள்** என்றும் பிரிதொன்றைப் **பருப்பொருள்** என்றும் மரபில் சொல்லி வருகின்றோம். இந்த நுண்பொருளைத்தான் வாஸ்து சாஸ்திரங்கள் **வஸ்து** என்றும் பருப்பொருளை **வாஸ்து** என்றும் கொண்டுள்ளன. பொதுவாக நடைமுறையில் வஸ்து என்ற சொல்லுக்கே பொருள் என்று தானே பொருள்?

மேலும் அந்த நுண்பொருளை **சூக்ஷமம்** என்றும் பருப்பொருளை **ஸ்தூலம்** என்றும் கொண்டுள்ளோம். கண்களுக்குத் தெரியாத பொருளை சூக்ஷமம் என்றும் தெரி பொருளை ஸ்தூலம் என்றும் விளக்கிச் சொல்லலாம். ஆங்கிலத்தில் சொல்லுவோமேயானால், நுண்பொருளை Subtle matter என்றும் பருப்பொருளை Gross matter என்றும் மேலும் சொல்லிப் புரிய வைக்கலாம். இவற்றை முறையே Energy என்றும் Matter என்றும், நவீன கால விஞ்ஞானம் குறிப்பிடுகிறது. Energy என்பது quintessence of the universe என்று பொருள்படும். இதன் பொருளே 'நுண்பொருள்' என்பதுதானே! இதனைச் சத்து என்றும், பிரபஞ்ச சாரம் என்றும், 'ஞால மூலம்' என்றும் மேலும் விளக்கிடலாம். இதனை 'ஓம் ஒளி' என்பான் வஸ்து விஞ்ஞானி மயன். ஞால மூலம் என்பதும் அவன் சொல்லே.

இறுதியும் அறுதியும் இதுவே. இதற்கு அப்பால் ஏதுமில்லை. இஃதும் பிரிதோரு விளக்கமே.

இத்தகைய பாகுபாட்டில் மேலுமோரு நுட்பமிருப்பதை இந்த ஞாலத்திலும் ஞாலப் போருள்களிலும் காணலாம். அதாவது **Energy- யில் Matter-ம், Matter-ரில் Energy-யும்** இரண்டறக் கலந்து உருகி உறைந்து கிடப்பதே அந்த நுட்பமாகும்.

இங்ஙனம் Energy யும் Matter ம் ஒன்றித்த பொருளைத்தான் ஆகாஸம் என்றும், ஒளி என்றும், வெளி என்றும், ஒளிவெளி என்றும், விண்வெளி என்றும் சுருக்கமாக **விண்போருள்** (Substance of the space) என்றும் இந்தியச் சிற்ப விஞ்ஞானம் கோண்டுள்ளது. இஃதே இக்காலத்தில் **Unified field of energy and matter*** என்று சோல்லப்படுவதாகிறது. மேலும் Energy உள்ளிட்ட Matterஐ **மண்போருள்** [Substance of the earth] என்றும் கோண்டுள்ளது. 'ஆகாஸம்' என்ற சோல்லுக்கு 'அவகாஸம்' என்ற ஒரு விளக்கத்தை மோழி வல்லுநர்கள் தருவர். வெட்ட வெளியில் - empty space - void - அடைபட்டதே ஆகாஸம் என்று சோல்லப்படுவதாகக் கோள்ளலாம்**.

* இந்த நுட்பத்தை வாதுளம் என்ற சிவாகமம் ஞான பூஜாவிதி என்ற படலத்தில் 'அத்வித வஸ்து' unified substance என்ற கருத்தில் பேசிடுவதை உற்று நோக்குக. விஞ்ஞானத் துறையில் பல நூறு ஆண்டுகட்கு முன்னரே எத்தகைய உச்ச நிலையில் இந்த நாடு இருந்தது என்பதை எண்ணி மகிழ்க. வஸ்துவை வாஸ்துவாக்கிய தொழில் நுட்பத்தை நமது கோவிலில் அல்லவா காண வைத்து விட்டன இந்த நூல்கள்! அங்கல்லவா பாதுகாத்து வைத்து விட்டன! எனவே கோவிலை - கடவுள் வடிவத்தை - விஞ்ஞானக் கருவூலம் என்று கூறிடலாமா? 'அத்வித வஸ்து' என்ற சொல்லைக் கண்டு சொன்னவர் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் ஆவர்.

** ''आकाशयतीति आकाश:'' - That which shines and illuminates the entire range of things is called aakaasa-space - one of the definitions occurring in the jnaanapaada of the Saivagamas.

இவ் ஆய்வின் பயனாய் விண்பொருளே மண்பொருளாகத் திரிபுறுகிறது அல்லது உருமாற்றம் கொள்கிறது என்ற ஒரு தேற்றம் கிடைக்கிறதல்லவா? எனவே இத்தகைய உச்ச விஞ்ஞானத் தத்துவமொன்றும் வாஸ்து விஞ்ஞான மரபில் தோன்றுவதாயிற்று. இதனை மயன் என்ற தொல் பழங்கால இந்திய விஞ்ஞானி நிறுவினான். இந்தப் பிரபஞ்சமும் பிரபஞ்சப் பொருள்களும் ஒளிமயமான வெளியை மூலப்பொருளாய்க் கொண்டு உருப்பெறுகின்றன என்றும் விசேடித்துக் கூறுவான்.

"அண்ட மூலமாய்ப் பிண்ட மூலமாய்க் கொண்டிலங்கு ஒளிவெளியென" என்பது அவனது விஞ்ஞானத் தேற்றம்.

அண்ட பிண்டங்கள் (ஞாலம் மற்றும் ஞாலப் பொருள்கள்) தோன்றுவதற்கு மூலமாய் இருப்பது ஒளி, வெளி அல்லது 'ஒளிமய-ஒளி வெளி' என்பதாகும். இந்த வெளியைத்தான் இந்தியர்களாகிய நாம் Space என்று ஆங்கிலத்தில் சொல்லி வருகிறோம். இதையேதான் unified field of energy and matter என்று இக்கால விஞ்ஞானம் சொல்லுகிறது என்று புலனாகிறது. இந்த Space-க்குத் தான் எத்துணை விளக்கங்கள்!

இதை உற்று நோக்கினால் ஒளியே வெளியாகவும், வெளியே ஒளியாகவும் (Luminous space) காணப்படும் இரண்டற்ற மூலப் பொருளின் நிலை இஃதெனப் புலப்படக்கூடும். இந்த ஒளிதான் எவற்றுக்கும் மூலப்பொருள் என உறுதி பெறுகிறது. இதையேதான் நாம் Light

என்றும் energy என்றும் எளிமையான சொற்களால் உணர்த்த முயலுகிறோம்.

மேலே விளக்கிய செய்திகளை ஊடுருவிப் பார்க்கின் மேலுமோர் உண்மை புலப்படும். அதாவது, நுண்பொருள் என்பதும் பொருள்தான், பருப்பொருள் என்பதும் பொருள்தான் என்று உறுதியாகிடும். அதாவது, **பொருள் என்ற ஒரே சொல்லால் Subtle matter ம் Gross matter ம் உணர்த்தப்படுகின்றன** என்று கூறலாம். ஒரு சில நேரங்களில் நுண்பொருளைப் (subtle matter-ஐ) **பரம்பொருள்** என்றும், **கருப்பொருள்** என்றும், **மூலப்பொருள்** என்றும் வலியுறுத்திப் பேசுகிறோம். இதுவேதான் பிரபஞ்சாத்மன், ஜீவாத்மன், பிரம்மன், வஸ்துப் பிரம்மன், விஸ்வப் பிரம்மன், வஸ்து புருஷன், வாஸ்து புருஷன், விஸ்வகர்மன் என்ற பல பெயர்களால் நமது வாஸ்து மற்றும் ஆன்மிகக் கலாச்சார மரபுகளில் பேசப்படுகிறது.

இதிலிருந்து மேலும் அறியப்படுவதும் உறுதிப்படுவதும் யாதெனில், **வஸ்து என்பது Subtle matter என்றும் வாஸ்து என்பது Gross matter என்றும் பொருள்படும் நிலையில்** வஸ்துவே மூலம் என்றாகி, அந்த வஸ்துவே வாஸ்துவாகவும், வாஸ்துவே வஸ்துவாகவும் நிலைமாறுகிறது எனப் பொருள்படுவதாகிறது. எனவே இந்த ஆய்விலிருந்து, **வஸ்துவாகிற விண்பொருளே வாஸ்துவாகிற மண் பொருளாகிறது** என்ற தேற்றம் ஒன்று முளைத்து, அதுவே வாஸ்து விஞ்ஞானத்தின் உறுதியான, நுட்பமான மையக் கருத்தாகி விட்டது.

வஸ்துவானது வாஸ்துவாகா விட்டால் இந்தப் பிரபஞ்சமும் இல்லை, நாமும் இல்லை, எதுவுமில்லை.

வாஸ்துவோடு இணைந்து சேவை செய்திடும் **சிவாகம வழிபாட்டு மரபானது** வஸ்துவை **நிஷ்களம்** என்றும் வாஸ்துவை **சகளம்** என்றும் குறிப்பிட்டு, **நிஷ்களமே சகளீகரிக்கிறது** என்ற விஞ்ஞானத் தத்துவத்தையும் கொண்டுள்ளது. இப்படியும் சொல்வதுண்டு. நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் என்றும் அவ்யக்தம், வியக்தா வியக்தம், வியக்தம் என்றும் வாஸ்துவும் ஆகமமும் பேசிடும். அதாவது **அருவப் பொருளே உருத்தாங்கிய – உருப்பெற்ற பொருளாக மலர்கிறது** என்பது பொருள். இதே போல, தமிழ் மரபும் அருவம், அருவுருவம், உருவம் என்ற படிமுறையை தத்துவ ரீதியில் உணர்ந்து அருவமே உருவமாகிடும் நுட்பத்தைக் கொண்டுள்ளது. ஆகம மரபே தமிழ் மரபுதானே! உடலற்ற உயிர், உயிர் தரித்த உடலாய் மாற்றம் கொள்கிறது என்பது சிற்பியர் விளக்கமாகும். இங்ஙனமே வைதிக மரபும் **நிர்குணப் பிரம்மமே சகுணப் பிரம்மமாக – பிராம்மமாகத் திரிபுறுகிறது** என்ற கோட்பாடுடையதாகவுமுளது. இந்தக் கருத்தைத்தான் விளக்கவுரையாக தைத்ரீய உபநிஷதமானது, பின்வரும் வாக்யத்தின் மூலம் நமக்குத் தெரிவிக்கிறது.

**आकाशात् वायुः वायोरग्निः अग्ने रापः अद्भिः पृथ्वी**

*''விண்ணிலிருந்து காற்றும் காற்றி-லிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் உருப்பெறுகிறது''*

என்று விஞ்ஞான விளக்கம் தருகிறது. இத்தகைய படிமுறை ஒன்றைக் காட்டி **ஆகாஸமே** (விண்பொருளே) **பிருதிவீ** (மண்பொருளாக) ஆகிறது என்று உணர்த்துகிறதல்லவா? இஃதொரு அதிருட்பப் பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமமாகும்.

இவ்வளவு பேசியதற்குப் பின்னும் ஒரேயொரு வினாவானது விடையின்றி ஒதுங்கி நிற்பதைக் காணலாம். இன்றளவும் இவ்வினாவானது விடையின்றித் தனித்து நிற்கிறது - தவித்து நிற்கிறது - என்றால் மிகையாகாது. இக்கால விஞ்ஞானிகளும் இதற்கு விடை கூற முடியா நிலையில் இருப்பதாகவே தோன்றுகிறது. அதாவது, சூக்குமமாகவும் கண்களுக்குப் புலப்படாததாகவும் இலங்கும் **விண்பொருளானது எங்ஙனம் எக்கணக்கில் மண்பொருளாக - நீள, அகல, கனமுடைய பருப்பொருளாகவும் (material form) உயிர்ப்புள்ள பொருளாகவும் (live form) திரிபு கொள்கிறது?** என்பதே அவ்வினாவாகும். இதற்கு விடையளிக்கும் பொறுப்பும், கணிப்பும் வாஸ்து விஞ்ஞானத்தைச் சேர்ந்ததன்றோ! எனவே வாஸ்து கண்டிட்ட விடையையும் விளக்கத்தையுமே ஆதாரமாக வைத்துக் கொண்டு **'கடவுளைப் படைத்தவன் யார்?'** என்ற புரட்சிகரமானதொரு தலைப்பைத் தாங்கி விண்ணின்றிழிந்த அவ்வுருவின் கணக்கியலை இந்தச் சிறு ஏடு வெளிப்படுத்துகிறது.

இதன்மூலம் தெரியப்போவதும் தெளிவாகப் போவதும் யாதெனில்,

கோவில் கருவறையில் அபிஷேக ஆராதனைகளை ஏற்று நிற்கும் கற்படிமமானது - கடவுட் படிமமானது - கடவுள் வடிவமானது - சூக்கும நிலையில் அது தாங்கிக் கொண்டிருக்கிற இயல்பான வடிவத்தின் ஸ்தூல வடிவமே என்பதாகும். அதாவது "சிற்பிகள் சிற்ப இலக்கணங்களுக்கேற்பச் செய்தளிக்கும் வழிபடு படிமங்கள் அப்பட்டமான கடவுள் வடிவங்களே" என்பது கருத்து. "இயற்கையிடம் காணப்படும் இலக்கணத்தின் இலக்கியங்கள்தாம் கடவுள் வடிவங்கள்" என்று நயம்படச் சொல்லலாம். எனவே "காணமுடியாக் கடவுளைக் கண்முன் நிறுத்தியது வாஸ்து விஞ்ஞானம்" என்று உறுதியாகச் சொல்லலாம். மேலும் அவற்றைப் போற்றி வழிபடுவதால் இகபர சுகங்கள் கிடைக்கின்றன என்பது சிற்பியர் விஞ்ஞானம் காட்டும் உண்மை எனினும் வழிபாட்டு நெறியால் ஏற்படும் தொடர் விளைவுமாகும்.

இக்கருத்துக்களை உள்ளத்தில் ஆழப்பதித்துக் கொண்டு அடுத்து வரும் கட்டுரைக்குள் நுழைந்து மேலும் விளக்கம் பெறலாம். கடவுள் வடிவம் உயிர்ப்புள்ள விஞ்ஞானப் பொருள்களால் ஆன விஞ்ஞானத் தத்துவ வடிவம் என்பதை அறிக. "विज्ञानं व्रह्म" "விஞ்ஞானம் பிரம்ம" என்றுதானே வேதம் பேசிடுகிறது?

விஞ்ஞான அடிப்படை கொண்ட (time-based and time-spaced) நமது இசையை - இசை

வடிவங்களைக் காதால் கேட்டு உளத்தே துய்ப்பது போல, அதே விஞ்ஞான அடிப்படை கொண்ட நமது **சிற்ப வடிவங்களைக்** கண்ணால் பார்த்து உளத்தே இன்புறும் - **இசைவடிவங்களாய்க் கண்டு** துய்த்திட அன்புடன் அழைக்கின்றேன்.

**பிரம்மரிஷி மயன்** நிறுவிய விஞ்ஞானக் கூடத்தின் திருவாயிலில் நிற்கும் மதிப்புமிகு வாசகர்களை அன்புடன் உள்ளே வாருங்கள் என்று அழைக்கின்றேன். நமது உருவ வழிபாட்டுக் கலாச்சாரத்தின் விஞ்ஞான மேன்மையை, உண்மையை உற்றுணர்ந்து பெருமை கொள்ளுங்கள். **''विज्ञानं शिल्प कौशल्यम्''** ''விஞ்ஞானம் சில்ப கௌஸல்யம்'' ''சிற்பத்தின் மேன்மை அஃதொரு விஞ்ஞானப் பொருள் என்பதில் சிறப்பெய்துகிறது'' என்று பாகவதமும் பேசுகிறது. இதையும் உளத்தே நிறுத்திக் கொள்ளுங்கள். கடவுட் படிமங்களைப் போற்றுங்கள். வாஸ்து விஞ்ஞானத்தைப் புகழுங்கள். விஞ்ஞானி மயனையும் உளமார நினையுங்கள், வாழ்த்துங்கள். ஆன்மிக நலன் பல எய்துங்கள். நன்றி. வணக்கம்.

**— டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி**

# பிரம்மரிஷி மயன் கண்ட ஓம் ஒலி-ஓம் ஒளி மற்றும் அத்வைத வஸ்து

* நாதவிந்து (sound-particle) எனப்படும் ஒலியணு எங்ஙனம் எழுத்தாக - சொல்லாக - சொல்லும் பொருளுமான சொல்லுருவாகப் பிறழ்கின்றது என்பதைக் கண்டுணர்ந்த மயன், தேஜோவிந்து எனப்படும் 'ஒளியணு' அங்ஙனமே புள்ளியாக - கோடாக - வரியாக - வடிவாக - உருவாகப் பிறழ்கிறது என்ற உச்ச விஞ்ஞான நுட்பத்தைக் கண்டறிந்தான். இதற்கு ஐந்தொழில் என்றும், பஞ்சகிருத்யம் என்றும், ஒளிநடம் என்றும் பெயர். சொல்லைக் காதால் கேட்கலாம். உருவைக் கண்ணால் பார்க்கலாம். காதால் கேட்கும் சொல்லும் கண்ணால் பார்க்கும் பொருளும் ஒன்றுதானே? எனவே காதால் கேட்டிடும் சொல்லானது 'தமிழ்' எனப்படுமானால் கண்ணால் பார்த்திடும் 'உருவும்' தமிழ் என்று-தானே சொல்லப்பட வேண்டும்? உருவுக்கு மறுபெயர்தான் 'தமிழ்' என்றும் சொல்கிறான் மயன்! இஃதொரு நுற்பம் ஆனதால் தமிழைச் சிற்பம் என்றும் சொல்லுவனானான். எனவே காண்பதெல்லாம் ஒளி ஒலி வடிவாய் அமைந்திட்ட எழுத்துக்கள் என்று மேலுமொரு விளக்கம் தருகிறான்.

இவை மட்டுமல்ல 'ஓம்' இரண்டு வகைத்தானது என்று ஒரு விந்தை விஞ்ஞானத்தையும் கூறுகிறான். ஓம் என்பது ஒலி மட்டுமல்ல. அஃது ஓம் ஒளியாக - மூலத்தின் குணமாக- உளதென்றும் சொல்லுகிறான்.

* **''ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும் ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்'' என்று சொல்கிறான் மயன். இஃதொரு விஞ்ஞான விந்தையன்றோ!**

அந்த மூல ஒளி எஃது என்றும், அந்த ஒளி எப்படி உருக் கொள்கிறது என்றும், உருக் கொண்ட முதலுரு எஃதென்றும் சொல்ல முனைந்த மயன்,

**''ஒளியொளிர் உருவந்தானே ஆடலான்ஆடலன்றோ!''** என்று

சொல்லி 'ஒளியின் சீலமிகு துடிப்பலைகள் (rhythmic waves of light) கண்ணால் பார்த்திடும் பொருள்களாய் உருமாறுகின்றன' என்ற சிருஷ்டி நுட்பத்தையும் அதன் கணக்கையும் நமக்குத் தந்துள்ளான். இக்கணக்குத்தான் சிற்ப சாஸ்திரத்தில் தாளக் கணக்காய் நமக்கு மயன் வழி கிடைத்திருக்கிறது.

* இந்த விஞ்ஞான நிகழ்ச்சியால் **'மூலமே கோலமாகிறது'** என்று உறுதியாகிறதல்லவா? இந்த மூலப்பொருளைத் தான் வஸ்து என்றும் அது தரித்திருக்கிற கோலத்தை வாஸ்து என்றும் சொல்லி 'வஸ்துவே வாஸ்துவாகிறது' **वस्तुरेव वास्तु** என்ற ஓர் அத்வித வஸ்து தத்துவத்தை சிற்பியர் ஒழுகி வரும் வாஸ்து விஞ்ஞான மரபு கொண்டுளது. இஃதொரு scientific advaitam ஆகுமல்லவா? வஸ்துதான் energy மற்றும் வாஸ்துதான் matter. இரண்டும் விஞ்ஞான ரீதியில் ஒன்றே. 'Unified field of energy and matter' என்று இன்று பேசப்படுகிறது. இதனையே ஆகாஸம் என்று மயன் சொன்னான். இதுவே நமக்குள்ளும் உலகப் பொருள்கள் அத்துணையிலும் அந்தர்யாமியாய் உளது. **सर्वात्मीयं लिङ्ग आकाश मेव** ஸர்வாத்மீயம் லிங்கம் ஆகாஸமேவ என்கிறது மயமதம்.

— *நூலாசிரியர்*

''மெய்யொலி உயிரொலி
சிவனுதல் இயல்பே''

# [1]அத்வித வஸ்து
# अद्वित वस्तु
## இரண்டற்ற ஒரு பொருள்

* நிர்குண சகுண பிரம்மங்களின் இடையே நிகழும் பரிமாற்றமே இந்தப் பிரபஞ்சம்.

* சூக்ஷ்மத்துக்கும் ஸ்தூலத்துக்கும் இடையே நிகழும் பரிமாற்றமே இந்தப் பிரபஞ்சம்.

* வஸ்துவுக்கும் வாஸ்துவுக்கும் இடையே நிகழும் நிலைமாற்றமே இந்த ஞாலம்.

* The transformation of the subtle matter into gross matter is that which happens in the universe.

* ''உடலற்ற உயிர், உடல் தரித்த உயிராய் நிலைமாறும் உண்மை விளக்கமே வாஸ்து விஞ்ஞானம்''.

---

1 அனைத்துப் பொருள்களும் (Subtle and Gross substances) சங்கமித்து இரண்டறக் கலந்த நிலையில் இருப்பதும் பொருளே. அதுவே ஒரு பொருள் என்றும் 'ஏகம்' என்றும் சொல்லப்படுகிறது. இதையே நிர்குணப் பிரம்மம் என்று விளக்குகிறோம்.

இந்த நிர்குணப் பிரம்மம் தானாகவே கலைந்து குணங்களோடு கூடிய பல பொருள்களாக - சொற்பொருள்களாக, தெரிபொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது. இதுவே நாம் காணும் பிரபஞ்சப் பொருள்களும் நாம் பேசும் சொற்பொருள்களும் ஆகும்.

இதில் இன்றளவும் விந்தையாய் இருப்பது யாதெனில், நிர்குணப் பொருள் சகுணப் பொருளாக எப்படி, எக்கணக்கில், எவ்வளவுகளில் சகுணப் பொருள்களாக உருமாற்றம் பெறுகின்றன என்பதே ஆகும். இந்த விடை தருவதே பிரம்மரிஷி மயனின் விஞ்ஞானம்.

* ''सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव वपुः परमेष्टिनः''
(அருவாய், அருவுருவாய், உருவாய் மூன்று விதமாக இறைப் பொருள் இந்த ஞாலத்தில் விளங்குகிறது) என்பது வாஸ்து விஞ்ஞானக் கொள்கையன்றோ! இதுவே, ஆகம சாரமுமாகும்).

* இந்த நிலைமாற்றத்திற்குரிய கணக்கியலைக் கண்டு நிறுவியவனே பிரம்மரிஷி மயன். அவன் தேர்ந்திட்ட கணக்கியலைக் கொண்டு செயலாற்றுவதே வாஸ்துத் தொழில் நுட்பமாகும்; நெறியுமாகும்.

* ''நுண்வினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்'' - இளங்கோவடிகள்.

# விண்பொருள்

## ஆடலன்

எழுதுதற் கரிய கோலம் எண்ணுதற் கரிய மூலம்
வழுத்துதற் கரிய கோலம் வரைவதற் கரிய மூலம்
பழுதிலா உருவின் கோலம் பற்பல கோல மூலம்
செழுமைசால் ஒளியே போற்றி திருநட ராச போற்றி.

— மயன்.

# மண்பொருள்

## அரங்கன்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

# ஜெகத் குரு

## தென்முகத்தன்

மயனுரைச் சொற்க ளெல்லாம் மறைக்கலைச் சொற்க ளாகும்
மயனுரைச் சொற்க ளெல்லாம் கலைநெறி முறையே யாகும்
மயனுரைச் சொற்க ளெல்லாம் மணிமறைத் தெருளே யாகும்
மயனுரைச் சொற்க ளெல்லாம் வான்வழி வந்த தன்றோ.

— மயநூல்.

## ஆனைமுகத்தன்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்.

## முருகன்

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரும்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பனிரெண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலக முய்ய.

— கந்த புராணம்.

# கட்டுரை

சென்னைப் பல்கலைக்கழகத்திலே

வைணவத் தத்துவத் துறையிலே

'ஸ்ரீ வைஷ்ணவ ஆகமங்கள்'

என்று தலைப்பிட்டு

1997ம் வருடம் ஏப்ரல் 28-29ந் தேதிகளில்

நிகழ்ந்திட்ட கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட

ஆய்வுக் கட்டுரை.

# தெய்வ சாந்நித்யம் எதனால் விளைகிறது?

मानेन निर्मिते बिंबे स्वयं आभाति दैवतम् ।

மகுடாகமம்

அளவோடு செய்து நிறுவிடும் படிமத்தில் தானாகவே தைவிகம் விளக்கம் கொண்டு விடுகிறது.

அளவுக்குள் தெய்வம் கட்டுபட்டு நிற்பதை உற்று நோக்குக.

அவ்வளவுகள், 'கால அளவுகள்' என்பதையும் அறிக.

**THE ESSENCE OF THE AGAMIC STATEMENT**

*"The image created by Shilpis, in accordance with the mana-pramaana of Vaastu science responds to the cosmic vibrations which in turn attract human beings. The response to these vibrations promote spiritual strength, peace and bliss. This is Devotion or Bhakti."*

— நூலாசிரியர்

## ஆராய்ச்சிக் கட்டுரையின்

## பல்கலைக் கழகத் தலைப்பு

# உருவ வழிபாட்டுக்குரிய படிமங்களுக்கு வாஸ்து வழிப்பட்ட அளவியலால் ஏற்படும் "துருவபேர சாந்நித்யம்*"

(அளவியல் அளித்திடும் உருவியல்)

(அருவத்தை உருவமாக்கிய வாஸ்து கணிதம்)

## அருவம் உருவமாகும் விந்தை

* கோயில் கருவறையில் நிலைத்த படிமமாக - மூலப் படிமமாக - நிறுவப்படுவது துருவ பேரம் என்று சொல்லப்படும். துருவம் என்ற சொல்லுக்கு நகராதது, அசையாதது, ஸ்திரமானது என்று பொருள். பேரம் என்பது படிமத்தைக் குறிக்கும். இறையாற்றல், அதன் பெருக்கம் (அ) புனிதம் என்ற கருத்தானது 'சாந்நித்யம்' என்ற சொல்லால் இங்கே உணர்த்தப்படுகிறது.

பேரன் - பேரம் (பெயரன் என்ற தமிழ்ச் சொல் பெயரம் ஆகி பேரமாகியது எனலாம்). சைவ சமயத்தில் இது பிம்பம் (reflection) எனப்படும். (mirror image).

## அருவம் உருவமாகும் விஞ்ஞான விந்தை

இந்திய நாட்டு ஆன்மிகக் கலாச்சார மரபிலே இன்று அதிகமாக ஆராய்ச்சிக்கு உட்பட்டு நிற்பன வாஸ்து மரபும், ஆகம மரபும் என்றால் மிகையாகாது. இவ்விரண்டிலே இன்று நாடு முழுவதும், ஏன் உலகம் முழுவதும் பேசப்படுவதும், நடைமுறைக்கு மீண்டும் விரைந்து வந்து கொண்டிருப்பதுமான மரபு, வாஸ்து மரபு என்று தனித்துச் சொன்னாலும் மிகையாகாது. இத்தகைய வாஸ்து மரபு இப்பொழுது வீட்டுக் கட்டடத்தைப் பற்றியும், அதைச் சுற்றியும் வளர்ந்து வருவதை அன்றாடம் செய்தித்தாள்களிலே காண்கிறோம். அறிஞர் முதல் பாமரர் வரையிலும், மேலும் வாழ்க்கையின் பல்வேறு உயர்பதவிகளிலே அமர்ந்து கொண்டிருக்கும் முதியோர் முதல் இளையோர் வரையிலும், நவீனகாலக் கட்டிடக் கலைஞர்களும், பொறியாளர்களும் இந்த வாஸ்துத் தொழிலின் செயல்முறைகளையும், அதற்கு அடிப்படையாய் வாய்த்திட்ட விஞ்ஞானத்தின் நுட்பங்களையும் அவை தோற்றுவிக்கும் பயன்களையும் உற்றுநோக்கி வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். வெகுவிரைவில் இது கோவில் கட்டிட நிர்மாணத் துறைக்கும், ஆகம வழிபாட்டுத் துறைக்கும் நீட்டித்துப் பார்த்திடும் நன்னாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று இங்கே முதற்கண் சொல்லிட விரும்புகிறேன்.

இத்தகைய நல்லதொரு சூழ்நிலையில் தான் [1]துருவபேர

---

1 कर्मार्चा स्थापनार्चेति द्विविधा परिकीर्तिता। यत्कृता प्रतिमा पूर्वप्रासादे मृण्मयादिभिः।।
सा स्थापनार्चा विज्ञेया रत्नन्यासोपरिस्थिता। अन्या तु लोहजा यात्र सा कर्मार्चेति कीर्तिता।।
சனத் குமார சம்ஹிதை - அத்தியாயம் 6; ஸ்லோகம் 17-18.
''வழிபடு படிமமானது, கர்மார்ச்சை என்றும் ஸ்தாபனார்ச்சை என்றும் இருவகைப்படும். மண் முதலிய பொருள்களைக் கொண்டு கருவறையிலே அமைக்கப்படுவது ஸ்தாபனார்ச்சை என்று சொல்லப்படும். இது நவரத்தினங்கள் மீது ஸ்தாபிக்கப்படும். பிற படிமங்கள் உலோகத்தால் செய்யப்படுவதாகும். இவை கர்மார்ச்சை என்று சொல்லப்படும்.''
துருவம் என்றால் அசையாதது என்று பொருள். பேரம் என்றால் படிமம். ஆகவே அசையாப் படிமத்தை- ஸ்திரப் படிமத்தை துருவபேரம் என்று சொல்வது வைணவ மரபு. இப்படித்தான் அசையா நட்சத்திரத்துக்கு துருவ நட்சத்திரம் என்ற பெயரும், அசையா உள்ளம் வாய்த்திட்ட ஒரு பக்தனுக்கு துருவன் என்ற பெயரும் வந்தது. சைவ மரபில் இதை அசலம் என்று கூறுவர். வாஸ்து விஞ்ஞானத்திலும் அசலப் படிமம் என்றே சொல்லப்படும்.
பண்டைச் சிற்பியர் 'அசல'த்தை விஸ்வப் பிரம்மன் என்றும் 'சல'த்தை விஸ்வகர்மன் என்றும் கூறுவர். பலவிதச் சடங்கு முறைகளுக்கு - செயல்களுக்கு - உட்படுத்தப்படும் படிமங்களை கர்மார்ச்சை என்பர் வைணவர்கள். 'சல'த்தை கர்மார்ச்சை என்றும் அசலத்தை 'துருவம்' என்றும் சொல்வது நன்கு ஒத்துள்ளதைக் காண்க.

*(பின்பக்கம் தொடர்கிறது)*

சாந்நித்யம், சிலா பரிமாணம் என்ற இரண்டு அடிப்படைக் கேள்விகளும் அதையொட்டித் தோன்றி வளர்ந்திட்ட பிரதிஷ்டா விதிகளும் மற்றும் பூஜா விதானங்களும் இன்றைய கருத்தரங்கிற்கு ஆய்வுப் பொருள்களாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றை நான் வரவேற்கிறேன். இது பல்கலைக் கழக ஆராய்ச்சிக்கு மட்டுமின்றி, இத்துறையில் பணியாற்றி வரும் பூசகர்களுக்கும், சிற்பியர்களுக்கும், பொதுமக்கட்கும் தெரிந்திருக்க வேண்டிய அதிமுக்கியமான விஷயமுமாகும். வழிபாட்டு மரபைப் பற்றி நிற்கும் முடநம்பிக்கைகளைத் தகர்த்தெறிய இம்முயற்சி பெரிதும் உதவிடும் என்று நம்புகிறேன்.

மேற்குறிப்பிட்ட நான்கு பொருள்களில் துருவபேர சாந்நித்யம், சிலா பரிமாணம் என்ற இரு பொருள்கள் அடிப்படையானவை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்றாலும் இவ்விரண்டில் துருவபேர சாந்நித்யமானது சிலா பரிமாணத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைச் சொல்லிடவே இங்கு நான் பணிக்கப்பட்டிருக்கிறேன். பிற விதிமுறைகளைப் பற்றி பெரியோர்கள் விளக்கிப் பேசவிருப்பதால் இப்பொருளை மட்டும் பேசுவதாக இருக்கிறேன்.

வாஸ்து சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டு சிற்பிகளால் செய்யப் பெற்று, சிற்பிகளாலே கண்திறந்து கோயில்களில் நிறுவப் பெற்று, அவற்றைப் பூசகர் பெருமக்களிடம் சேர்ப்பித்து, அங்ஙனம் பெற்றிட்ட படிமங்களை அப்பெரியோர் நன்னீராட்டிப் புனிதமாக்கி நாள்தோறும் வழிபாட்டுக்குரிய படிமங்களாக வைத்துக் கொண்டு, ஆண்டாண்டு காலமாக - வழிவழியாக - வழிபாட்டு நெறியில் வந்திட்ட போதிலும், ஓர்

---

வாஸ்து விஞ்ஞானப் பார்வையில் அசலம் ஆனது பரப்பிரம்மத்தின் உறுதியான, ஸ்திரமான நிலையையும் சலம் என்பது அப்பரப் பிரம்மத்தின் இயக்க நிலையையும் குறிப்பிடும். ஆங்கிலத்தில் சொன்னால் அவை முறையே potential மற்றும் kinetic energyஐக் குறிப்பிடலாம். இந்த விஞ்ஞான நுட்பத்தைக் காட்டுவதாக துருவமும் கர்மாச்சையும் இருப்பதை உற்றுணர்க. சாதாரண நடைமுறை உலகத்தில் 'நகர்வன' 'நகராதன' என்று பேசிடும் கருத்தில் இவ்விரண்டு வகைப் படிமங்கள் சொல்லப்படவில்லை என்பதையும் புரிந்திடுக. உண்மை விளக்கமும் இக்கட்டுரையில் இடம் பெறுகிறது.

அடிப்படை வினாவுக்கு இன்னும் விடை கிடைக்கப் பெறாமலேயே இருந்து வருகிறதை மறைக்காமல் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். பச்சையாகச் சொல்லப் போனால் மண், மரம், கல், உலோகம், கடுசர்க்கரை ஆகிய பொருள்களைக் கொண்டு சிற்பிகளால் அமைக்கப்படும் உருவங்கள் உண்மையில் [1]கடவுட் படிமங்கள் தானா? வணக்கத்திற்குரிய உருவங்கள் தானா?, அவற்றை வணங்கினால் மனிதன் தனது குறைகளை நீக்கிக் கொள்ள முடியுமா, நீங்கி விடுவதாகச் சொன்னால் அஃது உண்மை தானா? (அ) வெறும் நம்பிக்கையிலேயே இப்பண்பாடு ஓடிக் கொண்டிருக்கிறதா? வெறும் நம்பிக்கை தான் என்று சொல்லிவிட்டால் நமது முன்னோர் பல்லாயிரக் கணக்கான கோவில்களையும் படிமங்களையும் இந்த நாட்டில் அமைத்திருக்கக் கூடுமா? நாட்டின் செல்வத்தையே அங்கு கொட்டி வைத்து விட்டார்களே இது சரிதானா? விவேகமா? கோயிலையொட்டி வளர்ந்திட்ட கலைகள் தான் எத்துணை? கவிதையும் இசையும் நடமும் கோயிலுக்குள்ளே அல்லவா வளர்ந்திருக்கின்றன? அவைகளெல்லாம் சொல்லால் விவரிக்கவொண்ணாப் பேரின்பத்தை வழங்கிடும் கலைகளில்லையா? வேறு எந்த ஓர் உலகக் கலை மரபிலேயாவது இத்துணை இன்பம் காணவும் துய்க்கவும் முடிகிறதா? அங்ஙனமாயின் ஏதோ ஓர் உண்மை அல்லது நுட்பம் இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கத்தானே வேண்டும்? இருப்பின் அஃதென்ன, என்ற கேள்விகளுக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். கடவுள் வழிபாடும் அதன் பயனும் அவரவர் நம்பிக்கையில் நிலைத்திருக்கின்றன என்ற கூற்றை ஏற்கவும் அறிஞர்கள் தயங்குகிறார்கள்[2]. இசையை அதன் இனிமையை

---

1 சனத்குமார சம்ஹிதை அத்தியாயம் 6;ஸ்லோகம் 17-18(பக்கம் 3ஐப் பார்க்க) प्रासादानां तु सर्वेषां प्रतिमां जीव उच्यते तस्मात् प्रयत्नेन प्रतिमां कारयेद् बुधः।। - வாஸிஷ்ட சம்ஹிதை அத்தியாயம் 5; ஸ்லோகம் 35.

2 வாஸ்து சாஸ்திரம் என்பது, அகழ்ந்தும் ஆழ்ந்தும் பார்க்கின், கட்டிட நிர்மாணக் கலை மட்டுமல்ல; சிற்பக்கலை நூல் மட்டுமல்ல; அஃதொரு ஞான நூல், விஞ்ஞான நூல். இன்னும் துலக்கமாகச் சொன்னால் வாஸ்து சாஸ்திரம் ஒரு விண்ஞான நூல் ஆகும். பிரக்ஞானத்தை மூலமாகக் கொண்ட உயர்தனிச் செந்நூல் என்பது தெளிவுபடும்.

நம்பிக்கையிலா வைத்துக் கொண்டிருக்கிறோம் (அ) வளர்த்துக் கொண்டிருக்கிறோம்? அஃதொரு விஞ்ஞான அடிப்படையைக் கொண்டிருப்பதனாலன்றோ இன்றும் சுகம் தருவதாகிறது? விஞ்ஞானத்தையல்லவா இசைவடிவில் நாம் சுகித்து வருகிறோம்! நாதப் பிரம்மமானது இசைவடிவில் அல்லவா உருவம் தாங்குகிறது? மேலும் கோவில் வளர்த்துவிட்ட இந்த இசைக்கு இனிமை எப்படித் தோன்றி ஆற்றொழுக்காக ஓடமுடிகிறது? இதன் இரகசியமென்ன? இவையும் அர்த்தமுள்ள வினாக்கள் என்று கூறலாம்.

மேலும், வாஸ்து மரபு வழிப்பட்ட கட்டிடமும் பிம்பமும் மேலானதோர் இறுதிப் பொருளை - இனிய பொருளை - எட்டிப் பிடிப்பதற்குரியதோர் அழகு வடிவமாக, ஒரு குறியீடாக (அ) ஒரு கைகாட்டியாக இருக்கிறது என்ற கருத்தொன்று இன்றும் பெரும்பாலோர் மத்தியில் நிலவி வருகிறது. இதுவும் சரியெனப்படவில்லை. எனவே இத்தருணத்தில் பிம்ப நிர்மாண ரகசியத்தை - அதன் அளவியலையும் உருவியலையும் - இந்த அறிஞர் அவையிலே பிரகடனப்படுத்துவது சாலப் பொருந்தும் எனக் கருதுகிறேன். வழிபடு படிமங்கள் 'குறியீடு' Symbol என்று கொள்ளப்படுமானால் அல்லது சொல்லப்படுமானால் அந்தப் பிம்பங்களுக்குச் செய்யக்கூடிய அத்துணை சடங்குகளும் பொருளற்ற - பயனற்ற - வெற்றுச் சடங்குகள் என்று முத்திரை குத்தி ஒதுக்கித் தள்ளப்பட்டு விடும். இதுபற்றி ஆய்வு செய்து வரும் விஞ்ஞானிகளும் அவற்றை ஒதுக்கித் தள்ளி விடுவர். மீண்டும் ஒருமுறை ஒதுக்கித் தள்ளப்பட வேண்டுமென்பது தான் நமது ஆசையா? படிமக் கலை சார்ந்த விஞ்ஞான நுட்பத்தைப் புரிந்து கொள்ள நவினகால விஞ்ஞானம் நமக்கு உதவி செய்திடாதா? எண்ணிப் பாருங்கள். இல்லையானால், பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி என்று சொல்லி நிறுத்திக் கொள்ளாமல் இறுதியில் அர்ச்சாவதாரம்[1] என்றொரு நிலையையும் உறுதியாக வகுத்துக்

---

1 பாஞ்சராத்திர வைணவக் கொள்கைப்படி இறைநிலையானது ஐந்தாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவை முறையே பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சா என்று சொல்லப்படும். வை.கணபதி ஸ்தபதியின் 'சிற்பச் செந்நூலில்' விளக்கம் காண்க.

கொண்ட வைணவக் கருத்தின் பொருள்தான் - பெருமைதான் - என்னவாகும்? இந்த அடிப்படைக் கருத்தை- அர்ச்சாவதார வழிபாட்டை - வாஸ்து மரபானது ஒரு விஞ்ஞான நுட்பமாக - விஞ்ஞான நிகழ்ச்சியாக - விஞ்ஞான வழி பெற்றிட்ட சுகானுபவமாக[1] உற்றுணர்ந்து ஸ்திரப்படுத்திக் கொடுத்திட்ட இரகசியத்தை இன்னும் உணராதவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே கோவிலில் வைத்து வணங்கப்படும் இறை வடிவமானது, ஒரு விஞ்ஞான வடிவமாக[2] அருவத்தின் உருவமாக, சூக்ஷமத்தின் ஸ்தூலமாக, வஸ்துவின் வாஸ்துவாக unmanifest-இன் manifest-ஆக இயற்றப்பட்டிருக்கிறது என்ற கருத்தை இங்கு சொல்லிடக் கடமைப்பட்டவனாக நிற்கிறேன். அப்படியானால் இஃது எப்படி முடிந்தது? இந்த இரகசியத்தை வாஸ்து சாஸ்திரங்கள் வெளிப்படையாகப் பேசிடவில்லை என்ற ஒரு குறைபாடு ஒரு சில பெரியோர்களால் பேசப்படுவதையும் நூல்களில் எழுதி வைத்திருப்பதையும் நான் பார்த்து மனம் புழுங்கியிருக்கிறேன். தலைமுறை தலைமுறையாக வழிபடு படிமங்களை செய்து அதனை ஒரு வயிற்றுப் பிழைப்பாகச் சிற்பியர்தம் முன்னோர் கொண்டொழுகி வந்தார்களா (அ) செயற்கரிய ஒரு தொண்டைச் செய்யக் கொடுத்து வைத்தவர்களாகத் திகழ்ந்தார்களா, அங்ஙனம் சொல்லி மகிழ்ந்தார்களா - என்று எனக்குள்ளே பலமுறை வினாக்களை எழுப்பியும் ஆய்ந்தும் வந்திருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், புரிந்தது என்பேன், ஆனால் பிறர்க்குப் புரியவைப்பதுதான் மெத்தக் கடினமாகத் தோன்றியது. நமது பெரியோர்களும் புரியவைக்க முயன்று பல பாதைகளை வகுத்துச் சென்றார்கள். வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்தினார்கள். வெற்றி பெற்றார்களா என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்[3].

---

1 நமது கர்நாடக இசையும் ஓர் அபூர்வ விஞ்ஞான அடிப்படை கொண்டிருப்பதாலன்றோ நம் ஆன்மாவைத் தொட்டு ஆன்ம சுகம் தரவல்லதான ஆற்றல் பெற்று விளங்குகிறது.

2 विज्ञानं ब्रह्म / विज्ञानं शिल्प कौशल्यम्

3 ஓர் இசைஞன் தனது இசையுணர்வை, தான் துய்த்த சுகத்தின் அளவினை அப்படியே ரசிகன் உள்ளத்தில் ஏற்றி அமைத்திட முயற்சிக்கிறான். இந்த முயற்சியில் இசைஞன் பெற்றிடும் இன்பத்தைச் சொற்களால் வருணித்திட

*(பின்பக்கம் தொடர்கிறது)*

என்றாலும் இம்மரபு இன்னும் உயிர்ப்புடன் தான் இருந்து வருகின்றது. உலகளாவிப் பரந்தும் வருகிறது. எனவே மேலைநாட்டு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் ஓங்கி வளர்ந்திட்ட இக்கால நிலையில் இந்தக் கேள்விகளுக்கு சிக்கலற்ற விடையினைச் சொல்லிட வேண்டியது அவசியமாகிறது. பலவகைக் கலாச்சார மரபுகளை ஆய்வு செய்துவிட்டு இப்பொழுது தான் வாஸ்து மரபுக்கு அறிஞர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இது வாஸ்து மரபுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது என்பேன். வாஸ்து மரபு மீண்டும் ஓங்கிடும் என்றும் நம்புகிறேன்[1].

மீண்டும் சொல்லுகிறேன், பிம்பத்தின் அளவியல் ஆனது சாந்நித்யத்திற்குக் காரணமா? (அ) பிம்பமானது வெறும் காட்சிப் பொருள் தானா என்பதைத் தான் இக்கருத்தரங்கின் முக்கியக் கேள்வியாகக் கருதுகிறேன். அளவியலே முக்கியமானால் இவ் அளவியல் எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? இஃதென்ன வித்யை? வாஸ்து வித்யையா? பிரம்ம வித்யையா? பிரம்ம வித்யையே என்றால் அந்தப் பிரம்மத்தின் பெயர் என்ன? இந்தப் பிரம்ம வித்யைக்கு யார் ஆசான்? இவையெல்லாம் மூலக் கேள்வியின் நியாயமான துணைக் கேள்விகள் ஆகும். இவற்றையும் இங்கே சுட்டிக் காட்டிட வேண்டியதும் நிறுவிட வேண்டியதும்இன்றியமையாதனவாக இருக்கின்றன. இதைத்தான் நான் இறுதியாக-உறுதியாக இந்த அறிஞர் அவையிலே சொல்லிட

---

முடியாது. என்றாலும் முயல்வதே இசைஞனின் கடமையாகிறது. இந்த அனுபவத்தை அவனால் சொற்களைக் கொண்டு சொல்லிட முடியுமானால் இசையின் பயனையே - இசை விஞ்ஞான நுட்பத்தையே சொல்லி விட்டதற்கு ஒப்பாகும்? இதைச் சொல்லி விட்டால் இறைவனை இசையாய்க் கேட்டதின் கருத்து வெளிப்பட்டு விடும். இத்தகைய இசையினை freeze பண்ணிட முடியுமானால் - frozen music ஆக ஆக்கிட முடியுமானால் அதுவே கண்ணால் கண்டிடும் இசையாக உருமாறி நிற்கும். இதுவே ‘சிற்பம்’ இதுவே ‘கட்டிடம்’ என்று சொல்லி முடித்து விடலாம். சொல்லே பொருளாகவும், பொருளே சொல்லாகவும் உருமாற்றம் எய்திடும் நுட்பக் கணக்குத் தான் வாஸ்து விஞ்ஞானம் என்று சொல்லப்படும். பல்வேறு கோணங்களில் இப்பொருள் பற்றிய அணுகுமுறையினை இக்கட்டுரையில் காணலாம்.

1 இந்த மரபு மீண்டும் ஓங்கினாற்றான் ‘‘புக்தி-முக்தி இவ்விரண்டும் கிடைக்கும்’’ என்று மானசார வாஸ்து உறுதி கூறுகிறது. ‘உலகியல் வாழ்க்கை வளம் பெற உதவுகிறது’ என்று கூறுகிறது.

‘‘एभिर्विना कृतेतु सफलं भुक्तिं, मुक्तिं न विन्दति’’ - ‘‘एवं माने कृते वास्तुवस्त्वादि च विवर्धयेत्’’ (அத்தியாயம் 2; ஸ்லோகம் 19 மற்றும் 39).

ஆசைப்படுகிறேன். தவறுகள் இருப்பின் திருத்தலாம். புள்ளி விவரங்கள் மேலும் இருந்தால் கொடுத்து உதவலாம். நமது வாஸ்து-ஆகம மரபின் மானம் காத்திட எல்லோருடைய உதவியும் தேவை என்பதைத் தான் இப்படிச் சொல்லுகிறேன்.

வழிபாட்டு நெறி பேசும் ஆகமங்கள் ''உருவங்களை ஏன் வழிபட வேண்டும்? - Why Images? என்ற வினாவுக்கும்'' ''எப்படி வழிபட வேண்டும் - How to worship? என்ற வினாவுக்கும்'' விடை சொல்லியிருக்கின்றன. ஆனால் அவை வழிபாட்டுக்குரிய - அர்ச்சனைக்குரிய - அர்ச்சாவதாரமாக மதிப்பதற்குரிய தகுதியை எப்படிப் பெறலாயின என்ற நுட்பத்தை மனம் திறந்து பேசிடவில்லையென்றே கருதுகிறேன். எனவே உற்பத்தியாளர் (Designer and Producer) ஆகிய வாஸ்துக் கலை மரபானது விடை சொல்லியாக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டி-ருப்பதாகவும் உணருகிறேன். காரணம் வாஸ்து சாஸ்திரம் (அ) வாஸ்து மரபு என்பது பல மரபுகளின் கூட்டு அல்லது அவியல் அல்ல; இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பொதுவாக அமைந்துவிட்ட (அ) வாய்த்திட்ட ஒரே மரபு தான் (Pan Indian tradition) இந்த வாஸ்து மரபு. ஆனால் ஆகமக் கொள்கைகள் பல; வழிபாட்டு நெறிகளும் பல. பொதுவாக, வாஸ்துவின் பயனை - அதுதரும் ஆன்ம சுகத்தை நன்குணர்ந்து விட்ட காரணத்தால் வாஸ்துவை பிடித்துக் கொண்டு வாஸ்துவைத் தழுவி, பக்தி கொண்டாடிட, பல நெறிகளை வகுத்துக் கொண்டுவிட்டன. அவ்வளவுதான். இந்த நிலையில் ஆகமங்கள் எல்லாவற்றிலும் வாஸ்து ஊடுருவி நின்று சிறப்பிடம் அல்லது தலைமை ஸ்தானம் வகிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. அப்படியானால் வாஸ்துவின் உண்மைத் தன்மைதான் என்ன? அதாவது ஆகமத்துக்கு ஆகமம் இந்த வாஸ்து இலக்கணமானது மாறிடாமல் அஃது ஒரே இனப்பட்டதாக உளதென்ற கருத்தைத்தான் இங்கே இப்படிக் குறிப்பிடுகின்றேன். இலக்கியங்கள் மாறுகின்றன; இலக்கணம் மாறிடவில்லை. இலக்கியங்கள் பல. ஆனால் இலக்கணம் ஒன்றே. எனவேதான் வாஸ்து லக்ஷணம் என்றும், சிற்ப இலக்கணம் என்றும் ஆகம மரபிலும் இன்னும் சொல்லி

வருகிறோம்[1]. இதனாற்றான் சிற்பிகள் எல்லாச் சமயத் துறைகளிலும் இருக்கிறார்கள். சமநோக்குடையவர்களாகவும் இருக்கிறார்கள். சிற்பிகளை எல்லோரும் விரும்புகிறார்கள். சிற்பிகளும் எல்லோரையும் மதிக்கிறார்கள். எனவே ஆகமங்களானவை சைவாகமமாக, சாக்தாகமமாக, பௌத்தாகமமாக, ஜினாகமமாக இருந்தாலும் வாஸ்து விஷயங்களை முன்னிலைப்படுத்திப் பிம்ப நிர்மாணத்தின் பிரமாணங்களை (அளவியலை[2]) ஒரேமாதிரிப் பேசிய பிறகே, பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம் பற்றிய பத்ததிகளை (worship methodology) விரித்துக் கூறுகின்றனவாதலால், வாஸ்துப் பிரமாணங்களும் வாஸ்து வழிப்பட்ட உருவங்களும் அனைத்து ஆகமங்களுக்கும் சமயங்களுக்கும்[3] அடிப்படையானவை (அ) பொதுவானவை என்பது உறுதியாகிறதல்லவா? எனினும் எவ் அடிப்படையில் இந்த முக்கியத்துவம் நிகழ்ந்திருக்கின்றது என்று அவ் ஆகமங்கள் வெளிப்படையாகச் சொல்லவில்லை. எனவே, இதனை விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்தால் உண்மையில் மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு தர்க்க ரீதியான விடை கிடைத்திடும் என்று நம்புகிறேன். காரணம் யாதெனில்-அழுத்தமாகச்-சொல்லுகிறேன்-

---

1 வாஸ்து இலக்கணமானது பிரபஞ்ச சிருஷ்டி இலக்கணமாகும் (Science of creation or manifestation). நம்மைச் சூழந்துள்ள ஞாலப் பொருள்களை எந்த இலக்கணம் கொண்டு ஞாலமூலமாகிற ஆதிமூலம் தோற்றுவித்ததோ அதையறிந்து புரிந்து, அவ்வழி நின்று, பொருள்களை இயற்றிட முன்னோர் வகுத்தளித்த கணக்கியலே வாஸ்து இலக்கணமாகும் என்றால் மிகையன்று.

2 மானசார வாஸ்து சாஸ்திரத்தில், பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகியோரை உத்தமதெசதாளத்தில் இயற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சாஸ்திரத்தில் புத்தனுக்கும் ஜினதேவனுக்கும் உத்தம தெசதாளமே கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரம்ம விஷ்ணு ருத்ர நிலைக்கு ஜினன் மற்றும் புத்தன் நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது பொருள். उत्तमं दशतालेन कारयेत् अज्ञमानकम् என்று சொல்கிறது மானசாரம். இதையொற்றி புத்தனை தெசாவதாரத்தில் ஒன்றாகக் கருதி நமது சமயத்தில் இடம் தரவில்லையா? சிந்தியுங்கள். சிவன் கோயிலிலும் புத்தன் இருக்கை கொண்டிருந்ததையும் நாம் உற்றுப் பார்க்க வேண்டும். எனவே வாஸ்து விஞ்ஞானமானது எல்லோருக்கும் பொதுவாகச் செயல்பட்டதென உறுதியாகிறது.

3 வாஸ்துவே ஒரு காலத்தில் - வாஸ்து சமயமென்றும், கோயில் சமயம் என்றும் சொல்லப்பட்டு வந்ததை நாம் மறந்து விட்டோம். இக்கூற்றை ஆழ்ந்து நோக்கிட்டால் 'ஆம்' என்றே சொல்லத் தோன்றும். உண்மையும் அஃதே தான். 'சமயம்' என்றால் 'காலம்' என்பது பொருள். காலத்தை ஒரு நுண்பொருளாகக் கொண்டு வழிபடு நெறியொன்று எப்படித் தோன்றியது என்பதும் இக்கட்டுரையில் இடம் பெறலாகிறது.

வாஸ்து சாஸ்திரம் ஒரு விஞ்ஞான சாஸ்திரமாகும். வாஸ்து, வஸ்து என்ற சொற்கள் விஞ்ஞானச் சொற்களாகும். வஸ்துவும் வாஸ்துவும் விஞ்ஞானப் பொருள்கள். பிரபஞ்ச நிகழ்ச்சிகளெல்லாம் விஞ்ஞான நிகழ்ச்சிகள் தான். இந்த விஞ்ஞான நிகழ்ச்சியின் பயனைத் தான் நாம் கோவில்களிலே அனுபவிக்கிறோம். இசை விஞ்ஞானமும், இசையும், இசையின் பயனும் இப்படித்தானே கிடைக்கிறது? வாஸ்துவானது அதாவது விடு, கோயில் மற்றும் சிற்ப வடிவம் ஆகியவை விஞ்ஞானப் பொருள்களாகையினால் தான் இன்னும் வழிபடு படிமங்களும் வழிபாடும் பயனுள்ளதாகவிருக்கின்றன. இப்படிப்பட்ட இந்த மரபு 5000 ஆண்டுகளையும் கடந்து வந்து விட்டது. எனவே சென்னைப் பல்கலைக் கழகத்தின் முக்கியத் துறைகளில் ஒன்றாகிய வைணவத் துறையில் இன்று நிகழ்ந்திடும் ''ஸ்ரீ வைஷ்ணவ ஆகமங்கள்'' என்று பொதுத் தலைப்பிட்டுக் கொண்ட கருத்தரங்கில், வைணவத் துறைத் தலைவர் டாக்டர்.மு.நரசிம்மாச்சாரி அவர்கள் தலைமை தாங்கி, ஸ்ரீமத் யதுகிரி, யதிராஜ ஜீயர் சுவாமிகள் இவ் அவை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்து, ஸ்ரீரெங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரம ஸ்ரீகார்யம் ஸ்ரீ உ.வே.மாதவாச்சாரிய சுவாமிகள் அவர்கள் கருத்துரை வழங்கியிருக்கிறார்கள். ஆகம மும்மணிகள் விற்றிருக்கும் இத்தருணத்தைக் காட்டிலும் பிரிதொரு வேளை சிற்பிகளுக்குக் கிடைப்பது அரிதென்பதால் இந்த வாய்ப்பை வான்வழி வந்த வாய்ப்பாகக் கருதி, வாஸ்து வழி வந்திட்ட துருவபேர சாந்நித்யச் செய்திகளை அவர்தம் திருச்சந்நிதானங்களில் சமர்ப்பிக்கின்றேன். இங்கே வைணவத் துறை மாணாக்கர்களும் இருப்பதால் அவைத்தலைவர் அனுமதியுடன் கொஞ்சம் விரிவாகவும் சொல்லிட விரும்புகிறேன்.

வாஸ்து நெறியானது ஒருவகைப்பட்ட வேத நெறியாகும். பாரதிய ஆன்மிகக் கலாச்சார மரபிலே, முன்னிற்பன - முலமாய்க் கருதப்படுவன ருக், யஜுஸ், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள்தாம் என்றால் மிகையாகாது. இஃது அனைவர்க்கும் தெரிந்ததே. என்றாலும் இந்த நான்கை விடுத்து, வேறு பல

[1]வேதங்களும் குறிப்பாக மேலும் ஒருவகைப்பட்ட நான்கு வேதங்கள் ஆன்மிக நெறியிலே பெரும்பங்கு வகித்திட்ட செய்தி பெரும்பாலோர்க்குத் தெரியாமல் மறைந்து நிற்கும் நிலையை இன்றும் காணுகிறோம். அவற்றை சப்த வேதம் (Poetics), காந்தர்வ வேதம் (Music), நாட்டிய வேதம் (Dance), ஸ்தாபத்ய வேதம் (Architectonics), என்று வாஸ்துக் கலைஞர்கள் ஆகிய நாங்கள் தொன்று தொட்டுச் சொல்லி வருகிறோம். இவற்றை 'உப' வேதங்கள் என்று அறிஞர் கூறுவர். இவற்றில் ஸ்தாபத்ய வேதத்தை வாஸ்து சாஸ்திரத்திற்கு அடிப்படை என்றும் அவ்வறிஞர் கூறுவர். இந்த ஸ்தாபத்ய வேதம்தான் வாஸ்துவுக்குள்ளே நுழைந்து ஆகமத்தில் அனுஷ்டானமாக-பிரயோகமாக-பிரயோஜனமாக வெளிப்பட்டு விளங்குகிறது என்று இவ் அவையிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆய்வுதான் இக்காலத்தில் மீண்டும் பரவி வரும் வாஸ்துக் கட்டிட நிர்மாண விதிகள் வழியே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்டிடவும் விரும்புகிறேன். விட்டுக் கட்டிடமானது அளவுமுறையில் பிழைபட்டு நிற்குமானால், விட்டுக்குள் கட்டுண்ட உள்வெளிகள் (inner spaces) அதாவது உள்ளிடங்கள் (built spaces) நெறிதவறி அமையுமானால் அவ்விடு பல இன்னல்களுக்கும் அங்கு குடியிருப்போர் தம் வாழ்க்கைத் தொய்வுகளுக்கும் ஏன் பல அபாயங்களுக்கும் தோற்றுவாயாக இருந்து விடுகிறது என்று ஓர் அதிசய விஞ்ஞானம்[2] இப்போது பேசப்படுகிறது. விட்டின் அமைப்பினை திருத்தியமைப்பதின் முலம் இவ்இடையூறுகள் நீக்கப்பட்டு மனித வாழ்க்கை பரசுக வாழ்க்கையாக அமையக்கூடும் என்ற ஆன்மத் தொடர்புடைய ஒரு தொழில்நுட்பமும் பேசப்படுகிறது. மேலைநாட்டிலே ஆய்வு செய்திட்ட விஞ்ஞானிகள் இதனை 'Space Therapy' என்று குறிப்பிடுகிறார்கள். சைனாவிலே இது 'Feng Shui' என்றும் நம்

1 ஆயுர்வேதம், தனுர் வேதம், பிரணவ வேதம் ('பிரணவ வேதம்' என்ற சொல் சிற்பியர்க்குத் தெரியுமானாலும், இச் சொற்பிரயோகத்தை 'பாகவதத்தில்' காணலாம்).

2 இஃது உண்மையே.

நாட்டிலே 'வாஸ்து' என்றும் குறிப்பிடப்படுகிறது. மேலைநாட்டுக் கட்டிடக் கலைஞர்களும் இச்செய்தி கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள். என்னிடம் வந்து நுட்பம் கேட்டு மகிழ்ச்சியடைகிறார்கள். கூட்டாக ஆய்வு செய்திட அழைப்பும் விடுக்கிறார்கள். விஞ்ஞான நுட்பத்தைத் தான் நம்மவர் இரகசியம் என்ற சொல்லால் சொல்லி வந்ததும் அவர்களுக்குப் புரிகிறது. ஆனால் வாஸ்துக் கலைஞர்களைப் பொறுத்த வரையில் இந்த இரகசியமானது அவர்களுக்கொரு பால பாடமாகும் என்றால் மிகையாகாது. சிற்பிகளானவர்கள் தாம் உணர்வுற்றதை கண்ணால் பார்க்க வைக்க முடிகிறதால், உருவகித்துத் தர முடிகிறதால், எதிர்பார்க்கும் விடைக்கு அருகிலேயே அவர்கள் இருப்பதாகக் கொள்ளலாம். அவர்தம் அளவியலிலேயே (units of measurement) இந்த நுட்பம் பளிச்சிடுவதைக் காணலாம்.

எடுத்துக் காட்டாக மயமதம் என்ற வஸ்து சாஸ்திரத்தின் முதல் எடுப்பும், மான சாரம் என்ற வாஸ்து சாஸ்திரத்தின் தொடக்கமும், அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்ப நூலின் முதல் ஸ்லோகமும் வாஸ்து மரபின் விஞ்ஞானத்தைக் காட்டி அதிலேயே காலூன்றித் தொழில்நுட்ப இலக்கணமாக (technological grammar) வளர்ந்திருக்கின்றன என்ற நுட்பத்தை இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகிறேன். இந்தப் பொருளுக்கு நேரடியாக இப்போதே வந்து விடாமல் இப்பொருளுக்குதவிய அடிப்படை வாஸ்து விஞ்ஞானச் செய்திகளை முதற்கண் விவரித்து விட்டுப் பிறகு மூலப் பொருளுக்கு வரலாம் என்று கருதுகிறேன். சரிதானே?

வாஸ்து சூத்திரங்களின் மூன்றினை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

மயமதம் : प्रासादादीनि वास्तूनि वस्तुत्वाद् वस्तुसंश्रयात्।
वस्तून्येवहि तान्येव प्रोक्तान्यस्मिन् पुरातनैः।।
அத்தியாயம் 2; ஸ்லோகம் 3.

பொருள் : *பிராசாதங்கள் எனப்படும் கட்டிடம் முதலிய வாஸ்துக்களில் வஸ்து உள்ளிட்டிருப்பதால் அவற்றை வஸ்துக்கள் என்றே முன்னோர்கள் சொன்னார்கள்.*

அதாவது वास्तुरेव वस्तु வாஸ்துவே வஸ்து (அ) வஸ்துவே வாஸ்து என்பது இதன் சுருக்கமாகும்.

**மானசாரம் :** [1] विमानादीनि वास्तूनि वस्तुत: वस्तुसंश्रयात्।
तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधै:।।

அத்தியாயம் 3; ஸ்லோகம் 3.

**பொருள் :** *விமானம் முதலிய வாஸ்துக்கள் வஸ்துவிலிருந்து தோன்றி, வஸ்துவுடன் சேர்ந்திருப்பதால் அவையெல்லாம் வஸ்துக்கள்[2] என்றே வஸ்து விஞ்ஞானிகள் சொல்வராயினர்.*

**அகஸ்திய சகளாதிகாரம் :** सकल निष्कल मिश्र विभागत: त्रिविधमेव वपु: परमेष्ठिन:। विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम्।। அத்தியாயம் 1; ஸ்லோகம் 1.

**பொருள் :** *பரமபுருஷனின் திருமேனியானது உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று நிலைகளில் விளங்குகின்றது. இவற்றில் உருவத்தின் விதிமுறைகளை எப்படி சிவபிரான் சொன்னாரோ அப்படியே சொல்லுகிறேன்.*

மேலும் வேதத்திலிருந்தும் உபநிஷத்திலிருந்தும், புராணங்களி-லிருந்தும் தமிழ் மற்றும் சமஸ்கிருத இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவேன் என்றும் சொல்லிட விரும்புகிறேன்.

வாஸ்து சாஸ்திரத்தையும் அதன் உள் உணர்வுகளையும் அவ்வுணர்வுகளினால் உருப்பெற்றெழுந்த கலைச் செல்வங்களையும் அறிவர்களும் ஆய்வர்களும் இன்னும் உற்றுப் பார்க்கவில்லை என்று சொல்லுவேன். அகவுணர்வுகள் (அ) எண்ணங்கள் எப்படிச் சொல்லாகவும் பொருளாகவும் முறையே வாய்வழியேயும் கைவழியேயும் உருப்பெற்று வெளிவருகின்றன என்ற வினாவெழுப்பி எவரும் விடை தேடவில்லை என்பேன். இது நிகழ்ந்தாலன்றி இந்த நாட்டின் கலாச்சார வேர்களை எவரும் கண்டுகொள்ள முடியாது. வாழ்நாள் முழுவதும் தேடினாலும்

---

1 விமானம் என்றால் கோயில் விமானம் மட்டுமல்ல. கட்டிடங்களுக்கு ஏற்படுத்திக் கொண்ட பர்யாயப் பெயர்களில் synonym ஒன்றுமாகும். विविधं मानं विमानं என்றும் नानामान विधानत्वात् विमानं என்றும் சொல்லப்படுவதாயிற்று. விதவிதமான மானங்களைக் கொண்டு இயற்றப்படுவதால் விமானம் என்று பெயர் பெற்றதாம்.

2 வஸ்து = energy; substance of the universe; energy with matter
வாஸ்து = embodied energy; materialized energy; matter with energy.

கைக்கெட்டாக் கனியாகவே இருந்துவிடும். அப்படித்தான் ஆகிவிட்டதென்பேன். நான் எதைச் சொல்ல நினைக்கிறேன் என்றால் நாமெல்லோரும் ஒருவகையில் சொற்சிற்பிகளாகவும் கற்சிற்பிகளாகவும் இருக்கின்றோம்; ஏற்கனவே நம்வசமுள்ள இலக்கணங்களை வைத்துக் கொண்டு இலக்கியங்களைப் படைக்கின்றோம். அதாவது பேசுகிறோம், செய்கிறோம். ஆனால் அந்தச் சொல்லும் செயலும் எங்கிருந்து கிளர்ந்தன? சொல் வடிவங்களும் பார்த்தறி வடிவங்களும் எப்படி நமது அகத்துக்குள்ளே உருவம் தாங்கி அவற்றின் பிரதிருபங்களாக வெளி உலகத்துக்கு வருகின்றன? அதாவது சொல்லுக்கும்[1] பொருளுக்கும்[2] அடிப்படையில் ஓர் இலக்கணம் இருக்க வேண்டும். அப்படியாயின் எப்படி அவ்இலக்கணம் தோன்றியது? அதற்கு எது வேர்? அகத்துக்குள்ளே யார் இருந்து உருவம் கொடுக்கிறது? இந்த ஒன்றைத்தான் நாம் ஆய்ந்திடவில்லை. இந்த ஒன்றை ஆய்ந்து இதன் இயக்கமறிந்து அதனை இலக்கணமாக வகுத்துத் தந்ததை வைத்துத்தான் தொல்காப்பியரும் பாணினியும் மொழியிலக்கணம் கண்டார்கள் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? மறுப்புணர்வு கூடப் பொங்கியெழுகிறதல்லவா? அதாவது இவர்தம் இலக்கணத்துக்கும் மூலமாகப் பிரிதொரு இலக்கணம் இருக்கிறது. இருந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அவ்வளவுதான். அஃது எது என்று புரிந்து கொண்டாலொழிய இந்தியக் கலாச்சாரத்தின் மூலத்தைக் கண்டிடல் இயலாது. இந்த மூலத்திற்குள் சென்று நிகழ்த்தும் ஆய்வைத் தான் மொழி விஞ்ஞானம்[3] என்று சொல்லுகிறோம். இக்காலத்தில் நடக்கும் விஞ்ஞான ஆய்வானது கண்ணால் பார்க்கக் கிடைத்திடும் பௌதிகப் பொருள்பற்றிய ஆய்வுதான். பௌதிக

---

1 மொழி இலக்கணம்.

2 வாஸ்து இலக்கணம். இவ்விரண்டும் அகப்பொருளைத்தானே அதாவது அகக்காட்சியைத் தானே மொழி வழியாகவும் உளிவழியாகவும் வெளி நிறுத்தி, நிஜ வடிவங்களாகக் காட்டுகின்றன.

3 விண்ஞானம் (space science) என்று நான் நீண்ட காலமாகச் சொல்லி வருகிறேன். விண் ஆனது ஒலிக் குணமுடையதாகையால் மொழி விஞ்ஞானம் என்றும் சொல்லலாம். விண் ஆனது ஒளிமயமாகவும் இருப்பதால் ஒளி விஞ்ஞானம் என்றும் சொல்லலாம். ஒலியும் ஒளியும் மூலத்தின் இயல்புகளாகத் திகழ்வதால் - விண்ணே இவ்விரண்டின் மொத்த அமைப்பாக இருப்பதால் விண்ஞானம் என்று சொன்னேன். சரிதானே?

விஞ்ஞானம் என்று சொல்லுகிறோம். ஸ்தூலத்தை ஆய்ந்து சூக்ஷ்மத்திற்குச் செல்லும் நுண் ஆய்வுதான் இஃதாகும். இதை விடுத்துப் பிரிதொரு பொருள் அதாவது மொழிக்கும் அப்பாற்பட்ட பொருள் ஒன்று மூலமாக இருப்பதை மறந்துவிட்டார்கள் இந்த ஆய்வர். இந்த ''நுண்பொருளை'' ஒதுக்கி வைத்து விட்டு முதற்கண் சொல்லை மட்டும் எடுத்துக் கொண்டு, சொல்லானது எப்படிப் பொருளையுணர்த்தும் சொற்பொருளாக உருவம் தாங்குகிறது என்று வினவி, விடை தேடினால் நாம் அந்த மூலத்தைக் காண எடுத்து வைத்த முதற்படியாகும் என்று சொல்ல விரும்புகிறேன். மனிதனின் முதல் விஞ்ஞான ஆய்வே இதுதான். இதனை நாம் அலக்ஷியப்படுத்தி விட்டோம். பொதுப்படையாக இந்த மூலத்தை ''பிரம்மம்'' என்று ஒரு பெரிய சொல்லால் சொல்லியதோடு விட்டுவிடாமல் அஃது ஒன்றே என்றும் அடித்துப் பேசிவிட்டு இன்னொரு வாயால் ''எல்லாம் பிரம்மம்'' 'सर्वं खल्विदं ब्रह्म' என்று நமக்குச் சொல்லியது வேதமாகும். 'जगत्सर्वं शिल्पमेव' என்று ஓர் உபநிஷதம் வேறுவிதமாகச் சொல்லுகிறது[1]. शिल्पविद्या रहस्योपनिषद् (சில்பவித்யா ரகஸ்யோபநிஷத்) என்பது அதன் பெயராகும். 'ஞாலக் கோலங்களெல்லாம் சிற்பங்களே' என்பது அந்த மகா வாக்கியத்தின் பொருளாகும்.

இக்கருத்தானது பிரிதொரு உபநிஷத்தால் வெகு அழகாகவும் சுருக்கமாகவும் தர்க்கரீதியிலேயும் பேசப்படுகிறது. தேஜோபிந்து உபநிஷத் என்று பெயர் கொண்ட அவ் உபநிஷதம் 'பிரம்மம்' இரண்டென்று தொடங்கி, மிக வினயமாக அஃது ஒன்றெனச் சுட்டுகிறது. அவ் ஒன்றை பரப் பிரம்மம் என்று குறிப்பிடுகிறது. ஆனால் அந்த பரப் பிரம்மம்தான் எது என்று அவ் உபநிஷதம் விளக்கிப் பேசிடவில்லை. என்றாலும் அதைச் சொல்லும் முறையும் அதன் உறுதிப்பாடும் ஒரு விஞ்ஞானப் பேருண்மையை (நான் சொல்லிட முயற்சித்துக் கொண்டிருப்பதை) அறிவுறுத்தி விட்டதெனலாம். அந்த

---

1 எல்லாம் 'பிரம்மம்'; எல்லாம் 'சிற்பம்' என்றால் பிரம்மமும் சிற்பமும் ஒன்றா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? 'ஆம்' என்று இப்போது சொன்னால் நம்பமாட்டீர்கள். இறுதியில் 'ஆம்' என்று நீங்களும் சொல்லவேண்டுமென்பதே இக்கட்டுரையின் லக்ஷியமாகும்.

ஸ்லோகமும் விளக்கமும் பின்வருமாறு:

द्वेब्रह्मणी वेदितव्ये शब्दब्रह्म परं च यत् ।
शब्दब्रह्मणि निष्णात: परं ब्रह्माधिगच्छति ।।

இந்த ஸ்லோகமானது, [1]சப்தப் பிரம்மம் மற்றும் [2]பரப் பிரம்மம் என்று இரண்டு பிரம்மங்களைச் சுட்டிக் காட்டி அதில் 'சப்தப் பிரம்மம்' யாதென்று எவரால் புரிந்து கொள்ள முடிகிறதோ அவரால்தான் 'பரப்பிரம்மம்' என்பது எது என்று புரிந்து கொள்ள முடியும், என்று பேசுகிறது. அதாவது சொல்லுக்கு (articulated word) எப்படி ஒலியாலான வடிவம் (Sound structure/form) கிடைக்கிறது என்று புரிந்து கொண்டாலன்றி அகக் கண்ணாலும் புறக் கண்ணாலும் பார்த்திடும் பொருளின் வடிவம் எப்படி உருவாகிறது (form generation and form figuration) என்பது புரிவதற்கில்லை என்பது பொருள். இதன் மூலம் மேலும் அறிவுறுத்தப்படுவது யாதெனில், ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னால் ஒவ்வொரு காட்சி உளதென்பதும் அத்தகைய காட்சியில்லாமல் அதாவது பொருளில்லாமல் சொல் இல்லையென்பதும் அத்தகைய பின்னணிப் பொருள்தான் இந்த நிலையில் பரப்பிரம்மம் என்றும் பொருளாகிறது, அல்லவா? இந்த நிலையில், அகத்தில் பார்த்திடும் காட்சியே புறத்தில் கொண்டு வந்து நிறுத்தப்படுவதால் இரண்டையுமே பிரம்மம் என்று சொல்லத் தூண்டுகிறதல்லவா? இஃதும் உண்மைதான். (Subtle = Gross)[3]. இன்னும் நுணுகிப் பார்த்தால் இந்தக் காட்சிக்கு ஒரு meaning உண்டு. இந்த meaning-கைத் தான்

---

1 சப்தப் பிரம்மம் - ஒலிப்பிரம்மம், ஒலி மயமான பொருள், ஒலிப்பொருள். (பொருளை ஒலியால் உணர்த்துவதாம்).

2 பரப்பிரம்மம் - பரம்பொருள், ஒளிப் பொருள். (பொருளை ஒளியால் உணர்த்துவதாம்)அகக்கண் / புறக்கண் என்ற சொற் பிரயோகம் ஒன்றுண்டு. ஆனால் அகக்காது/ புறக்காது என்ற சொற் பிரயோகம் இல்லை. அதே போல அகக்காட்சி / புறக்காட்சி உள்ஒளி / புறஒளி (வெளியொளி/ஆகாஸம்/விண்) என்ற சொற் பிரயோகங்கள் உள. எனவே ஒலியைப் புறத்தே தான் கேட்கிறோம். எதைக் கேட்கிறோம்?அகத்தே கண்ட காட்சியைப் புறத்தே ஒலியாக - பேச்சாகக் கேட்கிறோம்.

3 இங்கு தான் வாஸ்து இலக்கணம் பிறக்கிறது. அகக் காட்சி புறக் காட்சியாக எக்கணக்கில் வெளிப்பட்டு நிற்கிறது என்பதைக் கண்டு கொண்டதைத்தான் வாஸ்து விஞ்ஞானம் என்று சொல்லுகிறோம். அக வடிவை அக் கணக்கால் புறத்தே பிரதி செய்து காட்டி அதனை வழிபடு படிமமாகக் கொடுத்ததைத்தான் வாஸ்துப் படிமங்கள் அல்லது சிற்பங்கள் என்று சொல்லுகிறோம்.

அனுபவிக்கின்றோம். இதனை அனுபவம் என்றும் அனுபவப் பொருள் என்றும் சொல்லலாம். இந்த அனுபவப் பொருள் தான் உண்மையில் பரப் பிரம்மம் என்றாகிறது. ஆனால் இது காட்சியின் வழியேதான் அனுபவமாகிறது. எனவே அகக் காட்சியே (வடிவமே) பரப் பிரம்மத்திற்கு/பிரம்மானுபவத்துக்கு அழைத்துச் செல்லும் இறுதி நிலையாகும் என்றாகிறது. அதாவது முதலில் நமது உள்ளத்தில் காட்சி தோன்றி இறுதி நிலையில் காட்சியே மறைந்து, பொருளே உளத்தில் அனுபவமாகி விடுகிறது. இதனைத்தான் awareness என்றும் consciousness என்றும் பிரக்ஞை என்றும் ஆத்மானுபவம் என்றும் சொல்லுகிறோம். இதைத்தான் சிற்பிகள் அர்த்தப் பிரம்மம் என்றும் வஸ்துப் பிரம்மம் என்றும் சொல்கிறார்கள். இந்த வஸ்துப் பிரம்மமானது 'ஒளி' (light) என்ற சொல்லால் தமிழ் மரபில் குறிப்பிடப்படுகிறது. காரணம் சப்தப் பிரம்மத்திற்கு 'ஒலி' (Sound) எப்படி மூலப் பொருளாகிறதோ அதேபோல் அர்த்தப் பிரம்மத்திற்கு ஒளியானது(light) மூலப் பொருளாகிறது. அவையிரண்டும் உருவத்திற்கான raw material எனலாம். ஒளியால் ஆகிய காட்சிப் பொருளைத்தான் அகத்தேயும் புறத்தேயும் நாம் உணருகிறோம், பார்க்கிறோம். 'ஒளி' என்ற சொல்லுக்கே உணர்வு என்று தான் பொருள். தர்க்க ரீதியாகப் பார்க்கின், சொற்பொருளுக்கு ஒலியானது (Sound) மூலப் பொருளாக இருப்பது போல அகக்காட்சிக்கும் புறக்காட்சிக்கும் ஒளிப்பொருள் மூலமாக இருக்கின்றது. அதுதான் தேஜஸ் என சொல்லப்படுகிறது. அதாவது 'ஒளி' (light) என்று பொருள். இதனை அகவொளி (Inner light) என்று சொல்வது வழக்கு. இவ்வொளியைப் [1]புறவெளியின் ஒரு பகுதியாகக் கொள்ளுகிறோம். நம்முளே இருப்பதாகவும் இயங்குவதாகவும் உணருகிறோம். இந்தப் புறவெளியும் அகவொளிக்கு நிகரான 'ஒளி'மயமான வெளியேயாகும் (luminous space).

---

1 ''அண்ட மூலமாய் பிண்ட மூலமாய்க் கொண்டிலங்குவெளி 'ஒளி'யென'' - என்பான் வஸ்து விஞ்ஞானி மயன்; 'வானுடல் ஒளியே யாகி' என்றும் கூறுவான். आकाश शब्दगुणकं 'ஆகாஸம் ஒலிக்குணமுடையது என்று சொல்லும் வேதம். ''आकाशात् वायुः, वायोरग्निः अग्नेरापः अद्भिः पृथ्वी'' அதாவது ஆகாஸத்திலிருந்து பூமி திரிபுற்றது என்பதுதானே உபநிஷத விஞ்ஞானம்? ஒள் என்ற வினைச்சொல் ஒள்ளி எனப்பட்டு 'ஒளி' ஆயிற்று. சரிதானே?

இங்கே இந்தப் பரவெளியிலே சற்று நின்று கொண்டு ஒரு சிறிது ஒலியையும் ஒளியையும் மீண்டும் ஆய்வோம். 'ஒலியும் ஒளியும்' புலனறிவுக்கு உட்பட்டு விட்டதால் matter என்று சொல்லப்படும். இவ்விரண்டும் Subtle matter, அதாவது நுண்பொருள். ஒலிமயமான வெளிக்கு சப்தப் பிரபஞ்சம் என்று பெயர். ஒலி ஞாலம் என்பது தமிழ்ப் பெயர். ஆங்கிலத்திலே இதனை Sound universe என்று சொல்லுகிறோம். அதேபோல ஒளிமயமான வெளிக்கு அர்த்தப் பிரபஞ்சம் என்று பெயர். ஒளி ஞாலம் என்பது தமிழ்ப் பெயர். இதனை ஆங்கிலத்தில் Light universe என்று சொல்லுகிறோம். இந்த ஞாலங்கள் நமக்குள்ளேயும் அந்தராகாசம் (அகவிண்) அந்தராத்மா என்ற பெயர்களில் இருக்கின்றன. Inner Universes என்று ஆங்கிலத்தில் சொல்லலாம். ஒலி ஞாலத்திலிருந்து தான் சொல் அல்லது சொல்வடிவம் தோன்றுகிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அப்படியானால் ஒளி ஞாலத்திலிருந்து தானே ஒளிவடிவம் தோன்ற வேண்டும்? ஆம். இது தான் உண்மையும் நிகழ்வதுமாகும் (Phenomenal). ஒளிமயமான அகக்காட்சியைக் கண்ட பின்னரே ஒலிக்காட்சியாகிய 'சொல்' வெளிப்படுகிறது. எனவே இந்த 'ஒளி' தான் ஒலிக்கே முலம் என்று இப்போது நிறுவிடலாமல்லவா? இந்த 'ஒளி' என்ற முலத்தைத் தான் - இந்த ஒளிப் பொருளைத் தான் (Luminous form) - वस्तु வஸ்து என்று வாஸ்து சாஸ்திரம் கொண்டிருக்கிறது. இதன் material form-ஐத் தான் வாஸ்து என்று அது சொல்கிறது. இதனை விளக்குவதுதான் ஏற்கனவே நான் குறிப்பிட்ட மயமத வஸ்து சாஸ்திரத்தின் ஸ்லோகமாகும்.

प्रासादादीनि वास्तूनि वस्तुत्वाद वस्तुसंश्रयात्।
वस्तून्येवहि तान्येव प्रोक्तान्यस्मिन् पुरातनैः॥

பொருள் : *பிராசாதங்கள் எனப்படும் கட்டிடம் முதலிய வாஸ்துக்களில் வஸ்து (ஒளி) உள்ளிட்டிருப்பதால் அவற்றை வஸ்துக்கள் என்றே முன்னோர்கள் சொன்னார்கள்.*

இந்த இடத்தில் வேடிக்கையாகவும் ஏன் வினயமாகவும் கூட ஒன்றைச் சொல்லுவேன். 'வாஸ்து' ஒரு பெரிய விஷயமா அல்லது 'வஸ்து' தான் பெரிய விஷயமா என்று என்னைக் கேட்டால் வஸ்துவை விட வாஸ்துதான் பெரிய விஷயம் என்று

சொல்லுவேன். காரணம் 'வஸ்து' என்ற அனுபவப் பொருளை - அருவப் பொருளை (நிஷ்களத்தை) வெளியுலகத்திலே கண்ணால் பார்த்தனுபவிக்கும் பிரதி ருபமாக, படிமமாக - நிஜமாக்கி அந்த வஸ்துவையே அனுபவிக்கச் செய்து விடுகிறது இந்த வாஸ்து. வஸ்துவுக்கும் வாஸ்துவுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டை நீக்கி ஓர் அத்வைத நிலையை ஸ்திரப்படுத்தி வைத்த பெருமையை வாஸ்து சாஸ்திரம் பெற்றிருக்கிறது என்பதை இங்கே சொல்லிப் பெருமிதப்படுகிறேன். அந்தப் பரவஸ்துவின் இயல்பையும், இயக்கத்தையும் இலக்கணமாக்கி, எண்ணாக்கி, எண் வடிவமாகவும் ஆக்கி வாஸ்து இலக்கணமாக வைத்துக் கொண்டிருக்கிறது இந்த வாஸ்து. இந்த இலக்கணத்தின் இலக்கியமாகத்தான் சிற்பிகள் இறைவடிவங்களையும், இறைசார்ந்த பறவைகள், விலங்குகள், செடி-கொடிகள், மரங்கள் ஆகிய அனைத்தையும் இயற்றி ஓர் அற்புதமான ஆன்மிக உலகத்தையே சிருஷ்டித்து கொடுத்திருக்கிறார்கள் என்று துணிந்து கூறலாம். இக்காரணம் பற்றியே சிற்பியர் படைத்த உருவங்கள் வேறு மரபுகளைச் சார்ந்த கலை வடிவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு தனித்தும் விசேடித்தும் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஆன்மிக உணர்வுகளே ஓர் இலக்கண வரம்புக்குள் கட்டுண்டு உள்ளங்கவர் உருவங்களாகத் திரிபுற்றிருக்கின்றன என்று உறுதியாகச் சொல்லலாம். அதுமட்டுமல்ல, அங்ஙனம் படைத்திட்ட பொருள்கள் காலத்தைக் கடந்தும் (eternal and vibrant ஆக) நிற்கின்றன என்பது பிரிதொரு உண்மை. இந்த நிலையானது வஸ்து இலக்கணத்தின் - வாஸ்து இலக்கணத்தின் - உச்ச நிலையல்லவா? பிரம்மனின் படைப்புக்கள் நீடுநிலைத்திருப்பதில்லை; நாம் அறிவோம். நொடி-நொடி காலத்தால் தீண்டப் பெற்று, நலிந்து, நசித்து, நம்மை விட்டுப் பிரிந்தும் விடுகின்றன. இதற்கு மாறாக வாஸ்து வடிவங்கள் பிரம்மப் பொருளை இம்மண்ணில் நிலையாக நிறுத்தி விடுகின்றன. பல நூறு ஆண்டுகட்கு மேற்பட்ட இவ்வடிவங்களை இன்றும் நாம் காணமுடிகிறது. இங்ஙனம் செய்வது விஞ்ஞானம் தான். விஞ்ஞானத்துக்குத் தான் இந்த ஆற்றல் உண்டு. விதியை மதியால் வெல்லலாம் என்ற சூத்திரத்தின் உட்கருத்தும் இதுவே. நமது நாட்டு விஞ்ஞானம் ஆன்மப் பொருளில் காலூன்றித்

தொடக்கமுற்றதால் - from Subtle to Gross - இந்த விந்தை இந்த மண்ணில் நிகழ்ந்து விட்டதெனலாம். இதனைச் சாதித்துக் கொடுத்ததுதான் வாஸ்து விஞ்ஞானம் என்பேன். இதைத் தான் वास्तुरेव वस्तु என்றும் वस्तुरेव वास्तु[1] என்றும் Gross-லே Subtle என்றும்; Subtle-லே Gross என்றும் வாஸ்து விஞ்ஞானம் சொல்கிறது. இதைத்தான் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் ஐன்ஸ்டீன் $E = mc^2$ என்று குறிப்பிட்டார். This is the scientific truth behind 'being and becoming', 'non-manifest becoming manifest' ஆகும். ஐன்ஸ்டீன் வந்த வழி Gross to Subtle ஆகும். நாம் வந்த வழி Subtle to Gross ஆகும். இந்த மகோன்னதமான கண்டுபிடிப்பு நம்நாட்டில் சுமார் 5000 ஆண்டுகட்கு முன்னரே நிகழ்ந்து விட்டது. என்றாலும் நமக்கோ இன்னும் சந்தேகம்தான்! இந்த वास्तुरेव वस्तु என்று கண்டு நிறுவியவன்தான் 'மயன்' என்றும், 'மயாசுரன்' என்றும், 'பிரம்மரிஷி மயன்' என்றும், 'விஸ்வகர்மன்' என்றும் தொல்பழம் இலக்கியங்களான புராண இதிஹாஸங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றான்.

இந்த இடத்தில் மேலுமொரு நுட்பத்தைச் சொல்லிடல் பொருந்தும் என்று நினைக்கிறேன். அதாவது சொற்களுக்கெல்லாம் (uttered word) - சொல் ஒலிகளுக்கெல்லாம் மூலமான ஓர் ஒலியை 'ஓம் ஒலி' (Om sound) என்று சொல்லி வருகிறோம். இது காதால் கேட்கப்படும் ஒலியாகும். அப்படியானால் காட்சிப் பொருள்களுக்கெல்லாம் மூலம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அஃது எது? இவ்வினாவை எப்போதாவது எழுப்பியிருக்கிறோமா? இந்த மூலம் 'ஓம் ஒலி' (Om sound) இல்லை; இல்லவே இல்லை. அங்ஙனமாயின் அஃது எது? அஃது கண்ணால் பார்க்கப்படும் ஒளி. இதற்கு 'ஓம் ஒளி' (Om light) என்று பெயர். இப்படிச் சொன்னவன்தான் மயன்.

''ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும்
ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்''

என்பான் மயன். இந்த ஒளிரும் ஒளியை - துடிப்புறும் ஒளியை -

---

1 வாஸ்துவே வஸ்து என்றும், வஸ்துவே வாஸ்து என்றும் கருத்து.

அதனால் ஏற்பட்ட நுண்உருவைத்தான் ஆடலான் ஆடல் என்றும் (Dance of the Dancer) சிவ நடராசன் என்றும் மயன் கூறுவான். இந்தத் துடிப்பிலே ஒரு கணக்கு இருப்பதால், அது லயமாக (rhythm-மாக) இருப்பதால் 'ஆடல்' என்றான் மயன். ''ஒளியொளிர் உருவந்தானே ஆடலான் ஆடலன்றோ'' என்பது மயன் வாக்கு. இக்கூத்து பிரபஞ்ச சக்தியின் இயக்கக் கூத்தாகும். இக்கூத்து ஒரு சீராக நிகழ்வதால் - ஒரு திட்டமிட்ட கணக்கில் நிகழ்வதால் - லயம் என்றாகியது. இந்தப் பிரபஞ்ச லயக் கணக்குப்படியேதான், பிரபஞ்ச சிருஷ்டியே நிகழ்கிறது என்று கண்டறிந்த மயன் தனது வாஸ்து விஞ்ஞானத்தை தொழில்நிலைக்கு அதாவது தொழில்நுட்பமாகக் கொண்டு வந்து (technology) அதாவது அதனை வாஸ்து இலக்கணமாக இயற்றித் தந்து அரியதோர் ஆன்மிக உலகத்தை நமக்கும், நம் உற்றார் உறவினர்க்கும், சுற்றத்தார்க்கும், நண்பர்க்கும் ஏன் உலக மாந்தர்தம் இனத்துக்கே பொதுவானதொரு கலாச்சார மரபை - ஆன்மிக மரபை - படைத்துத் தரச் செய்திருக்கிறான் என்று அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த லயக்கணக்கைத்தான் லயப்பிரதானப் படிமங்களாக - வழிபடு பொருள்களாக - கோயிற் கட்டிடங்களாக - மனை இடங்களாக - குடியிருப்புகளாக மனித இனத்தின் உடல்நலத்துக்கும் ஆன்மசுகத்துக்கும் உகந்ததாகச் சிற்பிகளாகிற நாங்கள் செய்து வருகிறோம். இந்தக் கணக்குப் பிசகினால் எதிர்பார்த்த நற்பலன்கள் விளைவதற்கு மாற்றாகத் தீய பலன்களே நிகழும் என்பது வாஸ்து ஆகம விதியாகும்.

''मानहीने महा व्याधीरधिके कर्तृनाशनं ।
तस्मात् सर्व प्रयत्नेन कारयेत् लक्षणान्वितम् ।।''

''வழிபடு படிமத்தின் அளவு குறையின் பெருத்த நோய்கள் விளையும், அளவு மிகின் செய்விப்போன் நலிவுறுவான், எனவே பிரதிமாமான இலக்கணப்படிச் செய்தலே சாலும்'' என்று இந்த ஸ்லோகம் எச்சரிக்கிறது. மானசாரம் என்ற ஒரு வாஸ்துநூலானது சிற்பியருக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்து மக்கள்தம் உலகியல் மேம்பாட்டிற்கும், ஆன்மநலத்திற்கும் பாடுபடல்

வேண்டுமென்பதை எச்சரிக்கையாகவே - செய்வோனையும் செய்விப்போனையும் தொடர்புபடுத்திப் பேசுவதைக் காணலாம்.

> ''एभिर्विना कृतेतु सफलं भुग्तिं मुक्तिं न विन्दति''
> ''एवं मानेकृते वास्तु वस्त्वादि च विवर्धयेत्'' — மானசாரம்

> *''இவர்கள் (சிற்பிகள்) இன்றி செய்யப்படும் வடிவங்களை வணங்கினால் சுகபோகங்களையோ மோக்ஷத்தையோ (உள அமைதியையோ) அடையமுடியாது. எனவே வாஸ்துக்களை (சிற்பங்களை) அளவுகுறையாமல் செய்தால் - அவற்றை வணங்கினால் - வாஸ்துக்களும் வஸ்துவும் அதாவது வீடு, மனை, மனைவி மக்கள் விருத்தி ஆகி அந்த வஸ்துவால் விளையும் ஆன்ம நலமும் பலமும் பெருகப் பெறுவார்கள்'' - என்பது பொருள். (மானசாரம்)*

இன்னொரு ஸ்லோகம் பின்வருமாறு:

> यत्पूर्वमन्यत् परमक्रियानां तत्पूर्वमेव
> विपरीतहेतु देशश्च क्र्ता नृपतिश्च वास्तु
> दोषश्च पीडां मरणो भवन्ति ।। — சிற்பியர் கையேடு.

> *பழைய பிம்பங்களையும் வீடு, மனை, கோயில், குளம் ஆகியவைகளையும் செப்பனிடும் போது, ஏற்கனவே கையாண்டிட்ட அளவுகளையறிந்தே புதுப்பித்தல் வேண்டும். மாறுபட்டுச் செய்யின் நாடு, மக்கள், செய்விப்போன், நாடாள்வோன், செய்திட்ட பொருள் ஆகியவை பல்வேறு தோஷங்களுக்கும், குறைகளுக்கும் ஆட்பட்டு பலர் மரணமடைந்திடு நிலையும் ஏற்பட்டு விடும். (சிற்பியர் கையேடு)*

இதைத்தான் இன்று மேலைநாட்டு கட்டிடக்கலைஞர்கள் Space Therapy என்று சொல்லி வருகிறார்கள். இந்த நேரத்தில் இந்திய வாஸ்து அமெரிக்க வாஸ்துவாக உருமாறி வருகிறது என்று சொல்லிட விரும்புகிறேன். இந்திய வாஸ்துவை ஏற்க மறுப்பவர்கள் அமெரிக்கா சென்று அமெரிக்க வாஸ்துவாகப் படித்துப் பட்டம் பெறும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றும் இங்கே சொல்லிட விரும்புகிறேன். இந்திய வாஸ்துவே சீன வாஸ்துவாக FENG SHUI ஆக உளதென்று அறிஞர் பேசத் தலைப்பட்டு விட்டனர்.

பேசிவந்த 'பரப்பிரம்ம' விஷயத்தை, விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொட்டுத் தொடர்ந்து பேசிட விழைகிறேன். இங்கிருந்து தான் எல்லோரும் உற்று நோக்கிட வேண்டும். இனிவரும் செய்திகள் புதியனவாதலால் இப்படிச் சொல்லுகிறேன். இறுதிநிலையில் 'உணர்வாக' 'ஆத்மானுபவமாக' நாம் அனுபவிக்கும் பொருளிருக்கிறதே - அல்லது அனுபவிக்கச்

செய்யும் பொருளிருக்கிறதே - அந்தப் Primary element-ஐ - மூலத்தைப் - பிரிதொரு சொல்லால் சொல்வது வாஸ்து விஞ்ஞானத்தின் நுட்பமாகும். இதை அடுத்துச் சொல்வேன். 'இந்த வஸ்துணர்வு இல்லாமல் அனுபவமில்லாமல்' நாம் இவ்வுலகில் செயல்பட முடியாது. எதையும் செயல்படுத்த முடியாது. அனுபவம் என்பதும் awareness என்பதும் ஒருவகைச் செயல்தானே? இது[1] நிகழுமிடம் நமது உள்ளமாகிய அந்தராகாசம் அல்லது அகவிண் என்று சொல்லப்படும். இந்த அகவிண் ஒரு நுண்பொருள். அனுவளவு நமக்குள்ளே இருந்து கொண்டு உள்ளும் புறமும் இது நிகழ்த்தும் விந்தைகளை வார்த்தைகளால் வருணிக்கவோ அளவிடவோ முடியாது. அளப்பறிய ஆற்றல் கொண்டது இந்த அகவிண். இங்ஙனமே அகவிண்ணில் நடப்பதெல்லாம் புறவிண்ணிலும் நடக்கிறது. தத்துவத் துறை மாணாக்கர்கட்கு இது நன்றாகத் தெரியும். புறவிண்ணின் ஒரு அனுவே - அனு அளவே - அகவிண்ணாக இருப்பதினால் - பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவசிஷ்யதே पूर्णस्य पूर्णमादाय पूर्णमेव अवशिष्यिते என்பதிலிருந்து புரியக்கூடும். பூரணப் பொருளிலிருந்து கிடைத்திடும் சிறு பொருளும் பூரணப் பொருளேயாகும் என்பது கருத்து. अणोरणीयान् महतो महीयान् 'அணோரணீயான் மஹதோ மஹியான்' என்பதின் கருத்து இதுதானே? இந்தப் பூரணப் பொருளை - இந்த நிலையில் - ஆகாஸத்தை நிரப்பிக் கொண்டிருப்பது 'ஒளி' என்றே கூறி முடிக்கலாம். இதனை ஒளி வெளி என்றும் வெளி ஒளி என்ற இருநிலைகளிலும் உணர்ந்து கொள்ளலாம். இந்த ஒளியே பிரம்மம் எனப்படுகிறது. இந்த ஒளிவழிபாடு தான் - விஞ்ஞான வழிபாடு தான் - விண் வழிபாடு தான் - சிதம்பரத்தில் நடக்கிறது. இவ் ஒளிவழிபாடு தான் தமிழ் மக்கள் பண்டு நிகழ்த்திய வழிபாடாகும். இந்தப் பொருளிற்றான் "ஒளிநாடு" என்ற சொல் தோன்றியதோ? (ஆய்வர்கள் உற்று நோக்குக). ஒளிமயமான ஆகாசம்தான் எல்லாவற்றுக்கும் பிறப்பிடம். அதுவே அனைத்துப்

---

1 இதற்கு 'உளைப்பு' என்று பெயர். இதிலிருந்து 'உழைப்பு' என்ற சொல் தோன்றியது. உளை, உளைச்சல் என்ற கருத்து உள்ளிருப்பதை உணர்க. இதனை URGE என்று நாம் சொல்லுகிறோம்.

பொருள்களும் ஒடுங்கி அடங்கிக் கிடக்குமிடமும் கூட. இங்ஙனம் [1]உபநிஷதம் ஒன்றும் மயனுடைய சிற்பமாச் செந்நூல் என்ற கலைநூல் ஒன்றும் பேசுகின்றன.

இதற்கெல்லாம் மூலமான 'உணர்வைத்தான்' (awareness) உணர்வுத் துடிப்பைத் தான் 'காலம்' (Time) என்றும், எங்கும் எதிலும் எப்போதும் இத்துடிப்பு நிகழ்ந்து கொண்டிருப்பதால் 'காலப் பிரம்மம்'[2] என்றும் 'காலமாக் கடவுள்' என்றும் மயன் சொன்னான். இவன்தான் Vaastu technology-க்கும் Vaastu science-க்கும் மூலவன் மற்றும் முன்னவன் என்ற செய்தியை பெருமிதத்துடன் இப்போது துலக்கமாகச் சொல்லிட விரும்புகிறேன். இவன்தான் சூர்யசித்தாந்தத்தின் மூலாசிரியனாகவும் உள்ளான். இவன் பெயரில் ஓர் ஆகமமும் கைவசமிருப்பதாக டாக்டர்.எஸ்பி.சபாரத்தினம் என்ற வேத-ஆகம வாஸ்து நிபுணர் கூறுகிறார். மிருகேந்திராகமத்தில் உரையாசிரியர் மயாகமச் செய்திகளைக் குறிப்பாக (foot note-ல்) காட்டுகிறார். மயாகமச் செய்திகள் சம்ஸ்கிருத ஸ்லோகமாக வருவதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். சம்ஸ்கிருதத்தையும்

---

1 आकाशात् वायुः वायोरग्निः अग्नेरापः अद्भिः पृथ्वी என்று சொல்லும் உபநிஷதம். இந்த ஆகாஸம் எங்கிருந்து கிளர்ந்தது? பிரம்மத்திலிருந்து. एतस्मात् आत्मन संभूतः आकाशः என்று சொல்லி முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது. இந்த முற்றுப்புள்ளியைத் தான் 'வஸ்து' என்றும் 'பரவஸ்து' என்றும் वस्तु ब्रह्म என்றும் சிற்பிகள் சொல்வராயினர். இந்த வஸ்துதான் வாஸ்துவாகிறது. वस्तुरेव वास्तु என்று நிறுவிக் கொண்டது. இந்த ஆகாஸத்தை முதல் வாஸ்து எனலாம். முதல் கட்டத்தில் இறுதிப் பொருளாக நமக்குக் கிடைத்திருப்பது வாஸ்துவாகிய பூமிதான். எனவே भूमिः प्रधान वस्तुस्यात् (மயன்) பூமியைப் பிரதான வஸ்து என்றே கொண்டு விட்டான் மயன். பஞ்சபூதங்களின் கூட்டமைப்பாகவும், பஞ்சபூதங்களில் ஒன்றாகவும் பூமி விளங்குவதால் இப்படிச் சொன்னான். இந்த முதற்கட்டமாகிய 'ஆகாஸம் முதல் பூமி வரை' இடைப்பட்டதைத்தான் [illegible] என்று அகஸ்திய சகளாதிகாரம் சொல்கிறது. सकलनिष्कल भावं என்றும் சொல்வதுண்டு. ''அண்ட மூலமாய்ப் பிண்ட மூலமாய்க் கொண்டிலங்குவெளி 'ஒளி'யென'' - என்பான் மயன். ''வானுடல் ஒளியேயாகி''என்றும் கூறுவான் - luminous space is the body of god (Brahman)

2 कालो हि ब्रह्ममिति केचित् वदन्ति என்று ஓர் உபநிஷதம் சொல்லுகிறது. யாரோ ஒரு சிலர் காலம் தான் பிரம்மம் என்று பேசுகிறார்கள் என்பது இதன் பொருள். காரணம், காலத்திற்குமொரு மூலம் உளது. அதற்குக் காலமூலம் என்று பெயர். இந்தக் காலத்தையும் கடந்திருக்கும் மூலத்தை 'ஆதிமூலம்' என்று முன்னோர் குறிப்பிட்டனர். எனவே காலம் அடங்கிய மூலம் - ஆதிமூலம் ஆகும். காலம் என்பது செயல்படு மூலம்; காலம் அடங்கிய மூலம் செயல்படா உயிர்ப்புள்ள மூலம். இதுவே பிரம்மம் ஆகும். ஒளிக்குள்ளே உறையும் ஒளியாகிய ''உள்ளொளி'' தான் பிரம்மம். காலம் படிமமாகத் திரிபுற்று, அதே படிமம் காலம் ஒழிந்த மூலமாகக் கோயிற் கருவரையிலே உளது; சென்று பார்ப்பீர். (விளக்கம் மேலும் தொடரும்)

தமிழையும் பிரித்துப் பார்க்கும் ஆய்வர்களுக்கு இச்செய்தி ஓர் ஆய்வு விருந்தாகும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்[1]. ஆய்வர் மூலம் அது முழுமையாக வெளிப்படும் வரை காத்திருப்போமாக. எடுத்துக் கொண்ட பொருளுக்கு மீண்டும் வருவோம்.

காலம் என்பது உள்ளத்தில் (அகவிண்/புறவிண்) முகிழ்ந்திட்ட ஒரு காட்சியுணர்வின் துடிப்பு என்பதாகும். இதனைத் 'துடி'[2] என்றும் கூறுகிறோம். இந்தக் காலம் என்ற துடிப்பு ஒடுங்கிய நிலையிலே ஏற்படும் உளநிலையைத் தான் 'பிரம்ம நிலை' என்று முன்பு சொன்னேன். இதுவே பரப் பிரம்மம் என்ற சொல்லால் மேற்கண்ட ஸ்லோகத்திலே நமக்கு அறிவுறுத்தப்படுகிறது என்றும் சொன்னேன். இதையே ''कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति'' என்று ஓர் உபநிஷதம், பட்டும் படாமலும் சொல்லி விட்டுப் போய்விட்டது. மேலுமொரு ஸ்லோகம் ஸ்காந்த புராணத்தில் உளது. (பழைய பிரதியில் உள்ளது. புதிய பிரதியில் இல்லை) அது காலத்தைப் பற்றி, காலத்தின் ஆற்றலைப் பற்றி - கால விசையைப் பற்றித் துலக்கமாகப் பேசுகிறது[3].

---

1 சம்ஸ்கிருதமும் தமிழும் பிராகிருத மொழியின் இரு கூறுகள் - இரு கிளைகள் என்று ஒரு சிற்பி சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா? பிராகிருதம் என்ற சொல்லானது முன் மொழி-முதல் மொழி-முன்பு செய்த மொழி-ஒரு பேச்சு வழக்கில் வந்த இயல் மொழி என்று பொருள்படும். இதிலிருந்து செம்மொழி-செந்தமிழ்-சம்ஸ்கிருதம் என்ற சொற்கள் தோன்றியிருக்கக்கூடுமா என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்களேன். சம்ஸ்கிருதம் என்ற சொல்லுக்கே செம்மொழி என்றுதான் பொருள். செந்தமிழுக்கும் செம்மொழி என்றுதான் பொருள். இரண்டும் செம்மைபடுத்தப்பட்ட மொழிகள் தான். ஆகையினால் உங்களிடமே முடிவை விட்டு விடுகிறேன். ஒன்றை மட்டும் சொல்லுவேன். சிற்பிகள் பிராகிருதக் காலப் பழங்குடி மக்கள் (aboriginal creative tribe of India) என்பது ஒரு வரலாற்றுச் செய்தியாகும். இத்தகைய மொழிநிலையை வாஸ்து சாஸ்திரத்திற்கேயுரிய சம்ஸ்கிருதத்தில் காணலாம்.இதுபோலத்தான் ஆகம சம்ஸ்கிருதமும் உளது. மேலும் இவ்விரண்டு நூல்களும் கிரந்தாக்ஷரத்திற்றான் 1950 ஆண்டு வரை இருந்தன. இன்னொன்றும் வரலாற்று ஆசிரியர்களுக்காகச் சேர்த்து வைக்கிறேன். வாஸ்துவும் ஆகமமும் சம்ஸ்கிருத இலக்கிய வரலாற்று நூல்களில் இடம் பெறவில்லை. பிராகிருத கலாச்சாரத்தைச் சேர்ந்ததால் ஒதுக்கமுற்று விட்டதாக நினைக்கத் தோன்றுகிறது. ஆய்வர்கள் கவனிப்பார்களாக.

2 தோற்றம் துடியதனில். (உண்மை விளக்கம்)

3 மாபெரும் சிருஷ்டி நுட்பம் பற்றி - பிரபஞ்ச சிருஷ்டி நுட்பம் பற்றி - ஒரு புராணம் இப்படிப் பேசுகிறது என்றால் ஆச்சரியமாகவிருக்கிறதல்லவா? எந்தவொரு விஞ்ஞான நூலும் தத்துவ நூலும் இதனை எடுத்தாளவில்லையே, ஏன்? சிந்தித்துப் பாருங்கள்.

काल: सृजति भूतानि । काल: संहरति प्रजा: ।
सर्वे कालस्य वशगा: । कालो तस्य वशे स्थित: ॥

**பொருள் :** *காலமானது பௌதிகப் பொருள்களைப் படைக்கின்றது. அவற்றைக் காலமே துடைக்கின்றது. எல்லாம் காலத்தின் கையில் உளது. ஆனால் காலம் என்ற ஆற்றல் 'அவனது' கையில் உளது.*

இத்துணை வேலை செய்யும் காலமானது 'அவன்' கையில் (பரப்பிரம்மத்தின் கையில்) இருக்கிறது என்று பேசி விட்டது. காலத்திற்கும் மூலமாய் விளங்கிடும் இந்தப் பிரம்மத்தை அதாவது கால மூலத்தை ஆதிமூலம் என்று ஏற்கனவேசொல்லி விட்டோம்.

எனவே இந்தக் காலம் ஒடுங்கிய நிலையிலேயிருந்து, அதாவது பரப் பிரம்ம நிலையிலிருந்து முதன் முதலில் தோன்று நிலையிலேதான் உணர்வென்பதே முகிழ்க்கிறது (அ) தோற்றம் கொள்கிறது (manifest ஆகிறது). இந்த உணர்வு முகிழும் நிலையைத்தான் காலம் என்று வாஸ்து விஞ்ஞானி மயன் சொல்லுகிறான். ''உணர்வே காலம்'' என்பது மய சூத்திரமாகும்.

எனவே, காலம் கடந்த நிலை - அனுபவ நிலை - இன்ப நிலை - உணர்வு நிலை - பரப் பிரம்மநிலை எல்லாம் ஒன்றென நமக்குத் தோன்றுகிறதல்லவா? இந்தக் காலநிலையை - காலப் பிரம்மநிலையை செயல்நிலையைத்தான் வேதமானது விஸ்வகர்மன் என்று குறிப்பிடுகிறது. செயலற்ற - செயல் ஒடுங்கிய உயிர்ப்பு நிலையை விஸ்வப் பிரம்மன் என்று சிற்பிகள் கொண்டிருக்கிறார்கள். ஒன்றின் இரண்டு இயல்புகளையும் ஒருங்கிணைத்து - அடக்கிவைத்து 'விராட் விஸ்வப் பிரம்மணே நமஹ' என்று தத்தம் திருமண அழைப்பிதழ்களின் தலைப்பிலே இன்றும் பதிவு செய்து வருகிறார்கள் சிற்பிகள்[1]. எனவே இந்தக் காலத்தின் செயலைச் செய்யும் ஆற்றல் வாய்ந்த 'மயன்' தன்னை அர்ஜுனனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது, தன்னை 'விஸ்வகர்மன்' என்று தெரிவித்துக்

---

1 இந்த விஞ்ஞானச் செய்தியை உயிர்ப்போடு வைத்திருக்கும் சிற்பிகளுக்கு நாம் ஒரு வணக்கம் செலுத்துவோமாக.

கொள்ளுகிறான். அதாவது மகாபாரதத்திலே வேத வியாஸன் 'மயனை' விஸ்வகர்மன் என்று புரிந்து பெருமைப்படுத்துகிறான். இதோ வியாஸனுடைய வாக்கியம்: ''अहं हि विश्वकर्मा वै दानवानां महाकवि:'' சொல்லியலுக்கும் (linguistics) சொல் பிறப்பியலுக்கும் (etimology) இவன் தந்த செல்வம்[1] அளப்பரியது என்பதால் மஹாகவி என்றும் காட்டப்படுகிறான். சுருங்கக்கூறின் [2]பொருளியலுக்கும் சொல்லியலுக்கும் (Science of 'word-form and meaning') முலாசிரியனாக விளங்கியவன் மயன் என்று வேதவியாஸன் உணர்த்துகிறான். அதாவது சப்தப் பிரம்மத்தையும் அர்த்தப் பிரம்மத்தையும் புரிந்து, அவ்வழியைப் பின்பற்றி பல் உயிர்ப் பொருள்களைப் படைத்திடும் ஆற்றல் வல்லானாக மயனைக் காட்டுகிறான்.

இந்தக் காலம் எனப்படுவது என்ன செய்கிறது? எல்லாவற்றையும் படைக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும் எல்லாமாகத் திரிபுறுகிறது - தன்னையே உருமாற்றம் செய்து கொள்கிறது என்பதே உண்மையில் இந்த ஞாலத்தில் நிகழ்வதாகும். காலம் செய்யும் விந்தைகளை மேலும் பார்ப்போம்.

பிரம்மம் என்று வேதங்கள் கூறும் இறுதிப் பொருளை ஆதிமுலம் என்றும், காலமுலம் என்றும் பல பெயர்களிட்டுக் காட்டினேன். உண்மையில் 'முலம்' என்றாலே அந்தப் பிரம்மத்தை - இறுதிப் பொருளை, வஸ்துப் பிரம்மத்தைத்தான் சுட்டி நிற்கும்.

இந்த முலம்தான் காலத்தையும் உள்ளடக்கிக் கொண்டு காலம் கடந்த ஒன்றாய் விளங்குகிறது. என்றாலும் இது காலம்

---

1 'ஐந்திறம்' என்ற விஞ்ஞான நூலை மயன் இயற்றியுள்ளான். இந்த நூல் தூய தமிழில் அவனால் இயற்றப்பட்டதாகும். இதனை ஆங்கிலத்தில் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் மொழி பெயர்த்துள்ளார். சென்னை வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் இதனை வெளியிட்டிருக்கிறது.

2 ஒலியானது (அ) ஒலியணுக்கள் எத்தகைய கணக்கில் ஒலிப்பொருளாக - சொல்லாகத் திரிபுறுகின்றன என்ற நுட்பமே சொல்லியல் எனப்படும். அதேபோல, ஒளி அணுக்களால் உருப்பெறும் ஒளிப்பொருள் பற்றிய கணக்கியலுக்குப் பொருளியல் என்று பெயர். இரண்டுக்கும் - அதாவது சொல்லுக்கும் பொருளுக்கும் ஒரே கணக்கியல் இயற்கையிலே அமைந்திருப்பதைக் கண்டு சொன்னவன்தான் 'மயன்'. எனவே வாஸ்து/வஸ்து இலக்கணத்தைப் பொருளியல் என்ற சொல்லால் சொல்லிடல் பொருந்துமன்றோ!

கடந்த நிலையிலும் உயிர்ப்புடனிருக்கும் பொருள். எனவே [1]வஸ்து ஆயிற்று. எல்லா உயிர்ப் பொருள்களும் இதிலிருந்தே வெளிப்படுகின்றன. வெளிப்பட்ட அண்ட பிண்டங்கள் அனைத்தும் இதற்குள்ளேயே இறுதியில் அடங்கி விடுகின்றன. அதற்குவேறு போக்கிடமும் இல்லையன்றோ! அதாவது, தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இடமாக[2] இருப்பது இந்த மூலமே (மூலப்பொருள், பரவஸ்து) என்பது கருத்து. இதுவரை சொல்லிய ஒருசில முக்கியக் குறிப்புக்களைத் திருப்பிச் சொல்லி மேலும் தொடர்ந்திட விரும்புகிறேன். நன்றாகப் புரியச் செய்வதற்குத் தான்.

சும்மா இருந்த பிரம்மம் உணர்வுற்ற நிலையில் காலமாக மலர்கிறது. இந்த மூலம் தன்னியல்பாக இதைச் செய்கிறது. இந்தக் காலம் தான், காலவிசை தான் தன்னைச் செயல்படுத்திக் கொள்ளும் நோக்கில், புலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் துடிப்புறுகிறது. ஏன்? தன் உணர்வை, தனது இச்சையை வெளிப்படுத்தி, வெளியே நிறுத்திப் பார்த்து, தன்னையே தனது சுவையுணர்வையே காட்சியாய் அங்ஙனம் கண்டிட்ட தனது அகக்காட்சியை (inner vision) புறத்தே கண்டுகளித்திடவே, தன் ஆற்றல் வடிவத்தைக் கண்டு மகிழ்ந்திடவே என்று காரணம் காட்டலாம். நமது அந்தராத்மாவின் இயல்பும் இஃதேதான். நாம் துடிப்புறுவதும் (Pulsate பண்ணுவதும்) இக்காரணம் பற்றியே. எனவே துடிப்புறும் இக்காலமே கோலமாகத் திரிபுறுகிறது என்று கூறலாமல்லவா? இந்தக் கோலமானது சீராக - நேர்த்தியாக அமைந்திட இந்தக் காலமே ஒரு கட்டுப்பாட்டை (discipline) - ஒரு நெறியைத் தன்மீது சுமத்திக் கொள்கிறது. இதற்குச் சீலம் (order) என்று பெயர். இதைத்தான் 'லயம்' என்று சொல்கிறோம். இது

---

1 वस् (to dwell) என்ற வேர்ச்சொல்லிருந்து वस्तु என்ற பெயர்ச் சொல் உருவாகியது. That which exists eternally - existence - எப்போதும் இருப்பது - என்றுமுள நிலைப்பொருள் என்பதும் இதன் நுண்பொருளாகும். This is the substance of the universe.

2 ஆகாஸமே எல்லாப் பொருள்களும் தோன்றி ஒடுங்குமிடம் என்பது யாவரும்அறிந்ததே. எனவே தமிழ் மரபில் ஆகாஸத்திற்கு 'இடம்' என்றே ஒரு கலைப் பெயர் தோன்றலாயிற்று. ஆங்கிலத்தில் Space என்பதும் தமிழில் இடம் என்பதும் ஒன்றே.

பிரபஞ்சத்தில் நிகழும்போது பிரபஞ்சலயம் என்று கூறுகிறோம். இதற்கு universal rhythm (or) universal order என்று பெயர். இது நமக்குள்ளே நிகழும்போது ஆத்மலயம் எனப்படுகிறது. லயம் என்பது ஒரு கணக்குத்தானே? கணக்கு என்றால் - எண்வகைப்பட்ட கணக்காகத்தானே இருக்க வேண்டும்? இப்போது பார்த்தீர்களா, அளவிட முடியாத - अप्रमेय: (அப்ரமேய:) என்று சொல்லப்படும் - பிரம்மம் தன்னைத்தானே ஓர் அளவியலுக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டது! இந்த நிகழ்ச்சியை ''எண்ணம் ஆனது எண்'' ஆகிவிட்டதென்று சொல்லலாமா? ஆம். உண்மையில் உணர்வாகிய எண்ணம் துடிப்புக் கணக்கால் (frequency of vibration) ''எண்கள்'' என்ற Öû ¦ ØP `» |[1] இறங்கி வந்துவிட்டது. மறுதலையாகப் பார்க்கின் இந்த எண் ஆனது எண்ணமாகவும் ஆகக் கூடுமல்லவா? இந்த எண்ணத்தை எண்ணாக்கிக் கொண்டதும், எண்ணை எண்ணமாக்கிக் கொண்டதும் காலத்தின் வேலை என்று நிறுவியது இந்த வாஸ்து மரபுதான் என்று சொன்னால் நீங்கள் மறுத்திட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதாவது எண்ணங்களெல்லாம் எண்களாகி அந்த எண்களே மீண்டும் எண்ணத்திற்குரிய வடிவமாகத் திரிபுறுகிறது என்று வாஸ்து மரபு கண்டு வாஸ்து சாஸ்திரத்தில் தொழில் நுட்பங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுளது. இங்ஙனம் எண்ணால் ஆகிய உருவத்துக்கு எண்ணுரு[2] என்று பெயர். மான லக்ஷணம் என்பது சம்ஸ்கிருதச் சொல். அதாவது உணர்வு மயமாக இருந்த ஒன்றை உருவகித்துக் கொடுக்க - படிமமாக்க - பிரதிமையாக்கித் தர இயற்கையின் இயக்கத்திலிருந்து, இயற்கையின் துடிப்பிலிருந்து

---

1 எல்லாம் பிரம்மம் सर्वं खल्विदं ब्रह्म என்றது வேதம். 'எல்லாம் சிற்பம்' என்று சொன்னது शिल्पविद्या रहस्योपनिषद्. மயன் கூற்றைப் பார்க்கும் போது 'எல்லாம் காலம்', 'எல்லாம் காலத்தின் தோற்றம்' என்றாகிறது. மய கணிதத்தை வைத்துப் பார்க்கின் 'எல்லாம் கணக்கே' என்று தெரிய வருகிறது. கடவுளே கணக்காக உள்ளார் என்று உறுதியாகிறது.

2 Numerical form. Form expressed in numerical measures which turn into geometrical form in our inner space. எழுத்து என்பது கண்ணால் பார்த்தறியும் ஒரு வடிவம்தான் - ஓவியம்தான். இக்கருத்திற்றான் எழுத்தோவியம் என்ற சொல்லே தோன்றிற்று. இத்தகைய எழுத்தொன்று தோன்றுவதற்கு ஒளி அணுக்களின் சேர்க்கையே - எண்ணிக்கையே காரணம் ஆகும். இந்த அடிப்படையிலேயே எண்ணை முன் வைத்து எழுத்தைப் பின் வைத்து ''எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்'' என்று ஔவை மூதாட்டி சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்கள்.

பெற்றிட்ட ''இயற்கையின் துடிப்பு இலக்கணம்'' இஃது ஆகும். எனவே இது பிரதிமா மான லக்ஷணம் - பிரதிமா இலக்கணம் - என்று கூறப்படுவதாயிற்று. இதனைச் சுருக்கமாக - measured forms of spiritual vibrations - என்று கூறலாம்.

மூலமானது, தானாகவே உணர்வுற்றுக் காலமாய் மலர்கிறது என்றும் இந்தக் காலமானது துடிப்புற்று, அதுவே கணக்காகத் திரிபுற்று, அக்கணக்கைத் தானே சீலமாக்கிக் கொண்டு கோலமாகத் தோற்றம் கொள்கிறது என்று சொன்னேன். இந்தக் கோலங்களைத்தான் பிரபஞ்சத்திலே பல்வேறு பொருள்களாகக் காணுகிறோம் (material forms). இங்ஙனம் கோலங்கள் நிறைந்த ஒன்றே ஞாலம் எனப்படுகிறது. ஆகவே மூலம் காலமாகி, காலம் கோலமாகி, இறுதியில் பல கோலங்கள் சேர்ந்து விளங்கும் நிலையில் ஞாலமாய்த் தோற்றம் கொள்கிறது என்பதே [1]வாஸ்து விஞ்ஞானச் சுருக்கம்[2]. அதாவது மூலமே இறுதியில் கோலமாக உருமாற்றம் கொள்கிறது என்பது நுட்பமாகும். இந்த மூலமே அனைத்துப் பிரபஞ்சப் பொருள்களாக manifest ஆகிறது என்பது உறுதியாகிறது. அதாவது, சூக்குமப் பொருள் தூலப் பொருள்களாகத் திரிபுறுகிறது. Subtle turns into gross என்று விளக்கிடலாம். அப்படியானால் இந்த 'மூலம்' எனப்படுவது சூக்குமத்தில் எந்தவொரு அடிப்படை வடிவத்தில் உளது? தூலத்தில் இவ்அடிப்படை எவ்உருவம் தாங்குகிறது? இதுதான் நாம் இங்கே ஆராய்ந்திடும் நுண்பொருள். இந்த அடிப்படை உருவம் மனித உருவம் தான் என்று வாஸ்து விஞ்ஞானம் கொண்டுளது. இந்த மனித வடிவத்தின் எழிலார்ந்த அமைப்பை அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்ப சாஸ்திரம் விளக்கிச்

---

1 இந்தப் பிரபஞ்ச விஞ்ஞான நிகழ்ச்சிகளை நிலவுலகிலே நிகழ்த்திக் காட்டி - திருப்பிச் செய்து, பல கோலங்களையும், பெரியதொரு ஞாலத்தையும் படைத்தருளியவன் தான் மயாசுரன் என்றும், தேவதச்சன் என்றும் புகழ் கொண்ட மயன் என்பதை நினைத்து இன்புறுவோமாக.

2 இதனை Science of manifestation என்று சொல்வது எத்துணைப் பொறுத்தம்? உள்ளமாகிய Space என்பதே (இடமே) Spatial formஆக (இடவடிவமாக) மாற்றம் கொள்கிறது என்றும் மயன் கூறுவான். ''உள்ளமே மூலமாகி உணர்வுறும் கோலமாகி, உள்ளமே ஒளியளித்து உள்ளமே வழியும் காட்டி, உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் நூலைக் காண்பீர்'' - எப்படியிருக்கிறது இப்பாடல்?

சொல்வது* மேலும் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. எப்படி? மூலத்தின் manifest form-களில் மனித வடிவமும் ஒன்றுதானே? அதனை ஓர் உச்சப் படைப்பு என்று சொல்லலாம் தானே? உண்மையில் அதுதான் most intelligent 'being' of god's creations or god's manifestations! இதனை இறுதியில் கணித மூலம் நிறுவிட முயற்சித்துள்ளேன். பொறுத்திருந்து பார்த்திடுக.

இந்தப் பிரபஞ்ச சிருஷ்டிப் படிமுறையிலே (Stages of evolution of the universe) காலமும், சீலமும், கோலமும் ஆகிய மூன்றும் வாஸ்து விஞ்ஞானத்தின் கணித இயலாக - கணக்கியலாக - விளங்குகிறது என்று இப்போது சொல்லுதல் பொருந்தும் என்று கருதுகிறேன்.

இந்தக் காலக் கணக்கை எப்படிப் புரிந்து கொள்வது? இஃதொரு அடிப்படைக் கேள்வி. இந்தக் காலக் கணக்கை நமது இதயம் துடிப்புறுவது மூலம் தெரிந்து கொள்ளலாம். இந்தக் காலத் துடிப்புத்தான் ஒருவிதக் கணக்காக இயங்கி, உயிர் தாங்கிய உடலை வளர்க்கின்றது. அணுநிலையிலிருந்து அண்ட பிண்ட நிலைக்கு வளர்த்து விடுவதே இக்காலமும் காலக் கணக்குமாகும். ஒவ்வொரு உயிர்ப்பொருளும் இங்ஙனம் துடிப்புறுவதையும் துடிப்பால் வளருவதையும் நவீன கால விஞ்ஞானம் biological rhythm என்று கூறும். இன்னும் சுலபமாகப் புரிய வேண்டுமானால் வினை எழுப்பும் ஒலித்துடிப்பின் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம். இதற்கு musical rhythm என்று பெயர். வினை துடிப்புற்று ஒலிவெளியைத் தோற்றுவித்து, அவ்வொலி வெளியானது (sound space) sound vibration என்ற துடிப்புக் கணக்கினால் - காலக் கணக்காகிப் பிறகு - காலமே தன் கணக்கைச் சீலமாக்கிக் கொண்டு, அச்சீலக் கணக்கினால் (Rhymic time or pulsation - frequency of vibration) - இசை உருப்பெறுவது போல ஒளிவெளியானது (light space) அதே

---

* सम्पूर्णनाद विपुलायत मांसलाङ्गं शृङ्गार सौम्य परिपूर्ण विशिष्ट वक्त्रं तारापताक्षि समकोमल तुङ्गघोणं चत्वारि मिश्रं सकलं सकलेश्वरस्य।। சகளாதிகாரம் -அத்யாயம் 2; சுலோகம் 76.

சிலக்கணக்கால் (Rhythm of luminous space) இடவடிவம் (Spatial form/material form) பெறுகிறது என்பது கணக்கால் வெளிப்படும் உருவ அமைதியாகும்.

மூலத்தின் கணக்கால் - மூலக் கணக்கால் - உருப்பெறுவது அனைத்தும் மூலத்தின் படிமமேயாகும். இக்கருத்திற்றான் सर्वं खल्विदं ब्रह्म 'எல்லா வடிவங்களும் பிரம்மத்தின் வடிவங்களே' என்று வேத மரபிலும் जगत् सर्वं शिल्पमेव 'இந்த ஞாலத்தில் இலங்கும் அனைத்துப் பொருள்களும் சிற்பங்களே' என்று வாஸ்து மரபிலும் ஆகம மரபிலும் சொல்லப்படுவதாயிற்று. இவ்வுருவங்களில் சீரும் சிறப்பும் அறிவாற்றலும் மிகுந்திருப்பதே மனித உருவமாகும் என்று முன்பு சொன்னேன். இதுவே மூலத்தின் இயல்வடிவம் என்பதைத் தானே நிறுவிட வேண்டும்? நிறுவிடுவோம். 'அங்ஙனம் நிறுவிய பிறகே மூல ஸ்தானத்தில் இருப்பது இறைவடிவம் என்பதும், அஃது எப்படி பரப் பிரம்மத்தின் நிலையில் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது என்பதும் உங்களால் ஏற்றுக் கொள்ளப்படும், அல்லவா? எனவே இஃது அதிநுட்ப வாஸ்து விஞ்ஞானச் செய்தியாகும். இதற்கான விளக்கத்தை எதிர்வரும் பத்திகளில் சொல்லுவேன். இதுதான் பிரம்ம ஞானம். இதுவே கலைத்துறையில் பிரதிமா விஞ்ஞானம் என்று எளிய சொல்லைக் கொண்டு உணர்த்துவதாயிற்று. இந்த எளிமையைச் சொல்லில் ஏற்றி விட்டதால் ஒரு பெரிய மயக்கமே இத்துறையிலும் சமயத்துறையிலும் ஏற்படுவதாயிற்று. (நடந்து போனதை ஒதுக்கித் தள்ளிவிட்டு இன்றிலிருந்து வாஸ்து ஞானமே பிரம்ம ஞானம் என்று ஏற்றிடுவோமாக). இதுவே துருவபேரம் என்றும் அசையாப் படிமம் என்றும் மூலஸ்தானத்தில் ஸ்திரமாகப் பிரதிஷ்டையாகி 'ஸ்திரப் படிமமாகி' - 'ஸ்தாபனார்ச்சாவாகி' வழிபாட்டுக்குரியதாகித் திகழ்கிறது. கருங்கக்கூறின் பிரபஞ்ச லயத் துடிப்பால் இயற்றப்பட்ட, பிரபஞ்ச மூலத்தின் - பிரபஞ்ச காலத்தின் (Universal rhythm) வடிவாய் அமைவது மூலப்படிமமாகிறது. இந்த மூலமானது ஆகாசத்தில் நீக்கமற நிறைந்திருந்து இறுதியில் கண்களுக்குத் தெரியும் பொருளாக - ஸ்திரப் பொருளாக - மண் பொருளாக உளதென்பதை விஞ்ஞானச் செயல் என்றும், விஞ்ஞான நிலை என்றும் உணர்ந்தே ஸ்திரப்

படிமமாகிய துருவபேரத்தை மண்ணால் முன்னோர் செய்தனர். இக்கருத்தை வைணவம் அப்படியே இறுகப் பிடித்துக் கொண்டது. இதனாற்றான் வைணவம் இந்தப் படிம நிலையை அர்ச்சாவதாரமாகவும் உறுதி செய்து கொண்டது. எத்தகைய கெட்டிக்காரர்கள் நமது முன்னோர்; பார்த்தீர்களா? சூக்குமத்தை அகத்தே கண்டும் கொண்டும் ஸ்தூல உலகில் செயலாற்றிடத் தகுந்த எளியமுறையில் வாஸ்துவும் ஆகமமும் பல தொழில் நுட்பச் செய்திகளைச் சொல்லுகின்றன. சூக்குமத்தையே ஸ்தூலமாக்கி, சூக்குமத்தை ஸ்தூலத்திலேயே கண்டு களித்திட வழிவகை செய்ததே வாஸ்து விஞ்ஞானச் சாதனையாகும். அதாவது சூக்குமத்தை மனத்தால் எட்டிப் பிடித்து சுகம் காண்பது எளிதன்று. அஃது ஸ்தூலத்திலே கிடைத்திடுமானால் கிடைக்கச் செய்திட முடியுமானால் இந்த விஞ்ஞானத்தை எத்தகைய வார்த்தைகள் கொண்டு விளக்குவீர்கள்? இந்த அற்புதம் வாஸ்து விஞ்ஞானத் துறையில் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நிகழ்ந்து விட்டது. என்றாலும் இதனை மீண்டும் மக்கள் மத்தியில் சொல்லிடக் கிடைத்த பேற்றைத்தான் வான்வழி வந்ததென்று முன்பு குறிப்பிடலானேன். இக்கருத்தை விஞ்ஞான ரீதியில் மேலும் அடுத்து விளக்குவேன்.

यत् कृता प्रतिमा पूर्वप्रासादे मृण्मयादिभिः ।
सा स्थापनार्चा विज्ञेया रत्नन्यासोपरि स्थिता ॥

பொருள் : கோயிற் கருவறையில் மண் முதலியவைகளினால் செய்து நிறுவப்படும் படிமம் ஸ்தாபனார்ச்சா என்று சொல்லப்படும். இது ரத்னவ்யாசம் செய்யப் பெற்ற இடத்தின் மீது [1]ஸ்தாபிக்கப் பெறும்.

என்று சனத்குமார சம்ஹிதை இந்த பிரம்ம ஸ்வருபத்துக்கு அர்ச்சா நிலையைக் கூறுகிறது.

அடுத்து, இந்த மூலக்கணக்கு என்பது எந்த வகைக்

---

1 வைணவத்தின் மூலஸ்தானம் எனப்படும் திருவுண்ணாழியில் அமைக்கப்படுவதைத்தான் மண்ணால் செய்வது வழக்கம். பிற ஸ்தானங்களில் உலோகம், கல் ஆகியவற்றால் செய்தலே மரபு.

கணக்காக வாஸ்து கணிதத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்ற வினா எழுகிறது. இதற்கொரு விளக்கம் தேவைப்படுகிறது. இதனை ஒரு சிறிது பார்ப்போம்.

உலகப் பொருள்கள் அனைத்தும் ஏன் இவ்வுலகமும் இப்பிரபஞ்சமும் ஒரேயொரு மூலப் பொருளிலிருந்து தோன்றியது என்பது வேத விஞ்ஞானமும் வாஸ்து விஞ்ஞானமும் ஆகும். இந்த மூலப்பொருள் எப்போதும் உயிர்ப்புடனிருக்கும் பொருள். ஒளியை எப்போதும் உமிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் ஒளிப்பொருள். இந்த ஒன்றுதான் தானாகவே உணர்வுற்றுச் சிதறிச் சிறுசிறு அணுக்களாகப் பரவி ஆகாசம் (space) என்ற வெளி ஒளியாகத் திகழ்கிறது என்பது ஒரு விஞ்ஞானப் பேருண்மையாகும். இதுவே இந்திய விஞ்ஞானத்தின் Big Bang theory. இங்ஙனம் சிதறிப் பரவிய ஒவ்வொரு சிறு அணுவும் ஓர் உயிர்ப்பொருள். கருவென்றும் விண்கரு என்றும் ஒளிக்கரு என்றும் சொல்லப்படும். இங்ஙனம் மூலம் சிதறி (explosion) ஒரு சீரான அமைப்பில் - (நெறி/order) ஒரு கட்டுக் கோப்பில் (structure) - ஒளிவடிவமாகவும் ஒலிவடிவமாகவும் (Primary light diagram/sound diagram) தோற்றம் கொள்கிறது (Self manifestation of Brahman). இது தான் பிரம்மத்தின் முதல்தோற்றம் (Primal material manifestation). இஃது அமைதி நிலையில் [1]சதுரவடிவமாகவும், செயல்படு நிலையில் அதற்குள்ளே ஒரேமாதிரியான 64 சிறிய சதுரங்களாகவும் அமைத்துக் கொள்கிறது. இதனை வேறு எவரும் அமைத்திடவில்லை. அந்தப் பரம வஸ்து தன்னைத்தானே சுழற்றிக் கொண்டு (self spin) செயல்படு நிலையில் முதற்கட்டத்தில் அங்ஙனம் அமைத்துக் கொள்கிறது. இஃது அதன் இயல்பு என்றும் இயல்நெறி (intrinsic order) என்றும் சொல்லப்படும். இதற்கு வாஸ்து புருஷ மண்டலம் என்று பெயர். இவ்வாறு மூலவஸ்துவே உருமாற்றம் கொள்வதால் (metamorphosis) இதனை வஸ்து புருஷ மண்டலம் என்றே நுட்பமாகச் சிற்பிகள் கூறுவர்.

---

1 வாஸ்து புருஷனின் நுண் வடிவம் சதுரம் ஆகும். वास्तुपुरषो चतुरश्र संस्पः (வாஸ்து வித்யா) The minutest particle of energy is square in plan, when in vibrant stillness. (Vaastu Vidya).

ஆங்கிலத்திலே, இக்காலத்தில், இதற்கு energy grid என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இஃதும் ஆழ்ந்த கருத்துடைய பெயரே - நாம் வைத்துக் கொண்ட சொற்றொடரிலே புருஷன் என்ற சொல் Energy-ஐயும், வாஸ்து மண்டலம் என்ற சொல் grid-ஐயும் குறிக்கும். இங்ஙனம் 8×8=64 சிறு சதுரங்களில் ஒவ்வொன்றையும் மரபில் पदम् என்றும், நுண்இடம் என்றும் அணுவிடம் என்றும் சொல்லி வருகிறோம். இச்சொல் சொற்பதத்தையும் (unitary measure of sound space) பொருட்பதத்தையும் (unitary measure of material space) குறிப்பிடும் பொதுச் சொல் ஆகும்[1]. இவற்றைச் சொல்லிடம் என்றும் பொருளிடம் என்றும் குறிப்பிடலாம். அதாவது 'ஒலியிடம்' மற்றும் 'ஒளியிடம்' என்று பொருள்.

எனவே வாஸ்து புருஷ மண்டலமானது சொற்பதத்தின் அமைதியையும் (abstract form of sound structure) பொருட்பதத்தின் அமைதியையும் (abstract structure of subtle matter) ஒன்றித்துக் காட்டும் energy grid[2] ஆகும் என்பதை

---

1 காரணம் சொல்வடிவமும் பொருள்வடிவமும் அளவிலே ஆகிருதியிலே ஒன்றென்பது வஸ்து விஞ்ஞானக் கொள்கை. கேட்கச் சுவையாக இருக்கிறதல்லவா இது? சொல்லைப் 'பதம்' என்றும் பொருளை 'அர்த்தம்' என்றும் கொண்டு பதார்த்தம் என்ற கூட்டுச் சொல் ஒன்று மரபில் இருக்கிறதல்லவா? காளிதாஸன் இதனை வாக்கு - அர்த்தம் என்று பிரித்தும் 'வாகர்த்தம்' என்று ஒன்றித்தும் சொல்லுவான். அம்மையை வாக்காகவும் அப்பனை அர்த்தமாகவும் உவமித்து பார்வதீ பரமேஸ்வரவனாக இணைத்துக் காட்டுவான் காளிதாஸன். வாகர்த்தம் என்ற சொல்லை வாஸ்து விஞ்ஞானத்தில் ஒலி + ஒளி அதாவது ஒலியும் ஒளியும் ஒன்றித்த பொருள் - ஒலி ஒளிப் பொருள் என்றாகிறதலவா? இப்படியும் விளக்குவான் மயன். இறுதியில் ஒலியானது ஒளியில் ஒடுங்கி ஒளியே நமது உள்ளத்தில் உணர்வாய் உணர்வுமயமான அகக்காட்சியாய் மிளிரும். இதுவே பரப்பிரம்மமாகும். இவ்வண்ணமும் லக்ஷ்மி நாராயணனையும் இணைப்பான் காளிதாஸன். இதுவே அர்த்தநாரீஸ்வரப் படிமத்தில் உருவமாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதேபோல விண்ணையும் மண்ணையும் இணைத்து சங்கரநாராயணப் படிமமாகக் காண வைத்தனர் சிற்பிகள். லக்ஷ்மி நாராயணனை அர்த்தநாரீஸ்வரக் கோலத்தில் ஒரு வைணவாகமம் சித்திரிக்கிறது, ஆனால் படிமமாக எங்கும் செய்யப்படவில்லை.


2 இதற்குத் தென்னாட்டில் - தென்னாட்டு வாஸ்து சாஸ்திரங்களில் மண்டுகபதவிங்யாஸம் என்றே பெயர். தவளைக்கு மண்டுகம் என்று பெயர். தவளைக்குக் காது கிடையாது. கண் மட்டுமே உண்டு. அதாவது கண்ணாலேயே பார்க்கும்; கண்ணாலேயே கேட்கும். ஒரு புலனே இரண்டு பணிகளைச் செய்யும். இதுபோல சொல்லுக்கும் பொருளுக்கும் உரிய ஒரே படம் அல்லது பதம் மண்டுகம் என்று பெயர் பெறுவதாயிற்று. அதற்கேற்ப ''தவளை மாநெறி'' என்பது தமிழ்ப் பெயராகும். மயன் கண்டறிந்த பிரபஞ்ச சிருஷ்டி விஞ்ஞானத்தின் கருப் பொருளாகவிருப்பதால் இதற்கு மயநெறி என்றும் பெயர். இது subtle energyயின் கிடைப்படமாகையால் 'புனித மாநெறி' என்றுமொரு

*(பின்பக்கம் தொடர்கிறது)*

இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகிறேன். எனவேதான் சொல்மயமான ஆகமத்திலும், பொருள்மயமான வாஸ்துவிலும் இந்த மண்டலம் காணப்படுவதாயிற்று. இசையில் ஸ்வர விந்யாஸம் செய்வது போல படிமக்கலையில் பதவிந்யாஸம் செய்து வருகிறோம். ஸ்வரவிந்யாஸமும் பதவிந்யாஸமும் ஒன்றே என்பது வாஸ்து விஞ்ஞானக் கொள்கை. இந்தியக் கட்டிடக் கலைக்கும் இது பொருந்தும். வாஸ்து விந்யாசம் (அ) கட்டிட வாஸ்து விந்யாசம் என்று சொல்லுவோம்.

**வாஸ்து புருஷ மண்டலம்**

1 × 1 = 1 | 8 × 8 = 64 | 9 × 9 = 81



| ஏக பதம் *(பிரம்ம நிலை)* | மண்டூக பதம் *(உணர் நிலை)* | பரமசாயிக பதம் *(உரு நிலை)* |
|---|---|---|
| Primal manifest form | Subtle Conscious space | Gross Materialized space |

இந்த வஸ்து மண்டலத்தின் 8x8=64 என்ற கணக்கியலில் தான் பரமாணுக்களின் சேர்க்கை பற்றிய (Indian atomic science) இந்திய விஞ்ஞான அணுக்கொள்கையின் நுட்பம் உளது. உயிர் அணுக்கள் எட்டெட்டாகச் சேருதலும் அங்ஙனம் சேர்ந்து ஓர் உருவாக (material form) மாறுவதும் அவைதம் இயல்பு. (பார்க்க வாஸ்து சாஸ்திர அணு வாய்ப்பாடு[1]) இடவடிவமாக

---

பெயருமுண்டு. இத்தகைய மண்டுகபதம் ஓர் உயிர்ப்பொருள். அனைத்துப் பொருள்களுக்கும் 'கரு'வான பொருள். ஆகாசத்தில் வியாபித்திருப்பதெல்லாம் இந்த ஒளிக்கருக்கள் தான். இத்தகைய கோணத்தில் ஆகாசத்தைப் பார்த்தால் தான் வாஸ்து விஞ்ஞானம் நமக்குப் புரியும். வேறு வழியே இல்லை.

1 இசை இலக்கன நூலிலே நொடிக்கணக்கும் இதேதான். நொடிகளும் எட்டும் எட்டின்தன் பெருக்கமாக வளருவதைக் காணலாம். இவ்வழி பெருக்கமுற்றதே தாளக் கணக்கு. நொடி என்பது 'துடி' என்றும் 'துருடிகா' என்றும் சொல்லப்படும். கால அளவும் (time unit) இட அளவும் (space unit)

*(பின்பக்கம் தொடர்கிறது)*

அமையும் போது (areal or spatial measure) 8x8=64 என ஆகிறது. ஆனால் இதுவே கனப்பொருளாக, காணும் பொருளாக உருவம் கொள்ளும் போது 8x8x8=512 அணு இடங்கள் கொண்டு விளங்கும் என்பது வாஸ்து விஞ்ஞானத் தத்துவமாகும்.

இத்தகைய கனசதுர அணுக்களின் (விண் அணுக்களின் luminous particles)வியாபகமே ஆகாசம் (அ) பரவெளி என்பது வாஸ்து விஞ்ஞானக் கோட்பாடாகும். இந்த அணுச் சேர்க்கையால் இறுதியில் விளைந்ததே (உருமாற்றம் கொண்டு விளைந்ததே chemical change) மண்அணுக்களால் ஆகிய பூமியாகும். இப்போது தெரிகிறதா விண்ணே மண்ணாகிய தத்துவம்?[1] விண்பொருளாய் நடராஜனும், மண்பொருளாய் ரங்கராஜனும் உருப்பெற்றிருக்கும் விந்தையைக் கேட்டும் கண்டும் களிப்பீர்களாக. விண்பொருளான நடராஜனை உலோகத்தாலும் மண்பொருளாகிய ரங்கராஜனை மண்ணாலும் செய்திடும் மரபு தொல்மரபு என்பதைச் சொல்லிடக் கடமைப்பட்டவனாகிறேன். விண் உருகித் தான் மண் ஆகிறது என்பது வாஸ்து விஞ்ஞான நுட்பம். இக்காரணம் பற்றியே நடராஜப் படிமத்தை உலோகத்தை உருக்கி வடிக்கிறோம். ரங்கராஜப் படிமத்தை மண்ணைத் திரட்டிச் சமைக்கிறோம்.

இதையொட்டி ஆகாசத்தை உருவகித்திடும் [2]சிவலிங்கத்தை - விண்பொருளை - வாஸ்து மண்டலத்தின் பிரம்ம பதத்திலும்

---

அதாவது காலமும் இடமும் ஒன்றெனக் கண்டது வாஸ்து விஞ்ஞானம். இந்த வாஸ்து விஞ்ஞானத்துக்கு உரியவன் மயன் என்பதால் மயவிஞ்ஞானம் என்ற சொல்லை நான் பிரபலப்படுத்தி வருகிறேன். ஆங்கிலத்தில் Mayonic Science என்பது நான் வைத்த பெயரே. இந்தப் பெயர் உலகளாவி வருகிறது.

இடவாய்பாடு: அணு 8 கொண்டது தேர்த்துகள், 8 தேர்த்துகள் = 1 இம்மி, 8 இம்மி = 1 எள்ளு, 8 எள்ளு = 1 நெல்லு, 8 நெல் = 1 விரல். 6 விரல் = 1 தாளம்; 4 தாளம் = 1 முழம் (ஹஸ்தம்) (வாஸ்து மரபு).

காலவாய்பாடு: 8 கணம் = 1 லவம்; 8 லவம் = 1 காஷ்டம்; 8 காஷ்டம் = 1 நிமிஷம்; 8 நிமிஷம் = 1 துடி; 8 துடி = 1 குரு. (இசை மரபு).

காலமும் இடமும் ஒன்றென மயன் சொல்லியது சரிதானே? இரண்டுமே மயன் வழி வந்த மரபுகள் தான்!

1 வை.கணபதி ஸ்தபதியின் ‘விஞ்ஞானக் கோயில்கள்’ என்ற ஆய்வுநூலில் விளக்கம் காண்க.

2 सर्वात्मीपं लिङ्गं आकाशमेव - மயமத வஸ்து சாஸ்திரத்தில் மயன் கூற்று. (ஸ்படிக லிங்க லக்ஷணத்தில் காண்க).

வைணவ பேரங்களை இதற்கு அணித்தாயுள்ள பின்புறத்திலுள்ள தெய்விக பதத்திலேயும் மானுஷ பதத்திலேயும் ஸ்தாபனம் செய்து வருகிறோம். நடராஜன் மூலக் காலமாகவும், ரங்கராஜன் மூலக் கோலமாகவும் அமைவாராயினர். நடராஜன் [1]மூலகாலம்; ரங்கராஜன் கால கோலம். இது பண்டைக் கால விஞ்ஞானக் கருத்தாகும்.

இவ்விருவர்களையும் வாஸ்து விஞ்ஞானம் கற்பித்த மூலப்படிமங்கள் என்று சொல்லும் போது, இவற்றுக்கு எவ்வித அளவுகொண்டு சிற்பிகள் படைத்து வருகிறார்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா?

ஏற்கனவே போகிறவாக்கில் ஒன்றைச் சொன்னேன். வீணையின் துடிப்பினால் ஒலியும், ஒலிவெளியும் உண்டாகின்றன என்றேன். இந்த ஒலியை ஏற்ற இறக்கமுடைய ஒலி வடிவமாக ஆக்குவது ஒலித்துடிப்பின் கூட்டியும் குறைத்தும் செய்திட்ட எண்ணிக்கை (frequency of vibration) தானே? சப்தஸ்வரங்களும் பன்னிரெண்டு ஸ்வர ஸ்தானங்களும் இப்படித் தானே ஏற்பட்டன? இவற்றால் விளையும் ஒலிமயமான இட வடிவங்களை (musical spaces) தாளம் என்ற கணக்கால் நறுக்கி (cut to numerical units) இசைவடிவமாக்குகிறோம். எனவே இந்தத் தாளம் தான் இசையில் தாளமாக, நடத்தில் தாளமாக ஏன் பாட்டிலும் (Poem) தாளமாக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் தாளத்திற்குத்தான் காலமாத்திரை[2] என்று நடைமுறையில் பெயர் சொல்லி வருகிறோம். இதே தாளத்தைத்தான் சிற்பிகளாகிய நாங்கள் படிமத்தை இயற்றும் போது தாள அளவாகக் கொண்டு கட்டமைக்கிறோம். இதனை Spatial rhythm என்றும் Structural rhythm என்றும் சொல்லலாம். எனவே சிற்ப வடிவங்கள் இசையொத்த வடிவங்கள் என்றும், frozen music (பனிக்கட்டி போல் இசைக்கட்டி) என்று சொல்லும் உயர்வும் பெறலாயின.

---

1 சிவனைத்தானே 'காலன்' என்றும் சொல்லுகிறோம்!

2 திரை, மாதிரை என்றால் 'அலை' என்பது பொருளாகும். இதுவே 'மாத்திரை' என்றாகிற்று. காலமானது சக்தி அலைகளைத் தோற்றுவிப்பதால் கால மாத்திரை எனப்படுகிறது. (Wave patterns caused by 'time-force', the primal form being the squarish Vaastu Purusha Mandala, dealt with earlier in this discussion).

மேலுமொரு விளக்கம். இப்போதுதான் ஆச்சரியப்படப் போகிறீர்கள். இசையில் பல தாளங்களைக் கேள்விப்படுகிறோம். தாளம் பலவகை என்று சொல்வோர் அதைத் தாள சமுத்ரம் என்றே பெரிதுபடுத்திப் பேசுவர். இஃதும் உண்மைதான். ஆனால் தாளங்களில் அடிப்படைத் தாளம் என்று ஒன்றுளது அஃது எது? சொல்லமுடியுமா? இந்த அடிப்படைத்தாளமானது பேருள்ளமாகிற பரமாகாசத்திலும் (Cosmic space) சிற்றுள்ளமாகிற சிதாகாசத்திலும் (Inner space) நிகழும் இயற்கையின் இயல்பான துடிப்புக் கணக்கு ஆகும். இந்தத் தாளக் கணக்கைத் தான் இசை மரபில் ஆதிதாளம் என்றும், சிற்பக்கலை மரபிலே அஷ்டதாளம் என்றும் அதையே மூலதாளம் என்றும் கொண்டுள்ளோம். ஆதிதாளத்திற்கும் எட்டே காலக்கூறு. அஷ்ட தாளத்திதற்கும் எட்டே காலக்கூறு. இந்தக் காலக் கணக்கே மூலகாலத்தின் கணக்காகும், இக்கணக்கால் ஏற்பட்ட வடிவமானது கணிதம் தரித்த வடிவமாகும் என்றால் ஆச்சரியமாக இல்லை? இந்தக் காலக் கணக்கின் மூலவடிவம் தான் (அ) முதல்வடிவம் தான் 8x8=64 என்ற வாஸ்து புருஷ மண்டலமாக பரவெளியிலும் நம் அகவெளியிலும் தோன்றுவதாம். இதனைக் காலம் தரித்த கணித வடிவம் என்று சொல்வதற்குப் பதிலாக 'எண்ணுரு' geometrical form என்று முன்பு சொன்னேன். இஃது ஆன்ம சக்தியின் கோட்டுரு (wave pattern) அல்லது அலைவடிவம் என்றும் சொல்லப்படும். இந்த ஆதிதாளத்தில் எழுப்பித்த இசை வடிவங்களெல்லாம் காதால் கேட்டறியும் மூலத்தின் இசைப்படிமங்களே. இப்படிச் சொல்லலாம் தானே! தவறில்லையே? குறையொன்றுமில்லையே? இதேபோல ஆதிதாளத்தில் எழுப்பித்த இட வடிவங்களெல்லாம் கண்ணால் பார்த்தறியும் மூலத்தின் இசைப்படிமங்களே (visual musical forms) என்றும் சொல்லலாம் அல்லவா? ஆம் இஃதே உண்மை. அருவமான நாதப் பிரம்மமும், அருவமான வஸ்துப் பிரம்மமும் இப்போது உருவமேனி தரித்து விட்டார்கள் என்று சொல்லலாமா? (உண்மை யாதெனில் அருவநிலையிலே இரு பொருள்களும் இப்படித்தான் இருக்கின்றன. சூக்ஷமம் தானே ஸ்தூலமாகிறது? வழிபடு படிமங்கள் - இப்படித்தான் - இக்கணக்கிலே தான்

இயற்றப்படுகின்றன. இங்ஙனம் உருக்கொண்டிட்ட இப்படிமங்கள் கடவுள் வடிவங்களைத் தவிர வேறு யாருடைய வடிவங்கள் என்று சொல்லக்கூடும்? வாஸ்து விஞ்ஞானம் படைத்திட்ட [1]கடவுள் வடிவம் இதுதான். இவற்றை இறைவடிவங்களாகக் கொண்டு பக்தி செலுத்துவோர் கொடுத்து வைத்தவர்களில்லையா? இது பரவஸ்துவின் [2]சூக்ஷ்ம சரீரமாகும். இதனுடைய ஸ்தூல சரீரத்தைப் பிறகு பார்ப்போம்.

கடவுள் மனிதனைப் படைத்ததைக் காட்டிலும், மனிதன் கடவுளைப் படைத்தது தானே விந்தையினும் விந்தை? பெருமையினும் பெருமை. இது வாஸ்து கண்டறிந்த விஞ்ஞான நுட்பம் என்று கூறிட விரும்புகிறேன். இந்தப் பிரம்மஞானி யார்? இந்தப் பிரம்ம ஞானத்திற்குக் கருவும், குருவும் யார்? இந்த ஜெகத் குரு யார்? மீண்டும் சொல்லுகிறேன் இவன் பெயர் தான் 'மயன்'.

---

1 மண்டுக பதம் என்ற வாஸ்து புருஷ மண்டலத்தை ஆகம வழிபாட்டில் முதற்கண் செய்தலைக் காணலாம். கடவுளைக் கணித உருவாக-ஒரு ஜியோமிதி உருவமாகக் கொண்டு வழிபடுதலை விஞ்ஞான வழிபாடு என்று கூறலாமல்லவா? விண்வெளியிலே பரந்து விரிந்து கிடக்கும் சக்தியானது தன்னைத் தானே ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொண்ட விந்தையன்றோ இது! இதைக் கண்டு சொன்ன வாஸ்து விஞ்ஞானத்தை எந்த வார்த்தையைக் கொண்டு பாராட்டுவது? போற்றுவது? இறையின் Primal materialized manifestation ஒரு சதுரமாகும் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? இங்ஙனம் கண்டு சொன்ன மயனுக்கு எத்துணை Nobel பரிசு கொடுப்பீர்கள்? இக்கண்டுபிடிப்பை பேராசிரியர் ஐன்ஸ்டீனின் $E=mc^2$ இல் நான் காண்கிறேன். $E=mc^2$ என்பதை $E=m\times c\times c$ என்றும், E=m□ என்றும் விரித்துப் பார்க்கும்போது E=materialized square என்றுதானே பொருளாகிறது! ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு கொடுத்தீர்கள். ஆனால் இதனைப் பெறாமலேயே 'மயன்' மறைந்து விட்டான் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே. என்றாலும் இதனை வாஸ்து சாஸ்திரத்தில் பதிவு செய்து விட்டான். இன்று இது வாஸ்து விஞ்ஞானத்தின் கருப்பொருளாய் விளங்கி வருகிறது. எனவே 'மயன்' இன்னும் உயிர்ப்புடனிருக்கிறான் என்று சொல்லி மகிழ்வோம். இக்கால கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் இதனை ஊன்றிக் கவனிப்பார்களாக. கடவுளே கம்ப்யூட்டர் கணக்கில் இயங்குவது தெரியும். உணர்ச்சியுள்ள - சிருஷ்டிக்கும் ஆற்றல் உள்ளது human computer!

2 Space is the body of god என்ற கூற்றின் பொருள் இப்போது புரிகிறதா? 'வானுடல் ஒளியேயாகி' என்பதும் மயசூத்திரமே. Luminous space என்பது இதன் பொருள். வேதம் இதுபற்றி என்ன சொல்கிறது? अकाश शब्द गुणकम - பரவெளியானது ஒலிக் குணமுடையது என்று சப்தப் பிரம்மத்தைப் பேசுகிறது. வேதமானது சப்தமயமாக - ஒலிமயமாக இருப்பதால் இப்படிச் சொல்ல வேண்டியதாயிற்று. ஆனால் வாஸ்து வேதமானது பொருள்மயமாக இருப்பதால் 'ஒளி'யை வலியுறுத்துவதாயிற்று. ஒலியின் மூலமே ஒளிதான் என்பது மயன் காட்டும் விஞ்ஞானமாகும். ஒளி துடித்து ஒலி பிறக்கிறது என்பது மயவிஞ்ஞானம். ஒளிமேனிக்கு சூக்ஷ்ம சரீரம் என்று பெயர். விண்மேனியே இறுதியில் மண் மேனியாகியதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த மண்மேனி தான் ஸ்தூல சரீரம் ஆகிறது. நாமும் மண்மேனி கொண்டவர்களே (material body) தான்!

இவனை 'விஸ்வகர்மன்' என்று வேதவியாஸர் மகாபாரதத்திலும், இராமாயணத்தில் மகரிஷி வால்மீகி 'மஹாதேஜஸ்வி' என்றும் சிறப்பித்துப் பேசுகின்றனர். ஆனால் நான் இந்த மயனைத் தென்னவனாக - தென்முகத்தனாக - தக்ஷிணாமூர்த்தியாக ஆலமர் செல்வனாகக் காண்கிறேன். ஏற்றுக் கொள்வீர்களா? மேலும், இவனையும் இவனது அடிப்படைத் தத்துவங்களையும்

(1) முருகன்
(2) சோமாஸ்கந்தர்
(3) ஐந்து தலைகளையும் பத்துக் கைகளையும் கொண்ட விஸ்வகர்மன்
(4) ஐந்து கரங்களையுடைய விநாயகன் (பிரம்மணஸ்பதி:)
(5) உமாமஹேஸ்வரர்
(6) அர்த்தநாரிஸ்வரர்
(7) ஆடவல்லான்

ஆகிய படிமத்தில் காண்கிறேன்.

மேலுமொரு படி ஏறி நின்று அனுச்சேர்க்கை பற்றி பிரிதொரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இந்த ஒளியணு எட்டெட்டாக, எட்டின் மடங்கினதாகச் சேர்ந்திடும் கணக்கை சூக்ஷ்மம் என்று சொன்னால், இது ஸ்தூலமாக உடல் (material body) தாங்கும்போது ஒன்பதாகிறது என்ற விசேடக் கணக்கொன்றும் வாஸ்து மரபில் உளது. இந்த நிலையில் 8×8 என்பது 9×9 ஆக 81 பதங்களாக வளர்ந்து விடுகின்றது. இதற்கு பரமசாயிக[1] பதம் என்று பெயர். இதனை யார் வளர்த்து விட்டது? சொல்லுங்கள்

1 பரசாயி/பரமசாயி/ஸ்தலசாயி என்பன மண்தத்துவப் பொருளாகிய விஷ்ணுவின் பெயராகும். மாமல்லபுரத்தில் ஸ்தலசயனப் பெருமாள் கோவிலில் ஸ்தலசயனமாகப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். கடற்கரைக் கோவிலிலே (சிவன் கோவிலில் Shore temple) மேற்குப் பிராகாரத்தின் தரையிலே படுத்துக் கிடக்கிறார் இன்னொரு விஷ்ணு. பெருமாள் பெரும்பாலும் பாம்புப் படுக்கையின் மீதே படுத்திருப்பதைக் காண்கிறோம். இப்படுக்கையினை ஆதிசேஷன் என்று சொல்லுகிறோம். இங்கொரு பழைய செய்தி. வாஸ்து புருஷ மண்டலத்தில் வாஸ்து புருஷனை ஆண்மகனாகக் காட்டுவது சாஸ்திரங்கள் கொண்டிட்ட

*(பின்பக்கம் தொடர்கிறது)*

பார்க்கலாம். இதனைப் படைத்தது (அ) படைத்துக் கொண்டது 'காலம்' தானே? வளர்ச்சியுற்ற இவ்வளவுக்கு நவதாளம்[1] என்று பெயர். இந்த நவதாளம் தான் அனைத்துப் படிமங்களுக்கும் - நடராஜனுக்கும் ரெங்கராஜனுக்கும் - சிற்பிகளாகிய நாங்கள் கொண்டுள்ள அடிப்படை அளவியலாகும் (basic material measure). பிரபஞ்சப் பொருள்களின் மலர்ச்சியில் காணும் அடிப்படைக் கணக்காகும். இவர்களே இந்த அருவ நிலையை - உருவ நிலையாக - உருவமாக ஆக்கிக் கொண்டுவிட்டதால் (திரித்துக் கொண்டு (அ) தரித்துக் கொண்டு விட்டதால்) ஏற்பட்ட ஸ்தூலநிலை (material form) இஃது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இதனை ஸ்தூலத்தின் மூலக்கணக்காக - மூலதாளமாகக் கொண்டுள்ளோம். எட்டுத் தாளத்தை சூக்ஷ்ம வடிவத்தின் கணக்காகவும் ஒன்பது தாளத்தை ஸ்தூலத்தின் கணக்காகவும் கொண்டுள்ளோம். ஸ்தூலமும் சூக்ஷ்மமும் ஒன்றே என்ற வாஸ்து வழிவந்த அத்வைதக் கருத்தை எண் கணக்காகச் சொல்லும் போது 8 = 9 என்றும் 9 = 8 என்றும் சொல்வது ஒரு நுட்பமான விஞ்ஞானமும் கணக்குமாகும்[2] அல்லவா? இந்த மூலக் கணக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஒருசில தாள விந்யாசங்களும் வாஸ்து மரபில் தோன்றியிருக்கின்றன. அதாவது ஏகதாளம் முதல் பத்துத்தாளம் வரை 10 வகையான

---

கருத்து. கால்களை மடக்கி, கைகூப்பி ஈசான கோணத்தில் தலைவைத்துக் குப்புறப்படுத்திருப்பதாகப் படம் வரைவோம். இதற்கு மாற்றாக நாகத்தை மண்டலத்துக்குள் சதுரமாக ஒட அமைத்து 'நாகபதம்' என்று சொல்லும் வழக்கொன்று கிளர்ந்து இன்றும் வழக்கில் உளது. இதனைக் குண்டலினி சக்தியின் இருக்கை என்று சொல்லுவோம். அதாவது மண்டுக பதத்துக்கு தவளையைக் கொண்டது போல பரமசாயிக பதத்துக்கு நாகத்தைக் கையாண்டிருப்பதில் பிரிதொரு விசேடமும் உண்டு. யாதெனில், தவளையைப் போல் பாம்பும் கண்ணால் பார்க்கும், கண்ணாலேயே கேட்கும். இரண்டு செயல்களை ஒரே புலன் செய்யும்! நாகசாயி, சர்ப்பசாயி, சேஷசாயி என்ற பதங்களின் பொருளை இப்போது உற்றுணர்க.

1 தாள் தட்டிக் கால அளவினை வெளிக் கொணர்தலால் நாட்டியத்தில் தாளம் என்ற சொல் தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

2 கடவுளே கணக்காக இருக்கிறாரா இல்லையா? 'காலக்கூறே கணக்கியலாகி' என்பான் மயன். 'கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி' என்றும் சொல்லுவான். வாஸ்துக் கணக்கு எங்குபோய் நிற்கிறது பார்த்தீர்களா? This is the mathematics of the Divine Being. God is a great geometrician - a designer and builder. Hence he is VISWAKARMAN/VISWA BRAHMAN.

தாள பேதங்களைக் கற்பித்து [1]உருவபேதங்களை வாஸ்து மரபு நிர்ணயித்திருக்கிறது. இவ்வாறு ஸ்தூலம் = சூக்ஷ்மம், subtle = gross, விண்பொருள் = மண்பொருள், வஸ்து = வாஸ்து என்ற அத்வைத விஞ்ஞானம் ஒன்றை வாஸ்து சாஸ்திரம் தன்னுளே வைத்துக் கொண்டிருப்பதால் இன்றும் உயிர்ப்போடுள்ளது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான ஐன்ஸ்டீனின் $E = mc^2$ என்ற சூத்திரத்துக்கு இந்த வாஸ்து விஞ்ஞானக் கொள்கை நூற்றுக்கு நூறு ஒத்துப் போகிறதல்லவா?

இறுதியாக ஒன்றைச் சொல்லி இந்த ஆச்சரியமான படிம மானத்தை அருவம் உருவமாகும் விஞ்ஞான நிகழ்ச்சியை - விஞ்ஞான விந்தையை முடித்துக் கொள்வேன்.

கடவுளர்தம் வடிவங்களை மனித வடிவில் இயற்றுவானேன்? ஏற்கனவே ஒரு சில இடங்களில் குறிப்பிட்டிருந்தாலும் இதனை மேலும் சிறிது ஆய்வோம். இயற்கையின் உட்கிடை உண்மையில் என்ன என்பது நேரிடையாக நமக்குத் தெரியாது. என்றாலும், நாம் அவ் இயற்கையின் ஒரு கூறாக இருப்பதால் நமக்குள்ளே நாம் புகுந்து, நம்மையறிந்து, நம்மை நாமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். இஃதொன்றும் கடினமான காரியமில்லையல்லவா? மேலும் நாம் இயற்கையின் ஒரு பகுதி என்பதால் இயற்கையின்

---

1 இதற்குள்ளே உத்தமம், மத்யமம், அதமம் என்ற உட்பிரிவுகளும் உள. ஏன் 12 தாளம் வரை உண்டெனக் கூறும் சாஸ்திரங்களும் உண்டு. இந்த எட்டுத்தாள அளவினைக் கோயிற் கட்டிட அமைப்பிலும் காணலாம். தரைப்படமும் எட்டுத்தாளம்; கட்டிடத்தின் உயரமும் எட்டுத்தாளம். இதுதான் பிறகு ஸ்வர விங்யாஸம் போல பதவிங்யாசம் செய்யப் பெற்று தஞ்சைப் பெருவுடையார் விமானமாக - வான்முகிலைத் தொடும் ஏற்றம் கொண்டதாக விளங்குவதாயிற்று. எனவே தான் 'வாஸ்து புருஷன்' என்று சொல்வது போல 'பிராசாத புருஷன்' என்ற சொல்லும் வாஸ்து சாஸ்திரத்தில் இடம் பெறுவதாயிற்று - இதனை ருசுப்படுத்தும் நோக்கில் 'சில்பரத்னம்' என்ற சிற்பநூலில் - ஒரு மகாவாக்கியம் இடம் பெற்றுளது. 'प्रासादं पुरुषं मत्वा पूजयेत्मन्त्रवित्तमः' 'கட்டிடத்தைச் சக்தியாக பரம புருஷனாக, பரப்பிரம்மமாகப் பாவித்து மந்திரம் ஓதி பூசித்திடுக' என்பது இதன் பொருளாகும். எனவே தான், ஆலயக் கட்டிடத்தை 'பிரதிஷ்டை' செய்கிறோம். இதுபற்றிக் கூறும் சடங்குமுறைகளை 'ஆலயப் பிரதிஷ்டா விதி' என்று ஆகமங்கள் விரித்துப் பேசிடும். குடமுழுக்கு நிகழ்வதே முதற்கண் கட்டிடத்திற்குத் தானே? பிறகல்லவா கருவறையில் நிறுவிட்ட படிமத்திற்கு அபிஷேகம் நிகழ்கிறது! வாஸ்துவும் ஆகமமும் எப்படி இரண்டறக் கலந்து அத்வைத விஞ்ஞானமாகத் திகழ்கிறது, பார்த்தீர்களா?

அகத்துக்குள்ளேயும் புகுந்து அதன் குணமறிந்து, செயலறிந்து, துடிப்புக் கணக்கறிந்து அதனை உருவகித்திடவும் முடிந்தது வாஸ்து விஞ்ஞானி மயனுக்கு. இவனே ஆகமத்துக்கு - ஆகம வழிபாட்டு நெறிக்கு மூலமாக இருந்திருக்கிறான் என்பதும் இப்போது ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. சூர்யசித்தாந்தத்திலே பிரம்மத்திற்கு வணக்கம் சொல்லிட்ட அந்தப் பிரம்மரிஷி மயன் அப்பிரம்மத்தை அற்புதமாய்ச் சொல்லால் — சொல் உருவாய் — சொற்படிமமாய் — உருக்கி வடித்துக் கொடுத்திருக்கிறான்; அவன் சிற்பியர் மரபுத் தலைவனல்லவா? சிருஷ்டிக் கலைஞனல்லவா? தியான சுலோகங்களை இயற்றிப் படிமக்கலைக்கு விரிவு கொடுத்தவனல்லவா? அவன் கூற்றைக் கேளுங்கள்.

अचिन्त्य अव्यक्त रूपाय निर्गुणाय गुणात्मने ।
समस्त जगदाधार मूर्तये ब्रह्मणे नमः ॥

பொருள் : நினைப்புக்கு எட்டாத - துலக்கமாகத் தெரியாத - குணங்கள் ஒடுங்கிய - குணமே வடிவமானவன். அனைத்து அண்ட பிண்டங்களின் மூல உருவினன். அந்தப் பிரம்மனுக்கு வணக்கம்.

சூரிய சித்தாந்தத்தில் மயனால் வரையப் பெற்ற பிரம்ம சித்திரம் இஃதாம்.

சூக்ஷ்மமும் ஸ்தூலமும் பிரம்மனே என்பது அடிப்பொருள். அதாவது வஸ்துவும் வாஸ்துவும் இரண்டறக் கலந்த நிலையில் அத்வைதியாய் விளங்குபவன் பிரம்மன் என்பது உட்கருத்து.

மேலும் விளக்கிச் சொல்லின், பிரம்மமானது கருவும் கருத்துமாய் கருவும் உருவுமாய் உயிரும் மெய்யுமாய் energyயும் matterருமாய் விளங்கிடும் ஒரு பொருள் என்று சொல்லலாம்.

மயன் பாடலில் எத்துணை தெளிவிருக்கிறது பார்த்தீர்களா?

இதுவரை நீங்கள் கேட்டு வந்ததும் நான் சொல்லி வந்ததும் என்ன என்று நுணுகிப் பார்க்கின்; கடவுள் என்ற அந்த இறுதிப்பொருள் எதையும் படைக்கவில்லை. அதற்கு மாற்றாக தன்னைத் தானே புலப்படுத்திக் கொள்கிறது என்பதாகும். இதற்குத்தான் self manifestation என்று பெயர். எனவே ஞாலப் பொருள் அத்துணையும் அப்பொருளின் manifest form-களே ஆகும். இவற்றுக்குத் 'தானியல்' வடிவுகள் (self manifest forms)

என்று பெயர். இந்த நிலையில் மனித வடிவமும் அப் பரம்பொருளின் தானியல் வடிவுதானே? இறைவன் மனித வடிவத்திலே தன் வடிவத்தையே வைத்தான் அல்லது அவன் வடிவத்தையே மனித வடிவமாக (material human forms) காட்டிக் கொண்டான் என்று சொல்லலாம் தானே? சுருங்கக்கூறின், இறைவனே மனித வடிவத்தில் தான் இருக்கிறான் என்பது பொருள். இதுதான் இந்தியப் படிமக் கலையின் அதிரகஸியம்.

வாஸ்து விஞ்ஞானமானது, இறைவனின் வடிவத்தை ஆதிதாளத்தில் உணர்ந்து நவதாளத்தில் உருக்கொடுத்தது போல மனிதவடிவத்தை இறைவன் ஆதிதாளத்திலே நினைத்து நவதாள அளவிலே உருக் கொடுத்து இத்தரணியிலே நடமாட விட்டிருக்கிறான் என்பதும் ஒரு நுட்பம். எனவே அடிப்படையில் மனிதனும் ஒரு விஞ்ஞானப் பொருள். கடவுளும் ஒரு விஞ்ஞானப் பொருள். உருத்தரித்த நிலையில் விஞ்ஞான வடிவங்கள் தான். எனவே विज्ञानं शिल्प कौशल्यं[1] என்று சிற்பக்கலையைப் பாகவதம் சிறப்பித்துப் பேசுகிறது. இதுமட்டுமல்ல, உலகப் பொருள் அத்துணையும் அவனது குணவடிவங்கள் என்று கண்டு தேர்ந்து जगत् सर्व शिल्पमेव भवति என்று சில்ப வித்யா ரஹஸ்யோபநிஷத் என்ற சிற்பியர் தம் உபநிஷதம் பேசுவதும் அர்த்தமுள்ள மகாவாக்யமன்றோ! இதுதான் இந்திய நாட்டில் பிறந்திட்ட உச்ச விஞ்ஞானமாகும். [2]கடவுளுக்கு உருவம் தந்திட்ட அபூர்வ விஞ்ஞானமாகும். இந்த விஞ்ஞான வடிவத்தைத்தான் - இசை வடிவத்தைக் காதால் சுவைப்பது போல - அனுபவிப்பது போல - கோவில்களில் மூலஸ்தானத்தில் வைத்துக் கண்ணால் சுவைத்து அனுபவிப்பவர்கள் ஆனோம். இதனாற்றான் இறை வடிவத்தை

---

1 ''சிற்பத்தின் நுட்பமே, சிறப்பே, மேன்மையே அது விஞ்ஞானப் பொருளாக இருப்பதிலேதான் உளது'' என்பது பொருள்.

2 कालोहि ब्रह्ममिति केचित्वदन्ति என்பதின் பொருளும் பொருள்வடிவமும் அதாவது வஸ்துபிரம்மமும் ஆகும் என்று உறுதியாகிறதல்லவா? இதனை வலியுறுத்துவது कालः सृजति भूतानि என்ற சொற்றொடராகும்.

''காலமே எவைக்கும் மூலம் காலமே மூல ஆற்றல்
காலமே கோலத்தோற்றம் காலமே ஞாலத்தோற்றம்
காலமே விந்தை செய்யும் காலமே நுணுக்கமாயும்
காலமே அணுக்கள் ஆயும் காலத்தின் ஆற்றல் என்னே'' - மயன்.

அல்லது படிமத்தை கண்ணால் கண்டு களித்திடும் இசைப்படிமம்[1] (Visual musical form)என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். இப்போது நன்கு புரிகிறதல்லவா? மேலும் சொல்லுவேன்.

மனித வடிவமானது ஆதிதாளத்திலே அமைந்திருக்கிறது என்று நான் மேலே சொன்னது மிகப் பெரியதொரு விஞ்ஞான நுட்பமாகும் என்றால் உங்களுக்கு ஏற்படும் ஆச்சரியம் எல்லை மீறிப் போய்விடும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதைப்புரிந்து கொள்வதற்கு ஆதி தாளத்தின் structure-ஐ கட்டமைப்பை (அ) கட்டுக் கோப்பை முதற்கண் தெரிந்து கொள்ள வேண்டும். ஆதி தாளம் என்பது எட்டுக் கூறுகளை - காலமாத்திரைகளைக் கொண்ட ஓர் எண்மானமாகும்; எண்ணல் ஆன எண்ணுருவாகும். இந்த மாத்திரைகளை (units) 1,1,1,1,1,1,1,1, என்று கொள்ளாமல் இதிலே ஒரு grouping - ஒருவகை விகிதாச்சாரம் - பங்கீடு (Proportion or Ratio) புகுத்தப்பட்டிருக்கிறது. இதனைச் சிற்பிகள் செய்யவில்லை. இயற்கை செய்திருப்பது இஃதென்று சிற்பி மயன் உணர்ந்து சொல்லியிருக்கிறான். இந்தப் பங்கீடு (1), (111), (11), (11) என்றவாறு அமைந்துளது. இதனைக் கைத்தாளமாகப் போடும்போது முறையே தட்டு (1)/விச்சு (3)/(தட்டு 1 விச்சு 1)/ (தட்டு 1 விச்சு 1) என்ற முறையில் வெளிப்படுத்துகிறோம். இதனைத் தாளம் தரித்திட்ட ஒரு கோலம் form என்று கூறலாம். (மறந்துவிட வேண்டாம் இவையெல்லாம் துடிப்பின் எண் அளவுகள்). இப்படியே திரும்பத் திரும்ப இந்தத் துடிப்பு நிகழ்கிறது இசையிலே அதாவது ஒலியமைப்பிலே, இதனால் இசையொலி

---

1 இதை வைத்துத்தான் சுந்தரர் இறைவனை நோக்கிப் பாடிய பாட்டில் அவனை இசை என்றும் இசைப் பயன் என்றும் சொன்னார் என்று கூடச் சொல்லிடலாமல்லவா? சிற்பியர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கு இந்த நுட்பத்தை - சிற்பத்தின் எழிலை - பிரிதொரு விதமாகச் சொல்லிக் காட்டுவார்கள். ஸ்ரீ வைகுண்டத்திலே பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்து லக்ஷ்மி சொன்னாளாம்: ''நாதா! நீங்கள் இன்று எவ்வளவு அழகாய்க் காட்சியளிக்கிறீர்கள் தெரியுமா?-'' போடி பைத்தியம். என் அழகை சிற்பி செதுக்கிய சிலையில் போய்ப் பார். நானே வியந்து போகிறேன். நீ போய்ப் பார்த்தால் நீ மயங்கிப் போய் விடுவாய்'' என்றானாம் அந்த அழகன். இதையே பெருமாள் அடியவர்கள் பிரிதொரு காட்சியாகச் சித்திரிப்பர். திருப்பாற் கடலில் பள்ளி கொண்டது போல் சிற்பம் அமைந்திருக்கிறது என்ற கருத்தை மாற்றி சிற்பம் போல் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கிறான் என்று சொல்லி மகிழ்வர். 'உள்ளங்கவர் கள்வன்' என்பார் திருஞான சம்பந்தர்.

வளர்ச்சியடைந்து ஓர் இனிய ஒலிவடிவம் பெற்றுவிடுகிறது, இசைக்காட்சியாகத் திரிபடைகிறது. இதே நிகழ்ச்சியானது ஒளியிலே நிகழுமானால் என்ன ஏற்படும்? அதாவது ஓர் இனிய material form ஏற்பட்டுவிடும். ஓர் இனிய visual musical form ஏற்பட்டு விடும். (இந்த material form-ஐத்தான் வாஸ்து வடிவம், சிற்ப வடிவம் என்று சொல்லுகிறோம். அதாவது துடிப்பளவுகள் இந்த வடிவத்தைத் தோற்றுவிக்கக் காரணமாய் இருந்து விட்டன). கருநிலையிலே - அணுஅளவிலே - இருந்த மனித அணுவானது - மனிதக் கருவானது - அம்மையின் கருப்பையில் இங்ஙனம் ஆதி தாளத்திலேயே துடித்துத் துடித்துப் பெரிய அளவில் தலை, உடல், தொடை, கால் என்ற அங்கங்களைக் கொண்ட மனித உடலாக வளர்ந்து விடுகிறது. என்ன ஆச்சரியம்? எப்படி? தலை 1, உடல் 3, தொடை 2, கால் 2, மொத்தம் 8 காலக் கூறுகளாக அதாவது கோலக் கூறுகளாக (Proportion) அமைந்து விடுகின்றன. இந்த அளவில் ஏற்பட்ட உடலை சூக்ஷ்ம உடல் (சூக்ஷ்ம சரீரம்) என்று சொல்லுகிறோம். அதாவது சக்திமயமான உடல் என்பது பொருள். இதை விடுத்து பாதம், முட்டி, கழுத்து, தலைமுகடு (உஷ்ணீசம்) ஆகிய 4 சிறு இணைப்புகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 1/4 காலக்கூறு ஆகும். இங்ஙனம் 4x1/4 கூறுகள் அதாவது மொத்தத்தில் 1 கூறு சேர்ந்த பின்னரே இயக்கம் இந்த உடலுக்கு ஏற்படுவதாகிறது. இந்த 9 கூறுகள் பெற்ற உடலே ஸ்தூல சரீரம்[1] (mateiral form) எனச் சொல்லப்படுவதாயிற்று. அதாவது சூக்ஷ்மத்தில் 8 ஆக இருந்த உடல் ஸ்தூலத்தில் 9 ஆகி விட்டதை இங்கே காணுகிறோம்[2]. நுணுகிப் பார்த்தால் எட்டிலேயே முடிவுற்ற

---

1 Energyயில் matter இருப்பதும், அந்த matter உடலாகத் திரிபுறுவதற்குக் காரணப் பொருளாக இருப்பதும் இங்கே உணரப்படுகிறதல்லவா? இதனற்றான் வாஸ்துவே வஸ்து என்றும், வஸ்துவே வாஸ்து என்றும் முன்பு சொன்னோம். மொழி இலக்கணப்படி, உயிரும் மெய்யும் சேர்ந்து 'உயிர்மெய்' எழுத்து ஆவது போல இது நிகழ்கிறது என்பான் மயன். இங்ஙனம் நிகழ்வது அவற்றின் இயல்பாகும் என்றும் கூறுவான். 'மெய்யொலி உயிரொலி சிவணுதல் இயல்பே' என்பது மயசூத்திரமாகும். உயிரும் உடலும் ஒருமித்த பொருளே உயிரினமாகிறதல்லவா? இன்னொரு நுட்பம். முதலில் 'மெய்' தோன்றி அதன் பிறகே உயிர் அணைந்து உயிர்மெய் ஆகிறது (ம்+அ=ம).

2 அம்மையின் கர்ப்பப் பைக்குள் 8 ஆக நுழைந்திட்ட ஒளிக்கரு வெளி உலகத்துக்கு வருநிலையில் 9 ஆகத் திரிபுற்று சிசுவாக வெளிப்படுகிறது. மூலத்தில் எட்டாக

*(பின்பக்கம் தொடர்கிறது)*

உடலானது உடல் தாங்கும் பொருட்டும் இயக்கம் கொள்ளும் பொருட்டும் 9 ஆகத் திரிபுறுகிறது. இதற்குத் தாமஸ வடிவம் என்று பெயர். Materialized form-க்கு அப்படியொரு பெயருமுண்டு. அவ்வளவுதான். இதனால் உடல் பளுவோ, பருமனோ மாறிடவில்லையென்பதும் ஒரு நுட்பம். இவையெல்லாம் இருந்த இடமே அணுஇடம் தானே? ஓர் அணுதானே - ஓர் [1]அணுசக்தி தானே பரு உடலாக உருமாற்றம் கொண்டது? மேற்சொன்ன 8 கூறுகள்தான் வாஸ்து மரபிலே அஷ்டதாளம் என்றும், மூலதாளம் என்றும், மூலத்தின் தாளக் கணக்கென்றும், அஃதே இசைமரபில் ஆதிதாளம் என்றும், சொல்லப்படுவதாயிற்று. இப்படித்தான் சிற்பிகள் அனைத்துப் படிமங்களையும் குறிப்பாகத் துருவபேரங்களை - அசையாப் படிமங்களை - இயற்றி சாந்நித்யமே கண்கொளச் செய்திருக்கிறார்கள். அசையா நிலையில் இருக்கும் பரப் பிரம்மத்தின் நிலையை மூலஸ்தானப் பிம்பம் நினைவுறுத்தும் என்று உறுதிபடச் சொல்ல விரும்புகிறேன். இப்படித்தான் சூக்கும நிலையில் உள்ள பரப் பிரம்மமானது வாஸ்துக் கணக்கால் ஸ்தூல மேனி தரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. இதுவே வணக்கத்திற்கும், வழிபாட்டுச் சடங்கு முறைகளுக்கும் உரியதாகும் என்று சொல்லி முடிக்கின்றேன். இன்னும் விரித்திடலாம். காலச் சுருக்கத்தினால் ஒரேயொரு செய்தியை மட்டும் சொல்லி இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

---

இருந்தது ஸ்தூலத்தில் ஒன்பதாகி விடுகிறது. மூலத்தில் நிஷ்களமாக - அருவமாக இருந்த ஒன்று சகளத்தில் (உருவத்தில்) ஒன்பதாக உருமாற்றம் எய்துகிறது. இங்ஙனம் ஆக்குவதுதான் - உருக்கொடுப்பதுதான் - காலத்தின் ஆற்றல். எட்டுக்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்ட நிலைதான் முட்டை நிலை. இதனை மிஸ்ரம் அதாவது 'கலப்பு' என்று சொல்லும் அகஸ்திய சகளாதிகாரமும் சைவாகமமும். (காண்க அகஸ்திய சகளாதிகார முதல் அத்யாயத்தின் முதல் ஸ்லோகம் - ''सकलनिष्कलमिश्र विभागतः वपुः परमेष्ठिनः'' மேலும் இது காட்டுவது ''तदचलं च चलं द्विविधं वपुः'' அதாவது அப்பரம வஸ்து அசலம் என்றும் சலம் என்றும் 'நகராதது' என்றும் 'நகர்வது' என்றும் இருவிதமாகக் கொள்ளப்படும். காலம் ஒழிந்த நிலையில் - பிரம்ம நிலையில் - நகராதது என்றும் காலம் கிளர்ந்த நிலையில் 'நகர்வது' என்றும் பொருள். எனவே திருவுண்ணாழியில் சிற்பிகள் ஸ்தாபிக்கும் படிமம் - பிரம்மப் படிமம் - கடவுள் வடிவம் - துருவபேரம் என்று உறுதியாகிறது. இதை இயற்றுவதில் - மானப் பிரமாணத்தில் - குறைவேற்படலாமா?

1 அணுசக்தியை நுட்பமாக அறிந்து ஆக்கப் பணிக்கு உபயோகித்துக் கொண்டதின் விளைவுதான் - கடவுட் படிமம். கோயில் கட்டிடம் எனப்படுவதும் ஒருவகையில் கடவுட் படிமமே. இதனை architectural sculpture என்று விளக்கிடலாம். நாம் இதனை प्रासाद वास्तु கட்டிட வாஸ்து என்று கூறுகிறோம். இந்திய விஞ்ஞானமானது மாந்தர்தம் உயர்நலம் நோக்கிச் சென்றதை இங்கு உணர்ந்து இன்புறுக. இந்திய அணுவிஞ்ஞானம் அழிவைத் தரவில்லை என்று சொல்லுகிறேன்.

சப்தம், காந்தர்வம், நாட்டியம் மற்றும் ஸ்தாபத்யம்[1] ஆகியவை ''உபவேதங்கள்'' என்று நாம் சொல்லி வருவதை மாற்றி, ''உபயோகமுள்ள வேதங்கள்'' என்று திருத்தி மதித்து, இவற்றில் முகிழ்த்து ஓங்கியது தான் நமது இந்திய கலாச்சாரம் என்று உறுதி கொள்வோமாக. இச்செய்தியை நாடெங்கணும் பரப்பிடுவோமாக. மக்கள்தம் உள்ளங்களில் களிப்பூட்டு-வோமாக. இந்திய ஆன்மிக கலாச்சாரத்தின் - அதாவது விஞ்ஞான கலாச்சாரத்தின் - மூலத்தையும், கிளைகளையும், இலைகளையும், பூக்களையும், கனிகளையும் தரவல்லனவாக மேற்சொன்ன நான்கு வேதங்கள் திகழ்கின்றன என்று உறுதி பூணுவோமாக. இந்த நெறியை நமக்களித்த மயனை வாழ்த்துவோமாக. 'मयोनाम महातेजा मायावी वानरर्षिभ' என்று வால்மிகி முனிவர் போற்றியதையும் நமது சிந்தையிற் கொள்வோமாக.

எனவே, மனித வடிவத்திலே இயற்றப்பட்டிருக்கும் கடவுட் படிமங்கள் வழிபடுதற்குத் தகுதி வாய்ந்த அருள் உருவங்களே என்று உறுதிபடக் கூறி அதனை இயற்றுவதில் அபஸ்வரங்கள் - மானஹீனங்கள் - குறிக்கிடாது பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விழைகின்றேன். இந்த விதியை மீறினால்

मानहीने महाव्याधी अधिके कर्तृनाशनं
तस्मात् सर्वप्रयत्नेन कारयेत् लक्षणन्वितम्

பொருள் : *மானம் குறையின் நோய் விளையும் என்றும், மிகின் செய்விப்போன் நசித்திடுவன் என்றும், எனவே இலக்கண வரம்பு மிகாமல் படிமங்களைச் செய்திடல் வேண்டும்.*

என்று வாஸ்து விஞ்ஞானம் எச்சரிக்கிறது.

---

[1] இயல், இசை, நடம், சிற்பம், கட்டடம் ஆகியவை ஐந்தும் சேர்ந்த தொகுப்பை பஞ்சமரபு என்று தொன்றுதொட்டு வாஸ்து மரபினர் கொண்டொழுகி வருவாராயினர். இவ்வைந்துக்கும் துடிப்புக் கணக்காகிய காலக் கணக்கே இலக்கணமாக அமைந்திருப்பதை உற்று நோக்குக. இவ்வைந்தில் முதல் மூன்றை மட்டும் முத்தமிழ் என்று கொண்டாடுகிறோம். உண்மையில் ஐந்தமிழ் என்றல்லவா கொண்டாடிட வேண்டும்? இந்த உணர்வும், பாசமும், காலமும் எப்போது வருமோ? காலமாக் கடவுளையே நோக்கி நிற்போமாக.

வாஸ்து விஞ்ஞானத்தின் கண் கொண்டு பார்த்திடும் ஆகமமானது என்ன பேசுகிறது?

मानहीने महाव्याधिः अधिके शत्रुवर्धनम्
नाहं हीने विनाशं स्यात् तत्वृद्धि स्यात् क्षययङ्करम्
प्रमाणहीने दारिद्रियं अधिके दारनाशनम्
लम्बमान विहीने तु राजराष्ट्रस्य दोषकृत्
उन्मानाधिके हीनेशिल्पिनं हन्ति देशिकम्
सर्वलक्षणसम्युक्तचेत् सर्वशिद्धि प्रदायकम्

*— காரணாகமம் 11: 67-69*

मानेन निर्मिते बिम्बे स्वयं आभाति दैवतम् ॥

*— மகுடோத்தராகமம் 11: 67-69*

வாஸ்து மானங்களால் உருப்பெற்ற பிம்பத்தில் இயல்பாகவே சாந்நித்யம் வெளிப்பட்டு விளங்குவதாகிறது என்று ஆகமம் கூறுவதையும் இத்துடன் சேர்த்துக் கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

---

## பிற்சேர்க்கை

இந்த ஆய்வின் பயனாகவும், தொழிலில் எனக்கு உணர்வுபூர்வமாக ஏற்பட்டுவிட்ட பாசத்தின் காரணமாகவும் ஓர் அத்வைத அனுபவத்தை இக்கலை வழியாகக் கண்டேன். என்னுடைய அழகுணர்ச்சிகள் உருவம் தரிப்பதை என் கண் முன்னாலேயே கண்டு ரசித்திட்டேன். இதனை எனது புதிய படைப்புக்களில் முழுக்க முழுக்கக் கண்டிட்டேன். எனவே

இப்படிச் சொன்னேன். ''சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான்[1]''. சரிதானே?

''சிற்பியும் அவனே; சிற்பமும் அவனே''
''रसो वै सः, सो वै रसिक:''

---

1 எனது நண்பர்கள் எடுத்த ஒரு Video documentary-யில் இப்படிச் சொன்னேன். அந்த Video-வின் பெயர் A living Tradition - a shilpi speaks. ''உயிர்ப்புள்ள ஒரு மரபு - ஒரு சிற்பி பேசுகிறான்'' என்பது அதன் தமிழாக்கம். தமிழில்தான் பேசினேன். இது ஜனாதிபதி பரிசும் பெற்றது (1991).

சிற்பிகள் வாய்மூடிப் பேசாதிருந்து விட்டதால் நமது கலாச்சார உலகத்தில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டு விட்டதை வரலாறு தெரிவிக்கும். நான் சிற்பியாய்ப் பிறந்து விட்டதால் சிற்ப விஞ்ஞானமும், சிற்ப நுட்பமும், பிரபஞ்ச சிருஷ்டி நுட்பமும் எனக்கு ஒரளவு புரிந்தது. முடிந்தவரை இங்கே கொட்டி விட்டேன்.

கை நிறைய அள்ளித் தலை நிமிர்ந்து நடங்கள்! வாழ்க மயன் விதித்துக் கொடுத்த புனித மரபு.

# முடிவுரை

1. கடவுளுக்கு உருவம் உண்டா?

உண்டு. அவ்வுருவமே கோயில் கருவறைகளில் நிறுவப் பெற்றுளது. வழிபாட்டில் இன்றுமுளது.

2. கடவுளுக்கு எஃது உருவம்?

அனைத்தும் அவனுருவங்களே என்றாலும் அவனது மூல உருவம் - இயல் உருவம் - மனித உருவமே. கடவுள் சூக்ஷ்ம நிலையில் மனித உருவிலே இருப்பதால் ஸ்தூல நிலையில் - படிம நிலையில் மனித உருவிலே இயற்றப்படுகிறார்.

3. கடவுளுக்கு அத்தகைய வடிவம் கண்டது யார்?

பிரம்மரிஷி மயன்[1]. உருவத்தை உணர்ந்ததும் அளவிட்டதும் உருவமைத்ததும் அதற்கு அழகூட்டியதும் மயனே. வஸ்துவே வாஸ்துவாகிறது என்ற அத்துவித விஞ்ஞானம் ஒன்றை நிறுவியவனும் மயனே.

4. எங்ஙனம் உறுதியாயிற்று?

மயன் கண்டு தேர்ந்த காலக் கணக்கியல் வாயிலாக வெளிப்பட்டது; உறுதியுடன் நிலவுவதும் ஆயிற்று. உடலற்ற உயிர் உடல் தரித்த உயிராய் மாறுகிறது. காலமே இம்மாற்றத்தைச் செய்கிறது. மேலும் உட்சென்று சொன்னால் காலமே உருவாய்த் திரிபுறுகிறது. காலம் கடந்த கடவுள் வடிவத்தை - பிரம்மத்தை - மண்ணிலே - கல்லிலே - செம்பிலே நிறுத்தி வைத்தவன் மயனே.

5. இம்மரபு எப்போது தோன்றியது?

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.

---

1 1800 ஆண்டுகட்கு முன் தோன்றிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலே மயன் மரபைச் சொல்லி அவனை "tradition builder" என்று கூறியதைக் கீழே காண்போம். ''நுண்வினைக் கம்மியர் காணா மரபின, மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்''.

6. எங்கே முதன்முதலில் தோன்றியது?

   **இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே குமரி மண்டலத்தில்[1].**

6. பயன் யாது?

   **காணவொண்ணாக் கடவுளை (பிரம்மனை) நம் கண் எதிரே நாம் வாழும் நிலத்திலேயே நிறுத்தி வைத்து அப் பரம்பொருளைக் கண்ணாரக் கண்டு களித்தலும், அவ்வழி நின்று இந்த நிலவுலகிலேயே ஆன்ம சுகம்/பரசுகம் துய்த்தலும் பெரும் பயன்கள்.**

*பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்*
*அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்*
*இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.*

— தொண்டரடிப்பொடியாழ்வார்

**[இந்தக் களிப்பே ஆன்ம பலத்தைத் தருகிறது. ஆன்ம பலத்தால் உடல் சுகமும், அறிவுக் கூர்மையும் ஏற்பட்டு உலகியல் வாழ்க்கையில் உயர்நலம் பெற்றும் நாம் வாழும் நிலவுலகிலேயே ஆன்ம இன்பம் துய்க்கவும் முடிகிறது. இதனைச் சாதிக்க வைத்தது வாஸ்து விஞ்ஞானம்.]**

குறிப்பு:- நேரமின்மையால் Indian Aesthetics மற்றும் Religion-ஐ நான் இந்த அவையில் குறிப்பிட்டுப் பேசிடவில்லை.

இயல், இசை, நடம் என்ற முத்தமிழோடு சிற்பமும் கட்டடமும் சேர்ந்து ஐந்தமிழ் என்று 21வது நூற்றாண்டிலாவது தொடங்கி உலகெலாம் பரவிட உதவிடுமாறு கோரி பிரம்மரிஷி மயனையும், ஞானியர்களையும், அறிஞர்களையும், பொதுமக்களையும் வணங்கி விடை பெறுகிறேன்.

**— டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி[2]**

---

1 ஆய்வர்கள் உறுதி செய்வார்களாக.

2
- மாமல்லபுர அரசினர் கட்டிடம் மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி முன்னாள் முதல்வர்.
- வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின் தலைவர் மற்றும் ஆய்வர்.
- வாஸ்து புருஷன் என்ற ஆய்வு ஏட்டின் (Research Journal) பதிப்பாசிரியர்.
- தொழில் ரீதியில் Architect, Builder and Sculptor.

# அருளாளர்-அறிஞர் தம் உரைகள்

## ஆய்வு கலந்த ஆசியுரை,

## ஆசி கலந்த புகழுரை,

## மற்றும்

## மதிப்புரை, அணிந்துரை

## இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை அவர்களின்

# ஆய்வு கலந்த ஆசியுரை

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி அவர்கள், மாமல்லபுரம் அரசினர் கட்டிடம் மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி முன்னாள் முதல்வராய் இருபத்தேழு ஆண்டுகள் பணியாற்றி, தொய்வுற்றுக் கிடந்த சிற்பக் கலை மரபைத் தூக்கி நிறுத்தி, இந்த நூற்றாண்டிலே மீண்டும் ராஜநடை போடச் செய்த ஒரு சாதனையாளர். பயிற்சியையும் படிப்பையும் ஒருங்கிணைத்துஇக்காலத்திற்-கேற்ற புதிய பாடங்களையும் உட்புகுத்தி புதியதொரு சிற்பியர் சமுதாயத்தையே படைத்திருக்கிறார் என்றால் மிகையாகாது.

தலைமுறை தலைமுறையாகச் செய்து வரும் கோயிற் கட்டிடம் மற்றும் வழிபடு படிமங்களையும், இந்திய நாட்டிலும் மேலை நாடுகளிலும் செய்து வந்தோடு, நவீன காலத் தேவைகளையும் உள்ளடக்கிய மரபு சார்ந்த வீடுகளையும், பல்கலைக் கழகக் கட்டிடங்களையும், இசை மன்றம் மற்றும் திருமண மண்டபங்களையும் கட்டிக் கொடுத்து, ''இன்றைக்கும் வாஸ்து நுட்பங்கள் பொருந்தும்'' என்று தனது செயல்முறையினாலும், பேச்சினாலும் நிறுவிக் காட்டி வருகிறார். இவர்தம் முயற்சி நல்ல பலன்களைத் தந்து கொண்டிருக்கிறது.

கல்லூரி முதல்வராயிருந்த காலை, ''சிற்பச் செந்நூல்'' என்ற ஓர் அரிய கலை நூலை எழுதி, அந்நூலுக்கு அரசின் பாராட்டையும் பரிசையும் பெற்றுள்ளார். சிற்பக் கலை தொய்வுற்ற காலத்தில் சிற்பியர்க்கு ஆதரவு நல்கி, சிற்பக் கலை மரபைக் காப்பாற்றிக் கொடுத்திட்ட முடிசூடா மன்னர்களாம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் தலைவரான இராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நினைவாக இந்த நூலுக்கு நல்ல பரிசும் கிடைக்கப் பெற்றிருக்கிறார். தந்தை மகனுக்கு என்ற

நிலையை மாற்றி, கலைக் கல்வியைப் பொதுவுடைமையாக்கி, எல்லோரும் கற்றுக் கொள்ளத்தக்க அரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் கணபதி ஸ்தபதி. இப்படிப்பட்ட முற்போக்குப் பணிகளையும் வேறுபல வளர்ச்சிப் பணிகளையும் கண்டறிந்த டாக்டர்.எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் லட்ச ரூபாய் பரிசு ஒன்றைத் தமது தந்தையின் நினைவாக அண்மையில் ஸ்தபதி அவர்களுக்கு அளித்துக் கௌரவித்துள்ளார்கள்.

மேலும் பல கலை நிறுவனங்கள் மூலமும், மத்திய அரசின் மூலமும் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள திரு.ஸ்தபதி அவர்கள், அரசுப் பணியிலிருந்து ஒய்வு பெற்றபின் தனது மரபுக் கலையின் தொன்மைச் சிறப்பின் அடிப்படைகளை ஆய்ந்திட முற்பட்டு 'வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்' என்றவொரு ஆராய்ச்சி நிலையத்தைத் தோற்றுவித்துக் கொண்டு, கோயிற் கட்டிட அமைப்பு நுட்பங்களையும் ஆய்வுகள் செய்து, சிறு சிறு ஏடுகளை எழுதி வாஸ்துக் கலை மாண்பினை வெளிப்படுத்தி வரும் நேரத்தில், அவர் வெளியிட்ட ''விண்ஞானக் கோயில்கள்'' என்ற நூல் அறிஞர்தம் நன்மதிப்பைப் பெற்றுள்ளது என்ற செய்தி மகிழ்ச்சிக்குரியதாகிறது. இதுவரை வெளிவரா சைவ வைஷ்ணவத் தத்துவங்களை விஞ்ஞான ஆய்வு செய்து, விண்ணே மண்ணாகிறது என்றும், சிவனை விண்பொருள் என்றும் விஷ்ணுவை மண்பொருள் என்றும் தெரிவித்து, அவ்விரு தத்துவங்களின் அடிப்படையான ஒருமைப்பாட்டையும் நிறுவி, சமயத் துறையில் ஒரு திருப்பத்தையே ஏற்படுத்தி, நமது சமயத்தை ஒரு ''விஞ்ஞான சமயம்'' என்று அந்த நூலில் ஸ்திரப்படுத்தியிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

மேலும் வேத, ஆகம வாஸ்துத் தொடர்பு கொண்டுள்ள நமது ஸ்தபதியின் 'வாஸ்து வேத' ஆராய்ச்சியை நேரிலே ஹாலந்தில் பேட்டி மூலம் கேட்டறிந்து, மகிழ்ந்து, ஆசி கூறி, மகரிஷி மகேஷ் யோகியின் ''வேதிக் யூனிவர்சிட்டி'' இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டமும் கொடுத்திருப்பது அவரது ஆய்வின்

சிறப்பை நன்கு புலப்படுத்துவதாகிறது. "Vaastu Shastra - Not a Religious Document but a Scientific treatise" என்ற புரட்சிகரமான தலைப்பைக் கொண்ட பிரிதொரு நூலின் மூலம் நம் நாடு மற்றும் மேலை நாட்டு ஆய்வர்களை ஈர்த்து, வாஸ்து மரபின் விஞ்ஞான உட்கிடையை விளக்கி, வாஸ்துக் கலையின் வரலாற்றையே சிறப்பித்திருக்கிறார் நமது ஸ்தபதி என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் மூலம் இந்த நூற்றாண்டில் இந்நாட்டுச் சிற்பியர்தம் விஞ்ஞானப் பாரம்பரியத்தை தலை நிமிர்ந்திடச் செய்திருக்கிறார் என்றும் துணிந்து கூறலாம். எதிர்வரும் இருபத்தோராவது நூற்றாண்டானது சிற்பியர் மரபையே உயர்ந்தோங்கிடச் செய்திடும் என்று சொல்லி வாழ்த்திட விரும்பும் இந்த நல்ல நேரத்தில் அச்சிற்பியர் சமுகத்துக்கு நம் எல்லோருடைய நல்லாசிகளையும் சேர்த்து வைக்கக் கடமைப்பட்டவர்களாகிறோம்.

அத்தகைய ஸ்தபதி அவர்கள், என்னுடைய இரத்தினகிரி முருகன் கோயில் நிர்மாணப் பணியில் கடந்த 28 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டு, பல அரிய கலைப் பணிகளைச் செய்து கொடுத்துள்ளார் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளும் இந்த நேரத்தில், ஸ்தபதி அவர்கள் அண்மையில் ''கடவுளைப் படைத்தவன் யார்?'' என்ற ஒரு ஆய்வு நூலையும் வெளிக் கொணர்ந்திருக்கிறார். 72-வது வயதில் காலெடுத்து வைத்திருக்கும் அவர், அந்த அரிய நூலை, பாலமுருகன் அடிமைக்குக் காணிக்கையாக்கியதைப் பார்த்துப் பெரும் உவகையோடு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்தபதி அவர்கள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ந்தவர் என்பதை அவர் ஆராய்ச்சி காட்டுகிறது. அவருடைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் உலகெங்கணும் பரவிடவும் அதனால் நமது இந்தியக் கலாச்சாரம் பெருமை கொள்ளவும் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

''கடவுளைப் படைத்தவன் யார்?'' என்ற இந்த நூலின்

தலைப்பு ஒரு புரட்சிகரமான தலைப்புத்தான். மேலெழுந்தவாறு பார்ப்போரின் நகைப்பையும், ஏன்? கோபத்தையும் கூடத் தூண்டிவிடும் தலைப்பு என்றாலும் மிகையாகாது.

ஆனால் பொறுமையோடு இந்நூலுக்குள் புகின் புகழ்ச்சியையும், மகிழ்ச்சியையும் தட்டிச் சென்றிடும் போக்குடைய அரியதோர் விஞ்ஞான ஆய்வு நூல் என்பது புலப்பட்டுவிடும். இத்தகைய அணுகுமுறையில், மறை பொருளாகவிருந்த ஒரு விஞ்ஞான நுட்பத்தை ஸ்தபதி போல் ஊரறிய, உலகறியச் செய்தவர்கள் வேறு எவரும் காணப்படவில்லை என்று கூறினால் அது மிகையாகாது என்று சொல்ல விரும்புகிறேன்.

வேத, ஆகம, வாஸ்து விஞ்ஞானக் கோட்பாடுகளை இடையிடையே சுட்டிக் காட்டி கடவுள் இருக்கிறார்; அவர் உருவ நிலையிலே கோயில் கருவறையிலே நிறுவப் பெற்றுள்ளார்; அருவ நிலையிலும் அவருக்கு அதே உருவம் உண்டு; மேலும் அனைத்து ஞாலப் பொருள்களாகவும் உருக் கொண்டு விளங்குகிறார் என்று சொல்வதோடு விட்டுவிடாது, அருவமானது உருவமாக மாற்றம் பெறுவதற்கு ஆதாரமாகவுள்ள காலக் கணக்கொன்றை ஸ்தபதிகள் சொல்லிக் காட்டுவது விஞ்ஞான நுட்பங்களின் தலையாய நுட்பமாக நமக்குக் கிடைத்திருக்கிறது. நடராசப் பெருமானின் உடுக்கையின் துடிப்பே பௌதிகப் பொருள்களின் தோற்றத்திற்குக் காரணம் (தோற்றம் துடியதனில்) என்று மறை பொருளாகவிருப்பதைத் துலக்கமாக எடுத்துக் காட்டுகிறார் ஸ்தபதிகள். இதனை விளக்கிட ஆதிச் சிற்பி மயனின் விஞ்ஞானம் இவருக்குக் கை கொடுப்பதைப் பார்க்கிறோம். மூலமே காலமாகி, காலமே இடமாகி, இடமே இடவடிவங்களாகின்ற மய விஞ்ஞானப் படிமுறை எல்லோரும் இன்புறத்தக்கதாகும். மூலமாகிற உள்ளமே உணர்வுற்று, உணர்வுற்ற பொருளை அவ்வுள்ளமே ஒளிமயமான தோற்றமாக உருமாறி, வாய்வழி சொற்பொருளாகவும் கைவழி காட்சிப் பொருளாகவும் வெளிப்படு நுட்பத்தை இந்த நூலில் சிறக்கக் காணலாம்.

நுண்பொருளாக இருந்த கடவுளைப் பருப்பொருளாகக் கண்டதும் காலமே என்றும், அக்காலத்தின் வழி பல கோலங்களை இறைவன் கொண்டுள்ளான் என்றும் அக்கோலங்களை மனித வடிவில் உருவாக்கிக் காட்டிய பெருமை மயன் என்பார்க்கு உரியது என்றும், அம்மயனே கடவுளைப் படைத்தவன் என்றும் தம் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். அம்மயனார் வழி வந்த சிற்பிகள் பலரும் இவ்வகையில் கடவுளாகின்றனர் என்றும் அவரது கருத்தின் வழி அறிய முடிகிறது.

இஃதொரு பிரபஞ்ச சிருஷ்டி நுட்பம்தான் என்று சொல்லும் ஸ்தபதி, பேருள்ளமாகிற விண்ணும் இத்தன்மையிலே தான் ஞாலப் பொருள்களாக உருமாற்றம் கொள்கிறது என்ற கருத்து வியத்தகு கருத்தாக மிளிர்கிறது. இந்தச் செயல்நெறியில் உள்ளிட்ட துடிப்புக் கணக்கினால் - கணித நுட்பத்தால் - உடலற்ற உயிர் உடல் தரித்த உயிராய்த் திரிபுறும் செய்தி விஞ்ஞானக் கோட்பாட்டின் மேலுமொரு உச்சக் கட்டமாக அமைந்திருக்கிறது.

காலக் கணக்கின் நுட்பங்களை விளக்கிப் பேசிடும் இந்நூல், இக்காலக் கணக்கினாற்றான் இயல், இசை, நடம் ஆகிய மூன்றும் ஆன்ம சுகமளித்திடும் இடவடிவங்களைத் (spatial forms) தோற்றுவிக்கின்றன என்ற கருத்து மேலுமொரு உச்ச விஞ்ஞானத் தேற்றமென அறியும் நேரத்தில், அக்கருத்திலே - அக்காலக் கணக்கிலேதான் வீடு, கோயில், நாடு, நகரம் முதலிய தெரிபொருள்கள் உருக் கொடுக்கப்படுகின்றன என்ற ஸ்தபதியின் மேலான விளக்கம் உச்சி மேல் வைத்து மெச்சத்தக்க விளக்கமாகத் திகழ்கிறது. வீடு, கோயில் ஆகிய கட்டிடங்களை உயிர்ப் பொருளாகவும், இசை வடிவங்களாகவும் விளக்கிப் பேசிடும் இந்நூல் மிகச் சிறந்த - இதுநாள் வரை மறைபொருளாக இருந்துவிட்ட - நுட்பம் ஒன்றைப் பளிச்செனக் காட்டுகிறது எனலாம். இத்தகைய விஞ்ஞானத் தத்துவத்தில் வீடு, கோயில் ஆகியவை இயற்றப்படுவதானாலன்றோ இந்தக் கலாச்சாரம் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதாகிறது!

திருக்கோயில்களில் காணும் மூலத்திருமேனி சிவலிங்க வடிவிலேயே அமைந்துள்ளது. இதனை அறிஞர்கள் உருவத் திருமேனிக்கும், அருவத் திருமேனிக்கும் இடைப்பட்ட நிலையிலிருப்பதால் அருவுருவத்திருவே என்று கூறினார்கள். எனவே, யாண்டும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருள் அருவுருவாகவும், எண்ணிறந்த உயிர்களுக்கு அணுவணுவாக அவ்வப்பொழுது அருள் செயல்படும் நிலையில் அவ்வவ் உயிர்களின் நிலைக்கும் பக்குவத்திற்கும் ஏற்ப பலனே உருவங்கொண்டும் எழுந்தருளி அருள் செய்வனவும் கண்ட நம் முன்னோர்கள் அரு, உரு, அருவுரு ஆகிய முவ்வகைத் திருமேனிகளையும் கொண்டுள்ளான் இறைவன் என்று கூறினார்கள். இவ்வாறு பல்வேறு வழி நின்று அருள் செய்யும் பாங்கல்லது மற்ற உயிர்களின் வினையுடன் நின்று அவரவர் நினையுமாறு உருக்கொள்வதில்லை. இது அப்பரம்பொருள்களுக்குக் கூறப்படும் எண் குணங்களுள் ஒன்றான தன்வயத்தனாய் நிற்கும். அப்பரம்பொருளை எவரும் தம் வினை வழியிலோ அல்லது அறிவு வழியிலோ நின்று படைத்துக் கொடுக்க இயலாது.

ஒலித் துடிப்புக்களால் - ஒலியானது இசைவடிவம் - இசைமேனி கொள்வது போல, அதே இசைத் துடிப்புக்களால் இறைவனின் திருமேனியானது தோற்றம் கொள்வதை மிக அழகாக - கணக்கியல் வாயிலாக ஸ்தபதி எடுத்துக் காட்டும் போது ‘இசையாய் இசைப்பயனாய்’ என்று மணிவாசகர் கூற்று ஒத்துப் போவதைக் காண்கிறோம். எட்டுத் தாளத்தில் சூக்ஷமத் திருமேனி திகழ்வதையும், ஒன்பது தாளத்தில் ஸ்தூலத் திருமேனி உருப்பெறுவதையும் விளக்கிடும் ஸ்தபதி அவர்கள், கடவுளைக் கணக்குக்குள் அடக்கி - கணக்காக - கணக்கு உருவாகச் சித்தரிப்பது ஒன்றே இந்த நூலுக்குச் சிறப்புக்குச் சிறப்புச் சேர்த்திருப்பதாகவிருக்கிறது.

இன்னொரு விஞ்ஞானச் செய்தியையும் கணபதி ஸ்தபதி தருகிறார். விண் ஆனது - நமது அக விண்ணாயினும் சரி, புற

விண்ணாயினும் சரி, இரண்டு இயல்புகளை - குணங்களைக் கொண்டதென்றும், ஒன்று 'ஒலி'க் குணம் என்றும், பிரிதொன்று 'ஒளி'க் குணம் என்றும் சொல்கிறார். மேலும் மூல ஒலியாகிற 'ஓம் ஒலி' போல மூல ஒளி ஒன்றுண்டு எனவும், அதற்கு 'ஓம் ஒளி' என்று பெயர் எனவும், ஒலி மூலத்திலிருந்து ஒலி ஞாலமும் (subtle sound universe) ஒளி மூலத்திலிருந்து ஒளி ஞாலமும் (subtle material universe) தோன்றுகின்றன என்றும் சொல்லுகிறார். முன்னையதை 'சப்தப் பிரபஞ்சம்' என்றும் பின்னயதை 'அர்த்தப் பிரபஞ்சம்' என்றும் சொல்லி இக்கருத்தைப் புரிய வைக்கிறார். ஒலி ஞாலத்திற்கு (சொற்கள், சொல் உருக்கள்) ஒலியானது மூலப் பொருள் (raw material) என்றும் ஒளி ஞாலத்திற்கு (தெரி பொருள், ஒளிச் சொல்) ஒளியானது மூலப் பொருள் என்றும் பாகுபடுத்தி சிற்பியர் இனத்தின் முன்னவனாம் மயனாரின் ஒரு விஞ்ஞானப் பாடலையும் சான்றாக எடுத்துரைக்கிறார்.

**''ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும்**
**ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்**
**ஒளி யொளிர் உருவந்தானே ஆடலான் ஆடலன் அன்றோ.''**

என்கிறார் பிரம்மரிஷி மயன்.

**'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன்**
**இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே'**
**'இன்ன தன்மையன் என்றறிவொண்ணா எம்மானை'**
**''ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை**
**யானும் நீயுமாய் இசைத்துமென்றால்**
**அஃது எளிதோ''**
**மோனம் தீர்கிலா முனிவரும் காண்கிலார்!**
**அன்றும் திருஉருவம் காணாதே ஆட்பட்டேன்**
**இன்றும் திருஉருவம் காண்கிலேன் - என்றுந்தான்**
**எவ்வுருவோ நுவ்வுருவு என்பார்கட்கு ஏதுரைப்பேன்?**
**எவ்வுருவோ நின் உருவம் ஏது'.**

என்றெல்லாம் அருளாளர்கள் வழிவழியாகக் கூறி வாதிடும் அருளுரைகளையும் ஈண்டு எண்ணத்தக்கதாகும். ''கைவினைக்

கம்மியர் காணா மரபின, மயன் விதித்துக் கொடுத்த மரபின'' என வரும் சிலப்பதிகாரத் தொடரை இவ் ஆய்வறிஞர் எடுத்துக்காட்டி - அம்மயன் கட்டிடக் கலை மட்டுமன்றி, சிற்பக் கலையிலும் மிகப் பெரிய வல்லுநன் என்றும் கடவுட் படிமத்தை வடித்துக் கொடுத்துதற்குரிய கணக்கை வரையறுத்தமை பற்றி அவனே கடவுளைப் படைத்தவன் என்றும் தனது ஆய்வின் முடிந்த முடிவாகக் கூறுகிறார்.

அதுமட்டுமல்ல, அகத்தே தோன்றும் ஒளிக் காட்சி தான் வாய் வழியே பேச்சாக - சொல்லாக - சொல் உருவாக - கேட்கப்படுகிறது என்றும், எனவே ஒலிக்கும் ஒரு மூலம் உண்டு என்றும், அதுவே 'ஒளி'யெனப்படுகிறது என்றும், அவ்வொளியே ஓம் ஒளி என்றும் விளக்கிக் காட்டுவது எமக்குக் கிடைத்திட்ட அனுபவம் என்றும் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இத்தகைய விஞ்ஞானச் செய்திகளை உற்றறிய கணபதி ஸ்தபதி அவர்களுக்கு வழக்காற்றிலிருக்கும் வேத, ஆகம, வாஸ்து நூல்கள் மட்டுமின்றி, வேத வியாசனால் 'விஸ்வகர்மா' என்று பெயர் சூட்டப் பெற்ற தென்னக மயனின் 'மயமதம்', 'சூரியசித்தாந்தம்', 'ஐந்திறம்' ஆகிய நூல்கள் பேருதவியாய் இருந்தமையறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இந்த விஸ்வகர்ம - மயனே கடவுளுக்கு உருவம் கண்ட - கடவுளைப் படைத்த மாபெரும் விஞ்ஞானி என்று மேலும் தெரியும் போது உளத்தே ஏற்படும் உவகையை அளவிட்டுச் சொல்லிட இயலாதென்றே சொல்லத் தோன்றுகிறது. ஆனால், மொழிகளின் இலக்கணங்களையோ, இசை இலக்கணங்களையோ, இசைக் கருவிகளின் இலக்கணங்களையோ வகுத்த அறிஞர்களை அவ்வக் கலைகளையும் படைத்தவர் என்று கூறுவதில்லை. அவ்வறிஞர்களுக்கெல்லாம் இறைவனே உள்நின்று அருளியது போல, இம்மயனுக்கும் உள்நின்று உணர்த்தியவன் இறைவனேயாவான். 'யார்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ' எனும் திருவாக்கு ஆழ

எண்ணுதற்குரியதாம். இந்த விஸ்வகர்ம - மயனே கடவுளின் திருவுருவங்களைச் சிலை வடிவில் அமைத்துக் கொடுத்துதற்குரிய இலக்கணங்களை வகுத்துக் கொடுத்தவர் என்பதனை ''கடவுளைப் படைத்த மாபெரும் விஞ்ஞானி'' என்று மேலும் தெரியும்போது உள்ளத்தே ஏற்படும் உவகையை அளவிட்டுச் சொல்ல இயலாது.

அறிஞர் ஸ்தபதியார் நல்ல ஆய்வாளர். தனது அரிய சீரிய ஆய்வின் மூலம் இந்நூலில் இறைவனை மட்டும் காட்டிடாது, இறைவன் திருமேனி உருவமைப்பு வடித்தவனையும் (படைத்தவனையும்) காட்டி நம்மையெல்லாம் பெருமைப்படுத்திய டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி அவர்கள் நீடு வாழ எமது குன்றுறை இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

# கடவுளைப் படைத்தவன் யார்?

# ஆசியுரை

*புதுக்கோட்டைத் திலகவதியார் திருவருள் ஆதினம்*
**அருள்திரு டாக்டர்.சாயிமாதா சிவ பிருந்தாதேவி**

''அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரும்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பனிரெண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலக முய்ய''

— கந்த புராணம் 1:11:92

அருவமாக இருந்த ஒன்றிற்கு உருவம் தந்தவர்கள் ஸ்தபதிகள் - சிற்பிகள்தாம் என்ற சிறப்பை வேறு யாரால்? எவரால்? எங்கு? எப்படி?ப் பெற முடியும்? கருணை கொண்ட முகங்கள் ஆறையும், கரங்கள் பனிரெண்டையும் உருவாக்கி, உளதாக்கி, மருவாக்கி, மலராக்கி, ஒளியாக்கி, உணர்வாக்கி, உற்றபடி ஆறுபடை வீடுகளையும், ஆங்காங்குள்ள கடவுளர்களையும் தந்தவர் முனிவரா? தேவரா? இல்லையே! ஸ்தபதியர் தாமே! நம் நாட்டிலே 7748 சிவ ஸ்தலங்களையும் 800 விஷ்ணு ஸ்தலங்களையும் அவற்றின் கடவுள் உருவங்களையும் படைத்தளித்தவர் யார்? என்ற வினாவிற்கு, விடை காண்பது எளிதேயன்றோ?

கடவுளைப் படைத்த சிற்பிகளை - ஸ்தபதிகளை கடவுளைப் பெற்றவர்கள் என்றால் கூடப் பலனும் பயனும் உண்டு. கல்லைக் கலையாக்கி, கலையைச் சிலையாக்கி, சிலையைக் கடவுளாக்கியவர்கள் ஸ்தபதிகள் தாமே! இதில் ஏது மாற்றம் அல்லது தடுமாற்றம்; ஏமாற்றம்? ஆவுடையார் கோயில் என்று பழகு தமிழிலும், திருப்பெருந்துறை என்று அழகு தமிழிலும் அழைக்கப்

பெறும் திருக்கோயில் சிற்பங்களையும், அதன் நுட்பங்களையும், ''கொடுங்கை''யென அழைக்கப் பெறும் அதிநுட்பக் கலைகளையும் கண்டும் கேட்டும் எண்ணற்றவர்கள் பாராட்டியுள்ளார்கள் என்று சொன்னால் கடவுளைப் படைத்த - கலையைப் படைத்த ஸ்தபதியர்களின் கைவண்ணம் மெய்சிலிர்க்க வைக்கின்றதென்பதை யாரால் எவரால் எங்கு எப்படி மறுக்க முடியும்?

வஸ்துதான் வாஸ்துவானது என்ற விஞ்ஞானக் கருத்தை நமக்களிக்கும் டாக்டர் பிரம்மஸ்ரீ.வை.கணபதி ஸ்தபதியார் அவர்களின் வாக்கு, நமக்களிக்கும் அருள் வாக்கன்றோ?

திருச்செந்தூர் திருமுருகன் என்ன அழகு என்று வியக்கின்றோம். தில்லை நடராஜப் பெருமானின் திருநடனம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. அவனின் எழுவகைத் தாண்டவங்களும் அப்பப்பா எவ்வளவு பேரழகு கொண்டவை என்பதை எமது வார்த்தைகளால் வருணிக்க முடியாது. திருப்பதிப் பெருமாளை திருப்தியோடு எவ்வளவு நேரம் பார்த்துத் திரும்பினாலும், இன்னமும் ஒரு தரம் காணவே வேண்டும் என்ற இச்சை குறைவதே இல்லை.

பொன்னம்பலந்தனில் ஆடும் நடேசனை, சபேசனை, பூலோக கைலாச நாதனை இன்னும் காண வேண்டும் என்ற எமது அவா, பற்று, ஆசை, பேராசை, சிதம்பரத்திற்கே சென்று விடுவோமா என்ற எண்ணம் ஏற்படச் செய்கின்றது. இத்தனைக்கும் வஸ்துவிலிருந்து உருவான வாஸ்துதானே காரணம்? வாஸ்துவே நீ வாழ்க! வாஸ்துவை உருவாக்கிய பாரம்பரிய ஸ்தபதிகளே! சிற்பிகளே! கலைக்கோயில்களை உருவாக்கிய கற்பனை கடந்த கலை ஞானிகளே! நீவிர் வாழ்க; நும் குலம் தழைக்க.

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலை உருவாக்கிக் கொண்டிருந்த ஸ்தபதி, திரும்பிப் பாராமல் தன்னைக் கலையில் அர்ப்பணித்துக் கொண்ட காரணத்தால் அவன் திரும்பிப் பாராமல் அடப்பக்ககாரனிடம் வெற்றிலைப் பாக்கு கேட்க; அவ்விடத்தில் ஸ்தபதி வடித்த கலையில் கருத்தூன்றி நின்று கொண்டிந்த மாமன்னன்

இராஜராஜ சோழன், ஸ்தபதிக்கு வெற்றிலைப் பாக்கு மடித்துக் கொடுத்த வரலாற்றையும் நம்மால் மறக்கத் தான் ஒல்லுமோ!

''பாவ, ராக, தாளம்'' நிறைந்ததுதானே 'பரதம்' அப்பரம்பரையில் தோன்றிய நாம் எந்தையின் மூலமாக 108 கரணங்களை அறிவோம். அவற்றில் இரண்டோ, மூன்றோ குறைவாக 104 அல்லது 105 கரணங்கள் தஞ்சைப் பெரிய கோயிலின் நடுவிதானத்தின் உள் சுற்றில் அமைத்தவனும் ஸ்தபதியன்றோ? அப்பேரழகைக் கண்ட நாம் அதனை உருவாக்கிய ஸ்தபதியை எண்ணி உள்ளத்தில் உள்ளூர வணங்கியிருக்கிறோம்.

கடவுளையே படைக்கும் திறன் பெற்ற ஸ்தபதியை என்ன பெயரிட்டு அழைப்பது? எப்பரிசளிப்பது? ''நோபல் பரிசு'' பெரிதெனச் சொல்கின்றார்களே! அது போதுமா? யார், யாருக்கோ, எவர், எவருக்கோ அப்பரிசு கிடைப்பதாக அறிகிறோம். கடவுளைப் படைத்த ஸ்தபதிகளுக்கு அப்பரிசு கொடுக்கப் பெற்றதாக இதுவரை நாம் அறிந்தோமில்லை. இந்தியச் சிற்பங்களை, அதிலும் தமிழக சிற்பங்களை உலகம் முழுதும் போற்றிப் புகழ்ந்து உலகின் பல பாகங்களில் கோயில்களைக் கட்டவும், திருமாளிகைகளை அமைக்கவும் பிரம்மஸ்ரீ கணபதி ஸ்தபதியார் அவர்களை அன்றோ அழைக்கின்றது! நாமும் பேச்சுத் திறத்தால் உலகைச் சுற்றி வரும் போது அமெரிக்காவில் இவர்களது பெரும் புகழை அறிந்துணர்ந்தோம்.

சிங்கப்பூரில் இவர்கள் வடிவமைத்துக் கொடுத்த ஸ்ரீ ருத்ர காளியம்மன் கோயிலுக்குரிய திருப்பணியை மிக மிகச் சுருக்கமாக நாம் துவங்கி வைத்தோம். அக்கோயிலுக்கு பிரம்மஸ்ரீ வை.கணபதி ஸ்தபதியார் அவர்கள் வடிவமைத்துக் கொடுக்க இவர்களது உறவினர் ஒருவர் நின்று அத் திருக் கோயிலை மாட மாளிகை கூட கோபுரமாக அமைத்து விட்டார்கள். திருப்பணியைத் துவங்கி வைத்த எம்மையும், வடிவமைத்துக் கொடுத்த வை.கணபதி ஸ்தபதியார் அவர்களையும், திருப் பணிச் செம்மல் பேராசிரியப் பெருந்தகை கருணாநிதிச் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர் பெருந்தொண்டர் சைவப் பெரியார் அமரர் அம்பலவாணர் மூலம் எம்மை அழைத்தார்கள். கும்பாபிஷேகத்திற்கு முன்

7 நாட்கள் சைவ சித்தாந்தம் பற்றி நாம் சொற்பொழிவுகளாற்ற அதனைத் தம் குடும்பத்துடன் வை.கணபதி ஸ்தபதியார் அவர்கள் செவிமடுத்த காரணத்தால் நாம் உவகை பொங்க உற்றுழி உரைத்தோம். ஸ்தபதியார் கோடியில் ஒருவரல்லவா? என்று நாம் அப்போதே அவர்களை மதித்தோம். அதன்பின் அவர்கள் வெவ்வேறு நாடுகள் செல்ல; நாமும் வெவ்வேறு நாடுகள் செல்ல ஒருவரையொருவர் சந்திக்க வாய்ப்பில்லை. நாங்களிருவரும் சந்திக்கப் பல ஆண்டுகட்குப் பின்னர் ஒரு வாய்ப்பினை வழங்கியவர் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளராக விளங்கிய அருமைப் புதல்வர். உயர்திரு.க.சண்முகம்,இ.ஆ.ப., அவர்களை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் ஒரு கலைக் கண்காட்சி உருவாக்கி அதற்கு ஸ்தபதியார் அவர்களையும் எம்மையும் இன்னும் சில அறிஞர்களையும் அழைத்துப் பேச ஒரே மேடையில் அமர்ந்தோம். ''மனிதனும் தெய்வமாகலாம்'' என்ற நூலை ஸ்தபதியார் அவர்களிடம் அளித்தோம். அவர்கள் எழுதிய 3 நூல்களை எமக்களித்தார்கள். சொற்பணிகள்; உடற் பிணிகள் காரணமாக உடன் நாம் படிக்க முடியவில்லை. ஒருநாள் அவர்கள் எழுதிய ''விண்-ஞானக் கோயில்கள்'' என்ற அரிய பெரிய உயர்ந்த, மேம்பட்ட நூலைப் படித்த நாம் கருத்துரைகளை ஸ்தபதியார் அவர்கட்கு எழுதினோம். பலருக்குப் புரியாத அந்நூல் நமக்கு வேதம் போல விளங்கியது. நாம் அந்நூலில் பலவற்றை விலை கொடுத்துப் பெற்றுப் பல பேரறிஞர்களையும் படிக்கச் செய்தோம். எம் நூல்களை விட அந்நூல் எமக்கு இனித்ததால் அப்படிச் செய்தோம். இன்னும் உற்றவர்கட்கு உவந்தளித்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில் தான் எமது சிறிய அறிவை அறிந்து, கடவுளைப் படைத்தவன் யார்? என்ற அரிய பெரிய சிறந்த உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய நூலுக்கு மதிப்புரை கேட்டார்கள். அச்செழுத்தில் அமைந்த அந்தத் தாள்களை எம் தலையணைக்கடியில் வைத்துப் படுத்துக் கண்ணுறங்கினதால், அதன் அளவு கடந்த கருத்துக்கள் எமது மூளைக்குள் பதிந்து, ''கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'' என்ற ஒரு பழமொழி மனத்தில் நினைவிற்கு வந்தது. கடவுளைக் கண்டவர்கள் அதனை வெளியே சொல்ல மாட்டார்கள். யார் சொல்லுகிறார்களோ அவர்கள் கடவுளைக் கண்டிருக்க மாட்டார்கள் என்ற பழமொழி தோன்றியது. இப் பழமொழியை மாற்றியமைத்து விட்டார்கள் அருமைப் புதல்வர் ஸ்தபதியார் அவர்கள். சொல்வது உண்மை;

எழுதுவது மெய்மை; கடவுளையே படைத்துக் காட்டுவது வாய்மை. இம்மூன்றையுமே உள்ளுரையாகக் கொண்டதுதான் ''கடவுளைப் படைத்தவன் யார்?'' என்ற சித்த சுத்தியுடைய;

மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்தி; பொய்மையாம் களையை வாங்கி; பொறையெனும் நீரைப் பாய்ச்சி; தம்மையும் நோக்கிக் கண்டு, தகவெனும் வேலியிட்டுச் செம்மையுள் நின்று சிவகதி; விஷ்ணு கதிக்கு விளக்கம் தந்துள்ள கடவுளைப் படைத்தவன் யார்? என்ற கேள்வி கேட்டு வேத, புராண, இதிகாச வாயிலாக; வஸ்துவே வாஸ்துவாக ஆவதை அள்ளி வழங்கியிருக்கிறார்கள். **''यतो वाचा निवर्तन्ते अप्राप्य मनसा सह''** என்ற உபநிஷதக் கருத்தில் எதனின்றும் வாக்குகள் மனத்தை எட்டாமல் திரும்பி விடுகின்றனவே அப்படிப்பட்ட பிரம்ம ரகஸ்யத்தை அறிந்தவன் ஆனந்த மயமாகவே இருப்பான் என்பதையும் தெரிவிக்கின்றது.

*If all the Oceans are Ink*
*If all the Trees are Pens*
*If the Earth is Paper*
*Its glory cannot be written.*

இந்த உலகத்தில் உள்ள கடலெல்லாம் மையாக
இந்த உலகத்தில் உள்ள மரங்களெல்லாம் பேனாக்களாக
இந்த உலகத்தில் உள்ள நிலப்பரப்பெல்லாம் தாளாகப்,
பேப்பராக மாற்றி எழுதினாலும்

கடவுளைப் படைத்தவன் யார் என்ற நூலுக்கு மதிப்புரை எழுதி விட்டோம் என்ற மனநிறைவு ஏற்படாது என்ற எண்ணத்தோடு, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயாக ஆகிறோம்.

இந்நூலைப் பற்றிய உயர்வுரையைப் பேராசிரியப் பெருந்தகை சபாரத்தினம் அவர்கள் மிக மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்கள்.

கடவுளைப் படைத்தவன் யார்? ஸ்தபதியார்களே தாம் எனச் சொல்லி இவர்கள் நூறாண்டுகள் வாழ வாழ்த்தி நிறைவு செய்கிறோம்.

# அளவியல் மதிப்புரை

**மய விக்ஞான கலாநிதி**
**டாக்டர்.எஸ்.பி.சபாரத்னம்,M.A.,Ph.D.,**
**வேத ஆகம வாஸ்துப் பேராசிரியர்.**
**இயக்குநர், இந்திய இயல் ஆய்வு நிறுவனம், சென்னை.**

நாம் வாழும் உலகமே பல்வேறு உலகங்களின் சேர்க்கைதான். மொழி உலகு, இலக்கிய உலகு, இலக்கண உலகு, இசையுலகு, சிற்ப உலகு, கலை உலகு, வரலாற்று உலகு, பண்பாட்டு உலகு, தொல்பொருள் உலகு, பொறி இயல் உலகு, தொழிலியல் உலகு, கட்டிட உலகு... என இந்த உலகங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும். இத்துணை உலகங்களின் ஒழுங்கீடான இயக்கத்தை, சீரான நடைமுறையைப் பரிபாலிக்க வல்ல ஒரு விஞ்ஞானம் உண்டு. அந்த விஞ்ஞானம்தான் வாஸ்து விஞ்ஞானம். இந்த வாஸ்து விஞ்ஞான நுட்பங்களை மேற்கூறப்பட்டனவும் கூறாது விடப்பட்டனவுமாகிய அனைத்து உலகங்களையும் ஊடுருவியுள்ள அதன் வேர்களை - நன்கு உணராத காரணத்தால் மூடி மறைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இன்றைக்கும் உள்ள பிரபஞ்ச விஞ்ஞான நுட்பங்களும் உண்மைகளும் மிகப் பல. மேற்கூறப்பட்ட அத்துணை உலகங்களுக்கும் தேவையான ஒருசில அடிப்படை நுட்பங்களை, வாஸ்து விஞ்ஞான நுட்பங்களை - வாஸ்து விஞ்ஞானி டாக்டர்.வை.கணபதி ஸ்தபதியார் அவர்கள் இந்த நூலில் அள்ளித் தந்திருக்கிறார்கள். அவரே இந்த நூலின் இறுதியில் கூறுவது போன்று 'முடிந்தவரை' கொட்டி விட்டார். சீலம் மிக்க உணர்வு கொண்டு, அள்ளிக் கொண்டு பயன்பெற வேண்டியது, ஆன்மசுகம் பெற விரும்பும் அன்பர்களின் பொறுப்பு.

**சென்னைப் பல்கலைக் கழக வைணவத் துறையில் 'வைஷ்ணவ ஆகமங்கள்' என்ற பொருளில் நடைபெற்ற இரண்டுநாள் கருத்தரங்கில் ''உருவ வழிபாட்டுக்குரிய படிமங்களுக்கு வாஸ்து வழிப்பட்ட அளவியலால் ஏற்படும்**

**துருவபேர சாந்நித்யம்''** என்ற தலைப்பில் நம் ஸ்தபதியார் அவர்கள் அளித்த ஆய்வுக்கட்டுரையே இந்த நூலாக வடிவெடுத்துள்ளது. இந்தக் கருத்தரங்கில் நம் ஸ்தபதியார் அவர்கள் அளவியல் அடிப்படையிலான 'சாந்நித்யம்' பற்றிப் பேச நேர்ந்த வாய்ப்பு, **உண்மையிலேயே 'வான்வழி வந்த' வாய்ப்புத்தான்.** ஸ்தபதியார் அவர்கள் இந்த வான்வழி வாய்ப்பைத் (Space-oriented context) தமக்கே உரிய பாணியில் மிகவும் பயனளிக்கும் வகையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட பொருளும் சிற்பியின் கைத்திறத்தால் சிறப்பான வடிவம் பெற்று விடுவதில் என்ன வியப்பிருக்க முடியும்?

ஸ்தபதியார் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்போ 'துருவபேர சாந்நித்யத்திற்கு அளவியல், ப்ரதிஷ்டை, பூஜா விதானம் என்பவைகளில் அளவியல் (சிலா பரிமாணம்) எந்த அளவுக்கு முக்கியத்துவம் வகிக்கிறது' என்பதே. ஸ்தபதியார் அவர்கள் இந்தத் தலைப்பில்தான் கட்டுரை அளித்தார். ஆனால் நூல்வடிவம் பெறும் தலைப்போ **''கடவுளைப் படைத்தவன் யார்?''** என்ற புரட்சிகரமான ஒன்றாகும். கொடுக்கப்பட்ட நுட்பமான பொருள் அதாவது அருவப்பொருள், கடவுளுக்கு வடிவம் கண்ட மாபெரும் விஞ்ஞானியை, வடிவம் கண்ட வடிவத்தை, அடையாளம் காட்டும் அளவுக்கு தூலமாகி, நூலாகி வெளிவருகிறது. இதுவே அருவம் உருவமாகும் விந்தைதானே! **அருவத்தை உருவமாக்கும் வாஸ்து கணிதத்தின் விந்தையை இந்த நூலின் தோற்றமே நன்கு புலப்படுத்தி விடுகிறது.**

ஸ்தபதியார் அவர்களின் கூற்றுக்களாலேயே இந்த நூலின் மையக் கருத்தைப் புலப்படுத்துவது மிகவும் பொருத்தமாகும் எனக் கருதுகிறேன். ''... இத்தகையதொரு நல்ல சூழ்நிலையில்தான் துருவபேர சாந்நித்யம், சிலா பரிமாணம் என்ற இரண்டு அடிப்படைக் கேள்விகளும் அதையொட்டித் தோன்றி வளர்ந்திட்ட பிரதிஷ்டா விதிகளும் மற்றும் பூஜாவிதானங்களும் இன்றைய கருத்தரங்கிற்குப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றை நான்

வரவேற்கின்றேன். இது பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கு மட்டுமின்றி, இத்துறையில் பணியாற்றிவரும் பூசகர்களுக்கும், சிற்பிகளுக்கும், பொதுமக்கட்கும் தெரிந்திருக்க வேண்டிய அதிமுக்கியமான விஷயமுமாகும். வழிபாட்டு மரபைப் பற்றி நிற்கும் மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறிய இம்முயற்சி உதவிடும் என்று நம்புகிறேன். மேற்குறிப்பிட்ட நான்கு பொருள்களில் துருவபேர சாந்நித்யம், சிலா பரிமாணம் என்ற இருபொருள்கள் அடிப்படையானவை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்றாலும் இவ்விரண்டில் துருவபேர சாந்நித்யமானது சிலா பரிமாணத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைச் சொல்லிடவே இங்கு நான் பணிக்கப்பட்டிருக்கிறேன்''.

**சிலாபரிமாணம் (உருவத்திற்கான அளவியல்) என்ற மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கடவுளைப் படைத்தவன் யார்? எப்படிப் படைத்தான் - என்பதைப் பற்றிய விளக்கம் வளம்தரும் முறையில் வளர்கின்றது; பயன் தரும் வகையில் பரிணமம் அடைகின்றது; பரிணமிக்கின்றது.**

இந்த நூலைப்பற்றிய எனது அனுபவபூர்வமான அணிந்துரையை எழுத்தில் வடிப்பதற்குமுன், துருவபேர சாந்நித்யம் தொடர்பான உண்மைகள் சிலவற்றைத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன். ஸ்தபதியார் அவர்கள் இந்நூலில் வடித்துக் கொடுத்துள்ள வாய்மையுரைகளின் ஆணித்தரத்தை அறிந்து கொள்வதற்கு இவ்வுண்மைகள் நிச்சயம் துணைசெய்யும்.

**துருவபேர சாந்நித்யத்திற்கு, அதாவது வழிபாட்டுப் படிமத்திற்குரிய தெய்வீக சக்திக்கு மிகமிக அடிப்படையாக விளங்குவது, - இன்றியமையாத காரணமாகவும் ஆக்கமாகவும் விளங்குவது - பிம்ப அளவியலே; சிலா பரிமாணமே. இதில் கருத்து வேறுபாட்டிற்குக் கடுகளவும் இடமில்லை. சிலைக்குரிய அளவுகள் மிகவும் துல்லியமாக இருந்தால்தான், அந்தச் சிலை அடுத்த நிலைக்கு, அதாவது பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு உரியதாகின்றது;**

பிரதிஷ்டைக்கு அடுத்த நிலையில் ஆராயப்படுவது பூஜாவிதானம். பிரதிஷ்டை ஆனாலன்றோ பூஜைக்கு இடம்! எனவே சிலாபரிமாணம் தான் முதலில் பிரதிஷ்டைக்கு இடம் கொடுத்து அடுத்து பூஜா முறைகளுக்கும் பத்ததிகளுக்கும் வழிவகுக்கிறது.

அளவியலே சாந்நித்யத்திற்குக் காரணமாக இருக்குமானால் பிரதிஷ்டையும் பூஜாமுறைகளும் எதற்காக எனும் கேள்வி எழுகிறது. அளவியலால் ஏற்பட்ட சாந்நித்யத்தை நிலைப்படுத்த, ஸ்திரப்படுத்த, பல்வேறு வகையிலும் பயனளிக்க வல்லதாகச் செயற்பாட்டு நிலையில் வைக்க பிரதிஷ்டையும் பூஜாவிதானமும் தேவைப்படுகின்றன.

உருவம் இல்லாத சிலையில், வாஸ்து கணிதமானது உருவத்தை - செயற்பாடு மிக்க உருவத்தை - வெளிப்படுத்துகிறது. (சில்ப என்ற சொல்லுக்குரிய பல பொருள்களுள் ஒன்று வெளிப்படுத்துதல் என்பது) அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உருவத்தை, ஓர் ஆலய எல்லைக்குள் நிலைப்படுத்துவது பிரதிஷ்டை. உண்மையில் இந்த ஆலய எல்லை என்பதே, வாஸ்து விஞ்ஞான அளவியல்படி வகுத்துக் கொள்ளப்பட்ட ஓர் அருவ-உருவ அமைப்புதான். நிலைநிறுத்தப்பட்ட உருவத்தை நகர அல்லது கிராமத்தின் வளத்திற்காகவும் மக்களின் வளமான - நலமான - வாழ்க்கைக்காகவும், உயிர்க்கூட்டங்களின் இன்ப நிலைக்காகவும் செயற்பட வைப்பது பூஜாவிதானம். எனவே பிரதிஷ்டையும் பூஜாவிதானமும் பயனற்றவையும் அல்ல; மிகையானவையும் அல்ல. ஆனால் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டிய நியதிக் கருத்து என்ன எனில், அளவியல் நன்கு பரிபாலிக்கப்பட்டிருந்தால் தான், உருவத் தொடர்பான பிரதிஷ்டையும் பூஜாவிதானமும் பொருள் உள்ளனவாகவும் பயன்தருவனவாகவும் விளங்கும். அளவியலில் நேர்ந்துவிடும் குறைவும் மிகுதியுமாகிய கோளாறுகள், பிரதிஷ்டையையும் பூஜைமுறைகளையும் கூடப் பாதித்து அவற்றின் மூலம் தீய

விளைவுகளைக் கொடுக்கும். ஆகையால்தான் ஸ்தபதியார் அவர்கள் மிகப் பொருத்தமாகவும் ஆணித்தரமாகவும் ஓர் அற்புதமான மேற்கோள் காட்டுகின்றார்:

मानहीने महाव्याधिरधिके कर्तृनाशनं ।
तस्मात् सर्वप्रयत्नेन कारयेत् लक्षणान्वितम् ॥

— मानसारे

''மான ஹீனே மஹாவ்யாதி; அதிகே கர்த்ரு நாசனம்
தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன காரயேத் லக்ஷுணன்விதம்''

— மானஸாரம்

''வழிபடு படிமத்தின் அளவுகள் குறைவுபடின் வியாதிகள் தோன்றும்; அளவுகள் அதிகமாயின், செய்விப்போன் நலிவுறுவான். ஆகையால், அனைத்து முயற்சிகளும் செய்து படிமத்தை, சிலாபரிமாண இலக்கணப்படியே செய்க''

பிம்ப அளவியல் தொடர்பான இந்த எச்சரிக்கைக் குரல் ஆகமங்களிலும் எதிரொலிப்பதைக் கேட்கலாம்.

मानहीने महाव्याधिः अधिके शतृवर्धनम्
नाहं हीने विनाशं स्यात् तत्वृद्धि स्यात् क्षयङ्करम्
प्रमाणहीने दारिद्रियं अधिके दारनाशनं
लम्बमान विहीनेतु राज राष्ट्रस्य दोषकृत्
उपमानाधिके हीने शिल्पिनं हन्ति देशिकम्
सर्वलक्षण युक्तंचेत् सर्व सिद्धि प्रदायकम्

— पूर्वकारणागमे 11:67-69

''மான ஹீனே மஹாவ்யாதி; அதிகே சத்ரு வர்தனம்
நாஹம் ஹீனே விநாசம் ஸ்யாத் தத்வ்ருத்திஸ்ஸ்யாத்
க்ஷயங்கரம்
ப்ரமாண ஹீனே தாரித்ர்யம் அதிகே தாரநாசனம்
லம்பமான விஹீனேது ராஜராஷ்ட்ரஸ்ய தோஷக்ருத்
உபமானாதிகே ஹீனே சில்பினம் ஹந்தி தேசிகம்
ஸர்வலக்ஷண யுக்தம் சேத் ஸர்வஸித்தி ப்ரதாயகம்''

— காரணாகமம்: பூர்வம்: 11 : 67 - 69

''அளவில் குறையிருப்பின் பெரும் வியாதிகள் விளையும்; அளவுகள் மிகைப்படின் எதிரிகள் விளைவர்; சுற்றளவில்

குறையிருப்பின் அழிவும், அதுவே மிகின் பல குறைகள் வந்து சேரும். அகலமானம் குறைவுபடின் ஏழ்மையும், அதிகம் காணின் மனையாள் மரித்து விடுவாள். உயரமானத்தில் குறைகாணில் நாடும் நாடாள்வோனும் குற்றத்திற்கு ஆள்ப்படுவர். இடையளவுகள் கூடினும் குறையினும் சில்பி அழிந்து விடுவன். இலக்கணம் கூறும் அளவுகள் பொருந்தியிருப்பின் எல்லா நற்பலன்களும் வந்தடையும்.''

பூஜாவிதானங்களை அதிகமாக விரித்துரைக்கும் ஆகமங்கள் மேலும் ஒருபடி உயர்ந்து சென்று என்ன கூறுகின்றன, கேளுங்கள்!

मानेन निर्मिते बिंबे स्वयं आभाति दैवतम् ।

— मकुटोत्तरे 7:18

''மானேன நிர்மிதே பிம்பே ஸ்வயம் ஆபாதி தைவதம்''

— மகுடோத்தரம்: 7 : 18

''உரிய அளவுப்படி நிர்மாணிக்கப்பட்ட, உருவாக்கப்- பட்ட பிம்பத்தில் அதற்குரிய தெய்வம் தானாகவே வெளிப்பட்டு விளங்குகிறது''

இங்கே 'ஆபாதி' என்பது தெய்வ சாந்நித்யத்தைக் குறிக்கிறது. அளவுப்படி உருவாக்கப்படும் போது தெய்வ சாந்நித்யம் தானாகவே ஏற்பட்டு விடுகிறது (பிரதிஷ்டையும் பூஜையும் இல்லாமலேயே) - இவ்வாறு இயல்பாகவே உண்மையை உள்ளது உள்ளவாறு காட்டி விடுகிறது ஆகமம்!

மேலும் ஒரு கருத்தைக் கூற வேண்டும்.

அளவியல் என்பது சிலையின் உருவ அமைப்பை மட்டும் கட்டுப்படுத்தும் ஒன்றல்ல. பிரதிஷ்டையும் பூஜை முறைகளும் கூட அளவியலுக்குக் கட்டுப்பட்டவைதான்.

''இன்ன இன்ன வடிவத்தை இன்ன இன்ன காலவரையறைக்குள் பிரதிஷ்டை செய்ய வேண்டும்''

''இன்ன இன்ன உபசாரத்தை, கிரமப்படி இன்ன இன்ன நேரத்துக்குள் செய்து முடிக்க வேண்டும்''

என்றெல்லாம் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உள. இந்தக் கட்டுப்பாடு கால அளவியல் தொடர்பானது.

कटिकाद्वौ भवेत् स्नानं कटिकैकार्चनं भवेत्
कटिकार्धम्तु नैवेद्यं बलिदानंतु तत्समं
नित्याग्निकार्यं अर्धम्तु नित्योत्सवंत्रिनाडिका
स्तोत्र सङ्गीत नृत्तेषु सप्तार्धं चुलुकोदकम्

— पूर्वकारणे 30:442-443

''கடிகாத்வௌ பவேத் ஸ்நானம் கடிகைகார்சனம் பவேத்
கடிகார்த்தம்து நைவேத்யம் பலிதானம்து தத்ஸமம்
நித்யாக்னி கார்யம் அர்த்தம்து நித்யோத்ஸவம் த்ரிநாடிகா
ஸ்தோத்ர ஸங்கீத நிருத்தேஷு ஸப்தார்த்தம் சுளுகோதகம்''

*— காரணம்: பூர்வம்: 30 : 442 - 443.*

''அபிஷேகம் இரண்டு நாழிகை (48 நிமிஷம்);அர்ச்சனை ஒரு நாழிகை; நைவேத்யம் அரை நாழிகை; பலிதானம் அரை நாழிகை, நித்ய அக்னி (ஹோமம்) அரை நாழிகை, நித்ய உத்ஸவம் மூன்று நாழிகை; தோத்திரம், சங்கீதம், நாட்டியம் - இவை ஏழு நாழிகை; உள்ளங்கை நீர் தருதல் அரை நாழிகை''

*— காரணாகமம்: பூர்வம்: 11 : 67 - 69*

உருவியல் தொடர்பான அளவுக்கட்டுப்பாடு ஸ்தபதிக்கு இருப்பது போன்று பூஜைகள் தொடர்பான காலக் கட்டுப்பாடும் அர்ச்சகர்க்கு உண்டு என்பதை இம்மேற்கோள் காட்டுகிறது.

मन्त्रहीने तु मरणं क्रियाहीने तु व्याधयः ॥

— पूर्वकारणागमे 30:437

''மந்த்ர ஹீனேது மரணம்; க்ரியாஹீனே து வ்யாதய:''

*— காரணாகமம்: பூர்வம்: 30 : 437*

''அர்ச்சகரிடம் மந்த்ரம் குறைந்தால் மரணம் ஏற்படும் (யாருக்கு?)-(செய்வோன், செய்விப்போன், செய்வதைப் பார்ப்போன் ஆகிய மூவர்க்குமே); பூஜை தொடர்பான செயல்முறைகள் குறைந்தால் நோய்கள் ஏற்படும்''

மான ஹீனே மஹாவ்யாதி என்று வாஸ்து கூறுகிறது; 'க்ரியாஹீனேது வ்யாதய:' என்று ஆகமம் கூறுகிறது. அளவியலில் ஏற்படும் குறைகள் மட்டுமல்ல. செயல்முறைகளில் ஏற்படும் குறைகளும் நோய்களுக்குக் காரணமாகின்றன.

ஆனால் ஒன்று. இப்படி மரணத்தைத்தரும் மந்த்ரஹீனமும் வியாதியைத் தரும் கிரியாஹீனமும் அறியாது நேர்ந்துவிட்டால் கூட அர்ச்சகர்க்கு ஒரு சலுகை உண்டு:

मन्त्रहीनं क्रियाहीनं द्रव्यहीनंतु यत्कृतम्
तत्सर्वं कृपयादेव क्षमस्व परमेश्वर
—पूर्वकारणागमे 30:441

''மந்த்ர ஹீனம் க்ரியாஹீனம் த்ரவ்யஹீனந்து யத்க்ருதம்
தத்ஸர்வம் க்ருபயாதேவ க்ஷமஸ்வ பரமேஸ்வர''
— காரணம்: பூர்வம்: 30 : 441

''மந்திரக் குறைபாடு, செயல்முறைக் குறைபாடு, பூஜைக்குரிய பொருள்களில் குறைபாடு - இவ்வாறு செய்யப்பட்ட அனைத்தையும், பரமேசுவரா, தங்கள் கருணையால் பொறுத்தருள வேண்டும்''

இவ்வாறு பூஜை முடிவில் அர்ச்சகர் வேண்டிக் கொள்ள வேண்டும். ஆனால், யோசித்துப் பாருங்கள், இவ்வாறு ஒரு சிற்பி வேண்டிக் கொள்ள முடியுமா? ''பகவானே! உத்தம தச தாளத்திற்குப் பதில் உத்தம அஷ்ட தாளத்தைக் கொண்டு இந்த பிம்பத்தை அமைத்து விட்டேன். தயவுசெய்து பொறுத்துக்கொள்!'' என்று எந்த ஸ்தபதியும் வேண்டிக் கொள்ள முடியாது. ஒரு யவை அளவுக்கேனும் அளவியலில் குறைவோ, அதிகமோ ஏற்படாதவாறுதான் ஸ்தபதியர் பிம்பங்களைப் படைத்து வருகின்றனர். ஆகையால் வழிபடு படிமங்களைப் பொறுத்தவரையில் அளவியலே முக்கியத்துவம் வகிக்கிறது என்பதையும், அர்ச்சகரைக் காட்டிலும் ஸ்தபதியர்க்குப் பொறுப்புணர்வும் விழிப்புணர்வும் அதிகம் உண்டு, தேவை என்பதையும் ஓர் அர்ச்சகன் என்ற முறையில் நான் இங்கே தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. ஆகமம் அறிந்த அர்ச்சகர் அனைவரும் இக்கருத்துக்கு உடன்படுவர்.

இனி வடிவம் கண்ட வாஸ்து விஷயத்திற்கு வருவோம்.

**பிரம்ம விஞ்ஞானமும், பிரதிமா விஞ்ஞானமும்:**

கடவுளைப் பற்றிய ஞானம் பிரம்ம விஞ்ஞானம் என்றும் கடவுளின் வடிவத்தைப் பற்றிய ஞானம் பிரதிமா விஞ்ஞானம் என்றும் கூறப்படும். பிரம்ம ஞானத்தை முழுமையாக எதனால் பெறமுடியும் என்றால் பிரதிமா விஞ்ஞானத்தினாலேயேதான். மற்ற விஞ்ஞானத்தால் பிரம்மத்தின் ஒரு சில அம்சங்களை, ஒரு சில கூறுகளை மட்டுமே உணர முடியும். பிரதிமா விஞ்ஞானம் மட்டுமேதான் பிரம்மத்தின் நிலையை முழுமையாக உணரச் செய்வதுடன், முழுமையாக அடையவும் செய்ய வல்லது. இந்தப் பிரதிமா விஞ்ஞானத்தை இந்திய தத்துவ உலகும் சமய உலகும் பலநூறு ஆண்டுகளாகப் புறக்கணித்தே வந்துள்ளன. இதனால் ஏற்பட்ட இழப்புகள் மிகப்பல. நேர்ந்து விட்ட பலவீனங்கள் மிகமிகப் பல.

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் பிரம்ம விஞ்ஞானத் துறையில் அடிப்படை ஆதாரம் ஏதும் இல்லாமல் ஒரு குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. பிரம்ம வழிபாடனது *நிர்குணப் பிரம்ம வழிபாடு என்றும் சகுணப் பிரம்ம வழிபாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. நிர்குணப் பிரம்ம வழிபாடு உயர்ந்தது என்றும் சகுணப் பிரம்ம வழிபாடு தாழ்ந்தது என்றும் போதிக்கப்பட்டது. இதிலே வேடிக்கை என்னவென்றால், சகுணப் பிரம்ம வழிபாடு உயர்ந்தது அல்ல என்று போதித்த போதக ஆசிரியரே, சகுணப் பிரம்ம உபாசனை செய்வோரைக் காட்டிலும் அதிகமான அளவில் அங்கங்கே பிமபங்களையும் யந்திரங்களையும் நிறுவி, அதிகமான அளவில் சகுண வழிபாட்டிற்குரிய தோத்திரங்களையும் பத்ததிகளையும் இயற்றியுள்ளதுதான். பிரதிமா விஞ்ஞான நுட்பங்களை நிர்க்குணப் பிரம்மவாதிகளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வாஸ்து விஞ்ஞானப்படி, நிஷ்களம் என்பது அருவம்

* நிர்குணத்தை நிஷ்களம் என்றும் சகுணத்தை சகளம் என்றும் சொல்வதுண்டு. ஆகமமும் வாஸ்துவும் இப்படிச் சொல்லும்.

அல்ல; உருவமே இல்லாத நிலை அல்ல. உருவத்தின் சூக்கும நிலை நிஷ்களம் என்றும் உருவத்தின் தூல நிலை ஸகளம் என்றும், சூக்கும நிலையானது தூல நிலைக்கு வருவதற்கு முன் உள்ள இடைப்பட்ட நிலையை ஸகள நிஷ்களம் என்றும் வாஸ்து விஞ்ஞானம் கூறும்.

**தூல நிலையால் சூக்ஷ்ம நிலையை அறிவதும் தூல நிலை மூலம் சூக்ஷ்ம நிலையை அடைவதும் வாஸ்து விஞ்ஞானம் கற்றுக் கொடுக்கும் அதி உன்னதமான ஆன்மிகப் பயிற்சிகளாகும். வாஸ்து - ஆகம வழிப்பட்ட நுட்பங்களாகும்.**

**''புஷ்பத்தால் மணத்தை அறிவது போன்று, சகளத்தால் (பிம்பத்தால்) நிஷ்களத்தை அறிக'' என்று அஜிதாகமம் அறிவுறுத்துகிறது. (ஸ்தபதி சொல்வது யாதெனில் நிஷ்களமே சகளமாக உளது. அந்த நிஷ்களமே கருவறையில் துருவபேரமாக உளதாகும்.)**

எந்த ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டனவாக ஆகுமோ அதுவே பிரம்மம் என்பது உபநிஷதக் கோட்பாடு. பிரம்ம ஞானம் அனைத்து ஞானத்தையும் உள்ளடக்கியது என்பது இதன் உட்பொருள். இதே கருத்தை வாஸ்து சூத்திர உபநிஷதம் பிரகடனப்படுத்துகிறது. ''ரேகாக் ஞானம் ஸர்வம் இதிக்ஞேயம் (2:16)'' ''கோடுகளால், சூத்திரங்களால் உருவாகும் பிரதிமை தொடர்பான ஞானம் அனைத்து ஞானத்தையும் உள்ளடக்கியது என அறிய வேண்டும்'' என்பது இந்தச் சூத்திரத்தின் பொருள். ''ரூபக்ஞானாத் யக்ஞ: ப்ரபவதி லோகே'' (6:25 உரை) என்ற வாக்கியமும் வாஸ்து சூத்திர உபநிஷதத்தில் காணப்படுகிறது. ''வேள்வி என்பதாகிய பிரம்ம ஞானம், உலகில் ரூப ஞானத்தாலேயே உண்டாகிறது'' என்பது இதன் பொருள். **பிரம்ம ஞானத்தை உணரச் செய்வதும் அனுபவிக்கச் செய்வதும் பிரதிமா ஞானமே. ரூப ஞானமாகிய பிரதிமா ஞானம் தேவையில்லை எனில் வேதமந்திரங்களே வெளிப்பட்டிருக்காது; ஆகமங்களும் அருளப்பட்டிருக்காது.**

இந்தக் கருத்துக்களை மனத்தில் பதித்துக் கொண்டு, இனி ஸ்தபதியார் கூறும் கருத்துக்களை உணர்ந்து கொள்ள வேண்டும். ''மனிதனின் முதல் விஞ்ஞான ஆய்வே இதுதான். இதனை நாம் அலக்ஷியப்படுத்தி விட்டோம். பொதுப்படையாக இந்த மூலத்தை, பிரம்மம் என்று ஒரு பெரிய சொல்லைச் சொல்லியதோடு விட்டுவிடாமல் அஃது ஒன்றே என்றும் அடித்துப் பேசிவிட்டு இன்னொரு வாயால் 'எல்லாம் பிரம்மம்' என்று நமக்குச் சொல்லியது வேதமாகும். இந்தக் கருத்தை ''ஜகத் ஸர்வம் சில்பமேவ'' என்று ஓர் உபநிஷதம் வேறுவிதமாகச் சொல்கிறது. சில்பவித்யா ரஹஸ்யோபநிஷத் என்பது அதன் பெயராகும். ஞாலக் கோலங்களெல்லாம் சிற்பங்களே என்பது அந்த மகாவாக்கியத்தின் பொருளாகும்''; ''எல்லாம் பிரம்மம்'' ''எல்லாம் சிற்பம்'' என்றால் பிரம்மமும் சிற்பமும் ஒன்றா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? 'ஆம்' என்று இப்போது சொன்னால் நம்பமாட்டீர்கள். இறுதியில் 'ஆம்' என்று நீங்களும் சொல்ல வேண்டும் என்பதே இக்கட்டுரையின் லக்ஷியமாகும்.

ஆம் என்று நான் ஆதாரத்துடன் கூறிவிட்டேன்.

இந்தப் பிரம்ம ஞானமாகிய பிரதிமா ஞானத்திற்குரிய, ரூப ஞானத்திற்குரிய துல்லியமான கணக்கை, அளவியலை, இம்மியளவும் பிறழாத வண்ணம் இனிது கண்டு, வஸ்து ஞானமாக, வாஸ்து விஞ்ஞானமாக வழங்கியவன்தான் மயன்.

பிரதிமா விஞ்ஞானமும் வாஸ்து விஞ்ஞானமும் ஒன்றே. எப்போதும் நிலைத்திருக்கும் மூலப் பரம்பொருளை உபநிஷதங்கள் 'ஸத்' என்று அழைக்க, ஆகமங்களும் சிற்ப சாத்திரங்களும் 'வஸ்து' என்றேதான் அழைக்கும். மூலப்பொருள் ஒன்று உண்டு என்று தர்க்கரீதியாக நிறுவ முற்படும் ஆகமம் ''வஸ்து நிச்சயம்'' என்று கூறுகிறதே தவிர 'ஸத் நிச்சயம்' என்று கூறவில்லை. வஸ்து என்பதன் பரியாயப் பெயர்தான் 'ஸத்' என்பது. ஆனால் இடைக்கால வேத விற்பன்னர்கள் 'வஸ்து' வேறு

'ஸத்' வேறு என்று பேதப்படுத்திக் காணும் அளவுக்கு ரூப ஞான நுட்பம் அறியாமல் மருண்டு விட்டனர். பிரம்மமே பிரபஞ்சமாக ஆகிறது, பிராம்மமாக ஆகிறது என்று தத்துவம் பேசியோர் பிரம்மமாகிய வஸ்துவே வாஸ்துவாகிறது என்ற பிரத்யக்ஷமான பிரபஞ்ச நிகழ்ச்சியை ஏனோ ஒதுக்கித் தள்ளி விட்டனர். இவர்களது கருத்துரைகளால் சூத்திரம், குணம், சூத்ராத்மா, புருஷன், பிரம்ம சூத்திரம் முதலான வஸ்து விஞ்ஞானச் சொற்களெல்லாம் உலகியலுக்கு அப்பாற்பட்ட நெறி முறைக்கு உரியனவாகக் கருதப்பட்டு விட்டன. வாஸ்து புருஷன் உலகைத் துன்புறச் செய்யும் ஓர் அசுரன் என்று உலகினர் கருதும் அளவுக்கு, வஸ்து விஞ்ஞானம் ஒருபுறமாக ஒதுக்கப்பட்டு விட்டது. ''வாஸ்து சாஸ்திரம் ஒரு விஞ்ஞான சாஸ்திரமாகும். வாஸ்து வஸ்து என்ற சொற்கள் விஞ்ஞானச் சொற்களாகும். வஸ்துவும் வாஸ்துவும் விஞ்ஞானப் பொருள்கள்'' என்று ஸ்தபதியார் அவர்கள் புலப்படுத்தும் உண்மைகளை நன்கு உணரவேண்டும்.

எங்கும் வியாபித்து மூலப்பொருளாக, அனைத்திற்கும் ஆதிகாரணமாக உள்ள பரம்பொருளே வஸ்து. வஸ்து தன்னையே அசையும் பொருள்களாகவும் அசையாப் பொருள்களாகவும் - உயர்திணைப் பொருள்களாகவும் அஃறிணைப் பொருள்களாகவும் - பிரபஞ்சமாகவும் பிரபஞ்சப் பொருள்களாகவும் வெளிப்படுத்திக் கொள்கிறது. ஏன் வெளிப்படுத்திக் கொள்கிறது என்று கேள்வி கேட்கக் கூடாது. வெளிப்படுத்திக் கொள்வது அதன் ஸ்வபாவம்; அதன் ஸ்வரூப லக்ஷணம். திருவள்ளுவர் கூறும் 'எண்குணத்தான்' என்பவன் வஸ்து புருஷனே. எண்குணங்களின் திரட்சியாக உள்ள வஸ்து, தன்னைத்தான் வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம் தன்னைத்தானே ஸ்திரப்படுத்திக் கொள்கிறது. வெளிப்பட்டு விளங்கும் அனைத்துப் பொருள்களுமே மருவுப் பெயராக 'வாஸ்து' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. சக்தி என்பது சாக்தம் என ஆவது போன்று, அந்தரம் என்பது ஆந்தரம் என ஆவது போன்று, வஸ்து என்பது வாஸ்து என ஆகிறது. 'ஆப்ரம்ம ஸ்தம்ப பர்ய்ந்தம்' - பிரம்மா முதல் தூண் வரை உள்ள

அனைத்துமே வாஸ்துதான். இத்தகைய பொருளாழம் மிகுந்த சொல்லை சமய உலகும் தத்துவ உலகும் கவனிக்காமல் இருப்பது விந்தையாகவும் உள்ளது; வேதனையாகவும் உள்ளது. சத்-சித்-ஆனந்தம் என்ற மூன்று அம்சங்களைப் பற்றிப் பேசாத சமய மரபோ, தத்துவ மரபோ கிடையாது. ஆனால் இந்த மூன்று அம்சங்களையும் உடையதே வஸ்து என்னும் உண்மையையோ, அதுவே ஸத்தியம், ஞானம், அநந்தம், பிரம்மம் என்ற சொற்களால் குறிக்கப்படுகிறது என்னும் உண்மையையோ, பிரம்மமே தன்னை பிரபஞ்சமாக ஆக்கிக் கொள்கிறது என்பது போல் வஸ்துவே தன்னை வாஸ்துவாக வெளிப்படுத்திக் கொள்கிறது என்பதையோ சமய உலகும் தத்துவ உலகும் மனம் திறந்து பேசவில்லை. ஆனால் சமய வரம்பையும் தத்துவ வரம்பையும் அடையாளம் கண்டு, இரண்டிற்கும் அப்பாற்பட்டு விளங்கும் ஆகம உலகு என்பது 'வஸ்து' எனும் நுண்பொருளை, சூக்ஷ்ம நிலையிலும் ஸ்தூல நிலையிலும் வைத்து நன்கு விளக்கத் தவறவில்லை என்பதை அவசியம் குறிப்பிட வேண்டும். சமய உலகும் தத்துவ உலகுமே வஸ்து என்பதை மனம் திறந்து பேசாத காரணத்தால் வஸ்து, வாஸ்து என்று பேசினாலே ஏதோ வாஸ்து புருஷன் எனப்படும் பூத சம்பந்தமான விஷயத்தைப் பேச வருகிறோம் என்று நினைக்கும் அளவுக்கு உலகம் வந்து விட்டது. வஸ்து, வாஸ்து, வாஸ்து மண்டலம், வாஸ்து புருஷன் - இவை மருட்சியும் மயக்கமும் கலக்காத தூய்மையான விஞ்ஞானச் சொற்களே என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. **வாஸ்து புருஷனும் புருஷோத்தமனும் ஒருவரே; வஸ்து புருஷனும் ஆடவல்லானும் ஒருவரே. இதே அடிப்படைக் கருத்தை மனத்தில் ஆழப் பதித்துக் கொள்ள வேண்டும்*.** ''வஸ்து, வாஸ்து என்ற சொற்கள் விஞ்ஞானச் சொற்களாகும்; வஸ்துவும் வாஸ்துவும் விஞ்ஞானப் பொருள்கள்'' என ஸ்தபதியார் அவர்கள் வெளிப்படுத்தும் உண்மைக் கருத்து நன்கு உணரத்தக்கது. மேலும் அவர்கள் மேற்கோள் காட்டியுள்ள

---

* இதன் விரிவான விஞ்ஞான விளக்கத்தை ஸ்தபதியார் அவர்களின் 'விண்-ஞானக் கோயில்கள்' என்னும் நூலில் காண்க.

மயமத சூத்திரம் பிரம்மத்தின் பல்வேறு நிலைகளை வெளிப்படுத்தி விரித்து உரைக்கும் அனைத்து உபநிடதங்களின் சாரம் என்றே கூற வேண்டும். 'பிராசாதங்கள் எனப்படும் கட்டிடம் முதலிய வாஸ்துக்களில் வஸ்து உள்ளிட்டிருப்பதால் அவற்றை வஸ்துக்கள் என்றே முன்னோர்கள் சொன்னார்கள்' என்பது மயமத நூற்பா. தூண் முதல் பிரம்மா வரை உள்ள அனைத்திலும் பிரம்மத்தின் விகாஸம் இருப்பதால் - 'மூலப் பரம் பொருளின் சாந்நித்யம் இருப்பதால் - அவற்றை பிரம்மமாகவே உணரவேண்டும்' என்று அடிக்கடி கூறும் உபநிடதக் கோட்பாட்டை இந்த நூற்பா அப்படியே வெளிப்படுத்துகிறது அன்றோ? வஸ்து வேறு. பிரம்மம் வேறு எனக் கூறமுடியுமா?

வஸ்துவே வாஸ்துவாகிறது என்று விளக்குவதோடு நில்லாமல் வஸ்துவை விட வாஸ்துவே பெரியது, பெருமைக்கு உரியது என்ற கருத்தையும் ஸ்தபதியார் அவர்கள் நயம்பட எடுத்துரைக்கின்றார்கள். இறைவனைக் காட்டிலும் இறைவனின் இன்ப நிலையையும் அருள் விலாஸத்தையும் பிரகடனப்படுத்தும் அடியவர்கள் பெருமைக்கு உரியவர்கள் என்பது போன்று வஸ்துவைக் காட்டிலும் வஸ்துவின் ஆற்றலை, வஸ்துவின் சீலத்தை (rhythmic existence), வஸ்துவின் இலக்கணத்தை (harmony), அதன் துடிப்பை வெளிப்படுத்தும் வாஸ்துக்கள் பெரியவை, பெருமைக்கு உரியவை என்பதில் ஐயம் எப்படி இருக்க முடியும்? **''வஸ்து என்ற அனுபவப் பொருளை அருவப் பொருளை வெளியுலகத்திலே கண்ணால் பார்த்து அனுபவிக்கும் பிரதிரூபமாக, படிமமாக நிஜமாக்கி அந்த வஸ்துவையே அனுபவிக்கச் செய்து விடுகிறது இந்த வாஸ்து''** - இந்தக் கூற்று தத்துவங்களின் சாரமாகவே தோன்றுகிறது. இதனை உள்ளத்தில் பதித்துக் கொண்டால், கோவில் மட்டுமல்ல, ஒரு சிற்பியால் வாஸ்து இலக்கணப்படி உருவாக்கப்படும் அனைத்துமே தெய்வத் தோற்றங்களாக மதிக்கத் தக்கவை என்னும் உணர்வு வந்துவிடும். இந்தத் தெய்வத் தோற்றத்தை சிற்பியால் எவ்வாறு உருவாக்க முடிகிறது? அளவியல் எனப்படும் மான லக்ஷணத்தால் அன்றோ? ஒவ்வோர் அமைப்பிற்கும் உரியதாக வகுத்துக்

கொள்ளப்பட்ட அளவியல் இலக்கணத்தால் அன்றோ? எனவே ஒரு பிம்பத்தின், ஓர் அமைப்பின் தெய்வப் பொலிவிற்குத் தாள மானமே (அளவியலே) அடிப்படை என்பது நன்கு உறுதிப்படுகிறது.

இந்த வஸ்து-வாஸ்து தொடர்பான விஞ்ஞான நுட்பங்களை ஆகம-சிற்ப சாத்திரங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. மேலோட்டமாகப் பார்த்தால் இரு வேறு கிளைகளாகத் தோன்றும் ஆகம நூல்களையும் சிற்ப நூல்களையும் வஸ்து-வாஸ்து அடிப்படையில் ஊன்றிப் பார்க்கும் போது, அவை ஒரே வேரிலிருந்து கிளைத்தவையே என்பது தெளிவாகும். அவ்வாறு ஒரே மூலத்திலிருந்து தோன்றிய காரணத்தால்தான் பூமி பரிக்ஷை (நிலத் தேர்வு), பூமி ஸங்கர்ஷணம் (நிலத்தை உழுதல்), பூமி ஸங்கிரஹணம் (நிலத்தைக் கைக்கொள்ளல்), பதவிந்யாஸம், கிராம அமைப்பு, நகர அமைப்பு, இவற்றுக்குரிய வாஸ்து மண்டல வகைகள், பிரதிமா லக்ஷணம், தாளமானம், பிராஸாத நிர்மாணம் முதலான அனைத்து விளக்கங்களும், ஆகம நூல்களிலும் சிற்ப நூல்களிலும் எள்ளளவும் முரண்பாடு இல்லாமல், (without contrareity) பிறழ்ச்சி இல்லாமல் (without distortion) விலகல் இல்லாமல் (without deviation) மிகமிகத் துல்லியமாக விளங்குகின்றன. சிற்பிகள் ஆகம வல்லுநர்களாகத் திகழ வேண்டும் என்று சிற்ப நூல் விதிப்பதையும் ஆதிசைவர்கள் வாஸ்து சாஸ்திர விற்பன்னர்களாகத் திகழ வேண்டும் என்று ஆகம நூல்கள் விதிப்பதையும் காணும்போது இந்த இருமரபினர்க்கும் இடையே, இடைவெளி சிறிதும் இல்லாத இணக்கம் ஒன்று வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். இத்தகைய சிற்ப நூல், ஆகம நூல் இரண்டிலும் ஆழ்ந்த நூலறிவும், மரபு சார்ந்த அனுபவ அறிவும் வாய்க்கப் பெற்றிருக்கும் நம் ஸ்தபதியார் அவர்கள் சிற்ப-ஆகம இணக்கத்தையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. ''ஆகமங்கள் எல்லாவற்றிலும் வாஸ்து ஊடுருவி நின்று சிறப்பிடம் அல்லது தலைமை ஸ்தானம் வகிக்கிறது என்று சொன்னால்

மிகையாகாது. ஆகமத்துக்கு ஆகமம் இந்த வாஸ்து இலக்கணமானது மாறிடாமல் ஒரே இனப்பட்டதாக உள்ளது. இலக்கியங்கள் மாறுகின்றன, இலக்கணம் மாறிடவில்லை. இலக்கியங்கள் பல. ஆனால் இலக்கணம் ஒன்றே. எனவேதான் வாஸ்து லக்ஷணம் என்றும் வாஸ்து இலக்கணம் என்றும் ஆகம மரபிலும் இன்னும் சொல்லி வருகிறோம். வாஸ்து விஷயங்களை முன்னிலைப்படுத்திப் பிம்ப நிர்மாணத்தின் பிரமாணங்களை (அளவியலை) ஒரே மாதிரிப் பேசிய பிறகே பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம் பற்றிய பத்ததிகளை விரித்துக் கூறுகின்றனவாதலால் வாஸ்துப் பிரமாணங்களும் வாஸ்து வழிப்பட்ட உருவங்களும் அனைத்து ஆகமங்களுக்கும் அடிப்படையானவை (அ) பொதுவானவை என்பது உறுதியாகிறது அல்லவா!''

சிற்ப நூல்களையும் ஆகம நூல்களையும் ஐக்கியப்படுத்தி அவற்றில் துறைபோகிய மாபெரும் விஞ்ஞானக் கலைஞன் ஒருவன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் தோன்றினான். அவன் பாரத நாட்டுப் பரப்பில் மட்டுமல்ல. பாரெங்குமே தன் கால்களையும் கலைப்படைப்புகளையும் பதித்து நிலைப்படுத்தித் தனிக்கொடி நாட்டியவன் அவன். அவன்தான் மஹாகவி என்று புகழப்படும் மயன்; மஹரிஷி மயன். வேத வழக்கில் கவி என்பதற்கு படைப்போன் என்பதுதான் உண்மையான பொருள். ''கவிம் கவீனாம்'' எனக் கணபதிப் பெருமான் தொடர்பாக வரும் மந்திரத்திற்கு ''படைத்தற் கடவுளர் அனைவரையும் படைத்தவன்'' என்று பொருள். மயன் ஒரு மஹாகவி. மிகப் பெரிய படைப்புக் கலைஞன். ''பற்பல உயிர் படைத்தேன்'' ''பற்பல மொழி படைத்தேன்'' என்று கூறும் மயத் தமிழ்ச் சிற்பி அவன். மனிதர்க்கும் தேவர்க்கும் அசுரர்க்கும் வேண்டிய கட்டிடங்கள் அனைத்தையும் கணக்கியலின் உச்சியில் நின்று கட்டிக் கொடுத்தவனே மயத்தமிழ்ச் சிற்பி. ''மயன் அசுரத் தச்சன் - விசுவகர்மா தெய்வத் தச்சன்'' என்று வரும் புராண வசனங்கள் பிற்காலப் புனைந்துரையே. மயனும் விசுவகர்மாவும் ஒருவரே. மயனே விசுவகர்மா என (அனைத்தையும் உருவாக்குபவன் என்ற பொருளில்) அழைக்கப்படுகின்றான்.

கட்டிடக் கவிஞன் மயனே சிற்ப நூல்களின் ஆதிகுரு. இவன் தனித்தமிழில் யாத்திருக்கும் 'ஆகமம்' என்னும் நூல் இன்று கிடைக்கிறது. சமஸ்க்ருத மொழியில் இவன் எழுதிய 'மயாகமம்' என்ற நூலின் சிற்சில பகுதிகள் அடங்கிய தொகுப்பு ஒன்றும் கிடைக்கிறது. கட்டிடங்களையும் கவிதைகளையும் கணக்கின்றித் தந்த மயன் அவற்றைக் 'கணக்கு' இல்லாமல் உருவாக்கவில்லை. பிரபஞ்ச சிருஷ்டியின் ரகசியங்களை, அவற்றின் அளவியல் கூறுகளை, மூல முழுமுதலின் வெளிப்பாட்டு நிலைகளை ஸ்வயமாகவே உணர்ந்தவன் மயன்; கண்டவன் மயன். பிரபஞ்ச விஞ்ஞான (Cosmic science) அடிப்படையில் இவன் கூறும் சிற்ப நுட்பங்களை ஓரளவுக்கேனும் உணர்ந்தால்தான் புதிர்கள் (riddles) போன்று விளங்கும் சில வேத ஸூக்தங்களையும் ஆகமக் கோட்பாடுகளையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். **வேத-ஆகம ஆய்வுக்கு மயன் நூல்கள் மிகமிக அடிப்படையானவை என்பதை வேத-ஆகமத் தொடர்புடைய நிறுவனங்களும், விற்பன்னர்களும் உறுதியாக உணரவேண்டும்.** ஐந்திறம், சிற்பமாச்செந்நூல், பிரணவ வேதம் முதலான நூல்களில் எத்தகைய புராணக் குறிப்பிற்கும் இடம் தராமல், புராணச் சாயல் இல்லாமல், சிவலிங்கம், நடராஜ மூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி, ஸோமாஸ்கந்த மூர்த்தி முதலான தெய்வ வடிவங்களையும் அவற்றின் விஞ்ஞான நுட்பங்களையும் ஒளி-ஒலி அடிப்படையில் மயன் விளக்குவதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மயநூல்களில் காணப்படும் உரை அனைத்தும் புனைந்துரை இல்லாப் பொலிவுரையே; பொய்யுரை இல்லாப் பொன்னுரையே என அழுத்தமாகவும் திருத்தமாகவும் கூறலாம்.

ஆகமங்களும் சிற்பநூல்களும் விளக்கிக் காட்டும் இறைவடிவங்கள் உண்மையில் விண்-ஞான வடிவங்களே. ''வாஸ்துவானது அதாவது வீடு, கோயில் மற்றும் சிற்ப வடிவம் ஆகியவை விஞ்ஞானப் பொருள்கள். ஆகையினால்தான்

இன்னும் வழிபடு படிமங்களும் வழிபாடும் பயனுள்ளதாக இருக்கின்றன'' என்றும் ''பிரபஞ்ச நிகழ்ச்சிகள் எல்லாம் விஞ்ஞான நிகழ்ச்சிகள்தான். இந்த விஞ்ஞான நிகழ்ச்சியின் பயனைத்தான் நாம் கோவில்களிலே அனுபவிக்கிறோம்'' என்றும் ஸ்தபதியார் அவர்கள் இந்த விஞ்ஞானப் பின்னணியை எடுத்துக் காட்டுகின்றார்கள்.

மயன் தன் நூல்களில் விளக்கிக் காட்டும் இறை வடிவங்களெல்லாம் வியாஸரால் புராணங்கள் புனையப்பட்ட காலத்திற்கும் முன்னரேயே வழக்கில் இருந்திருக்கின்றன என்பதை நாம் வாதுள ஆகமம் மூலமாகவும் ஸ்காந்த புராணம் மூலமாகவும் உணர்ந்து கொள்ளலாம். மயன் கூறும் பிம்ப அல்லது பிரதிமா விஞ்ஞான நுட்பங்களுள் தலையாயது ஆடலான் வடிவ நுட்பமே. ஆடலான் வடிவமே மூலபிம்பம்; மூல வடிவம். ஸ்தபதியார் அவர்கள் கூறுவதுபோன்று, துருவபேரம். கருவறையில் நாம் காணும் துருவபேரம், இதனது பிரதிபிம்பமே. துருவபேரம் என்பது காலம் ஒழிந்த நிலையில் அசலமாக அதாவது நகராததாகத் திகழ்வது. இந்தக் கருத்தைக் கூற வரும்போது ஸ்தபதியார் அவர்கள் ''பண்டைச் சிற்பியர் அசலத்தை விஸ்வபிரம்மன் என்றும் சலத்தை விசுவகர்மன் என்றும் கூறுவர். சலத்தைக் கர்மார்ச்சை என்றும் அசலத்தை துருவம் என்றும் சொல்வது நன்கு ஒத்துள்ளதைக் காண்க. வாஸ்து விஞ்ஞானப் பார்வையில் அசலம் பரப் பிரம்ம நிலையையும் சலம் என்பது பிரம்மத்தின் இயக்க நிலையையும் குறிப்பிடும். ஆங்கிலத்தில் சொன்னால் அவைமுறையே potential மற்றும் kinetic-ஐக் குறிக்கும். இந்த விஞ்ஞான நுட்பத்தைக் காட்டுவதாக துருவமும் கர்மார்ச்சையும் இருப்பதை உற்றுணர்க. ''சாதாரண நடைமுறை உலகத்தில் 'நகர்வன' 'நகராதன' என்ற கருத்தில் இவ்விரண்டு வகைப் படிமங்கள் சொல்லப்படவில்லை'' என விளக்கம் தருவதை நாம் பன்முறை சிந்தித்து உணரவேண்டும். இது மிகமிக நுட்பமான பிரதிமா விஞ்ஞான அல்லது ரூப விஞ்ஞானக் கருத்தாகும். ஸ்தபதியார் கூறும் கூற்றுக்களை மேலும் விளக்கமுறக் காண்பது இங்கு அவசியமாக உள்ளது.

அசையா நிலையில், அக்ஷர பிரம்மமாக, துருவமாக விளங்கும் ரூபம் ஒன்று உண்டு. அதுவே மூலவடிவம், மூலரூபம். மயன் மொழியில் கூறவேண்டுமானால் ரூப மூலம். நாம் காணும் ரூபங்களுக்கெல்லாம் மூலம். இந்த மூலத்திலிருந்துதான் கோடானு கோடி ரூபங்கள் தோன்றுகின்றன.

வடிவ விஞ்ஞான நுட்பங்களை மிகுதியாகப் பேசும் ஆகமங்களுள் முக்கியமானவை மகுடாகமும் வாதுள ஆகமும் ஆகும். இவற்றுள் மகுட ஆகமம் கூறும் கருத்தை முதலில் காண்போம்.

सृष्ट्यर्थं लोकरक्षार्थं लोकस्योत्पत्तिकारणं
साधकानां हिदार्थाय सङ्ग्रहेत् स्वेच्छयातनुं
पालनार्थं सभावासं दक्षिणेश्वरं अत्भुतम्
सदानृत्तं महाज्योतिस्थम्भालंबनं ईश्वरम्
आनन्दरूपमध्यस्थं शिवं परमकारणम्
तदसतश्च त्रिधा प्रोक्तं निष्कलं चतथापुनः
सकलनिष्कलं चैव सकलंच यथाक्रमम्

— मकुटागमे II: 604-607a

''ஸ்ருஷ்ட்யர்த்தம் லோகரக்ஷார்த்தம் லோகஸ்யோத்பத்தி காரணம்
ஸாதகானாம் ஹிதார்த்தாய ஸங்க்ரஹேத் ஸ்வேச்சயா தனும்
பாலனார்த்தம் ஸபாவாஸம் தக்ஷிணேச்வரம் அத்புதம்
ஸதாந்ருத்தம் மஹாஜ்யோதிஸ்தம்பாலம்பனம் ஈஸ்வரம்
ஆனந்தருப மத்யஸ்தம் சிவம் பரமகாரணம்
ததஸதச்ச த்ரிதா ப்ரோக்தம் நிஷ்களம் சததாபுன:
ஸகள நிஷ்களம் சைவ ஸகளம்ச யதாக்ரமம்''

— மகுடாகமம் II: 604-607a

''படைப்பின் பொருட்டும், உலக பரிபாலனத்தின் பொருட்டும், உலக உற்பத்தியின் பொருட்டும், வழிபடுவோர்க்கு அருள்புரியும் பொருட்டும், பரம்பொருள் தன் இச்சையாலேயே ஓர் உருவத்தைத் தரித்துக் கொள்கிறது. அந்த மூலப் பொருள் சிற்சபையில் வாசம் செய்வது; தென்திசை நோக்கி இருப்பது; அற்புதமான ரூபம் உடையது; எப்பொழுதும்

நிருத்தம் செய்வது; பெரும் ஒளித் தூணாகத் திகழ்வது; அது ஆனந்த ரூபம். அந்த ரூபத்தின் மத்தியில் பரமகாரணமான சிவம் விளங்குகிறது. அந்த ஆனந்த சிற்சபேச ரூபமே பிறகு மூன்று விதங்களாக வெளிப்படுகிறது. நிஷ்களம், ஸகள நிஷ்களம், ஸகளம் என்பன முறையே அந்த மூன்று வகை வடிவங்களாகும்''.

ஆலயத்தின் கருவறையில் பிரதிட்டை செய்யப்பெறும் சிவலிங்க வடிவம் ஸகள-நிஷ்கள வடிவம்; இதனினும் நுண்மையானது நிஷ்களம். இந்த நிஷ்களமும் வெளிப்படுவதற்கு இடமாக உள்ளது ஆனந்தமான தாண்டவேசுரவடிவம் — இதுதான் மகுடாகமம் வெளிப்படுத்தும் நுட்பக்கருத்து. இந்த நடராஜ வடிவம், வடிவங்கள் வெளிப்படுவதற்கு மூலமாகத் திகழ்வது என்பது இதனால் புலனாகிறது. இதுதான் துருவப்படிமம்.

துருவ வடிவமான நடராஜவடிவமே தன்னைச் சிவலிங்கமாக வெளிப்படுத்திக் கொள்கிறது. அதாவது நடராஜனின் பிரதிபிம்பமாகவும் அசலமாகவும் துருவமாகவும் சிவலிங்க வடிவம் கருவறையில் ஸ்தாபிக்கப்படுகிறது. ஆகையால்தான் சிவலிங்க பூஜையின் போது பூஜகர் 'இது லிங்கம்' என்ற எண்ணத்தைப் போக்கி, 'இது ஆனந்த ரூபமான, ஜோதிரூபமான நிருத்தேசுவர மூர்த்தி' என்ற பாவனையைக் கொள்ள வேண்டும் என மகுடாகமம் விதிக்கின்றது.

पूर्वाकृतिं परित्यज्य सादाख्याकृतिरेवच ।
सादाख्येच तदूर्ध्वे च विन्यसेत् नृत्तरूपकम् ।
......
सादाख्यस्य च रूपंतु ध्यात्वा मध्ये नटेश्वरम् ।।
— मकुटे II: 289-292)

''பூர்வாக்ருதிம் பரித்யஜ்ய ஸாதாக்யாக்ருதிரேவச
ஸாதாக்யே ச ததூர்த்வேச விந்யஸேத் நிருத்தருபகம்
........
ஸாதாக்யஸ்ய ச ருபம்து த்யாத்வா மத்யே நடேஸ்வரம்''
— மகுடம் II: 289-292)

''முந்தைய வடிவமான லிங்க ரூப பாவனையை விலக்கி, ஸாதாக்ய வடிவமான லிங்க வடிவத்தின் மேல்பாகத்தில் தாண்டவ மூர்த்தியைப் பாவிக்க. ஸாதாக்யமான சிவலிங்க ரூபத்தின் மத்தியில் நடேசுவரப் பெருமானைத் தியானிக்க''.

— இவ்வாறு கூறுகிறது மகுடாகமம். அருவமும் உருவமும் கலந்த சிவலிங்க வடிவத்தில் தியானிக்கப்படும் வடிவம் அருவநிலையும் கடந்த தனி உருவம்! தாண்டவ உருவம். இந்தத் தாண்டவ வடிவத்தைத்தான் மயன் விளக்குகின்றான். இந்த ஆடலான் வடிவம் பரவடிவம். இந்த வடிவத்தை நோக்க, சிவலிங்க வடிவம் அபரவடிவம். அனுக்ரஹம் செய்வதற்காகவே அபரவடிவத்தைக் கொள்கிறது பரவடிவம்.

पुंसां अनुग्रहार्थंतु परोऽपि अपरतां गतः। ''பும்ஸாம் அனுக்ரஹார்தம்து பரோபி அபரதாம் கத:'' என்று கூறுகிறது கிரணாகமம் [III: 24] ''உயிர்க்கூட்டங்களுக்கு அருள்-புரிவதற்காகவே, பரவடிவம், ஸூக்ஷ்மநிலையில் இருந்தாலும் அபரவடிவத்தை ஏற்றுக் கொள்கிறது''. மூலபிம்பம் நடராஜ வடிவம்; சிவலிங்க வடிவம் பிரதிபிம்ப வடிவம். (பொதுவாக, எல்லா ஆலயங்களிலும் கருவறையில் ஸ்தாபிக்கப் பெறும் வடிவத்தை லிங்க வடிவம் என்றே கொள்ளலாம்) பரிபாலனத்தின் பொருட்டு, சிவலிங்க வடிவத்திலிருந்து வெவ்வேறு வடிவங்கள் வெளிப்பட்டு வருகின்றன. **ரூபம்** - ஆடலான் வடிவம்; **அரூபம்** - சிவலிங்க வடிவம்; **ப்ரதிரூபம்** - வெவ்வேறு பிம்பங்கள். இதை மனத்தில் இருத்திக் கொண்டு, கீழ்வரும் ருக்வேத மந்திரத்தைப் படியுங்கள்; இம்மந்திரத்தின் உட்பொருள் தானாகவே விளங்கும்.

**रूपोरूपो प्रतिरूपो बभूव तनस्यरूपं प्रतिचक्षणाय ।**
**इन्द्रो मायाभिः पुरुरूप ईयते युक्ताह्यस्य हरयः शतादशः**
**— ऋक वेदे VI:47:18**

''ரூபோ ரூபோ ப்ரதிரூபோ பபூவ தநஸ்யருபம் ப்ரதிசக்ஷணாய!
இந்த்ரோ மாயாபி: புருருப ஈயதே யுக்தா ஹ்யஸ்ய ஹரய: சதாதச!!
[ருக்: VI: 47 : 18]

''ரூபமே அரூபமாகவும் ப்ரதிரூபமாகவும் ஆகிறது. அந்த வடிவமெல்லாம் மீண்டும் வெவ்வேறு வடிவங்களாக ஆவது உலகம் தன்னை உணர்வதற்காகவே; இந்திரனாய பரம்பொருள் தன்மயமாக்கும் சக்தியால் எண்ணற்ற வடிவங்களைத் தாங்குகின்றது. ஆயிரமான ஹரிவடிவங்களும் அவற்றோடு ஒத்தவையே''.

இது மிகவும் தெளிவான பொருள். ஆனால் வஸ்து-வாஸ்து தொடர்பான விஞ்ஞான நுட்பம் தெரியாத காரணத்தால் வேத உரையாசிரியர்களுள் ஒருவரேனும் இம்மந்திரத்தின் உட்பொருளை உள்ளவாறு விளக்கவில்லை. ரூபோ ரூபோ என்ற தொடரை ரூபம் ரூபம் எனக் கொண்டு, அவ்வாறே எழுதியும் அச்சிட்டும் இடர்ப்பட்டிருக்கின்றார்கள் அவர்கள். ஆதிசைவ மரபில் இம்மந்திரம் ரூபோ ரூபோ என்றே ஓதப்படுகிறது.

மூல பிம்பமான நடராஜரூபம் ரூபங்களுக்குரிய மூலக் கணக்கையும் கொண்டுள்ளது. பிரதிமா என்ற சொல்லே பிரதியாக உள்ள அளவு என்ற பொருளுடையதுதான். மூலமாக உள்ள அளவு மா; பிரதியாக, பிம்பமாக உள்ள அளவு பிரதிமா. பிம்பம் பிரதிபிம்பம் என்னும் வழக்காறு போன்று மா, பிரதிமா என்னும் வழக்காறு ஏற்பட்டுள்ளது. மூலபிம்பத்திற்குரிய மூலக் கணக்கே பிரதி பிம்பங்களுக்கும் வேவ்வேறு வகைகளில் கையாளப்படுகிறது. எனவேதான் அசல பிம்பமாக இருப்பினும் சலபிம்பமாக இருப்பினும் அளவுக் கணக்கில் பிழை ஏற்படக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது.

इन्द्रचापमिवाकाशे दर्पणे प्रतिबिंबवत् ।
इत्येतन्मनसाकल्प्य सकलं निष्कलं भवेत् ।।

— (I : 89)

''இந்த்ரசாபம் இவாகாசே தர்பணே பிரதிபிம்பவத்
இத்யேதன் மனஸா கல்ப்ய ஸகளம் நிஷ்களம் பவேத்''

[I: 89]

''ஆகாசத்தில் தோன்றும் வானவில் போன்றும்,

கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பம் போன்றும், தன் மன த்தால் கற்பித்துக் கொண்டு, மூலபிம்பம், ஸகளநிஷ்களமாக ஆகிறது''.

**மூலபிம்பத்தின் மூலக்கணக்கின் அடிப்படையில் உருவாக்கப்படுவதால், வாஸ்து மரபுப்படி உருவாகும் வடிவங்கள் அனைத்துமே - கட்டிடங்கள் உட்பட - விஞ்ஞான வடிவங்கள்தான். இந்த விஞ்ஞான வடிவங்களுக்குரிய கணக்கியலைக் கண்டவன் மயன்; மூலபிம்பத்தின் சீலக் கணக்கியலை உணர்ந்தவன் மயன். எனவே கடவுளுக்கு வடிவத்தைக் கண்டவன் மயன் என்பது மறுத்தற்கியலாத கருத்தும் மதித்துப் போற்றுதற்குரிய கருத்துமாகும். மயன் கண்ட கணக்கியல் பிரபஞ்ச அமைப்பு (Cosmic structure) பிரபஞ்ச இயக்கம் (Cosmic movement), பிரபஞ்சப் பொருள்களுக்கு இடையே உள்ள இணக்கம் அல்லது இசைவு (Cosmic harmony) - இவை அனைத்தையும் உள்ளடக்கியது.**

இந்தக் கணக்கியல் அடிப்படையில் அவன் உருவாக்கிய நகரங்கள், சிற்றூர்கள், கட்டிடங்கள், அரண்மனைகள், கோவில்கள், வீடுகள் முதலான அனைத்தும் இன்னும் ஆன்மிகத் துடிப்புடன் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் படைப்புகளின் அருகே நாம் நிற்கும் போது, அழிபாடுகளுக்கு இடையேயும், அறுபட்டுப் போகாமல் இருக்கின்ற ஆன்மத் துடிப்புகளை நன்கு அனுபவிக்க முடிகிறது. அவன், உருவ அல்லது கட்டிட நிர்மாணத்திற்காக விதித்துக் கொடுத்துள்ள சட்ட திட்டங்கள் இலக்கணங்கள் அனைத்தும் பிரபஞ்ச நிலைபேற்றுக்கும் ஆதாரங்களாக விளங்குகின்றன. அவன் உருவாக்கிய வாஸ்து மரபால்தான், வடிவங்களின் நிலைபேற்றை நம்மால் உணரமுடிகிறது.

''அந்தப் பரவஸ்துவின் இயல்பையும் இயக்கத்தையும் இலக்கணமாக்கி, எண்ணாக்கி, எண் வடிவமாகவும் ஆக்கி வாஸ்து இலக்கணமாக வைத்துக் கொண்டிருக்கிறது வாஸ்து. இந்த இலக்கணத்தின் இலக்கியமாகத்தான் சிற்பிகள்

இறைவடிவங்களையும் இறை சார்ந்த பறவைகள், விலங்குகள், செடிகொடிகள், மரங்கள் ஆகிய அனைத்தையும் இயற்றி ஓர் அற்புதமான ஆன்மிக உலகத்தையே சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று துணிந்து கூறலாம். இக்காரணம் பற்றியே சிற்பியர் படைத்த உருவங்கள் வேறு மரபுகளைச்சார்ந்த கலைவடிவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டுத் தனித்தும் விசேடித்தும் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஆன்மிக உணர்வுகளே ஓர் இலக்கண வரம்புக்குள் கட்டுண்டு உள்ளங்கவர் உருவங்களாகத் திரிபுற்றிருக்கின்றன என்று உறுதியாகச் சொல்லலாம். அதுமட்டுமல்ல, அங்ஙனம் படைத்திட்ட பொருள்கள் காலத்தைக் கடந்தும் நிற்கின்றன என்பது பிரிதொரு உண்மை. இந்த நிலையானது வாஸ்து இலக்கணத்தின் உச்சநிலை அல்லவா? ... வாஸ்து வடிவங்கள் பிரம்மப்பொருளை இம்மண்ணில் நிலையாக நிறுத்தி விடுகின்றன. பலநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட இவ்வடிவங்களை இன்றும் நாம் காணமுடிகிறது. இங்ஙனம் செய்வது விஞ்ஞானம்தான்''.

என ஸ்தபதியார் தரும் விளக்கம், மயன் வழிப்பட்ட வாஸ்து விஞ்ஞானத்தின் தனி ஆற்றலைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**சப்தப் பிரபஞ்சமும் அர்த்தப் பிரபஞ்சமும் - ஒலி ஞாலமும் ஒளி ஞாலமும்:**

வஸ்து எனப்படும் பரம்பொருள் எப்பொழுதும் தன்னை பிரபஞ்சமாகவும் பிரபஞ்சப் பொருளாகவும் (உயிர்ப்பொருள்களாகவும், துடிப்புடைப் பொருள்களாகவும்) வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும் இயல்புடையது எனக் கண்டோம். இந்த வெளிப்பாடு இரண்டு வகைப்பட்டது. ஒன்று சப்தப்பிரபஞ்சம் அல்லது ஒலி ஞாலம்; மற்றொன்று அர்த்தப் பிரபஞ்சம் அல்லது ஒளி ஞாலம். பிரபஞ்சத்திலுள்ள மொழிகள், மொழி பேதங்கள், ஓசைகள், ஓசை வகைகள் அனைத்துமே ஒலி ஞாலத்துள் அடங்கும். அவ்வாறே பிரபஞ்சமும் பிரபஞ்சப் பொருள்களும், உருவங்களும், கட்டிடங்களும் ஆகிய அனைத்துமே அர்த்தப் பிரபஞ்சத்துள் அடங்கும். சப்தப்

பிரபஞ்சம் அர்த்தப் பிரபஞ்சம் இரண்டுமே ஒன்றையொன்று சார்ந்தவை. எதுவும் தனித்து இயங்காது; தனித்துத் தோன்றாது. ஒலி தோன்றும் பொழுதே, அர்த்தமும் அதாவது பொருளும் தோற்றம் கொள்கிறது. சப்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பது சப்தப் பிரம்மமாகிய வஸ்து, அர்த்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பது அர்த்தப் பிரம்மமாகிய வஸ்து. வஸ்துப் பிரணவம் ஓம் ஒலி எனவும் ஓம் ஒளி எனவும் விளங்குகிறது. ஓம் ஒலி சப்தப் பிரம்மத்தையும் ஓம் ஒளி அர்த்தப் பிரம்மத்தையும் வெளிப்படுத்துகிறது. மேலும் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் ஒளிதான் ஒலிக்கே மூலம் என்பது புலப்படும். ''இந்த ஒளி என்ற மூலத்தைத்தான், இந்த ஒளிப் பொருளைத்தான் வஸ்து என்று வாஸ்து சாஸ்திரம் கொண்டிருக்கிறது''. ஓம் ஒலியின் திறத்தையும் ஓம் ஒளியின் திறத்தையும் நுட்பமாகக் கண்டு உணர்ந்து-உணர்த்தும் மயன் வழிநின்று ஸ்தபதியார் அவர்கள் ஒலி மூலத்தையும் ஒளி மூலத்தையும் நன்கு விளக்கிக் காட்டி இருக்கின்றார்கள். ஒலிப் பிரணவம் ஒளிப் பிரணவம் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் மயன் கண்டுணர்ந்த கணக்கியலின் தனிச்சிறப்பையும் அவர்கள் புலப்படுத்தி இருக்கின்றார்கள். ''ஒலியானது (அ) ஒளி அணுக்களானவை எத்தகைய கணக்கில் ஒலிப்பொருள்களாக - சொல்லாகத் திரிபுறுகின்றன என்ற நுட்பமே சொல்லியல் எனப்படும். அதேபோல ஒளி அணுக்களால் உருப்பெறும் ஒளிப்பொருள் பற்றிய கணக்கியலுக்குப் பொருள் இயல் என்று பெயர். இரண்டுக்கும் - அதாவது சொல்லுக்கும் பொருளுக்கும் ஒரே கணக்கியல் இயற்கையிலேயே அமைந்திருப்பதைக் கண்டு சொன்னவன்தான் மயன்'' எனப் பாரதநாட்டு ரிஷிக் கவிஞர்களுக்குள்ளே, மயனுக்குரிய தனி ஆற்றலை உள்ளவாறு காட்டுகின்றார் ஸ்தபதியார்.

ஒளியே மூலப்பொருள் என மேற்கூறப்பட்டது. ஒளி, பிரகாசமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், வஸ்துவின் உணர்வாகவும் விளங்குகிறது. 'ஒளி என்ற சொல்லுக்கு உணர்வு என்றுதான் பொருள்'' எனக் கூறுகின்றார் ஸ்தபதியார். ஒளி-உள்ளம்-உணர்வு ஆகிய மூன்றும் இணைபிரியாதவை.

மூலமாகிய வஸ்து தன்னை எப்பொழுதும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது என முன்னர்க் கண்டோம் அல்லவா? அவ்வாறு வெளிப்படுவது, அது கொள்ளும் உணர்வால்தான். உணர்வினை 'இச்சை' என்று கூறும் ஆகமம். இச்சாசக்தி என்பது, உண்மையில் உணர்வுதான். **संग्रहेत् सर्वेच्छया तनुम्** **'ஸங்க்ரஹேத் ஸ்வேச்சயா தனும்'** என மகுடாகமம் கூறுவதை முன்னர்க் கண்டோம். ஸ்வேச்சயா - தன் இச்சையால்; தன் உணர்வால். ஐதரேயம், பிருகதாரண்யகம் முதலான உபநிடதங்களிலும் வஸ்து பிரம்மத்தின் இச்சை, அதாவது படைக்க வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் என எழும் உணர்வு விரிவாகப் பேசப்படுகிறது. அந்தராகாசம் எனப்படும் அகவெளி அல்லது உள்வெளியாகிய உள்ளத்தில் எழும் உணர்வுதான், அனைத்து வெளிப்பாடுகளுக்கும் மூலம். ''நான் இவ்வாறு ஆவேனாக'' ''இது இன்ன வடிவத்துடன் வெளிப்படுவதாக'' - என்றெல்லாம் சூழ்நிலைக்கேற்றவாறு வஸ்துப் பிரம்மத்திடம் எப்பொழுதும் அந்த உணர்வு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த உணர்வு என்னும் ஒளிக்கோடுதான், ஒளிநூல்தான் பிரம்ம சூத்திரம் எனப்படுகிறது. தொடக்க நிலையில் இந்த ஒளிநூலில் மூன்று பிரதான இழைகள் உண்டு. சத்வம், ரஜஸ், தாமசம் என்பனவே அந்த மூன்று இழைகள். ஆனால் இந்த மூன்றையும் மனித உள்ளத்திலே குடிபுகுந்துவிட்ட ஸத்வாதி குணங்களோடு சாம்யப்படுத்தக்கூடாது. நமக்கும் வடிவம் உண்டு; வஸ்துவுக்கும் வடிவம் உண்டு. ஆனால் நமது வடிவம் வஸ்து பிரம்மத்தின் வடிவுபோன்றே ஆகிவிடுமா? அதுபோல்தான். தொடக்க நிலையில் பிரதானமாக இருக்கும் மூன்று இழைகளும் (மூன்று குணங்களும்; குணம்=இழை) பின்னர் அபரிமிதமான தாரதம்மிய நிலைகளால் கோடானு கோடி பேதங்களைக் கொண்டு, கணக்கில்லாத வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன. ஒளி நூலாகிய உணர்வின் துடிப்புகளே தோற்றங்களாகின்றன.

உணர்வாகிய ஒளிநூலின் துடிப்பே காலம் எனப்படுகிறது. ஆகையால்தால் ''உணர்வே காலம்'' என்கிறான் மயன். காலுதல் - வெளிப்படுத்துதல் (சங்க இலக்கிய வழக்கு). காலத்தையும்

பிரம்மத்தையும் சமப்படுத்தியே காலப் பிரம்மம் என்றும் காலபுருஷன் என்றும் காலமாக் கடவுள் என்றும் மயன் கூறுகின்றான். இந்தக் கருத்தை மனத்திற் கொண்டு ஸ்தபதியார் கூறும் நுட்பக் கருத்துக்கள் நம் சிந்தனைக்கு விருந்தாகின்றன.

''காலத்திற்கும் ஒரு மூலம் உள்ளது. அதற்குக் காலமூலம் என்று பெயர். இந்தக் காலத்தையும் கடந்திருக்கும் மூலத்தை ஆதிமூலம் என்று முன்னோர் குறிப்பிட்டனர். எனவே காலம் அடங்கிய மூலம் ஆதிமூலம் ஆகும். காலம் என்பது செயல்படு மூலம். காலம் அடங்கிய மூலம் செயல்படா உயிர்ப்புள்ள மூலம். இதுவே பிரம்மம் ஆகும். காலம் படிமமாகத் திரிபுற்று அதே படிமம் காலம் ஒழிந்த மூலமாகத் கோயிற் கருவறையிலே உளது.''

''காலப் பிரம்ம நிலையை, செயல்நிலையைத்தான் வேதமானது விஸ்வகர்மன் என்று குறிப்பிடுகிறது. செயலற்ற, செயல் ஒடுங்கிய உயிர்ப்பு நிலையை விஸ்வப் பிரம்மன் என்று சிற்பிகள் கொண்டிருக்கிறார்கள்''.

''இது காலம் கடந்த நிலையிலும் உயிர்ப்புடன் இருக்கும் பொருள். எனவே வஸ்து ஆயிற்று''. காலத்தையும் கடந்த முழுமைக் காலமாக, கூறுபடாக் காலமாக விளங்குவதால்தான், ஆடலான் 'காலகாலன்' என்றும் 'காலாதீதன்'என்றும் அழைக்கப்படுகிறான். கூறுபடாக் காலம் absolute time; பிரிவுகளுக்கு உட்படும் காலம் material time *(அ)* phenomenal time இந்த இருவகைப்பட்ட காலங்களின் இயல்புகளையும் இவற்றுக்கும் பிரபஞ்சப் பொருள்களுக்கும் இடையே உள்ள இசைவையும் விரிவாகப் பேசுபவை ஆகம நூல்களும் சிற்ப நூல்களுமே. வேதங்கள் அல்ல.

''காலப் பிரம்ம நிலையை, செயல்நிலையைத்தான் வேதம் விஸ்வகர்மன் என்கிறது'' என்று ஸ்தபதியார் தரும் விளக்கத்தை நான் ரசித்து மகிழ்ந்தேன். உண்மையில் காலம் என்பதுதான் என்ன? செய்யப்படும் செயலன்றி உருவாக்கப்படும் வடிவம் அன்றி - வேறு எதுவாக இருக்க முடியும்? ''காலத்தை நொடி,

நாழி என அளப்பது உலகியல் வழக்கு. காலத்தைச் செயல்களால் உணர்வதே யோக வழக்கு'' என்று கூறுகிறது ஸர்வக்ஞானோத்தர ஆகமம்.

क्रिया ब्रम्होहि कालंतत् कालं कार्येण गण्यते
—मकुटोत्तरे

''க்ரியா ப்ரம்மோஹி காலம்தத் காலம் கார்யேண கண்யதே'' —மகுடோத்தரம்

''காலம் என்பது செயற்படும் பிரமமம் அன்றோ? அந்த காலமானது பிரம்மத்தின் செயல்களால் அளக்கப்படுகிறது'' - இவ்வாறு கூறுகிறது மகுடோத்தரம் என்னும் ஆகமம்.

காலத்தின் மிக நுண்ணிய அளவு (துடி) முதல் பேரளவான மன்வந்தரம் கல்பம் வரை உள்ள காலக் கூறுகள் அனைத்துமே பிரபஞ்ச வடிவங்களாகப் பரிணமித்திருக்கின்றன. பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் காலத்தின் சிற்றெல்லையையும் பேரெல்லையையும் தன்னளவில் கொண்டிருக்கின்றது. இது வாஸ்து விஞ்ஞானியாகிய மயன் மட்டுமே வெளிப்படுத்திக் காட்டும் கால விஞ்ஞான நுட்பமாகும். ஒரு பிம்பம் என எடுத்துக் கொண்டால் அதன் பீடத்தின் அடிப்பகுதி காலத்தின் சிற்றெல்லையையும் அதன் உச்சி காலத்தின் பேரெல்லையையும் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆலய நிர்மாண அளவில் 'ஆத்யேஷ்டகா விதி' என்பது காலத்தின் சிற்றெல்லையையும், 'மூர்தேஷ்டகா விதி' என்பது காலத்தின் பேரெல்லையையும் உணர்த்துவதாக உள்ளது. ஆலயத்தோடு ஒத்த சிறப்பும் பெருமையும் உடையதாகத் திகழ்வது ஆலயத் தேர். ஆலயத் தேர் காலத்தின் கூறுகள் அனைத்தையும் தன் வடிவச் சிறப்பால் புலப்படுத்துவதால் 'தேர்க்கலைக் காலம்' என்றே மயன் ஒவ்வொரு நூலிலும் விரிவாக விளக்கி இருக்கின்றான். காலத்தின் கூறுகளே, சிற்பங்களுக்கும் கட்டிடங்களுக்கும் உரிய தாளமானங்களாகப் பரிணமிக்கின்றன. காலமே தாளம். இசையுலகில் இது மிகவும் தெளிவாக உணரப்படுகிறது.

சிருஷ்டிச் செயலுக்கும் காலத்திற்கும் உள்ள தொடர்பை

விளக்குவதன் மூலம் ஸ்தபதியார் அவர்கள் மூலம், காலம், காலத்தின் நெறிமிக்க துடிப்பான சீலம் அல்லது லயம், காலத்தால் சீலம் வாயிலாக வெளிப்படும் கோலம் (வடிவம்), கோலங்களின் நேர்த்தியான குவியலாக விளங்கும் ஞாலம் - ஆகியவற்றின் தோற்றமுறையை மயன்வழி நின்றே மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கி இருக்கின்றார்கள். கோலத்தின் வெளிப்பாட்டிற்கு எண்ணமும் எண்ணும் எவ்வாறு ஆதாரமாக நிற்கின்றன என்பதையும் நன்கு புலப்படுத்தி இருக்கின்றார்கள்: ''உண்மையில் உணர்வாகிய எண்ணம் துடிப்புக் கணக்கால் எண்கள் என்ற கணித நிலைக்கு இறங்கி வந்துவிட்டது. மறுதலையாகப் பார்க்கின் இந்த எண் ஆனது எண்ணமாகவும் ஆகக் கூடுமல்லவா? இந்த எண்ணத்தை எண்ணாக்கிக் கொண்டதும் எண்ணை எண்ணமாக்கிக் கொண்டதும் இந்த வாஸ்து மரபுதான்'' என்று கூறுகிறார்கள். உண்மைதான். இஃது ஓர் அருமையான ஆன்மிக-யோகப் பயிற்சி எனக் கூறலாம். இஃது இடையறாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு சுழற்சி இயக்கம் (cyclic process). அகவெளியில் முகிழ்க்கும் எண்ணம், காலமாகவும், காலக் கணக்காகிய எண்ணாகவும், எண்வழிப்பட்ட வடிவமாகவும் (எண்ணுரு - Geometrical form) ஆகிறது. இந்த வடிவத்தை நாம் அனுபவிக்கும் பொழுது, இறுதியில் நாம் எண்ணமாகவே ஆகி சொல்லுக்கு அப்பாற்பட்ட ஒரு தூய்மை நிலையில் நின்று விடுகிறோம். இதனைத் தானே யோக மரபு சமாதி என்று கூறுகிறது! எளிதில் அடைதற்கரிய சமாதிநிலையை அடைய வாஸ்து மரபு எளிய வழியையும் வகுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்த எளிய வழி பலர்க்கும் புலப்படாமலேயே இருக்கின்றது. வாசி யோகம் என்று யோக மரபினர் கூறுவர். நாம் வாஸ்து யோகம் என்று கூறலாம். இந்த வாஸ்து யோகம் மூலம் 'பிரபஞ்ச விஞ்ஞான நிகழ்ச்சிகளை நிலவுலகிலே நிகழ்த்திக் காட்டித் திருப்பிச் செய்து பல கோலங்களையும் பெரியதொரு ஞாலத்தையும் படைத்தருளியவனே' மயன்; மயத்தமிழ் யோகி.

காலமும் இடமும் ஒன்றே எனும் மய விஞ்ஞான நுட்பக் கருத்தும் இந்நூலில் நல்விளக்கம் பெறுகிறது. எட்டு எட்டாகப் பெருகும் இடவாய்ப்பாடும் எட்டு எட்டாகப் பெருகும்

காலவாய்ப்பாடும் வாஸ்து வழிப்பட்ட நிர்மாணங்களில் எந்த அளவிற்குத் துல்லியமாக உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதை உணரும் போது, கால அளவும் (Time measure) இட அளவும் (Space measure) சமமாக உள்ளவையே என்பது விளங்கும். காலம் பெருக்கம் அடையும் அளவுக்கு இடமும் பெருக்கம் அடையும் என்பதுதான் வாஸ்து விஞ்ஞானம் காட்டும் நுட்பம்.

## மூலப்படிமங்கள்

நிஷ்கள வடிவத்திற்கும் தோற்றுவாயாக இருப்பது தாண்டவ ரூபம் என முன்னர்க் கண்டோம். வஸ்துவின் ஆகாச நிலைக்குரியது தாண்டவ ரூபம். சூக்ஷ்ம நிலை. பரிணாம நிலையின் இறுதியில் மண் அதாவது பூமியாக ஆகும் தூல நிலையில் வஸ்துவின் மண் நிலைக்கு உரியது அரங்கனின் ரூபம். சிறுசிறு கனசதுர அணுக்கள் எனப்படும் சிற்றவைகளின் செறிவாகவும், சிற்றவைகள் வியாபித்துள்ளதாகவும் விளங்கும் ஆகாசத் தோற்றத்தை அடுத்து, காற்று, தீ, நீர் என்பன தோன்றி இறுதியில் மண் அணுக்கள் செறிந்த பூமி தோன்றுகிறது. விண் நிலைக்கு உரியவனாக, விண்பொருளாக நடராஜப் பெருமானும் மண் நிலைக்கு உரியவனாக, மண்பொருளாக அரங்கப் பெருமானும் விளங்குகின்றனர். நடராஜ ரூபத்தையும் அரங்கராஜ வடிவத்தையும் ஸ்தபதியார் அவர்கள் மூலப்படிமங்கள் என்று கூறுவதை உளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். விண்பொருளான நடராஜனை உலோகத்தாலும் மண்பொருளான ரங்கராஜனை மண்ணாலும் வழிவழியாகச் செய்து வரும் வாஸ்து மரபின் நெறிமுறையை அவர்கள் எடுத்துக்காட்டி நடராஜன் மூலமாகிய காலம் என்றும் ரங்கராஜன் காலம் தந்த கோலம் என்றும் விளக்குகின்றார். மேலும் இவ்விரண்டு படிமங்களுமே வாஸ்து விஞ்ஞானம் கற்பித்த மூலப்படிமங்கள் என்றும் தெளியப்படுத்துகின்றார்.

மேற்கூறப்பட்ட மூலப்படிமங்கள் இரண்டிற்கு உரிய கணக்காகத் திகழ்வது நவதாளமே என்பதை ஸ்தபதியார்

அவர்கள் உறுதிப்பட நிறுவுகின்றார்கள். அவ்வாறு நிறுவும் போது, அஷ்டதாளமே எவ்வாறு நவதாளமாக ஆகிறது என்பதையும் அஷ்டதாளம் சூக்ஷ்ம வடிவத்தின் கணக்கு என்பதையும் நவதாளம் ஸ்தூல வடிவத்தின் கணக்கு என்பதையும் தெளிவாக விளக்கி வாஸ்து விஞ்ஞான அடிப்படையில் 8=9 என்றும் 9=8 என்றும் ஓர் அரிய கணக்கியற் சமன்பாட்டை அனைவரும் ஏற்கும் வண்ணம் காட்டி விடுகின்றார்.

## வாஸ்து விஞ்ஞான நுட்பங்களின் தொகுப்பு:

ஸ்தபதியார் அவர்கள் இந்நூலில் பிரகாசப்படுத்தி இருக்கும் வாஸ்து விஞ்ஞான நுட்பங்களுள் சிலவற்றைப் பற்றி மட்டுமே மேலே விளக்கிக் கூற முடிந்தது. ஒவ்வொரு நுட்பத்தையும் விரிவாக விளக்குவதாக இருந்தால் அணிந்துரையே பேருரையாகி விடும் என்ற அச்சத்தால், இதில் இடம் பெற்றிருக்கும் முக்கியமான நுட்பக் கருத்துக்கள் மட்டும் இனித் தொகுத்துக் காட்டப்படுகின்றன. இந்நுட்பக் கருத்துக்கள், முன்னரே கூறியது போன்று, விஞ்ஞான விதிகள் (Scientific rules); விதிகளை விதிகளாகவே ஏற்றுப் போற்ற வேண்டுமே தவிர விவாதித்துக் கொண்டிருக்கக்கூடாது.

''கருவின்றி நின்ற கரு'' என்றும் 'உருவின்றி நின்ற உரு' என்றும் கூறப்படும் மூலப்பொருளே - பிரம்ம மூலமே - பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணம். மூலப்பொருள் உணர்வு கொண்டு சிதறி, சிறுசிறு அணுக்களாக, சிற்றவைகளாகப் பரவி நிற்கும் வெளிப்பரப்பே ஆகாசம். ஒவ்வொரு சிறு அணுவும் உயிர்ப்பொருளே. (வாஸ்து விஞ்ஞான நோக்கில், இந்தப் பிரபஞ்சத்தில் உயிரில் பொருள், உயிர்ப்பு இல்லாத பொருள் என ஒன்று கிடையவே கிடையாது). சிறு அணுவே விண்கரு; ஒளிக்கரு. மூலம் துடித்து ஒரு சீரான கட்டுக் கோப்புடன் ஒளி வடிவமாகவும் ஒலி வடிவமாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இதுவே பிரம்மத்தின் முதல் தோற்றம். அது அமைதிநிலையில் சதுரமாகவும் செயற்பாட்டு நிலையில் 64

சிறுசதுரங்களை உள்ளடக்கிய மண்டுக வாஸ்து மண்டலமாகவும் விளங்குகிறது. மூல வஸ்து, வாஸ்து புருஷ மண்டலமாக உருமாற்றம் கொள்ளும் முறை இதுவே. வாஸ்து மண்டலத்தின் ஒவ்வொரு சிறுசதுரமும் பதம் எனப்படும். ஒலியும் ஒளியும் ஒவ்வொன்றிலும் இடம் கொள்வதால், ஒவ்வொரு பதமும் சொற் பதம், பொருட் பதம் எனவும் சொல் இடம், பொருள் இடம் எனவும் ஒலி இடம், ஒளி இடம் எனவும் கருதப்பெறும். மூலம், காலமாக வெளிப்பட, காலக் கணக்கே தாளக் கணக்காகிறது. தாளக் கணக்கின் அடிப்படையிலேயே பிம்பங்களும் கட்டிடங்களும் நிர்மாணிக்கப்படுவதால், வாஸ்து வடிவங்கள் அனைத்துமே இசை வடிவங்கள் (musical forms); இறுகி உறைந்துள்ள இசைவடிவங்கள் (frozen music). தாளக் கணக்கியலில் மூலதாளமாக விளங்குவது ஆதிதாளம் (எட்டு எண்ணிக்கை உடையது). அவ்வாறே சிற்ப-கட்டிட இயலில் முக்கியமாக விளங்குவது அஷ்டதாளம்.

இசை வடிவங்கள் காதால் கேட்டறியும் மூலத்தின் இசைப்படிமங்கள்; இடவடிவங்கள் (spatial forms) கண்ணால் பார்த்தறியும் மூலத்தின் இசைப்படிமங்கள். காலக் கணக்கின் மூலவடிவமாக விளங்குவதே வாஸ்து புருஷ மண்டலம்.

எட்டு எட்டாக, எட்டின் மடங்காக உள்ள சூக்ஷ்மமான காலக் கணக்கிற்கு உரியது மண்டுக வாஸ்து மண்டலம், ஒன்பது ஒன்பதாக, ஒன்பதின் மடங்காக உள்ள ஸ்தூலமான காலக் கணக்கிற்கு உரியது பரமசாயிக வாஸ்து மண்டலம். அஷ்டதாளம் சூக்ஷ்ம வடிவத்திற்குரிய காலக்கணக்கு; நவதாளம் ஸ்தூல வடிவத்திற்குரிய காலக் கணக்கு. பிரபஞ்ச வடிவங்கள் அனைத்துமே இறைவனின் தானியல் உருக்கள் (Self-manifest forms). இறைவன் மனித வடிவத்தில் தன் வடிவத்தையே வைத்துள்ளான். மனித வடிவத்திலே இயற்றப்பட்டிருக்கும் கடவுட் படிமங்கள் வழிபடுவதற்குத் தகுதி வாய்ந்த அருள் உருவங்களே. இந்த வடிவங்களை அமைக்கும் போது அபஸ்வரங்கள், மானஹீனங்கள் நேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

**வாஸ்து விஞ்ஞான வழிப்பட்ட விளக்கங்களுள் சில:**

நாம் நாள்தோறும் நடைமுறையில் கேட்டுக்கொண்டு வருகின்ற சில சொற்களுக்கு வழக்கமாக நாம் என்ன பொருள் கொண்டிருக்கிறோமோ அந்தப் பொருள், வாஸ்து விஞ்ஞான அடிப்படையில் மாறிவிடுகிறது. அத்தகைய வாஸ்து வழிப்பட்ட விளக்கங்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

சலம் என்றால் அசைவது அல்லது நகர்வது என்றும் அசலம் என்றால் அசையாதது அல்லது நகராதது என்றும் இலக்கிய ரீதியாகப் பொருள் கொண்டு வருகின்றோம். ஆனால் வாஸ்து விஞ்ஞானப்படி இவ்வாறு கொள்ளக் கூடாது. ''வாஸ்து விஞ்ஞானப் பார்வையில் அசலம் பரப்பிரம்ம நிலையையும் சலம் என்பது பிரம்மத்தின் இயக்க நிலையையும் குறிப்பிடும். இந்த விஞ்ஞான நுட்பத்தைக் காட்டுவதாக துருவமும் கர்மார்ச்சையும் இருப்பதை உற்றுணர்க. சாதாரண நடைமுறை உலகத்தில் 'நகர்வன' 'நகராதன' என்ற கருத்தில் இவ்விரண்டு வகைப் படிமங்கள் சொல்லப்படவில்லை'' என ஸ்தபதியார் அவர்கள் அசலம் என்பதன் வஸ்துப் பொருளையும் சலம் என்பதன் வாஸ்துப் பொருளையும் தெளிவுபடுத்துவது நன்கு உளம்கொளத் தக்கது.

அடுத்து நிஷ்களம், சகளம், சகளநிஷ்களம் என்ற வழக்காறு. நிஷ்களம் - உருவமற்றது; சகளம் - கை, கால் முதலிய அங்கங்களோடு கூடிய உருவம் உடையது; சகள நிஷ்களம் - கை, கால் முதலான அங்கபேதம் இல்லாமல் பிண்டமாக இருப்பது. இவ்வாறு கூறுவதும் பொருத்தம்தான். ஆனால் வாஸ்து விஞ்ஞானம் பிரபஞ்சம் அளாவியது. எனவே வாஸ்து விஞ்ஞான மரபில் நிஷ்களம் ஆகாசம் என்றும் சகளம் பூமி என்றும் ஆகாசத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்ட காற்று முதலான பூதங்கள் மிசிரம் அல்லது சகளநிஷ்களம் என்றும் கொள்ளப்படுகிறது. ஸ்தபதியார் அவர்கள் இந்த வாஸ்து வழிப்பட்ட விஞ்ஞான விளக்கத்தை இந்நூலில் தருகின்றார்கள். அஷ்டதாளம் நிஷ்களம்; நவதாளம் சகளம்; இரண்டிற்கும்

இடைப்பட்ட நிலை மிசிரம் என அவர்கள் தரும் விளக்கமும் மிகவும் நயம்பட உள்ளது.

மற்றொன்று 'சிருஷ்டி' அல்லது 'படைப்பு' என்பது. படைத்தல் என்றால் இதுவரை இல்லாத ஒன்றைப் புதிதாகப் படைத்தல் என்று நினைக்கிறோம். அது தவறு. சூக்ஷ்ம நிலை தூல நிலையாகத் திரிபு அடைவதுதான் சிருஷ்டி என்பது. கண்ணுக்குப் புலனாகாத நுட்பமான நிலையை, கண்ணுக்குப் புலப்படும்படி பருமையாக்கிக் காட்டுவதுதான் 'படைப்பு' என்பது. ''இந்தக் காலம் எனப்படுவது என்ன செய்கிறது? எல்லாவற்றையும் படைக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும் எல்லாமாகத் திரிபுறுகிறது, தன்னையே உருமாற்றம் செய்து கொள்கிறது என்பதை உண்மையில் நிகழ்வதாகும்'' என ஸ்தபதியார் அவர்கள் கூறும் கருத்தை ஆழ்ந்து சிந்தித்தால் படைப்பு என்பதன் விஞ்ஞானப் பொருள் நன்கு புலப்பட்டு விடும்.

இவ்வாறு இந்நூலில் இடம்பெற்றுள்ள வாஸ்து விஞ்ஞான விளக்கங்கள் பல.

**சிந்தனைக்கு விருந்தாகும் சீரிய கருத்துரைகள்:**

இந்நூலைப் பயில்வோர், முழுமையாக ஒருமுறைக்குப் பன்முறை பயில்வதுடன், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கருத்துரைகளை மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்த்து, மயன் விதித்துக் கொடுத்த விஞ்ஞான மரபு பிரபஞ்சப் படைப்புக்குரிய மூல வேர்களில் எவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதைத் தெளிவுற உணர்வார்களாக.

* கோவில்களில் வைத்து வணங்கப்படும் இறைவடிவமானது ஒரு விஞ்ஞான வடிவமாக, அருவத்தின் உருவமாக, சூக்ஷ்மத்தின் ஸ்தூலமாக, வஸ்துவின் வாஸ்துவாக இயற்றப்பட்டிருக்கிறது.
* அக உணர்வுகள் (அ) எண்ணங்கள் எப்படிச் சொல்லாகவும் பொருளாகவும் முறையே

வாய்வழியேயும் கைவழியேயும் உருப்பெற்று வெளிவருகின்றன என்னும் ஆய்வு நிகழ்ந்தாலன்றி இந்நாட்டின் கலாச்சார வேர்களை எவரும் கண்டுகொள்ள முடியாது.

* அகக்காட்சி புறக்காட்சியாக எக்கணக்கில் வெளிப்பட்டு நிற்கிறது என்பதைக் கண்டு கொண்டதைத்தான் வாஸ்து விஞ்ஞானம் என்று சொல்கிறோம். அக வடிவை அக்கணக்கால் பிரதி செய்து காட்டி அதனை வழிபடு படிமமாகக் கொடுத்ததைத்தான் வாஸ்துப் படிமங்கள் அல்லது சிற்பப் படிமங்கள் என்று சொல்கிறோம்.

* சொல் ஒலிகளுக்கெல்லாம் மூலமான ஓர் ஒலியை ஓம் ஒலி (Om sound) என்று சொல்லி வருகிறோம். இது காதால் கேட்கப்படும் ஒலி. அப்படியானால் காட்சிப் பொருள்களுக்கெல்லாம் மூலம் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா! அது கண்ணால் பார்க்கப்படும் ஒளி. இதற்கு ஓம் ஒளி என்று பெயர்.

* கோலமானது சீராக நேர்த்தியாக அமைந்திட காலமே ஒரு நெறியைத் தன்மீது சுமத்திக் கொள்கிறது. இந்த நெறிக்குத்தான் சீலம் என்று பெயர். இதைத்தான் லயம் என்று சொல்கிறோம். இது பிரபஞ்சத்தில் நிகழும்போது பிரபஞ்ச லயம்; நமக்குள்ளே நிகழும்போது ஆத்மலயம்.

  (*கவனிக்க:* இந்த ஆத்மலயம் என்பது உள்ளத்தில் நிகழாவிட்டால் உருவத்தை வடிக்கவே முடியாது. சிற்பியர்க்கு இந்த ஆத்மலயம் இயல்பாக வாய்த்து விடுகிறது. அவர்கள் ஸ்வயம் யோகியர்).

* பிரபஞ்ச லயத் துடிப்பால் இயற்றப்பட்ட, பிரபஞ்ச மூலத்தின் பிரபஞ்ச காலத்தின் வடிவாய் அமைவது மூலப்படிமம் ஆகிறது.

* இசையில் ஸ்வர விந்யாஸம் செய்வது போல

படிமக்கலையில் பதவிந்யாஸம் செய்து வருகிறோம். ஸ்வரவிந்யாஸமும் பதவிந்யாஸமும் ஒன்றே என்பது வாஸ்துக் கொள்கை.

* கடவுளைக் கணித உருவமாக - ஒரு ஜியோமிதி உருவமாகக் கொண்டு வழிபடுதலை விஞ்ஞான வழிபாடு என்று கூறலாம் அல்லவா? விண்வெளியிலே பரந்து விரிந்து கிடக்கும் சக்தியானது தன்னைத் தானே ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொண்ட விந்தையன்றோ இது! இதைக் கண்டு சொன்னது வாஸ்து விஞ்ஞானம். இறையின் primal materialised manifestation ஒரு சதுரமாகும் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? இங்ஙனம் கண்டு சொன்னவன் மயன். இக்கண்டுபிடிப்பைப் பேராசிரியர் ஐன்ஸ்டீனின் $\mathbf{E = mc^2}$-இல் நான் காண்கிறேன். $\mathbf{E = mc^2}$ என்பதை $\mathbf{E = m \times c \times c}$ என்றும் $\mathbf{E = m\,\square}$ என்றும் விரித்துப் பார்க்கும் போது **E = materialised square** என்றுதானே ஆகிறது!

* ஸ்தூலமும் சூக்ஷ்மமும் ஒன்றே என்ற வாஸ்து வழிவந்த அத்வைதக் கருத்தை எண்கணக்காகச் சொல்லும் போது 8 = 9 என்றும் 9 = 8 என்றும் சொல்வது ஒரு நுட்பமான கணக்காகும்.

* கடவுள் என்ற அந்த இறுதிப் பொருள் எதையும் படைக்கவில்லை. அதற்கு மாற்றாகத் தன்னைத் தானே புலப்படுத்திக் கொள்கிறது என்பதாகும். (Self manifestation)

* வாஸ்து விஞ்ஞானமானது, இறைவனின் வடிவத்தை ஆதிதாளத்தில் உணர்ந்து நவதாளத்தில் உருக்கொடுத்தது போல, மனித வடிவத்தை இறைவன் ஆதிதாளத்திலே நினைத்து நவதாள அளவிலே உருக் கொடுத்து இத்தரணியிலே நடமாட விட்டிருக்கிறான். எனவே அடிப்படையில் மனிதனும் ஒரு விஞ்ஞானப் பொருள்; கடவுளும் ஒரு விஞ்ஞானப் பொருள்.

* அணுசக்தியை நுட்பமாக அறிந்து ஆக்கப் பணிக்கு உபயோகித்துக் கொண்டதன் விளைவுதான் கடவுட்படிமம். கோயில் கட்டிடம் எனப்படுவதும் ஒருவகையில் கடவுட்படிமமே.

**இறுதியாக:**

வாஸ்து விஞ்ஞான மரபுப்படி நிர்மாணிக்கப்படும் உருவங்கள் - அமைப்புகள் அனைத்திற்கும், நாம் அனுபவித்துச் சுகப்படக்கூடிய ஆன்மிகத் துடிப்புகள் (spiritual vibrations) உண்டு. இந்தத் ஆன்மிகத் துடிப்புகள் அவற்றில் தாளப் பிரமாணத்தால் மட்டுமே ஏற்படுகின்றன. வழிபாட்டுச் சடங்குகளால் அல்ல. முன்னரே கூறியது போன்று வழிபாட்டு முறைகள் அந்தத் துடிப்புகளை நிலைப்படுத்திக் கொள்வதற்காகவே ஏற்பட்டன. வழிபாட்டு முறைகளில் குறை நேர்ந்தாலும் பாதகம் இல்லை, ஆனால் தாளமானத்தில் குறை ஏற்படக்கூடாது என்ற கருத்தும் முன்பேயே உறுதிப்படுத்தப்பட்டது. இப்போது மீண்டும் ஒரு விதியை நினைவு கூர்ந்து தாளமானத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்ட முற்படுகிறேன். ''பழைய பிம்பங்களைச் செப்பனிடும் போது ஏற்கனவே கையாண்டிட்ட அளவுகளை அறிந்தே புதுப்பித்தல் வேண்டும். விபரீதமாகச் செய்யின் நாடு, மக்கள், செய்விப்போன், நாடாள்வோன், செய்திட்ட பொருள் ஆகியவை பல்வேறு தோஷங்களுக்கும் குறைகளுக்கும் ஆட்பட்டுப் பலர் மரணம் அடைந்திடும் நிலையும் ஏற்பட்டு விடும்'' எனச் சிற்பியர் கையேடு கூறுவதாக ஸ்தபதியார் அவர்கள் மேற்கோள் காட்டுகின்றார். வழிபாட்டு முறைகளை மிகுதியாகக் கூறவந்த ஆகமங்கள் பலவும் 'ஜீர்ணோத்தார விதி' என்ற படலத்தில் இவ்வாறே பழைய அளவுகளை தாளமானத்தைத் துல்லியமாகப் பரிபாலிக்க வேண்டும் என்று மீறமுடியாத விதியை விதிக்கிறது. பழைய அளவுகள் மாறுபட்டால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படும் என்றும் ஆகமநூல்கள் கூறுகின்றன. ஆனால் பழைய வழிபாட்டு முறைகளை அப்படியே பின்பற்ற வேண்டும், பரிபாலிக்க வேண்டும் என்று லேசாகக் கூடக் கூறவில்லை. காரணம்,

**காலநிலைக்கேற்ப, இடநிலைக்கேற்ப வழிபாட்டு முறைகள் சிலவற்றை, மாற்றிக் கொள்வதில் தவறில்லை. ஆனால் காலநிலைக்கேற்பவோ, இடவகைக்கு ஏற்பவோ, பழைய தாளமானத்தை யவை அளவுக்குக்கூட மாற்றக் கூடாது. எனவே மயன் வகுத்துக் கொடுத்த தாளமானத்தை எல்லா நிலைகளிலும் எல்லாவற்றுக்கும் பயன்படுத்த வேண்டும் என வற்புறுத்துவது அவசியமாகிறது.**

பூமியே பிரதான வாஸ்து; முதன்மை வாஸ்து. இந்த முதன்மையான வாஸ்துவுக்கு இன்று தொழிற்சாலைகளாலும் புகை கக்கும் வாகனங்களாலும், நச்சு ரசாயனப் பரிசோதனைகளாலும் மற்றும் இவை போன்ற நடவடிக்கைகளாலும் மட்டுமே ஆபத்து ஏற்படவில்லை; வாஸ்து விஞ்ஞான விதிமுறைகளைப் புறக்கணித்து மனம் போனபடிக் கட்டப்படும் ஆலயங்களாலும் கட்டிடங்களாலும் பிம்பங்களாலும் கூட இன்று பூமித்தாய் புண்பட்ட வண்ணம் இருக்கின்றாள். புண்ணிய பூமி என்று புகழ்ந்துகொண்டே புண்பட்ட பூமியாகவும் பொலிவிழக்கும் பூமியாகவும் ஆக்கிக் கொண்டு வருகின்றார்கள். இந்த நிலை உடனடியாக மாற வேண்டுமானால், வாஸ்து விஞ்ஞான நுட்பங்களும் விதிகளும் நன்கு உணரப்பட வேண்டும்; செயற்படுத்தப்பட வேண்டும். இதில் நுட்பங்களையும் விதிகளையும் வாஸ்து விஞ்ஞான வழிநின்று நம் ஸ்தபதியார் அவர்கள் மேலும் மேலும் திரட்டித் தருவார்களாக; உலகினர் பயின்று உறுதிப்பயன் பெறுவார்களாக.

# ''இந்த நூலைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால்''

**பொறியாளர் வீ.இராமமூர்த்தி,பி.எஸ்சி., பி.ஈ.,**
*நிர்வாக இயக்குநர், வாஸ்து வேத ஆய்வு நிறுவனம், சென்னை.*

திரு.வை.கணபதி ஸ்தபதி அவர்களை எனக்குக் கடந்த 25 ஆண்டுகளாக மிக நன்றாகத் தெரியும். அவருடைய கலைப்பணிகள் மட்டுமல்லாமல் அவர்தம் ஆய்வுப் பணிகள், எழுத்துப் பணிகள் மற்றும் ஆய்வுரைகள், சர்ச்சைகள் அனைத்திலும் உடனிருந்து உற்றுப் பார்த்து வாதிட்டு நல்லதொரு தெளிவையும் பெற்றவன் என்ற முறையில் ஸ்தபதி அவர்களின் ''கடவுளைப் படைத்தவன் யார் ?'' என்ற பெயர் தாங்கி வரும் விஞ்ஞான ஆய்வு நூலைப் பார்த்து, ''ஒரே வரியில் இந்த நூலின் சாரத்தைச் சொல்லிட முடியுமா'' என்று யோசித்துப் பார்த்த நிலையில் ''முடியும்'' என்று தேர்ந்து, அதற்கான ஒரு விளக்கம் இருந்தால் எளிதில் புரியுமே என்று நினைத்து எழுதிட முனைந்தபோது ஒரு வரி பல வரிகளாகக் கிளைத்து விட்டது. காரணம், இஃதொரு கடினமான - நுட்பமான - விஞ்ஞானம். நானும் ஒரு சில பின்னணிச் செய்திகளைச் சொல்ல வேண்டியவனாகவும் ஆகி விட்டேன்.

நமது ஸ்தபதியார் கடவுட் படிமங்கள் செய்தளிக்கும் சிற்பியாகையால், அனைத்து வழிபடு படிமங்களையும் இவர் போன்ற சிற்பியர்களே செய்து வருவதினால், அங்ஙனம் செய்திடும் படிமங்கள் உண்மையில் கடவுட்படிமங்கள் தானா, அவை கடவுட்படிமங்கள் ஆயின் அதாவது கடவுளரேயாயின் அது எப்படிப் பொருந்தும் என்பதே அவர்தம் நோக்கும் ஆய்வும் ஆகும்.

இந்த ஆய்வுப் பயணத்தில் அவருக்கு அவர் கையாளும் வாஸ்து சாஸ்திரமே தக்க ஆதாரத்தைக் கொண்டு விளங்குகிறது என்பதை அவர் சொல்லி நாம் அறிய முடிகிறது. அதோடன்றி இப்படிமங்களின் திறனறிந்து, ஏற்று, பண்டு தொட்டு வழிபாடு நிகழ்த்தி வரும் ''ஆகமம்'' என்ன சொல்லுகிறது என்பதை ஆகம வல்லுநர் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் உறுதிபட, மேற்கோள்களுடன் அவருடைய அணிந்துரையில் விளக்குகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் அறுதியாகவும் உறுதியாகவும் உள்ளது ஒரேயொரு பொருள். இதனைப் 'பொருள்' என்றும், 'நுண்பொருள்' என்றும், பரம்பொருள் என்றும் சொல்லிக்காட்டி இந்த நுண்பொருளே தன்னைத் திண்பொருளாக உருமாற்றிக் கொள்கிறது (energy turns into matter) என்று சொல்கிறார் ஸ்தபதியார். அதாவது கடவுள் தன்னைத் தானே படைத்துக் கொள்கிறார். இந்த நுண்பொருளைத்தான் சிற்பியர்தம் சம்ஸ்கிருதத்தில் (Technical Sanskrit of Silpis) 'வஸ்து' என்றும் இந்த வஸ்துவே தன்னை ''வாஸ்துவாக'' உருமாற்றம் செய்து கொள்கிறது என்றும் சொல்லி 'வஸ்துவே வாஸ்து ஆகிறது' **वस्तुरेव वास्तु** என்று ஒருவரி சூத்திரம் ஒன்றை கூறுகிறார். மேலும் வஸ்து என்பது சூக்ஷமம் (Subtle) என்றும் வாஸ்து என்பது 'ஸ்தூலம்' (Gross) என்றும் பேசி சூக்ஷமமே ஸ்தூலமாகிறது என்றும் விளக்குகிறார். மேலும் சூக்ஷமப் பொருளை மூலம் என்றும் ஸ்தூலப் பொருளை கோலம் என்றும் சுட்டுகிறார். இந்த நிலையில் மூலம் கோலமாவதற்கு மூலத்திலேயே உறங்கிக் கிடக்கும் துடிப்புணர்வு ''காலம்'' எனப்பட்டு அந்தக் காலத்துடிப்பினால் மூலம் கோலமாகிறது என்று மேலும் விளக்கி அந்தக் காலமெனப்படுவது, வீணையின் துடிப்பினால் - துடிப்பலைகளினால் - ஒலிவெளியாக (sound space) வியாபிப்பது போல - அதுவே இறுதியில் ஒலியுருக்களாகிற சொற்களை வெளிப்படுத்துகின்றன என்று ஒலியை உதாரணப் பொருளாக - உதாரண நிகழ்ச்சியாக - எடுத்து முன் வைத்துக் கொள்கிறார்.

பிறகு, இந்த ஒலி மயமான சொற்கள் தோன்றி நமது உள்ளத்திற்கு புரியக் கூடியதாக ஆகும் நிலையில் இந்த ஒலியானது 'ஒளி' நிலையை எய்துகிறது என்றும் கூறுகிறார். அந்த ஒளியே உளத்துடிப்பால் ஒளிச் சொற்களாக (visual words/forms) இறுதி வடிவம் பெற்றுக் கண்ணால் பார்த்தறியும் பொருள்களாக வெளிப்படுகின்றன என்றும் தர்க்க ரீதியில் ஓர் உச்ச விஞ்ஞான நிகழ்ச்சியினை உறுதி செய்கிறார். எல்லாம் சரியென எவர்க்கும் மனதில் பதியக்கூடியதே.

இந்த நிலையில் மூலப் பொருளின் இயல்பென்ன என்பதையும் அவர் விளக்கி இந்த ''மூலப் பொருள் ஒன்றே'' எனினும் அதுவே பல்பொருளாய் - மனிதனையும் உள்ளடக்கிய பொருளாய் - இந்த ஞாலத்தில் பிறழ்கின்றது என்ற அவர்தம் கூற்றும் சரியே. அப்படியாயின் மனிதப் பொருளானது சூக்ஷம நிலையாகிய 'விந்து' (அ) 'அணு'

நிலையிலிருந்து உரு நிலைக்கும் - செம்மையான அமைப்பில் உருக் கொள்வதற்கும், காலம் என்ற துடிப்பும் துடிப்பளவுகளும் மூலத்திற்கும் கோலத்திற்கும் இடையே தலையிட்டு, உதவி புரிவதாக தோன்றுகிறதல்லவா? ஆம்! காலம் தான் அனைத்தையும் படைக்கிறது என்பது வாஸ்து விஞ்ஞானத் தேற்றம். காலத்தால் விளைந்த இந்த அளவுகள் இல்லையேல் அதுவும் சீலமிகு rhythmic and disciplined அளவில்லையேல் - குழப்பமான வடிவமே தோன்றும். அப்போது தான் ஒருவர் நம்மிடம் பேசுவதும் செய்வதும் புரியாமல் போகிறது. அதாவது அதனைப் 'பிதற்றல்' என்று சொல்லுவோம்.

வஸ்து வாஸ்துவாக பரிணமிக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் பூரணம் அடைந்திடாது சற்று குறையுள்ளதாகவே உள்ளது. எனவே 'நுண்பொருளாகிய கடவுள் வடிவம் மனித வடிவமாகத் திரிபுறுகிறது - திறிபுறும் இயல்பினது - என்று உறுதியாகிற நிலையில் அதற்கு இயல்பாய் வாய்திட்ட கணக்கியல் - rhythmic vibrational counts - ஆல் பூரண வடிவமாக காட்சி தருவதோடு, மூலத்தின் அப்பட்டப்பிரதியாக - படிமமாக - ஆகிறது என்ற செய்தியே வஸ்து விஞ்ஞான சாரமாகும். இந்த வாஸ்துவுக்குள்ளே (படிமத்திற்குள்ளே) நமக்குத் தெரியாமல் வஸ்து அந்தர்யாமியாய் இயங்குகிறது என்பதையும் அறிதல் வேண்டும். அதாவது வாஸ்துவுக்குள் வஸ்துவும் அடங்கியே விளங்குவதாகிறது.

நான் சொல்ல நினைத்த அந்த ஒற்றை வரி - **''வஸ்துவே வாஸ்துவாகிறது''. ''மூலமே காலக் கணக்கால் பூரணமான கோலம் தரிக்கிறது.''** இந்த நிலையில் அப்படிமம் காலமொழிந்த பிரம்ம நிலையில் இருப்பதாக மேலும் ஒரு விஞ்ஞான உண்மையைச் சொல்லுகிறார் ஸ்தபதி. இதுதான் கருவரையில் உள்ள பிரம்மஸ்வரூபம் ஆகிறது. பிரம்மமானது கால மொழிந்த அசல நிலையில் (in vibrant stillness) கருவரையில் உள்ளதென்பது வாஸ்து விஞ்ஞானத்தின் தெளிவாகும். அதாவது **''கருவறையில் பிரதிமா இலக்கணப்படி சிற்பியர் செய்து நிறுவும் திருவுருவானது பிரம்மத்தின் நிஜஸ்வரூபமே'' - என்பது சாரம்.**

வாஸ்து வழிப்பட்ட காலக்கணக்கினுல் இந்தப் படிமம் இயற்றப்படுவதால் காலமே அனைத்தையும் படைப்பதினுல் - படிமமானது முழுமையும் இனிமையும் பெற்று கண்

திறந்தவுடனேயே - தெய்வதன்மையைப் பெற்று விடுகிறது என்பதை டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் அருமையான ஆகம வாக்யத்தை வழங்கி இந்த கூற்றை வழிமொழிகிறார். இதோ அந்த மகுடாகம வாக்கியம்.

**मानेन निर्मिते बिंबे स्वयं आभाति दैवतम्**

''உரிய அளவுப்படி நிர்மாணிக்கப்பட்ட - உருவாக்கப்பட்ட பிம்பத்தில் அதற்குரிய தெய்வம் (தெய்வ சாந்நித்யம்) தானாகவே வெளிப்பட்டு விடுகிறது'' என்பது பொருள்.

இத்தகைய அரிய விஞ்ஞானத்தை இந்த இந்திய மண்ணிலே உறுதி செய்தவனும், அதனை மாந்தர் இனத்தின் ஆன்மிகம் மற்றும் உலகியல் சுகத்திற்கு (Spiritual well being and material prosperity) பயன்படுத்தியவனும், ஆகிய மயனையும், அவன் விஞ்ஞானத்தை உலகறிய செய்திட அரும்பாடுபட்டுவரும் ஸ்தபதியாரையும் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்துவோமாக!

வாஸ்து சாஸ்திரப்படி செய்து வழிபடும் படிமங்கள் கண்களுக்குப் புலப்படாக் கடவுளின் நிஜ உருவங்ளே என்று ஒரே வரியில் சொல்லி - மகிழ்வோமாக!

# பிற்சேர்க்கை

## ஆய்வறிஞர்கட்கு இந்திய விஞ்ஞான வரலாறு தொடர்பான புதிய செய்திகள்

நாம் வசிக்கும் இந்த நில உலகிலே பல நாகரிகங்கள் மற்றும் கலாச்சாரங்கள் தோன்றி மறைந்திட்ட நிலையில், இந்திய மண்ணில் தோன்றிய கலாச்சாரமானது ஓர் அதிசய விஞ்ஞானக் கலாச்சாரமாக இருப்பதை வாசகர்கள் இந்த நூலைப் படித்த பிறகு புரிந்து கொண்டிருக்க முடியும் என்று நம்புகிறேன். மேலும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கின், இந்தக் கலாச்சாரமானது ஏறத்தாழ 10,000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி, அக்கலாச்சாரத்தில் உள்ளடங்கிய விஞ்ஞானமானது புரிந்து கொள்ளப்பட முடியா நிலையில் இடையிலே பலமுறை தொய்வுற்று, மீண்டும் உலகப் பேரறிஞர்களை இன்று ஈர்த்து வருவதாகவும் காணலாம். மயன் எழுதிய 'ஓவியச் செந்நூல்' என்ற ஓர் உயர்தனிச் செந்நூல் இப்படித்தான் பண்டு தோன்றி, அந்நூல் அகத்தே கொண்டிருந்த விஞ்ஞான நுட்பங்களை அக்கால மக்கள் புரிந்து கொள்ள முடியா நிலையில் வழக்கொழிந்து போய்விட்ட செய்தியை மணிமேகலை என்ற தமிழ்க் காப்பியத்திலும், அதன் உரையாசிரியர் வாயிலாகவும் அறிகிறோம். என்றாலும் வேத, ஆகம, வாஸ்து சாஸ்திரங்களில் ஒருசில நம்மிடையே தங்கியதோடல்லாமல் நமது விஞ்ஞானக் கலாச்சாரத்துக்கு முன்னிலை வகிப்பதை மனம் திறந்து சொல்லிட வேண்டும். இம்மூன்று சாஸ்திரங்களும் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் இருந்த செய்திகள் இப்போது வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றன. தமிழில் இருந்தவை மறைந்து போய் விட்டதாகவும், சமஸ்கிருதத்தில் தோன்றியவை சிதைந்து போய் ஒரு சிலவே தங்கி விட்டதாகவும் தெரிய வருகிறது. மேற்சொன்ன சாஸ்திரங்கள் மூன்றிலும் இந்திய நாட்டுக்கே சொந்தமான விஞ்ஞானத் - தொழில்நுட்ப நூலாக - மூல நூலாக - அதுவே வாஸ்து நூலாக இருக்குமோ என்று எவர்க்காவது இன்று உள்ளத்தில் ஒரு கருத்து நிழலாடுமானால் தவறில்லை என்பதைச் சொல்லிட விரும்புகிறேன். இதுகாறும் இஃதொரு

வெளிப்படா உண்மையாகவே இருந்து விட்டது. மேலும் இம் மூன்றுமே ஒரே இடத்தில் ஒரே காலத்தில் பிறந்திருக்கக்கூடும் என்று சொல்லும் நாளும் வெகு தூரத்தில் இல்லை. இதனை நிறுவுவதற்கு மொழியுணர்வும், மொழிப்பற்றும் ஒரு தடைக்கல்லாக இருப்பதாகத் தோன்றினாலும் அஃதும் ஒரு நேரத்தில் மறைந்து விடும்; உண்மை ஒளிரும் என்று நம்புகிறேன். இதனால் யாது பயன்? பிரிந்து வாழும் - பிரிந்து நின்று வழக்காடும் - மக்களிடம் ஒற்றுமையுணர்வு ஓங்கி வளர்ந்து - அமைதி நிறைந்த இன்ப வாழ்க்கை - நீடு நிலைத்திடும் என்று நம்பலாம்.

'வேதம்' என்ற சொல் சம்ஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் சொந்தமான பொதுச் சொல் என்பதைத் தெரிந்து, புரிந்து உவகையும் பெருமையும் கொள்ளும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லிட விரும்புகிறேன். இதற்கான ஆதாரங்களை வேத, ஆகம, வாஸ்து சாஸ்திரங்களிலிருந்து திரட்டி வருகிறேன், புராண இதிகாசங்களையும் பார்க்கிறேன். விரிந்த உள்ளமுடைய பண்டிதப் பெருமக்களும் உதவி வருகிறார்கள். அடுத்தடுத்து வரும் நூல்களில் இவையெல்லாம் இடம் பெறும் என்று எதிர்பார்க்கலாம். என்றாலும், ஒரு சில கருத்துக்களை இப்போதும் பார்ப்போம். வேதம் என்ற சொல் அறிவு (knowledge), ஞானம் (wisdom) என்று பொருள்படும் என்பர் ஆய்வறிஞர். विद् to know (வித்-அறி) என்றும், இதுவே knowledge அறிவு ஆயிற்று என்றும் சொல்லுவர். அதே நேரத்தில் 'வேது' என்ற சொல் 'சூடு' என்று தமிழில் சொல்லப்படுகிறது. 'வேது' பிடித்தல் - சூடு பிடித்தல் ஆனது இப்படித்தான். வேதியல் என்ற சொல் வேதில் பிறந்ததுதான். வெந்து என்ற வினையிலிருந்து இந்தச் சொல் பிறந்திருக்கிறது.இந்த வேதும் வேதமும் ஒரு நிலையில் பிரம்மத்தை - ஞால மூலத்தைக் குறிப்பிடும் சொல்லாக விளங்குகின்ற நுட்பத்தைக் காணலாம். சூட்டினால்தான் சொரணை ஆகிய தன்னுணர்வே பிறக்கிறது. இந்த ஸ்மரணையைத்தான் ஆங்கிலத்தில் awareness (or) consciousness என்று சொல்லுகிறோம். 'பிரக்ஞானம் பிரம்மம்' 'प्रज्ञानं ब्रह्म' என்று வேதம் சொல்லவில்லையா? பிரக்ஞை என்ற சொல்லுக்கு தன்உணர்வு என்பது பொருள்.

இவற்றை விடுத்து, வேதங்களை நான்காக வகுத்து உறுதி

செய்திட்ட வேதவியாஸரே தொல்பழங்காலத்தில் **பிரணவ வேதம்** என்ற அரிய வேதம் ஒன்று இருந்ததாகத் தனது பாகவத மகாபுராணத்தில் உறுதிபடக் குறிப்பிடுகிறார். ஸ்காந்த மகாபுராணத்தில் நாகர காண்டத்தில் இச்சொல் மீண்டும் காணப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிற்பியர்தம் இன வரலாற்றில் இந்தப் பிரணவ வேதம் பல சந்தர்ப்பங்களில் பேசப் பெற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. வேதங்கள் நான்கல்ல ஐந்தாகும் என்ற சிற்பியர் கொள்கை இதன் மூலம் பூர்த்தியடைவதைக் காணலாம். அதுமட்டுமல்ல, **ஸ்தாபத்ய வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், ஆயுர் வேதம்** என்று மேலும் ஒரு சில வேத நூல்களையும் வியாஸர் அறிமுகப்படுத்துகிறார். இதற்கெல்லாம் மேலாக, अनन्ता वै वेदः 'அனந்தா வை வேத:' அதாவது 'வேதங்கள் எண்ணற்றவை' என்றும் மரபில் சொல்லி வருகின்றோம். வாஸ்து தழுவிய உபநிஷதங்களும் உள. எனவே நடைமுறையிலிருக்கும் நான்கு வேதங்களோடு நமது கலாச்சாரம் கட்டுண்டு கிடக்காமல் வேறுபல வேதங்களைக் கொண்ட ஓர் அதிசயக் கலாச்சாரம் - கலம்பகம் - என்பதை இவ்விடத்தில் அழுத்திச் சொல்ல வேண்டியதாகிறது.

தொல்பழம் காலம் தொட்டு இன்றுவரை தொழில் மரபிலே இருந்து வரும் சிற்பிகள் மேலே குறிப்பிட்ட வேதங்களைத் தங்களுக்குச் சொந்தமான வேதங்களாகச் சொல்லும் ஒரு வழக்குமுண்டு. இதற்கொப்ப, சிற்பிகள் வேத சாஸ்திரங்களைப் படித்திருக்க வேண்டுமென்று வாஸ்து நூல்களில் வலியுறுத்திப் பேசப்படுவதையும் காணலாம்[1]. கலைப் பணிக்குத் தலைமை வகிக்கும் ஸ்தபதி மட்டுமல்லாது அவருக்குக் கீழ்ப் பணியாற்றும் marker (சூத்திரக்ராஹி), joiner (வர்த்தகி), Carver (தக்ஷகர்) ஆகியோரும் **ஸ்ருதக்ஞர்களாக** - வேத வித்துக்களாக - இருத்தல் வேண்டுமென்று மானசார வாஸ்து சாஸ்திரம் வலியுறுத்துகிறது. ஆனால் எந்த வேதங்களைச் சிற்பிகள் தெரிந்திருக்க வேண்டும் என்பதை அந்த நூல்

---

1 'स्थपतिः सर्व शास्त्रज्ञः वेदविच्छास्त्रपारगः' *'ஸ்தபதி : ஸர்வ சாஸ்த்ரக்ஞ: வேதவிச்சாஸ்த்ர பாரகஹ'. ''ஸ்தபதி என்பான் எல்லா சாஸ்திரங்களையும் படித்தவனாகவும் வேத சாஸ்திரத்தில் கரை கண்டவனாகவும் இருத்தல் வேண்டும்'' என்பது இதன் பொருள்.*

தெளிவாகச் சொல்லாத நிலையில் அவற்றை முறையே சப்த வேதம், காந்தர்வ வேதம், நாட்டிய வேதம், ஸ்தாபத்ய வேதம், பிரணவ வேதம் என்று சிற்பியர்களில் ஒரு சாரார் சொல்லுவார்கள். பிறிதொரு சாரார் ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம், பிரணவம் என்றும் சொல்லுவர். முதலிற் சொன்ன வேதங்களைத் தமிழ் மரபையொட்டி வைத்துச் சொன்னால், இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் என்று பொருள் தரும். இவற்றை உபவேதங்கள் என்று சொல்லி ஒரு படி இறக்கி வைத்து ஒதுங்கி நிற்கச் செய்து விட்டார்கள் நம் பண்டிதர்கள். ஆனால், இந்த ஐந்து வேதங்களே இன்றும் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கி நின்று ஆன்மிகப் பயன் நல்கி உயிர்ப்புடன் இருந்து வருகின்றன என்று உறுதியுடன் சொல்லலாம். இந்த வேதங்கள் பிரம்ம நுட்பத்தைத் தெளிவுறக் காட்டுவதோடல்லாமல் பயன்தரு இலக்கணங்களையும் வியன்மிகு தொழில் நுட்பங்களையும் கொண்டு விளங்குவனவாகும். இயல், இசை, நடம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து முத்தமிழ் என்று சொல்லி மகிழ்வது தமிழ் மரபு ஒன்றுதானே? அது மட்டுமல்ல. சிற்பமும் கட்டிடமும் இவ்வரிசையில் இடம் பெற்று அவ்வடிப்படையில் ஐந்தமிழ் என்று சிற்பியர் கொண்டிருந்த காலக் கட்டம் ஒன்று இருந்து மறைந்து போனதும் உண்டு. இவ்வைந்தையும் வளர்த்ததும், காத்ததும் நம் திருக்கோயில்களே. இவ்வைந்தும் எப்படி, எவ்வடிப்படையில் இணைந்தன என்பது மேலுமொரு நுட்பமாகும். இவையெல்லாம் ஒரே வகைத்தான இலக்கணத்தைக் கொண்டு செயல்படுவதால் ஒரினப்பட்டதாகக் கொள்ளப்படுவதாயின. இவற்றுக்கு அடிப்படையான இலக்கணம்தான் **'தாள இலக்கணம்'** (theory of vibration) என்பதை இந்த நூலிலே நான் உறுதிபடக் குறிப்பிடுவதை மீண்டும் நினைவுபடுத்திடல் தகுமெனக் கருதுகிறேன். இலக்கணம், கவிதை, மரபுக் கவிதைகளால் ஆன இலக்கியங்கள் ஆகியவற்றை இயல் என்றும், வாயசைத்துக் குரல் எழுப்பி, தாளத்தோடு இணைந்து வெளிப்படும் ஒலிமயக் கவிதைகளை இசை என்றும், இரண்டும் கலந்ததாய், உடலசைத்து தாளமிட்டுக் 'காட்சிகளாய்'க் கண்ணாரக் காண வைப்பது நடம்[1] என்றும் அங்ஙனமே செவி வழிப் பருகிய அகக்

---

[1] *இந்திய ஓவியங்களும் சிற்பங்களும், ஏன் கடவுளர் வடிவங்களும், பறவைகளும் ஆடல் வடிவங்களாய் சித்திரிக்கப்படுவதின் நுட்பம் இங்கே துலக்கமாகிறதல்லவா? எல்லாம்* dynamic forms-vibrant forms.

காட்சிகளைத் தாள இலக்கணம் கொண்டு கண்ணால் பருகிடும் இலக்கியக் காட்சிகளாய் வெளியிலே ஸ்திரமாக நிறுத்திக் காட்டியவையே சிற்பமும் கட்டிடமும்[1] (எனவே frozen music எனப்பட்டது) என்பதை இந்த எனது சிறிய நூலிலே உணர்த்தியிருக்கிறேன். இயற்கையானது இப்படித்தான் இசையுணர்வு கொண்டு கண்ணால் பார்த்து இன்புறும் இசை வடிவங்களாய் இந்த ஞாலத்தையும், ஞாலப் பொருள்கள் ஒவ்வொன்றையும் படைத்துளது என்ற கலைமரபு கொண்டிருந்த நுட்பத்தை இன்றைய விஞ்ஞான உலகம் 'ஆம்' என்று கூறுவதை அடுத்து வரும் வரிகளிலே கண்டு மகிழுங்கள். பண்டைத் தமிழ் மரபு கொண்டிருந்த விஞ்ஞானக் கலாச்சார நுட்பத்தின் உச்சத்தை எட்டிப் பாருங்கள்.

> *"The fundamental nature of the material world is knowable only through its underlying patterns of wave forms."*
>
> *"Both our organs of perception and the phenomenal world, we perceive of form and proportion. Therefore, when many ancient cultures chose to examine reality through the metaphors of geometry and music (music being the study of the proportional laws of sound frequency) they were already very close to the position of our most contemporary science."*
>
> *"The point of view of modern 'force-field' theory and wave mechanics corresponds to the ancient geometric-harmonic visions of universal orders as being an interwoven configuration of patterns."*

**– Sacred Geometry of Robert lawlor**
**(An Australian Scientist and Architect)**

---

[1] கட்டிடத்தின் உள்ளிடத்தில் தாளத்தோடு (rhythmic spaces) லயத்தோடு - இட வடிவங்களாய் அமைப்பது கட்டிட இலக்கணம் எனப்படுவதாயிற்று. இவை mathematical, time-space, rhythmical, geometrical forms களாக - அடிப்படை - மூல வடிவங்களாக அமைவதைக் கட்டிட இலக்கணம் (Principles of building design spatial designs) சிறப்பித்துக் காட்டுகிறது. எல்லாம் space turned spatial forms-களே யாகும்.

இவற்றுக்குத் தோற்றுவாயாக, மூலமாக இருந்த வேதம் தான் **பிரணவ வேதம்** என்று தெரிய வருகிறது. முன்பு சொன்ன நான்கு வேதங்களோடு பிரணவ வேதத்தையும் சேர்த்து வேதங்களை ஐந்து என்று கொண்டது சிற்பியர் மரபு என்பது இங்கே குறிப்பிடத் தகுந்ததாம். மனு, மய, துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஞர் என்ற ஐவர்களாய் தனித்தும் ஒன்றித்தும் செயல்படுத்துவது போல இந்த ஐந்து வேதங்கள் ஒரே அடிப்படையிலும் தனித்தும் செயல்படும் இயல்பின என்பது கருத்தாகும். இயற்கையில் பூதங்கள் ஐந்து என்பது போல வேதங்கள் ஐந்தாய் இருந்தன - இருப்பதாயின என்பது பொருள். சிற்பியர் இன வரலாற்றில் இக்கருத்தும் பிரணவ வேதமும் தனியொரு சிறப்பிடம் வகித்து வருகின்றன.

இப்படிப் பிரணவ வேதம் என்றொரு வேதம் இருந்ததாகக் கேள்விப்பட்டதே இல்லை என்று இக்காலத்து வேதவிற்பன்னர் பலர் மனம் திறந்து என்னிடம் சொல்லியிருக்கின்றனர். ஓம்காரத்துக் குத்தான் பிரணவம் என்று பெயராகும் என்றும் இரண்டும் ஒரு பொருள் குறித்த இரு சொற்கள் என்றும் சொல்லி ओंकारप्रणवौ समौ என்று விளக்கமும் சொன்னார்கள். ஆனால் பிரணவம் என்ற சொல் ஒரு கலைச்சொல் என்றும், ஓம் என்ற ஒலி காதால் கேட்டறியும் சொல்லுருவாகவும், ஓம் என்ற ஒளி கண்ணால் பார்த்தறியும் காட்சியுருவாகவும் இரண்டாய் (from OM to Form) விளங்கிட இடையே நிகழ்ந்திடும் விஞ்ஞான நிகழ்ச்சியை (metamophosis) அச்சொல் குறிக்கும் என்று விளக்கிச் சொல்லியதைக் கேட்டு வியப்புடன் பாராட்டினர். இந்தப் பிரணவ வேதம் இப்போது தமிழில் உளது. இதைத்தான் வேதவியாஸர் பாகவதத்தில் குறிப்பிடுகிறாரோ என்று கேட்கத் தோன்றுகிறது. சமஸ்கிருதத்திலும் இந்தப் பிரணவ வேதம் இருந்திருக்கக் கூடும் என்று சொல்ல இடமும் உளது. ஆனால் எப்போது, எங்கு கிடைக்குமென்று சொல்வதற்கில்லை.

இந்த நிலையில் நம்மிடமுள்ள சிவாகமம்[1] ஒன்று **'பிரணவ பேதம்[2]'** என்ற பெயர் ஒன்றைச் சொல்லி பஞ்சப் பிரணவ மந்த்ரம் என்ற ஐந்து மந்த்ரத் தொகுப்பொன்றைக் குறிப்பிடுகிறது. இந்தப்

---

1 வாதுளாகமம்.

2 இலக்கணப்படி 'ப' ஆனது 'வ' ஆகுமல்லவா? எனவே, வேதம், பேதமெனப்படுகிறது எனக் கொள்ளலாம்.

பிரணவ வேதம்தான் ஒருகாலத்தில் சிதைவுற்றுச் சீரழிந்து போயிருக்க வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா? கிடைத்ததைத் திரட்டி எடுத்து, நான்காக வகுத்துக் கொடுத்தவர் தான் வேதவியாஸராக இருக்குமோ என்றும் சொல்லத் தோன்றுகிற தல்லவா? என்னைப் பொறுத்த வரையில் இப்படித்தான் இருக்க முடியும் என்று சொல்ல நினைக்கிறேன். மேலும், பிரணவ வேதமானது இக்கால விஞ்ஞானம் கண்டறியாப் பல உன்னதச் செய்திகளைத் தருவதாகக் காண்கிறேன். மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் பற்றிய இயற்கையின் ஐந்தியல்களை விளக்கமுறப் பேசுகின்றது இப்பிரணவ வேதம். மூலமானது எப்படிக் கோலமாகத் தானே துடிப்புற்று உருமாறுகிறது என்று இந்த வேதம் சொல்லுவது விந்தையினும் விந்தையன்றோ? இதை விட ஓர் உச்ச விஞ்ஞானம் ஏதும் இருக்க முடியுமென்று சொல்வதற்கில்லை. மேலும் இந்த வேதமானது இதுவரை கேட்டிராத, எங்கும் தோன்றிடாத, உச்ச விஞ்ஞானச் செய்திகளைக் கொண்டு விளங்குவதோடு நின்றுவிடாது யாதொரு சிதைவுமின்றி தொடர்ச்சியறாத செய்திகளைத் தர்க்கரீதியாகப் பேசுவதாகவும் கணித அடிப்படை கொண்டதாகவும் மிளிர்கிறது. அனுமானத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இடமளிக்காமல் - உறுதிபட - நேரடி விளக்கம் தரும் அபூர்வ-அற்புத நூலாகவும் உளது. எனவே, இந்த நிலையில் தொல்பழம் காலத்திலிருந்து இன்றுவரை இந்திய நாட்டில் விஞ்ஞானக் காலச்சாரத்தைத் தோற்றுவித்து வளர்த்துக் கொண்டு வந்த தென்னாட்டுச் சிற்பிகள் **'வேதங்கள் ஐந்து'** என்று உறுதி கொள்வாராயினர். அவர்தம் இன வரலாற்றில் இக்கருத்தையும் சிறப்பாகக் காணலாம். அப்படியானால் இந்தச் சிற்பியர்தான் யாவர்? இப்படியொரு வினா எழுகிறதல்லவா? ஆம். சிற்பியர்களை aboriginal creative tribe of India என்று நான் அடிக்கடி சொல்லுவேன். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தகுடி' என்று தமிழிலும் சொல்லி விளக்குவேன்[1]. இவை முற்றிலும் உண்மையே. இச்செய்தி

---

[1] *சிற்பியர் பற்றிய வரலாற்றுச் செய்திகளை 'இந்திய விஞ்ஞானக் கலாச்சாரத்தில் விசுவகர்மர்' என்ற நூலிலும், 'விஸ்வகர்மப் பிராம்மணவம்ஸப்பிரகாசிகை' என்ற நூலிலும் காணலாம். முந்தைய நூலைக் கேரள மாநிலத்தில் அகில பாரத விஸ்வகர்ம சாஹித்ய அகாடமியினரும் பின்னைய நூலை சென்னை அண்ணாமலை மன்றத்தை நிர்மாணித்த சிற்பியான பிரம்மஸ்ரீ T.M.தெய்வ சிகாமணி ஆச்சாரியாரும் வெளியிட்டிருக்கிறார்கள்.*

இப்போதுதான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. வேதம் தோன்றிய காலம் தொட்டு வேத நெறியோடு தொடர்பு கொண்டோர் இச்சிற்பியர் என்பது வரலாறு. இதுவரை வரலாறு காட்டிடாத உண்மையும்கூட. ஆகமமும் இக்காலத்தே வாஸ்துவோடு தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது. ஒரு காலத்தில் இவ்வுரிமையை நீதிமன்றம் வரை எடுத்துச் சென்று வாதிட்டு வென்றும் வந்துள்ள செய்தியை வரலாற்று ஆசிரியர் அறியார்.

இந்த நாட்டுச் சிற்பியர்கள் ஒருவகையான ஐந்தியல் மரபைச் சேர்ந்தவர்களாகவும், ஐவண்ணக் கொடியைக் கொண்டவர் களாகவும், ஐந்து தொழிற் பிரிவுகளைக் கொண்டவர்களாகவும் ஐந்து முகங்களைக் கொண்ட விஸ்வகர்மனைத் தமது கடவுளாகக் கொண்டு வழிபடுபவர்களாகவும் ஐந்து முகங்களைக் கொண்ட காயத்ரியை பஞ்ச சக்திகளின் தொகுப்புருவாகக் கொண்டு வழிபட்டவர்களாகவும் தொன்றுதொட்டுப் பேசி வருவதையும் இன்றும் அங்ஙனம் ஒழுகி வருதையும் இங்கே நினைவூட்டிக் கொள்வது இக்கூற்றை உறுதி செய்து கொள்ள உதவிடும் என்று கருதுகிறேன். மேலும் விண்பொருளை (ஆகாஸ தத்துவம்) ஆடலானாகவும், மண்பொருளை (பிருத்வீ தத்துவம்) அரங்கனாகவும் கொண்டு, விண்ணே மண்ணாகிறது(energy turns into matter) என்ற விஞ்ஞானக் கொள்கையை இம்மண்ணில் நிலைக்கச் செய்தவர்கள் இந்நாட்டுச் சிற்பியர் என்று சொல்லும் போது மெய் சிலிர்த்திடுகிறதல்லவா? எனவே, இவர்கள் இந்திய விஞ்ஞானக் கலாச்சாரத்தின் மூலவர்களாக இருந்தமையால் இந்த நாட்டுச் சிற்பியர்கள் அகத்தே சாக்தர்களாகவும், புறத்தே சைவர்களாகவும், நடைமுறை உலகத்தில் வைஷ்ணவர்களாகவும் விளங்குவதைக் காணலாம். எனவே இவர்களிடம் சிவ, விஷ்ணு, சக்தி என்ற பேதங்கள் காணப்படுவதில்லை. அவர்கள் கொண்டுள்ள தத்துவம் அங்ஙனம் விஞ்ஞான ரீதியில் உளதென்பது ஒரு சிறப்புச் செய்தியாகும். சாக்த நிலையில் 'காலத்தையும்' (time) சைவ நிலையில் 'இடத்தையும்' (subtle space - ஒளி மய வெளி) வைணவ நிலையில் பௌதிக உலகத்தையும் (material world) பௌதிகப் பொருள்களையும் (material objects) போற்றுவாராயினர். இந்தக் கருத்தில் முகிழ்ந்து

சிறப்புற்ற சமய வழிபாட்டு வடிவங்கள்தான் காளி, சிவன், விஷ்ணு[1] என்று மூன்று விஞ்ஞான வடிவங்களைத் தெய்வீக வடிவங்களாக - அடிப்படை உருவங்களாக - அறிமுகப்படுத்தி (divine forms) மனித வாழ்க்கையை அத்தெய்வங்களோடு ஐக்கியமாக்கி வைத்து தெய்வானுபவம்-இறை இன்பம்-பெறச் செய்து, அத்தகைய வாழ்க்கையை ஆன்மிக வாழ்க்கை(spiritual life) என்று சொல்ல வைத்திருக்கிறார்கள்.

மேலும், இவர்தம் இனத்தின் மூலவர்களாக ஐந்து ரிஷிகளை முன்னிறுத்திப் பேசுகிறார்கள். அவர்கள் முறையே **சானக, சனாதன, அபுவனஸ, பிரத்னஸ, சுபர்னஸ** என்று பெயர் கொண்டவர்கள் ஆவர். இவர்கள் வேதகாலத்திற்கு முற்பட்ட ரிஷிகளாக இருக்கக்கூடும் என்பதை அவர்தம் பெயர்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. (சிற்பியர் இவர்களைத் தமது கோத்திரப் பெயர்களாகக் கொண்டிருக்கிறார்கள்) இந்த நிலையில் அவர்தம் வழித்தோன்றல்களாக முறையே **மனு, மய, துவஷ்டா**[2], **சில்பி, விஸ்வக்ஞர்** என்ற ஐவர்களை - ஐந்து கலைஞர்களை - ஐந்து ஆதிச் சிற்பியர்களைத் தலைவர்களாகக் கொண்டு சமூகத்திற்குப் பயன்படு கருமர்களாக - தொழில்நுட்ப வல்லுநர்களாக - செயல் வீரர்களாக - இருந்து வந்திருக்கின்றனர். இவர்கள் இரும்பு, மரம், உலோகம்[3], கல், பொன் ஆகிய ஐந்து மூலப் பொருள்களைத் தங்கள் தொழிற்குரிய ஐந்து கருப் பொருள்காகக் கொண்டு, ஐந்து தொழில் அமைப்புக்களை நிறுவிக் கொண்டு, தலைமுறை தலைமுறையாக அந்தந்த பொருள்களில் தாமே விஞ்ஞான ஆய்வுகளைச் செய்து மக்கள்தம் வாழ்க்கைக்குத் தேவையான, பயன் தரு பல்வேறு பொருள்களைச் செய்தளித்திருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு விஞ்ஞானத் தொழில் நுட்ப-நாகரீகக் கலாச்சாரத்தை இந்த மண்ணில் தோற்றுவித்திருக்கிறார்கள். இங்ஙனம் கொள்வதற்குப் பிரபஞ்ச இயக்கத்தில் உள்ளொளிர்ந்திலங்கும் ஒருவகையான ஐந்தியல்

---

1 ஸ்தபதியின் 'விண்ஞானக் கோயில்கள்' என்ற ஆய்வு நூலில் மேல் விளக்கம் காண்க.

2 இச்சொல் வேதத்தில் பல்வேறு இடங்களில் வருகின்ற செய்தி சிற்பியர்தம் தொன்மையறிய ஆய்வர்க்கு உதவிடும்.

3 வெள்ளி, செம்பு, பித்தளை முதலிய பிற உலோகங்கள்.

இலக்கணத்தை உற்றறிந்து, மூலப் பொருள் ஒன்றுதான் எனினும் அஃது ஐந்து ஐந்தாக வெளிப்பட்டுப் பல்கிப் பெருகி, ஞாலமாக வெளிப்பட்டு வந்திட்ட நுட்பத்தை அறியச் செய்து, இயற்கையில் இங்ஙனம் இருப்பதை விளக்கி, தங்களையும் சேர்த்து மனித இனமே ஐந்து வகைகளாகப் பிரிந்து (பஞ்ச ஜனம்) செயல்படுவதாகவும், அது மாந்தர் தம் உயர்நல வாழ்க்கைக்கு இயற்கை காட்டிய சீலமிகு வழி என்றும் கொண்டுள்ளார்கள். இந்த அடிப்படையிற்றான் கம்மர், கர்மர், கம்மாளர், விசுவகர்மர் என்ற பெயர்களை தமது இனத்தின் பெயராகக் கொண்டு இன்றுவரை அப்பெயரைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இந்தப் பெயரைக் கேட்ட ஆங்கிலேயர் இவர்களை அவர்தம் பாணியில் Engineering community என்றுதான் சொன்னார்கள்.

சிற்பியர்தம் வாஸ்து சாஸ்திரத்தை மேலைநாட்டுக்கு ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன் முதன்முதலில் அறிமுகப்படுத்தினார் ஓர் இந்தியத் திருமகன். இவர் சரபோஜி மன்னர் அவையில் பன்மொழிப் புலவராக இருந்தவர். 'மானசாரம்' என்ற வாஸ்து நூலைப் படித்து ஒவ்வொரு அத்தியாயத்தின் சாரத்தையும் ஆங்கிலத்தில் எழுதி ஆங்கிலேயர்களின் பாராட்டைப் பெற்றவர். இவர்தம் நூலின் பெயர் Ram Raz essays on Architecture of Manasara என்பதாகும். படங்களுடன் வெளியிட்ட முதல் ஆய்வறிஞர். இவர்தான் முதன் முதலில் விசுவகர்மரை இனங்கண்டு அவர்களை இந்திய நாட்டின் விஞ்ஞானியர் என்றும் தொழில்நுட்ப வல்லுநர் என்றும் கைவினை முற்றிய சிற்பிகள் என்றும் மேலைநாட்டினர்க்கு உணர்த்தினார். இதன் பின்னரே அலகாபாத் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர்.பிரசன்னகுமார் ஆச்சாரியார் மானசாரத்தின் மூலத்தையும், ஆங்கில உரையையும் அவற்றோடு ஐம்பெரும் ஆராய்ச்சி நூல்களையும் Oxford University மூலம் வெளியிட்டு வாஸ்து மரபை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். இவ்விருவர்களுக்கும் இக்காலச் சிற்பியர் பெரிதும் நன்றிக் கடன் பெற்றவர்களாவர் எனின் கிஞ்சிற்றும் மிகையன்று. எனவே பஞ்ச ஜனத்தில் விடுபட்டுப் போன இனம் விஸ்வகர்ம இனம் என்பதை இங்கே உறுதி செய்திடலாம்.

இந்த அமைப்பில் யாதொரு ஏற்றத் தாழ்வையும்

கொண்டார்கள் இல்லை; கண்டார்களுமில்லை; சொன்னார்களுமில்லை. இயற்கையில் இத்தகைய ஐந்தியலை உற்றறிந்த செய்திகளையும் அவ்வழி தோன்றிய விஞ்ஞானக் கலாச்சாரத்தையும் எதிர்வரும் காலத்தில் விளக்கி எழுதிடத் திட்டமிட்டிருக்கிறேன் என்பதை வாசகர்களின் தகவலுக்காக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இயற்கையின் ஐந்தியலை உணர்த்தும் ஒரு சில மரபுச் சொற்களைத் தகவலுக்காக மட்டும் இங்கே இணைத்து வைக்கிறேன். இங்கே காணும் பட்டியலை நீங்களும் பெருக்கிக் காட்டிடலாம்.

| | | |
|---|---|---|
| பஞ்ச பூதங்கள் | — | ஐந்து ஞால முலங்கள் |
| பஞ்ச ஒலிகள் | — | உயிரொலிகள் அ,இ,உ,எ,ஒ |
| பஞ்ச ஸ்வரங்கள் | — | ச,ரி,க,ப,த |
| பஞ்ச அக்ஷரங்கள் | — | அ,இ,உ,எ,ஒ நமசிவாய |
| பஞ்ச வண்ணங்கள் | — | வெள்ளை, மஞ்சள், சிவப்பு, பச்சை, கருநீலம் |
| பஞ்ச மரபுகள் | — | கலை மரபுகள், அதாவது இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் |
| பஞ்சலோகங்கள் | — | தங்கம், வெள்ளி, தாமிரம், தகரம், ஈயம் |
| பஞ்ச சபைகள் | — | பொன்னம்பலம், வெள்ளியம்பலம், தாமிரசபை, சித்திரசபை, சித்சபை |
| பஞ்ச ரத்தினங்கள் | — | நீலம், வைரம், பத்மராகம், முத்து, பவழம் |
| பஞ்சப் பிராணன் | — | பிரான, அபான, சமான, வியான, உதானன் |
| பஞ்ச கந்தம் | — | கற்பூரம், கல்லோலம், லவங்கம், புஷ்பம், ஜாதிபலம் |
| பஞ்ச கம்மர் | — | கருமார், தச்சர், கன்னார், சிற்பர், தட்டார் |
| பஞ்ச பக்ஷி | — | வல்லூறு, ஆந்தை, காகம், மயில், கோழி |

| | | |
|---|---|---|
| பஞ்ச தேவதை | — | சூரியன், கணபதி, தேவி, சிவன், விஷ்ணு |
| பஞ்சாங்கம் | — | திதி, வார, நக்ஷத்ர, யோக, கரணம் |
| பஞ்சகோசம் | — | அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் |
| ஐம்புலன்கள் | — | சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரஸ, கந்த |
| ஐம்பொறிகள் | — | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐந்நிலங்கள் | — | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| பஞ்சானனன் (ஐம் முகத்தன்) | — | ஐந்து தலைகளைக் கொண்ட விஸ்வகர்மன்; சதாசிவன் |

தொடக்கத்தில் ஒரேயொரு வேதம் தான் இருந்தது என்றும், அது **பிரணவ வேதம்** எனப்படும் என்றும் சொல்லி, அந்தப் பிரணவ வேதம் தோன்றி நிலவிய காலத்தில் மாந்தர் இனம் யாதொரு பிரிவுமின்றி ஒரே இனமாக வாழ்ந்தது என்றும், பிற்காலத்திற்றான் பிரிவுகள் தோன்றின என்றும் தெரிவித்திடும் வரலாற்றுச் செய்தியொன்றையும் வேதவியாஸர் பாகவதத்தில் சொல்லியிருக்கிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று மூன்றாகி பிறகு நான்காகி இறுதியில் ஐந்துமாயிற்று என்பது ஒரு படிமுறையாக விரிவுற்றதாகத் தெரிகிறது. இந்த ஐந்து என்ற எண்ணிக்கையின் விஞ்ஞான நுட்பத்தை அறிந்து கொண்ட நம் பண்டிதர்கள் தற்போதுள்ள நான்கு வேதங்களோடு இராமாயணம், மகாபாரதம் இரண்டையும் இதிஹாஸம் என்று ஒருமித்துச் சொல்லி இதிஹாஸத்தையும் ஒரு வேதமாகக் கொண்டு மொத்தத்தில் ஐந்து வேதம் என்ற கணக்கைக் காட்டியிருப்பதையும் உற்று நோக்குங்கள். பிரணவ வேதம் கிடைக்காத நிலையில் இப்படித்தானே சொல்லிட முடியும்? ஆனால் வேதங்கள் ஐந்து என்ற மரபுச் செய்தி இங்கே உறுதி பெற்றுவிடுகிறதைக் காணலாம். இதனை உறுதி செய்திட வியாஸர் தரும் உவமையும் மிகச் சிறப்பாகவும் நுட்பமாகவும் இருப்பதைக் காணலாம். இதோ வேதவியாஸனின் கூற்று:

एक एव पुरा वेदः प्रणवः सर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्य एकोऽग्निर्वर्ण एव च ॥
पुरूरवसः एवासीत् त्रयी त्रेता मुखे नृप ।

*ஏக ஏவ புரா வேத: பிரணவ: ஸர்வ வாங் மய:*
*தேவோ நாராயணோ நான்ய ஏகோ அக்னிவர்ண ஏவச*
*புரூரவஸ: ஏவாஸீத் த்ரயீ திரேதாமுகே ந்ருப.*

முன்னொரு காலத்தில் '**பிரணவ வேதம்**' என்று ஒரேயொரு வேதம்தான் இருந்தது. நாராயணன், அக்னி எப்படி எங்கும் ஒன்றாய் விளங்கு போருளோ அது போலஅப்போது மனித இனமும் ஒன்றாகவே இருந்தது. ஆனால் புரூரவசு என்ற அரசன் காலத்தில், திரேதாயுகத்தில் மனித இனம் மூன்றாகப் பிரிவுற்றது.

ஒரு சமுதாயமானது நாகரிகமும் பண்பாடும் கொண்டு, அமைதியும் இன்பமும் பெருக்கெடுத்துச் சுகமாய் வாழ்ந்திட அச்சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் போதுமென்று சொல்லி நமது பண்டை அரசியல் நூல்களும் ஒருசில ஞான நூல்களும் கட்டுக் கோப்பு (social structure) ஒன்றைக் கூறுவதைக் காணலாம். அவற்றை முறையே Intellectual class, Ruling class, Commercial class, Working class என்று பாகுபடுத்தி வைத்திருப்பதை உற்று நோக்கின், இந்நான்கினைத் தான் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வகுப்புகள் என்று முன்னோர் அக்காலப் பாணியில் கூறுவராயினர் என்று சொல்லலாம். இதிலே ஏற்றத் தாழ்வுகள் காணப்படவில்லை; கற்பிக்கப்படவுமில்லை. செய்தொழிலை அடிப்படையாகக் கொண்டு பிரிவுற்றிருப்பதைக் காண்க. எனவே, பிற்காலத்தில் இந்நெறியினை ஒழுகியோர் செய்திட்ட பிழைகளை ஒதுக்கி வைத்து விட்டுத் தத்துவத்தை ஒரு சிறிது உற்று நோக்குங்கள். இவற்றைப் பிரபஞ்ச இயக்கத்திற்குள் புகுத்திப் பார்த்து, சிறு ஞாலமாகிற (Mini-Universe) மனித உருவின் இயக்கத்திற்குள்ளும் புகுத்திப் பார்த்து, ஒரு சமன்பாடு கண்டு, மனித உறுப்புக்களை உவமையாகக் காட்டி, தலைப் பகுதியை (head) பிராம்மணப் பகுதியென்றும், தோள் பகுதியை (shoulder) க்ஷத்திரியப் பகுதி என்றும், தொடைப் பகுதியை (thigh) வைசியப் பகுதியென்றும், கால்

(foot) பகுதியை சூத்திரப் பகுதியென்றும்[1] இந்நான்கும் ஒன்றித்து இயங்கும் நிலையில் மனித வாழ்க்கை (Socital Structure) முழுமை பெறுகிறதாக - இலக்கிய நயத்தோடு கொள்வாராயினர். இத்தகைய கட்டுக்கோப்பு எந்த ஒரு சமுதாயத்துக்கும் பொருந்தும்தான் என்றாலும் உற்று நோக்கின் ஆறறிவு வாய்க்கப் பெற்ற மனித சமுதாயம் இயங்குவதற்கு இந்த நான்கு உறுப்புகள் போதாது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். தலை, தோள், தொடை, கால் ஆகிய நான்கு உறுப்புகள் மட்டும் கொண்டிட்ட ஒரு மனித வடிவம் இந்த நில உலகில் இருப்பின் மாந்தர் இனம் நல்லவண்ணம் வாழ்ந்திட இயலாது என்று சொல்லத் தேவையில்லை. இந்த நிலையில் இந்த நான்கு கூறுகளையும் கொண்டிட்ட மனித வடிவம் உய்ந்திட, உயர்ந்திட **கைகள்** என்ற கருவி-செயல்படு உறுப்பு-வேண்டுமென்ற நினைப்பானது பாகுபாடு கற்பித்தோருக்கு ஏற்படாது போனது ஒரு குறையே. எப்படியெனில், கைகளைக் கொண்டு பல கருவிகளைச் செய்து பல பொருள்களைத் தோற்றுவித்துப் பயன்படுத்தினாலன்றி - ஆக்கப் பணிகள் செய்தாலன்றி - இந்த நிலஉலகிலே நாகரிக வாழ்க்கை யொன்றைத் தோற்றுவித்துக் கொள்ள எந்த இனத்தினாலும் இயலாது. குவளையொன்றைச் செய்திட முடியாது போயிருந்தால் மனிதனானவன் விலங்கினம் போல வாயால் நீர் நக்கிப் பருகுபவனாக இருந்திருப்பான். வீடு, மனை, தட்டு முட்டுச் சாமான்கள், விவசாயக் கருவிகள், ஊர்திகள் பல்வேறு பயன்தரு பொருள்களைச் செய்தளிக்காமல் இருந்திருந்தால் அவனது வாழ்க்கை காட்டு மிராண்டி வாழ்க்கையாகவே இருந்திருக்கும். இவ் அவலநிலையை மேலும் பெருக்கிச் சொல்லிடத் தேவையில்லை எனச் சுருக்கிக் கொள்ளும் நேரத்தில், நாகரிக வாழ்க்கையைத் தோற்றுவித்திடும் கருவியாக 'கைகள்' இயல்பில் அமைந்திருப்பதை மறந்து விட்டதை இங்கே குறிப்பிடவே இப்படிச் சொன்னேன். கைகள்தான் செய்கைக்கு - ஆக்கப் பணிக்கு - காரணம் (அ) கருவி என்பதை வலியுறுத்திச் சொல்லிடலாம். 'கைகளை' வாழ்க்கை நெறி வகுத்தோர் கை விட்டு விட்டதால் இந்த நாடு தொழிலையும், தொழில்

---

[1] *புருஷ சூக்தம்:* ब्राह्मणोऽस्य मुखमासीत् बाहूराजन्यः कृतः
ऊरु तदस्य यद् वैश्यः पद्भ्यां शूद्रो अजायत (Rik 13)

செய்தோரையும், செய்வோரையும் ஒடுக்கி-ஒதுக்கி வைத்து விட்டதெனலாம். உழைப்பை மதித்திடவில்லை என்றும் கூறலாம். ஆனால் இந்த ஞாலத்தின் மூலப்பொருளானது (கடவுள்) எப்போதும் உழைத்துக் கொண்டேயுளதல்லவா? இப்பிரபஞ்ச இயக்கத்தைச் சுருங்கச் சொல்லிப் புரிய வைத்திட முனைந்த வாஸ்து விஞ்ஞானி மயன் ஆனவன் ''உழைப்பே மூலம் உணர்வே காலம்'' என்று அழுத்திப் பேசுகிறான். எனவே, தலை, தோள், தொடை[1], கால் ஆகிய நான்கு உறுப்புக்களோடு கையையும் சேர்த்துச் சொல்லியிருந்தால் இயற்கையோடு ஒன்றிய விஞ்ஞானக் கலாச்சார வாழ்க்கை - இயற்கையின் ஐந்தியல் நெறிமுறை - நம்மவர்க்குப் புரிந்திருக்கக் கூடும் என்று சொல்லலாம். இந்த ஐந்தாவது உறுப்பாகக் கர்மவீரர்களாகிய சிற்பிகள் செயல்பட்டு வந்த வரலாறும் அவர்தம் இன்றியமையாச் செயல்பாடும் சேவையும் மறைந்து போயிருக்காது. ஒன்றே ஐந்தாகப் பிரிந்து நின்று[2] செயல்-படுவதோடல்லாமல் ஐந்தும் ஒருமித்துச் செயல்பட்டால்தான் சமுதாய வாழ்க்கை என்ற இயந்திரம் சிக்கலும் தொய்வுமின்றி இயங்கி அதனால் - பயன் பெருகி - மக்கள் சுகமாக வாழ்ந்திட முடியும். இதன்மூலம் சொல்ல நினைப்பது யாதெனில், வாழ்க்கை என்ற ஒன்று உருப்பட ஐந்து இலக்கணக் கூறுகள் அந்நிகழ்ச்சியில் (Process) (அ) அத்திட்டத்தில் ஒன்றித்திட வேண்டும் என்பதோடு இயற்கையின் நியதியும் (Law of Nature) அதுவே என்பதாகும். எனவே, பஞ்ச ஜனம் என்று மனித சமுதாயத்தைப் பாகுபடுத்தி வைத்தது ஒரு விஞ்ஞான நுட்பம் என்று உறுதியாகிறது.

மேலுமொரு தமிழக விஞ்ஞான வரலாற்றுச் செய்தியை உற்று நோக்குவோம். இந்த இயற்கையின் விதியை (பிரம்மனின் சிருஷ்டி நுட்பத்தை)க் கண்டு நிறுவியவனைப்பற்றிய செய்திதான் இங்கே நான் சொல்லப் போவதாகும்.

மகேந்திர கிரி (அ) மஹேந்திர பர்வதம் என்று சமஸ்கிருத

---

1 தொடைக்கு மாற்றாக 'வயிறு' என்று சொல்வதுண்டு. அங்ஙனமே தொடைக்கு மாற்றாக 'கால்' என்று 4வது உறுப்பைச் சொல்வதுமுண்டு.

2 இந்தச் செயல்படு மூலத்தைத்தான் 'விசுவகர்மன்' என்று வேதமும், சதாசிவன் என்று சமயமும் குறிப்பிடுவதாயின. விஞ்ஞானம் சமயமாகியதை இங்கே உற்றறியலாம்.

இலக்கியங்களில் பேசப்படும் மலையானது, இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியில், குமரிக் கண்டத்தில், ஒரு காலத்தில், நீருக்குள் அமிழ்ந்து போன மலையைக் குறிக்கும். இந்த மகேந்திர பர்வதத்தைத்தான் மயேந்திர மாமலை என்று மணிவாசகர் தனது திருவாசகத்தில், கீர்த்தித் திரு அகவலில் குறிப்பிடுகிறார். மயேந்திரம் என்ற சொல்லில் மேலும் இரண்டு வரலாற்றுக் குறிப்புகள் இருப்பதையும் இங்கு தொட்டுப் பேசுவது பொருந்துமென்று நினைக்கிறேன்.

மயன் என்ற சிற்பியைப் பற்றிய செய்திகள் இந்த நூலில் ஓரளவு விரிவாகவே விளக்கப்பட்டிருக்கின்றன. இவன் ஒரு சிற்பி மட்டுமின்றி மாபெரும் கவிஞனாகவும் இருந்திட்டான் என்பதை அவனுடைய **ஐந்திறம்** என்ற விஞ்ஞானத் தமிழ் நூலிலிருந்து தெரிந்து கொள்கிறோம். அவன் நூற்றுக்கும் மேலான விஞ்ஞானக் கவிதை நூல்களை யாத்திருக்கிறான் என்று தெரிந்து சொல்லும் நேரத்தில் அவனுடைய மூன்று பெரும் நூல்களை இங்கே குறிப்பிடுதல் பொருந்தும் என்று கருதலாகிறது. அம்மூன்றில் ஒன்றுதான் ஐந்திறம் என்ற உளவியல் சார்ந்த பொருளியல் நூல் என்று இன்று அறிஞர் உலகம் தெரிந்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பரந்த ஞாலத்தின் தோற்றுவாயாக விளங்கிடும் மூலத்தின் குணநுட்பங்கள், குண வடிவங்கள், குணத்தின் செயல்கள் ஆகியவற்றை விஞ்ஞான-கணித ரீதியில் பேசிடும் இந்த நூல் அந்த மூலப் பொருளானது தானாகவே உணர்வுற்றுத் தானாகவே பிரிந்து (கலைந்து) தானாகவே காலமாய், சீலமாய், கோலமாய் வடிவெடுக்கும் நுட்பச் செய்திகளை, அவன் காலத்தே அவனைப் (மயனை) போற்றிப் புகழ்ந்திட்ட பெருமக்களுக்கும் அவனை ஆதரித்த அரசனாம் நிலந்தரு திருவில் பாண்டியனுக்கும் தெரிந்து அவன் புகழ் மலையென உயர்ந்து விட்டதால், **ஐந்திறம்**[1] செய்த மயனை **ஐந்திறன்** என்றும் அப்பெயரே

---

[1] *ஐந்திரம் என்றும் ஐந்திர மதம் என்றும் சொல்லப்படும் வாஸ்து நூல் ஒன்று சிற்பியர்களிடம் உளது. இது வழக்காற்றில் இன்றுமுள பழைய நூல். இங்கே பௌராணிக இந்திரன் எழுதியதாக யாதொரு குறிப்புமில்லை. அதே சமயத்தில் இந்த நூலை 'மயன்' எழுதியதாகப் பண்டைச் சிற்பியர் கூறுவர். நானும் அங்ஙனமே ஆய்ந்து உறுதி செய்துள்ளேன். தலைப்புக்கேற்ப நான்கு நிலங்களை நீக்கி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலப்பாகுபாடுகளை இங்கே காணலாம்.*

இந்திரன் என்று மருவி தொல்பழங்காலத்து மக்கள் அவனை இந்திரன் என்று அழைத்திருக்க வேண்டுமென்றும் சொல்லத் தோன்றுகிறது. அப்புகழை மலைக்கு ஒப்பிட்டு, அப்புகழை நிலைப்படுத்திடும் நோக்கில் அங்கு அன்றிருந்த - அவன் வதிந்திட்ட - மாமலைக்கு - மயேந்திர மாமலை என்று அவன் பெயரையே இணைத்துச் சூட்டியிருக்க வேண்டுமென்றும் கொள்வது இங்கு பொருந்துவதைக் காணலாம். இந்த நிலையில், ஐந்திறனாகிய இந்திரனைப் போற்றி அவனுக்கு ஒரு விழாவும் தமிழ் மக்கள் வழிவழி எடுத்துவந்திருக்க வேண்டும். அவ்விழா நின்று விட்ட செய்தியைத்தான் சிலப்பதிகாரம்[1] என்ற காப்பியம் செப்புவதாகக் கொள்வதில் குறையேதுமிருக்காது என்று சொல்லிட விரும்புகிறேன். இந்த இடத்தில் இன்னொரு செய்தியையும் சேர்த்துச் சொல்லுவது பொருந்தும் என்றும் கருதலாகிறது.

இந்திரன் தேவர்களுடைய தலைவன் என்றும், அவனை தேவேந்திரன் என்றும் வேதங்கள் உயர்த்திப் பேசுவதை வைதிக இலக்கியங்களிலும் பௌராணிக இலக்கியங்களிலும் பரக்கக் காணலாம். வேதங்கள் வடநாட்டில் பிறந்து தென்னாட்டில் புகுந்தன என்ற இக்காலத்து அறிஞர்தம் கொள்கைக்கு இத்தகைய வரலாற்றுச் செய்தி முரணாகத் தோன்றுகிறதல்லவா? வேதத்தில் போற்றுதலுக்குரிய தலைவனாக இருக்கும் இந்திரனுக்கு வட நாட்டில் இந்திரன் பெயரில் யாதொரு விழாவானது நிகழ்ந்தது என்றோ, இன்று நிகழ்த்தப்படுகிறது என்றோ யாதொரு செய்தியையும் கேட்டோருமில்லை; காண்பதற்குமில்லை. இந்த நிலையில் பிறிதொரு செய்தி உபயோகமாகிறதைக் கண்டு கொள்ள வேண்டும். மயனை எந்தக் கருத்தில் மயாசுரன் என்று சூரிய சித்தாந்தம் என்ற வானநூல் குறிப்பிடுகிறதோ அதே கருத்தில் ரிக் வேதமானது தேவேந்திரனையும் அசுரன் என்று பேசுவதை இக்கட்டத்தில் நினைத்துப் பார்த்திட வேண்டும். இதேபோல, அடுத்துத் தேவர்

---

1 *இந்திர விழா எடுக்காமல் விட்டு விட்டதால் கடலானது, நிலத்தைக் கவ்விப் புகாரை அழித்து விட்டதாகச் சிலப்பதிகாரம் சொல்லுகிறது. இதனையும் உற்று நோக்கி உண்மை அறிக. தொல்காப்பியத்தில் '*இந்திரன் மேய தீம்புனல் உலகமும்.......' என்று கூறுவதில் இந்திரன், குறிப்பிடப்படுவதையும் உற்று நோக்குக. *வேந்தன் என்றவொரு பாடமும் உண்டுதான்.*

தலைவனாகப் போற்றிப் பேசிட்ட வருணணையும் அசுரன் என்றே ரிக் வேதம் கொள்வதும் 'அசுரன்' என்ற சொல் நமது ஆராய்ச்சிக்குரிய சொல்லாகிறதல்லவா? எனவே வேத காலத்துக்கும் முந்தியவனாக மயன் வாழ்ந்திருக்கிறான் என்ற செய்தியோடு இந்திரன் என்ற பெயரும் இவனுக்கே உரியதாகிறது என்ற செய்தியும் அத்தகைய சிறப்புப் பெயரை அவன் கொண்டிருந்ததால் குமரிக் கண்டத்து மாமலையை **மயேந்திர மாமலை** என்று மாணிக்கவாசகர் சிறப்பித்துச் சொல்கிறார் என்று கொள்வதும் ஏற்புடையதாகிறது. (பாடலை அடுத்து வரும் பத்திகளில் காண்க).

இந்த மாமலை மீது குடியிருந்த அந்த மாமயன் மேலும் இரண்டு நூல்களையும் செய்திருக்கிறான் என்ற செய்திகள் இப்பொழுது ஆய்வர் பெருமக்களிடையே பேச்சுக்கும் ஆராய்ச்சிக்கும் உரியதாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைதாம் முறையே **பிரணவ வேதம்** என்றும், **மயாகமம்** என்றும் பெயர் தாங்கி வந்திருக்கின்றன. இந்த நிலையில் மாணிக்கவாசகர் சொல்லிய ஆகமம் **மயாகமம்** என்று சொல்லுவதில் யாதொரு குறையும் இருக்காது என்று கூறலாம். **பிரணவ வேதம்** பற்றி ஏற்கனவே ஒரு சிறிது ஆய்ந்துள்ளோம். இந்த நேரத்திற்கு இது போதும். ஆகமம் பற்றி ஒரு சிறிது உற்று நோக்குவோம்.

கி.பி. எட்டாவது நூற்றாண்டில் அவதரித்த சைவ சமயாச்சாரியரான மணிவாசகப் பெருமான் ஆகமத்தின் வரலாற்றையே ஒரு கட்டத்தில் தனது திருவாசகத்தில் தொட்டுப் பேசியிருக்கிறார். அத்திருவாசகம் பின்வருமாறு;

> **''மன்னுமாமலை மயேந்திரம் அதனில்**
> **சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்''**

என்ற அவர்தம் வாசகத்தில் 'மயேந்திரம்', 'சொன்ன', 'ஆகமம்', 'தோற்றுவித்து', 'அருளியும்' ஆகிய சொற்கள் பொருள் செறிந்தவை என்று மட்டுமில்லாமல் வரலாற்றுக் கூறுகளை உள்ளிட்டதாகவும் மிளிருகின்றன என்று சொல்லலாம்.

'மயேந்திரமாமலை' என்ற மலையானது இன்றைய இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியில் முன்னொரு காலத்தில் கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட Continental Drift-ன் காரணமாக நீரில்

முழ்கிப் போன மாமலை ஒன்றை நினைப்பூட்டுவதால், குமரிக்கண்டக் காலம் இங்கே பேசப்படுவதாகக் கொள்ளுவது முற்றிலும் பொருந்துவதாகிறது. இப்பின்னணியில் அத்தகைய தொன்மை ஆகமத்துக்கும் இருக்கிறது என்று துணிந்து சொல்லலாம். மேலும் 'மயேந்திரம்' என்ற சொல் மயனையும் அவன் செய்தருளிய ஐந்திறத்தையும் ஒருங்கிணைத்துப் பேசுவதாகக் கொள்ள இடமும் தருகிறது.

இந்த மயேந்திர மாமலை[1] மேற்குறிப்பிட்ட பிரளைய காலத்திற்குப் பிறகு வடக்கு நோக்கி நடந்து சென்ற அக்காலத்திய பாசமிகு பெருமக்கள் இன்றைய குமரி மாவட்டத் தொடர்புடைய மலையொன்றை மயேந்திர மலை என்றும் அவன் தங்கிச் சென்ற பிறிதொரு இடத்தை 'மயன் பறம்பு' என்றும் சொல்லித் தொல்மரபைக் காத்து வைத்தது பிறிதொரு சிறப்புச் சான்றாய் விளங்குவதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மயேந்திர மலை மீது அமர்ந்து 'மயன்' சொன்ன 'ஆகமம்' மறைந்த பின்னர் இறைவன் அதனை மீண்டும் 'தோற்றி' நமக்கு அருளிய 'தென்னவனை' - ஆடலானைப் போற்றுவதாகக் கொண்டிடலே பொருந்தும் என்க.

சைவ சமயத்தில் தெக்ஷிணாமூர்த்தியைத் தென்முகத்தனாகக் கொண்டது ஏன் என்ற வினா இன்றும் புதிராகவே உளது. தென்புலத்தனாகிய - தென்புலத்திற்குரியவனவாகிய மயனைத் தென்முகத்தனாகக் கொண்டு போற்றியதையும், இவனே சைவ சமயத்தைத் தோற்றுவித்தவனாக ஐந்திறத்தின் விஞ்ஞானச் செய்தி காட்டுவதையும், மலைமீது அமர்ந்து பேராசிரியனாக - ஞானகுருவாக - ஆகமம் சொன்னவனாக - சித்திரிக்கப் பெற்று மயனே தெக்ஷிணாமூர்த்தியாக[2] ஒங்குறுகிறான் என்றும் கொள்வது

---

1 *நாகர்கோவில் வரலாற்றுத் துறை ஆய்வர் டாக்டர்.எஸ்.பத்மநாபன் அவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.*

2 *மயன் தனது இறுதிக் காலத்தில் வடநாடு சென்று சரஸ்வதி நதிக்கரை-யோரம் தனது இருக்கையையும், தொழிற் கூடத்தையும் நிறுவிக்*
*(பின்பக்கம் தொடர்கிறது)*

இங்கே பொருந்துவதை உற்றுநோக்குக. **चित्रं वटतरोर्मूले वृद्धाः शिष्याः गुरुर्युवा** என்று தொடங்கும் தெக்ஷிணா மூர்த்தி ரூபத் தியான சுலோகத்தை ஒப்பு நோக்கிப் பார்த்திடுக. **ஆலமரத்தடியில் ஓர் இளைஞன் குருவாகவும் வயோதிகர் பலர் சீடர்களாகவும் இருந்து பாடம் கேட்கும் விந்தையைக் காணீரோ** என்பது அவ்வரியின் பொருளாகிறது. இந்த சுலோகம் சிற்பியர்தம் படைப்பாகத் தோன்றுகிறது. இந்த நேரத்தில் 'தென் திசை'யை யம திசை என்று சொல்லும் நமது நூல்வழக்கை உற்று நோக்கும்போது 'மயதிசை' என்று சொல்ல வேண்டியதை மாற்றிச் சொல்லி விட்டார்களோ என்றும் சொல்லத் தோன்றுகிறது. தேவர் தலைவனாக மதிக்கப் பெற்ற இந்திரனையே கேவலப்படுத்திய நமது புராணக் கதைகள் மயனையும் மாற்றி விட்டனவோ? யமன் எல்லாத் திசைகளிலும் எல்லா இடங்களிலும் உள்ள கால சக்திதானே? தெற்குக்கு மட்டும் பொருத்திச் சொல்வது சரியாகுமா? சிந்தித்திடுக. குமரிக் கண்டத்தின் எஞ்சிய தென்பகுதியாக இன்று கொள்ளப்படும் குமரி மாவட்டச் சுசீந்திரத்தில் தென்னவனைத் தனித்த கருவறையில் அமர்த்தி முதல் மரியாதைக்கு உரியவனாகச் செய்திருப்பது மேலும் ஆய்வுக்குரியதாகும்.

'சுசீந்திரம்', 'இந்திரன்' என்ற சொற்கள் ஒத்து நிற்பதையும் என் கருத்துக்கு ஒட்டி நிற்பதையும் உற்று நோக்கற்பாலது.

மேலும் இந்த மயன், மயேந்திர மலை மீது அமர்ந்து வட விருக்ஷமாகிய ஆலமரத்தினடியில் அட்டனக்கால் போட்டு ஆசனித்துத் தென்னவனாக, தக்ஷிணா மூர்த்தியாக ஆகமத்தையும்

---

*கொண்டு பிரணவ வேதத்தை வயது முதிர்ந்த முனிவர்க்குப் போதித்து வந்திட்ட செய்தியை வைவஸ்வத புராணத்தில் 96வது அத்தியாயத்தில் காணலாம். மயனும், மயன் மரபினரும் அந்நதிக்கரையிலே பிரம்மாவர்த்தம் என்ற ஒரு நிலப்பகுதியை அமைத்துக் கொண்டு பிரணவ விஞ்ஞானம் மற்றும் ஆகமம் போதித்திருக்கிறார் என்றும் தெரிய வருகிறது. மேற்சொன்ன புராணத்தில் கிருஷ்ண-பீம சம்வாதத்தில் இது தொடர்புடைய செய்தியைக் காணலாம்.*

*ஐதராபாத் மஹாமஹோபாத்யாயர் டாக்டர்.P.நாகேஸ்வரராவ்,M.A.,Ph.D, எழுதிய "Maya and Vyasa" என்ற Monograph-ல் மேலும் ஒரு சில செய்திகளைக் காணலாம்.*

பிரணவ வேதத்தையும் போதித்தனன் என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. பிரணவ வேதத்திற்கு 'ஓம் மறை' என்ற பிரிதொரு பெயருமுண்டு.

அதேபோல ஆகமம்[1] என்ற சொல்லானது தொல்பழம் காலத்துச் சொல்லாகத் தெரியவருகிறது. குறிப்பிட்டுச் சொன்னால், மயன் காலத்திய சொல் அஃதென்று உறுதியாகச் சொல்லலாம். அதாவது, பத்தாயிரம் ஆண்டுத் தொன்மையுடையது என்று சொல்லிட வேண்டும். மேலும் மயன் பெயரிலேயே 'மயாகமம்' என்ற நூலொன்று முன்னொரு காலத்திலிருந்த செய்தியும், குறிப்பும் இப்போது கிடைத்துள்ள நிலையில் ஆகமத் துறையிலே குறிப்பாகச் சிவாகமத் துறையிலே மிருகேந்திராகமம் என்ற ஆகமத்தை (சம்ஸ்கிருத நூல்) உரை செய்திட்ட ஆசிரியர், வேள்விக்கான குண்டங்களின் அமைப்பிலக்கணத்தைப் பேசிடும் நேரத்தில், மயனுடைய வாஸ்து மண்டலச் சித்திரங்களை (Geometrical patterns of Yajna Kundas) வரைபடங்களை - மேற்கோள்களாக எடுத்து வைத்து மயன் பெயரை மறைத்திடாமலும் மயனை ஓர் authority என்று உயர்த்தியும் காட்டியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட அறிஞர்களைத்தான் honest scholars என்று நான் பாராட்டி வருகிறேன். மயன் இருந்ததையும், அவனது வாஸ்து-ஆகமத்தை உறுதிப்படுத்திடவும் கிடைத்திட்ட நல்ல சான்றல்லவா? மேலும் இதுபற்றி ஆய்ந்து வருகிறோம்.

ஆகமம் என்ற சொல் தமிழ்நாட்டில் தோன்றிய தமிழ்ச் சொல் தான் என்று ருசுவாகிடும் இந்த நேரத்தில், இந்தச் சொல் இந்தியம் தழுவிய - தெரிந்து பயன்படுத்திய - சொல்லாகவும் தெரிய வருகின்றது. புத்த மதத்தின் ஞானநூலை **பிடகாகமம்** என்றும், ஜைன மதத்தின் ஞானநூலை **ஜினாகமம்** என்றும் சொல்லிய வழக்கொன்றிருப்பதை இந்த நேரத்தில் நினைப்பூட்டிக் கொள்வது 'ஆகமம்' என்ற சொல்லின் தொன்மையை வலியுறுத்திட

---

[1] *யாகம் - யாகமம் - ஆகமம் ஆயிற்று எனலாம். இந்த நேரத்தில் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியையும் நினைத்துப் பார்த்திடத்தகும். தக்ஷயக்ஞ வரலாற்றையும் உற்றுப் பார்த்திடுக.*

உதவுகின்றன. ஆனால் சைவ சமயம் மிகத் தொன்மையான சமயமானதால் ஆகமம் என்ற சொல்லே சைவத்தோடு பிறந்த சொல் என்று கொள்ளலாம். சமய வரலாற்றில் பிற்பட்ட சமயங்கள் ஆகமம் என்ற சொல்லை நேரடியாகப் பயன்படுத்திடாமல் சம்ஹிதை என்று தொடக்கப் பெயர் பூண்டு, நாளடைவில் ஆகமம் என்ற சொல்லையும் இணைத்துக் கொண்டதை சமய வரலாற்று ஆசிரியர்கள் நன்கு அறிவர். ஏன் வேதங்கூட சம்ஹிதை என்ற சொல்லையும் ஏற்றுக் கொண்டுதானே உளது? ‘சம்ஹிதை’ என்றால் தொகுப்பு என்பதே பொருள்.

வரலாற்றுச் சான்றுகளுக்கெல்லாம் கல்வெட்டுச் சான்றுகளையே நம்பியிருப்போர் இலக்கியச் சான்றுகளைப் பெரிதும் மதிப்பதற்கில்லை என்று சொன்ன காலம் மாறிப்போய், இலக்கியச் சான்றுகளைப் பெரிதும் நினைத்து, மதித்து, தொல்பழம் வரலாற்று நுட்பங்களை - தடயங்களை- ஆய்ந்தறியும் சீரிய நெறியொன்று மேலோங்கி வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மயன் தொடர்புடைய மேலுமொரு இலக்கியச் சான்றினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த நேரத்தில் ஆய்வர்களிடமிருந்து தப்பிவிட்ட இரண்டு கல்வெட்டு நிகர்-வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - இலக்கியச் செய்திகள் இருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகக் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. வரலாற்று மூலங்களைத் தேடிக் கொண்டிருக்கும் இன்றைய இளைய தலைமுறையாவது கவனிக்கட்டும் என்று நினைத்து இங்கே சேர்க்கிறேன். தொடர்புடைய முதல் சான்றை மாணிக்கவாசகர் ஏற்கனவே காட்டி விட்டாரல்லவா?

இரண்டாவது சான்றாகச் சிலப்பதிகாரக் காப்பிய ஆசிரியரும், சேரநாட்டு இளவசரரும் துறவியுமான இளங்கோவடிகளின் வாசகங்கள் நமக்குக் கை கொடுக்கின்ற நுட்பத்தை ஒரு சிறிது காண்போம்.

வடநாடு சென்று கங்கை நதிக்கரையில் ஆட்சி செலுத்திய வடவர்களை வென்று திரும்பும் காலை அச்சிற்றரசர்கள் வழங்கிய தோரண வாயில், முத்துப் பந்தர் முதலாய கொடைகளைச் சேரன் செங்குட்டுவன் சேர நாட்டுச் சிற்பக்கலைஞர்களிடம் காட்டி

மகிழ்ந்திடும் நேரத்தில் அவற்றையெல்லாம் தன்னாட்டு மயன் மரபு வழி வந்தவை என்று சொல்லி மயனை Tradition Builder என்றும் National Architect என்றும் உயர்த்திக் காட்டியதைக் காணலாம். ''நுண்வினைக் கம்மியர் காணா மரபின **மயன் விதித்துக் கொடுத்த மரபின** இவைதாம்'' என்ற விளக்க உரையில் '**மயன் மரபு**' தோற்றம் கண்ட செய்தியானது அழுத்திப் பேசப்படுவதைக் காண்க. இந்திய வரலாற்றிலே நிலைத்த இடமும் நீள் சிறப்பும் பெற்ற **ஒரே விஞ்ஞானி மயன்; ஒரே சிற்பி மயன்**, என்பது இங்கே நினைத்து இன்புறத் தக்கதாம். இதனால் சிறந்த சிற்பியரைப் பாராட்டும் நேரத்தில் தென்னக மயன் என்றும், மயன் மகன் என்றும், தற்கால மயன் என்றும் போற்றிப் பேசும் வழக்கொன்றும் இலக்கிய மரபில் வந்து விட்டது. கோவலனுக்குச் செய்து கொடுத்த மரத்தாலான கட்டிலின் செய் நேர்த்தியைப் பேசிடும் போது, ''மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை'' என்று ஒரு குறிப்புத் தருவது இக்கருத்தின் தொன்மையையும் மயனின் தொழில் மேன்மையையும் புலப்படுத்துகிறதல்லவா?

ஐந்தியல், ஐந்தமிழ், ஐந்திறம், ஐந்திர மதம், ஐந்திரன், இந்திரன் என்ற சொற்களையும், இந்திர விழா பற்றியும் மயாசுரன், மயன், தென்னவன், தக்ஷிணாமூர்த்தி, ஐம்முகன், விசுவகர்மன் ஆகிய சொற்களையும் ஆகமம் வாஸ்து பற்றிய நுட்பச் செய்திகளையும் ஆய்ந்து ஒரு சில மரபு விஞ்ஞான நுட்பங்களையும் வெளிப்படுத்தியுள்ளேன். மேலும் நான்கு வேதங்கள், உபவேதங்கள், ஐந்து வேதங்கள், பிரணவ வேதம்[1] பற்றிய புதிய ஆனால் சிற்பியர் மரபு தழுவிய பழைய செய்திகளையும் ஒருபாற்கோடா நிலையில் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றை வரலாற்று அறிஞர் புதிய செய்திகளாக ஏற்பதோடு தமது ஆய்வனுபவங்களோடு ஒத்துப் பார்த்து இந்நாட்டு வரலாறு சிற்பியர்தம் வரலாற்றில் எங்ஙனம், எவ்வளவு பற்றி நிற்கிறது என்பதை உற்றறிவர் என்று நம்புகிறேன். வரலாற்று மூலங்களைத் தேடிச் செல்லும் ஆய்வர்களுக்கு ஒரு விருந்தாகவும் இங்கே படைத்திருக்கிறேன். மேலும் ஆய்வார்களாக.

---

[1] இதனை 'ஏகாயன வேதம்' என்று சம்ஸ்கிருத மொழி வல்லுநர் இப்போது சொல்லுகிறார்கள்.

இதுபோன்ற மேலும் வரலாற்றுச் செய்திகள் பற்பல உண்டு. தக்க நேரத்தில் தக்க இடத்தில் எடுத்துக் காட்டுவதே பொருந்தும் என்று கருதுகிறேன்.

வாஸ்துவேதிகளாகிய சிற்பிகளிடம் ஒடுங்கிக் கிடந்த செய்திகளில் ஒரு சில செய்திகளையே வெளியிட்ட நிலையில், ஆகமப் பண்டிதர்களிடமும் வரலாற்று நுட்பங்கள் பல உள என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சுருக்கமாக இந்தப் பாரத நாட்டின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டும் என்று ஆர்வம் கொண்ட இக்காலத்து இளைய சமுதாயத்திற்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது யாதெனில், இந்திய வரலாற்று மூலங்களைத் தேட வேண்டிய இடங்களில்

1. வாஸ்து சாஸ்திரம் - வாஸ்து மரபினர்
2. ஆகம சாஸ்திரம் - ஆகம மரபினர்

முன்னிலை வகிக்கின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விரண்டும் இன்றுவரை புறக்கணிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்துள்ளன. இவை religious என்ற மாயை விலகிட வேண்டும். Spiritual என்பதை உற்றறிதல் வேண்டும்.

இவற்றைப் புரிந்து கொண்டு அதன் பின்னரே வேதத்துக்குள் புகுந்து பிற தடயங்களைத் தேடிட வேண்டும். இதுவரை இத்தகைய அணுகுமுறையை எவரும் செய்திடவில்லை. ஆய்வறிஞர் நான் காட்டிய தடத்தில் ஒருமுறையாவது சென்று பார்த்திடப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன். வாழ்க இந்திய நாட்டின் விஞ்ஞானக் கலாச்சாரம்; ஓங்குக மய விஞ்ஞானம்; தழைத்திடுக வேத ஆகம வாஸ்து மரபுகள்.